# SRI VEDANTA DIPIKA

VOL. 27] JULY 1938 [PART 7


475

# ஸ்ரீ வேதாந்த தீபிகை



பஹுதான்ய ஸ்ரீ ஆடி மீ


பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வீ. அனந்தாசாரியர்

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]



CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

VANI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை


1. பரம மந்த்ர நாமங்கள் 153
[ஸ்ரீ. உப. வே. தி. சுந்தராசாரி, சீயாழி]

2. இரஸாயந முறை அல்லது காயகல்பம் 156
[வைத்திய ரத்ன பண்டித மே. துரைஸ்வாமி அய்யங்கார், ஆயுர்வேத பூஷணம், ஆயுர் வேதாசார்ய, புரசவாக்கம்]

3. காயத்ரீ மஹாமந்த்ரம் 165
[ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், சென்னை]

4. உபாகர்மம் 171
[ஸ்ரீ. ஸ்ரீ.]

5. பக்தியும் ப்ரபத்தியும் 173
[ஸ்ரீ. உப. டி. ஈ. சடகோபாசாரியர், திருப்பாபுலியூர்]

6. ஆழ்வார் திருநகரியில் அற்புதம் 175
[திருக்குருகூர் ஸ்ரீ. அ. தே. ராமாநுஜய்யங்கார்]

7. अभीतिस्तव: 41—48
[ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B., L., அட்வகேட், திருச்சி]

8. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 97—104

9. ராமாயணம் 1—8



अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”
“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம் ! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள் ! பெற்றோர்களின் களிப்பு !!

**விலை மலிவு ! சுவை பெரிது !**

**நன்மை தரும் !**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள் ! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு !!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

**SRI L. N. SHIYALI CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE* :—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

---

**L காயம்—பெருங்காயம் G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபகம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।

कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

158717 .475

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம :

# ராமாநுஜ தயா பாத்ர மஹோத்ஸவம்

தூப்புல், காஞ்சீபுரம்

பஹுதான்ய ௵ ஆவணி ௴ 2௳ முதல் 12௳ வரை] [1938 ஆகஸ்டு ௴ 18௳ முதல் 28௳ வரை

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான அனைவர்க்கும் ஓர் விஜ்ஞாபனம். இப்பவும் நாளது பஹுதான்ய ௵ ஆவணி ௴ 12௳ (28-8-1938) ஞாயிற்றுக்கிழமை, ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில், நம்முடைய பரமாசார்யனான ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய தனியனாக, அவ்வாசார்யோத்தமனுடைய சிஷ்யரும் ப்ரசிஷ்யருமான ஸ்ரீ ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீ "ராமாநுஜ தயாபாத்ரம்" என்கிற ச்லோக ரத்னம் அவதரித்து ஆறு நூற்றாண்டுகள் பூர்த்தியாகின்றன. இந்த பத்தாவது ஷஷ்டியப்த பூர்த்தி வைபவத்தை நம்மவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மஹோத்ஸவமாகக் கொண்டாடுவது அத்யாவச்யகமென்று ஸ்ரீ காஞ்சீபுரத்தில் சென்ற வைசாக ப்ரஹ்மோத்ஸவத்தில் கூடியிருந்த அநேகம் ஸ்வாமிகளால் வெகு உத்ஸாகத்துடன் தீர்மானிக்கப்பட்டது. அதுவுமன்றி அம்மஹோத்ஸவமானது ஆசார்யோத்தமனுடைய அவதார ஸ்தலமான தூப்புல் க்ஷேத்திரத்தில் நடத்தப்படவேண்டு மென்றும், மேலும் அநேக காரணங்களை யோசித்து சில நாட்களுக்கு முன் அந்த தூப்புல் க்ஷேத்திரத்தில் ஜடை ப்ரஹ்மசாரி ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீ. உப. ஆராவமுதாசாரிய ஸ்வாமியால் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் ஸந்நிதியில் நடத்தப்பட வேண்டுமென்றும் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது. அது விஷயமாய் மைஸூர் ஸ்ரீபரகால மட ஆஸ்தானத்தில் தத்காலம் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீபரகால ஸ்வாமி திருவுள்ளமுகந்து அம்மஹோத்ஸவத்திற்கு மிக்க ஆவச்யகங்களாயுள்ள தம்மாலே ஆராத்யமானங்களாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ, ஸ்ரீமத் வேதாந்த தேசிக, ஸ்ரீ குமாரவரதாசாரிய, ஸ்ரீப்ரஹ்மதந்த்ரஸ்வதந்திர அர்ச்சாமூர்த்திகளை ஸாதரம் அனுக்ரஹித்தருளினார். அம்மூர்த்திகளும் இப்பொழுது ஷை ஸந்நிதியில் எழுந்தருளப்பண்ணப்பட்டு ஆராதிக்கப்பட்டு வருகின்றபடி.

இந்த மஹோத்ஸவத்தை இந்த தூப்புல் மஹா க்ஷேத்திரத்திலேயே நடத்தி ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான அசேஷ வைதிக லௌகிகளும் ஐகமத்ய பாவத்தையும் உயர்ந்த ரஸாநுபவத்தையும் அடைந்து ஆனந்திக்க வேண்டுமென்பதே முக்கிய நோக்கு. இம்மஹோத்ஸவமானது ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ப்ரசார சபையின் ஆதரவின் கீழ் நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேசிகஸம்ப்ரதாயத்தை அநுஸரித்து வேதாத்யயனமும் திவ்யப்ரபந்த தேசிகப்ரபந்த ஸேவாகாலமும் தக்க அதிகாரிகளைக் கொண்டு செய்விக்கப்படும். அவைகளுடன்கூட பண்டிதவர்யர்களைக்

கொண்டு பகவத் விஷயத்தின் பெருமையையும் ஆழ்வார்களின் மேன்மையையும் பற்றி உபந்யாஸங்களும் நடைபெறும்.

இம்மஹோத்ஸவத்தை ஸரிவர நடத்தும் விஷயத்தில் அப்பா ஸ்ரீ கிருஷ்ண தாதாசாரியர் ஸ்வாமி, மஹா மஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமி, நாவல் பாக்கம் நரஸிம்மாசாரியர் ஸ்வாமி, கோஷ்டீபுரம் ஸௌர்ய நாராயணாச்சார்யர் ஸ்வாமி, இன்னும் அநேக வித்வான்களும் அன்வயித்து விமர்சையாய் நடத்தி வைக்க திருவுள்ளம் பெத்தி இருக்கிறார்கள்.

இந்த ஸ்ரீராமானுஜ தயாபாத்ர மஹோத்ஸவம் ஆவணிமீ 2உ (18-8-1938) யில் தொடங்கி பின்னால் அவ்வப்பொழுது ப்ரசுரிக்கப்படும் விவரப்படி பத்து நாள் மஹோத்ஸவமாக நடத்தப்படும். முதல் ஒன்பது திருநாட்களும் ஸந்நிதியிலேயும், பத்தாம் திருநாள் திருவீதிப் புறப்பாட்டுடனும் நடைபெறும். சாற்றுமுறையன்று பண்டித ச்ரேஷ்டர்களுக்கும் கைங்கர்யத்தில் அந்வயிக்கும் மற்றவருக்கும் பிருதுகளும் ஸம்பாவனைகளும் அளிக்கப்படும். பத்து நாளும் ததீயாராதனம் நடைபெறும்.

இந்த மஹோத்ஸவத்தை அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் திரளாககூடி பத்து திருநாட்களில் நடைபெறும் ஸகல உத்ஸவ விமரிசைகளிலும் யதாசக்தி அன்வயித்து ஆனந்திக்கப்ராப்தம். இம்மாதிரி மஹோத்ஸவங்கள் ஒரு தலைமுறைக் கொருதரம் நேரிடுவதும் துர்லபமாகையால் பாக்கியவான்களான நாம் அனைவரும் இந்த அனுபவத்தைக் கைவிடாது பாராட்ட வேண்டுவதவசியம்.

இக்காலத்தில் இந்த மஹோத்ஸவத்தை வெகு சிறப்பாக நடத்த வேண்டிய விஷயத்தில் எல்லோரும் நிரம்பப் பொருளுதவி செய்தால் தான் ஸாத்தியமாகும் என்பது சொல்லவேண்டுவதில்லை. நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களையும் தேசிக ப்ரபந்தங்களையும் திரு ஆறாயிரப்படியையும் அதிகரித்து அந்தந்த ஸேவாகாலங்களில் அந்வயிக்க ஆர்வமுடையோர் அபேக்ஷிக்கும் பக்ஷத்தில் அவர்களுக்கு போக வர ரயில் முதலிய செலவுகளும் ஸம்பாவனைகளும் ஏற்பாடு செய்யப்படும்.

இவைகளுக்கெல்லாம் ஸௌகரியம் ஏற்படும்படி நம் ஸம்ப்ரதாயஸ்தர் அனைவரும் இயன்றவளவு பொருளுதவி செய்ய முன்வரவேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கப் படுகிறது.

**வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,**
அத்யக்ஷர்.

| | |
|---|---|
| M. V. ரங்காச்சாரியர் | T. ராஜகோபாலாசாரியர் |
| S. லக்ஷ்மீநரஸிம்ம தாதாச்சாரியர் | R. திருமலை தாதாசாரியர் |
| உள்ளூர் கார்யதர்சிகள் | சபை கார்யதர்சிகள் |

குறிப்பு :—பணம் அனுப்ப விரும்புவோர்களும் வசூல் செய்பவர்களும் தயவு செய்து தொகைகளை சபை ஆபீஸான "வாணீ விலாஸ், பாரக் டவுன், மதராஸ்" என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டியது.

श्रीः
श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

| ஸம். 27. | பகுதான்ய ஞூ ஆடி மீ | ஸஞ். 7 |
|---|---|---|

## பரம மந்த்ர நாமங்கள்.

[ஸ்ரீ. உப. வே. தி. சுந்தராசாரி, சீயாழி.]

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை பாராயணம் பண்ணும்போது, उद्भवः क्षोभणो देव इति परमोमन्त्रः என்றொரு வாக்கியத்தைச் சொல்லிக் கொள்ளும் க்ரம மிருக்கிறது. மற்றெல்லா நாமங்களுமிருக்க, இம்மூன்றின் தொடர்பை மட்டில், ஏன் இப்படி விசேஷிக்கவேண்டும், என்பதை யாரும் விசாரித்ததாகத் தெரியவில்லை.

विचेयानि विचार्याणि विचिन्त्यानि पुनः पुनः ।
कृपणस्य धनानीव त्वन्नामानि भवन्तु नः ॥

லோபிக்குப் பணங்கள் எப்படியோ அப்படி. பகவானே! எங்களுக்கு உம்முடைய நாமங்கள் தேடத்தக்கவைகளாயும், விசாரிக்கத்தக்கவைகளாயும், அடிக்கடி சிந்திக்கத் தக்கவைகளாயும், ஆகக்கடவன' வென்று ஆன்றோர் ஆரவாரித்திருப்பதை அடி ஒத்தி இது விஷயமாய் இங்கு சில வார்த்தைகள் சொல்லப்படுகின்றன.

'जीवभूतां महाबाहो ययेदं धार्यते' என்று பரப்ருகிருதியைச் சிறப்பித்திருப்பதுபோல், இங்கும் 'பரமோமந்த்ர:' என்பதற்கு, ஸமஸ்த மந்த்ரங்களுக்கும் ஜீவபூதமாயும் தாரகமாயும் உள்ளது, என்று பொருளுரைப்பது பொருத்தமாகும். 'உத்பவ: க்ஷோபணோதேவ:' என்பதற்கு அந்தவித ப்ரபாவமிருப்பதாக பாசுபதாகமத்தில் நாம் படிக்கிறோம். அதில் வைதிக தந்திரத்தில், மூன்றாவது கண்டத்தில், विधिं वक्ष्ये समस्तानां मन्त्राणां न्या-

सपूर्वकं என்று தொடங்கி, பார்வதி தேவிக்குப் பரமேச்வரன் பின்வருமாறு உபதேசிப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

अनेज देकं मनसो जवीयोऽत्रैक शक्तिमान् ।
उद्भवेति क्रिया शक्तिः क्षुभितेच्छा प्रकीर्तितः ।
शक्तिर्ज्ञानात्मको देवः स्वाहा हृदयमण्डले ।
एवं ध्यात्वा परं देवं प्रभु सत्यादिलक्षणम् ।
षडङ्गन्यासपश्चात्तु ततो यजनभारभेत् ।

அதாவது, 'எல்லா மந்திரங்களிலுமுள்ள சக்திகள் யாவற்றுடனும் நித்ய யோகத்தைப் பெற்றிருப்பவர் 'அநேஜதேகம்' இத்யாதி மந்திர வர்ணத்தால் கானம் பண்ணப்படுகிற சர்வேச்வரன் ஒருவரே. அவருடைய சக்தி வாசகங்களான 'உத்பவ: க்ஷோபணோதேவ:' என்பதை ஹிருதயத்தில் ஸ்வாஹாகரிக்கும் பிரகாரமாக அந்த ப்ரபுவை த்யானம் செய்து, பிறகு தான், எது உத்தேச்யமோ, அந்த மந்திரத்தின் ஜபரூபமான யக்ஞத்தை ஆரம்பிக்கவேண்டும். இதில் 'உத்பவ:' என்பது ஸர்வேச்வரனுடைய க்ரியாசக்தியையும், 'க்ஷோபண:' என்பது, அவருடைய இச்சாசக்தியையும், தேவ: என்பது, ஞானசக்தியையும், பிரதிபாதிக்கின்றனவாகும்.' ஆகவே, இந்தப்படி, ஸர்வ மந்த்ரானுஸந்தான முறைகளுக்கும் இன்றியமையாதவைகளாகவும், ஸர்வேச்வரனுடைய திவ்ய சக்தி வாசகங்களாயுமுள்ள, 'உத்பவ: க்ஷோபணோதேவ:' என்னும் நாமங்கள் பரம மந்திரமென்று போற்றப்படுவது மிக்கப் பொருந்தியதே. பீஷ்மாசாரியர் யுதிஷ்டிர மகாராஜனுக்கு மகா பாரத ஸந்தேச ஸாரமான ஸஹஸ்ர நாமத்தை உபதேசிக்கும்போது, முன் கூறியபடி 'உத்பவ: க்ஷோபணோதேவ:' என்பவற்றால் விஷயீகரிக்கப்பட்ட த்ரிவித சக்திகளுக்கும் இருப்பிடமான லக்ஷ்மீபதியே தேவகி நந்தன ஸ்வரூபராய் இந்த இடத்தில் தன் திவ்ய ஸான்னித்யத்தை தந்தருளினார். ஆகையால், 'சக்தி: தேவகி நந்தன:' என்று இங்கு ப்ரகாராந்தரமாய் சொல்லிக்கொள்ளும் ஐதிஹ்யமும் பாராயண க்ரமத்தில் இருக்கிறது. தவிர;

'மகாபாரத தாத்பரிய நிர்ணயம்' என்னும் க்ரந்தத்தில் இதிகாஸார்த்தத்தை விசாரிக்கும்போது, ஸ்ரீமத்வாசாரியர், அதை 'ஔபரிசரம்' என்று ஸித்தாந்தித்திருக்கிறார். नारायणस्य नामानि सर्वाणि वचनानि तु । तत्सामर्थ्याभिधायीनि तदौ परि परे विदुः அதாவது மகாபாரதத்திலுள்ள வசனங்கள் யாவற்றிற்குமே ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய ஸாமார்த்தியங்களைச் சொல்லும் நாமங்களில் முக்கிய தாத்பரியம் வாய்ந்திருப்பதென்



பதே தான். 'உத்பவ க்ஷோபணோதேவ:' என்பவை இவ்வித தாத்பர்ய ஸாரத்தை, அந்த பகவானுடைய திவ்ய சக்திகளின் ஸாக்ஷாத் வாசகங்களாய் நின்று, தெரிவிப்பதால், அந்தக் காரணத்தாலும் அவைகளை பரம மந்த்ரமென்று உபசரித்தல் உபபன்னமாகும்.

மிக்க ஸ்வாரஸ்யமான மற்றொரு ந்யாயமும் இதற்குச் சொல்லலாம். ஸாதாரணமாய் ஆகமப்பிரமாணங்களும் வ்யாக்யானங்களும் நமக்கு அறிவிப்பது என்னவென்றால் தன் ஸங்கல்பத்தால் சர்வ ஜகத்தையும் உண்டு பண்ணுவதில் உத்பவ சப்தத்தால் போதிக்கப்படும் க்ரியா சக்தியும், ப்ரகிருதி புருஷர்களை, அவருட்புகுந்து, தன்னிச்சானுஸாரமாக நடத்துவதில் க்ஷோபண சப்தத்தால் குறிக்கப்படும் இச்சாசக்தியும், தான்யாவற்றையும் அறிந்தும் தன்னை ஒருவரும் அறியாத வண்ணம் விவித விசித்ர கிரீடைகளைச் செய்வதில் தேவ சப்தத்தால் தெரிவிக்கப்படுகிற ஞான சக்தியும், வெளியாகிறதென்பதேதான். அவ்வித சக்தி வாய்ந்த ஸர்வேச்வரன் எல்லா ஜீவராசிகளும் தன்னை அறிந்து துயராறு பெரும் பதம் பெறுவதற்காக ராமகிருஷ்ணாதி ரூபியாய் அவதாரங்கள் செய்யும் போது, அவருடன் இணைபிரியாதவைகளான இந்த சக்தி த்ரிதயங்களும், அந்த வேளையில், தங்களை யாவரும் எளிதில் கண்டு கொள்ளும்படி அபிவ்யக்தியை அடைகின்றன. ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் அவ்வித அபிவ்யக்தியை இச்சக்திகள் அடைந்த ஒரு விசேஷ சந்தர்ப்பத்தை 'உத்பவ க்ஷோபணோதேவ:' என்கிற நாமங்கள் நம்மை ஸ்மரிக்கும்படி செய்து அந்த அனுஸ்மிருதியின் பிரபாவத்தால் நம் துயரக்கடலை தூற்றுத்துலக்க ஹேதுவுமாகின்றன. அந்த ஸந்தர்ப்பம் ஏதாகும் என்பதைச் சற்று விஸ்தரித்து எடுத்த விஷயத்தையும் தலைக்கட்டுவோம்,

யுதிஷ்டிரர், சூதாட்டத்தில் தன்னையும், தன் தம்பிகளையும், கடைசியாய் திரௌபதியையும், பந்தயமாய் வைத்துத் தோற்றுப்போனார். துரியோதனன் ஆணைக்கிசைந்து அவன் தம்பி துற்சாதனன் திரௌபதியை சபைநடுவில் இழுத்து வந்து நிறுத்தினான். அப்பொழுது அவள் ரஜஸ்வலை ஒரே வஸ்திரத்தைமட்டில் தரித்திருந்தாள். அதையும் உரிந்து அவளை மான பங்கப்படுத்துவதாய் அக்கொடியன் சங்கல்பித்து விட்டான். பஞ்சபதிகளிருந்தும் அவளைக் காப்பாற்றுவதில் அவர்கள் அன்று பஞ்சையாய் விட்டார்கள். பீஷ்மர், துரோணர், விதுரர் முதலிய, குருக்கிழவர்களைச் 'சரணம்', என்று அவள் கதறினாள். ஸ்ரீ கிருஷ்ண ரூபியான ஈச்வரனுடைய இச்சாசக்தி அவர்கள் உளளத்தைக் கலக்க, அவர்கள் திகைத்து நின்றனர். திரௌபதிக்கு இது அர்த்தமேயாகவில்லை. என்ன இவர்கள் உயிருடனிருக்கிறார்களா? அல்லது இறந்து விட்டார்

...தெரியவில்லை. இப்படி ஒரு அதர்மம் நடப்பதை அவர்கள் கண்... ஒருவர் முகக்குறியினின்றும் ஏற்படவில்லையே. இது என்ன புதுமை என்று ஏங்கினள்.

द्रोणस्य भीष्मस्य च नास्ति सत्त्वं
क्षत्तुस्तथैवास्य महात्मनोऽपि ।
राज्ञस्तथाहीममधर्ममुग्रं
नालक्षयन्ते कुरुवृद्धमुख्याः ॥

'நல்ல வேளை. இந்தச்சமயம் ஸ்ரீ க்ருஷ்ணன் இங்கு இல்லை. இருந்திருந்தால் ஏதாவது விஷமங்கள் தொடுத்து நம் ஸங்கல்பத்தை நிறைவேறவொட்டாமல் தடுத்துவிடுவான்' என்று தைரியமாய் துரியோதனாதிகள் தங்களிஷ்டப்படி துஷ்க்ருத்யம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், ஸ்ரீ கிருஷ்ணன் தூரஸ்தரானாலும் அவர் நாமங்கள் ஸந்நிஹிதமாயிருக்கின்றனவே என்பதை அம்மூடர்கள் அறியவில்லை. திரௌபதி மட்டும் அதை நன்கு தெரிந்தவளாய் அவைகளிடத்தில் ப்ரபத்தி பண்ணினாள். அகில புவனங்களையும் அன்று படைத்த க்ரியாசக்தி இன்று இங்கே தோன்றி துர்ச்சாதனன் அவிழ்க்க, அவிழ்க்க, ஒன்றின் பின் ஒன்றாய், புதிது புதிதாய், நூற்றுக்கணக்கான புடவைகளை நெய்து, நெய்து, அவளுக்கு உடை செய்ய வாரம்பித்தது. இப்படிப் புடவைகளுக்கு உபாதான காரணமாய் இங்கு ஸாக்ஷாத்கரிக்கப்பட்டதல்லவோ 'உத்பவ:' என்கிற நாமத்தின் ரஹஸ்யார்த்தம். இதற்கு ஸஹகாரிகளாய் அப்போது அபிவ்யக்தியை அடைந்த இச்சாசக்தி, ஞானசக்திகளன்றோ 'க்ஷோபண:' 'தேவ:' என்பவைகளுக்கு முறையே விஷயம். ஆகவேதான் ஸ்ரீ கிருஷ்ண தைவத்யமான ஸஹஸ்ர நாமத்தில் இம்மூன்று நாமங்களும் 'பரமோ மந்த்ர:' என்னும் பட்டம் பெற்றன.

---

# இரஸாயந முறை அல்லது காயகல்பம்

[வைத்திய ரத்ன பண்டித மே. துரைஸ்வாமி அய்யங்கார், ஆயுர்வேத பூஷணம், ஆயுர் வேதாசார்ய, புரசவாக்கம்.]

## இரஸாயநௌஷதங்கள்

எல்லா இரஸாயந முறைகளிலும் ஔஷதப் பிரயோகங்களும் அநேகம் உண்டு. மாளவியாஜிக்கு நிறைவேற்றிய சிகித்ஸையில் நெல்லிமரத்திலிருந்து செய்த சில கஷாயாதி ஔஷதங்களை பாபாதபஸ்வி என்



பவர் அவருக்குப் பிரதிதினமும் கொடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது.
அம்முறையில் உபயோகிக்கக் கூடிய முக்கியமான ஔஷதங்களுள் ஆமலக
ரஸாயநம் என்பதொன்று. அவ்வௌஷதம் தயார் செய்வது அவ்வளவு
எளிதல்ல. அதன் முறை பின்வருமாறு "பூச்சிகளால் அல்லது வேறு
பிராணிகளால் எவ்வகையிலும் பழுதாக்கப்படாமல் பொந்து முதலியது
விழாமல் வனத்தில் செழித்து வளர்ந்துள்ள முருக்கமரம் எனப்படும்
பலாசமரத்தைத் தேடிப்பார்த்து, அடிமரத்தின் மேல் முனையை அறுத்துத்
தள்ளி, அம்முனையில் இரண்டு முழ ஆழம் குழி செய்துகொள்ளவும்.
அக் குழியில் நன்றாகக் கனிந்த நெல்லிக்கனிகளைக் கொட்டி நிரப்பவும்.
பிறகு தருப்பைகளைப் பெரிய புரிகளாக முறுக்கி, அவற்றால் அம்மரத்தை
அடிமுதல் முனைவரையில் கனமாகச் சுற்றி, குழியின் வாய்ப்புறத்தையும்
அப்புரிகளால் மூடி, தாமரைக் குளத்துச் சேற்றை அடியிலிருந்து நுனி
வரையில் அதன்மேல் கனமாகப் பூசிவிடவும். பிறகு உலர்ந்த காட்டு
வறட்டிகள் என்னும் சாணக்கட்டிகளை அடியிலிருந்து அடுக்கி வாய்ப்புற
மும் அவ்வறட்டிகளால் மூடக்கூடிய அளவில் முற்றிலும் மரத்தை வறட்டி
களால் மறைத்து, காற்று வீசாத ஸமயம் பார்த்து நெருப்பை இட்டு
எரிக்கவும். எரிந்து அணைந்த பின் மரத்தினுள் அவ்விதம் சமைந்த
நெல்லிக்கனிகளை வெளியிலெடுத்து, விதை நீக்கி, ஒரு பாண்டத்திலிட்டு,
போதிய நெய்யும் தேனும் ஊற்றிக் கலக்க வேண்டும். இரஸாயன ஸேவை
யில் சிரத்தை யுள்ளவர், வேறு உணவின்றி இதையே திருப்தியுண்டாகும்
வரையில் தினந்தோறும் உண்டு, நன்றாகக் காய்ச்சி யெடுத்த காராம்பசுப்
பாலையும் தாராளமாகப் பருகிவரவேண்டும். இவ்வாறு குறைந்தது ஒரு
மாஸகாலம் உபயோகிக்க வேண்டும். இச்சிகித்ஸையின்போது குளிர்ந்த
நீரைக் கையாலும் பரிசிக்கலாகாது. இவ்விதம் இரஸாயந ஸேவை செய்
பவர் இரண்டு மூன்று வாரங்களில் உரோமம் முதலியவை உதிர்ந்து, சர்ம
நிறம் மாறி, பிறகு சொற்பநாட்களிலேயே (அதாவது நாலைந்து வாரங்க
ளில், மேனியில் இலாவண்யத்தையும், மதியிற் சிறப்பையும், மேலான மனோ
நிலைமையையும், புத்துயிர் பெற்றதுபோன்ற உணர்ச்சியையும் உண்மை
யிற் பெறுவர். ஆயுளாரோக்கியங்கள் அபிவ்ருத்தியடைந்து இவர் இம்மை
மறுகளில் மேலான சுகம் பெறுவர்" என்று அஷ்டாங்க ஹ்ருதயம் (உத்
தர 39-ம் அத்.) சரகஸம்ஹிதை (சிகி 1-ம் அத். இரஸாயநபாதம்.)
முதலிய கிரந்தங்களில் இதன் முறையும் பெருமையும் விரிவாக வர்ணிக்கப்
பட்டிருக்கின்றன. குடி யென்னும் கிருகத்தில் இருந்து கொண்டும், வேறு
வகையிலும் ஆயுளாரோக்கியாபிவிருத்திக்காக இவ்வித இரஸாயநங்களை
உபயோகிக்கலாம். இதைத் தவிர அபலாமலகரஸாயநம் பிராஹ்மீ ரஸா
யனம். பல்லாதகரஸாயநம், நாகபலா ரஸாயநம் முதலிய வேறு பல இர

ஸாயந முறைகளும் அவரவருடைய ஸௌகர்யங்களுக் கேற்றவாறு முனிவர்களால் மொழியப்பட்டுள்ளன. குறிப்பிட்ட விதமான குடியென்னும் கிருஹம், கைதேர்ந்தவைத்தியர், பரிஷ்காரமாகப் பணிவிடை செய்யவும் பரிசாரகர்கள், அவசியமான ஔஷதங்கள், போதுமான பொருள் எல்லாம் ஒருமிக்க அனுகூலமாக அமையப் பெற்று, இவ் வைத்தியத்திலும் வேதோப தேச வழிகளிலும் விச்வாஸமுங் கொண்டு இதிற் ப்ரவ்ருத்தித்தால் மனிதர் இரஸாயநத்தினாலான முழுப்பலனையும் அடைந்து சுகம் பெறுவர். குடீப்ராவேசிக சிகித்ஸையைச் செய்பவர், செய்து கொள்பவர் இருவருக்கும் ஆரம்ப முதல் முடிவுவரையில் அளவற்ற அஸௌகர்யம் ஏற்படுமாகையால், இம்முறையைச் செய்து கொள்ள அசக்தர்களான பிறருக்கு ஏற்ற மற்றொரு எளிய இரஸாயந முறையையும் இருஷீச்வரர்கள் தெளிவாக உபதேசித்துப் போயிருக்கிறார்கள்.

## வாதாதபிக இரஸாயநம்.

கடுமையான குடீப்ராவேசிக முறைக்கு ஈடுபட முடியாத நபர்கள் செய்து கொள்ளக்கூடிய இரஸாயநமுறை வாதாதபிக சிகித்ஸையே अतोऽन्यथा तु ये तेषां सौर्यमारुतिको विधिः என்று முனிவர்களே உபதேசித்திருக்கிறார்கள். திறந்த வெளிகளில் நல்ல வெளிச்சத்திலும் சுகமான காற்றோட்டத்திலும் பெரும்பான்மையான நேரங்களைக் கழிக்க அனுகூலமான உபாயம் கூறும் முறையையே "வாதாதபிகம்" அல்லது "ஸௌர்ய மாருதிகம்" என்று வழங்குவோம். ஸுச்ருதர் இதற்கான கிரமத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் :—" நதீ பிரதேசங்கள், குன்றுகள், குளங்கள், கானகங்கள், புனிதமான ஆச்ரமங்கள் முதலிய திவ்யமான திறந்த வெளிகளில் இருந்துகொண்டு, வைத்திய முறை முதலியதில் முழு நம்பிக்கையோடும் தைர்யத்தோடும் மனக்கவலையின்றி வாதாதபிகம் போன்ற இரஸாயந முறையில் முயன்று அதைச் செய்துகொள்ள வேண்டும்; அவர்களுக்கு ஆத்மார்த்தத்தில் விச்வாஸமும், செலவுக்குப் போதிய திரவ்யமும் அவச்யம். அவ்விதச் சான்றோர்க்கே இந்த இரஸாயந சிகித்ஸைகள் முழுப் பலனளிக்கும்" அடியிற் குறிப்பிடப்படுவது இவ் விஷயத்தை விளக்கும் மூல ச்லோகம் :—

नदीषु शैलेषु सरस्सु चापि पुण्येष्वरण्येषु तथाश्रमेषु ।
क्रिया हि रासायनिको फलाढ्या श्रद्धाधृति द्रव्यवतां सतां वै ॥

வாதாதபிக சிகித்ஸை குடீப்ரவேசத்திற்கு முற்றிலும் எதிரிடையான முறை. குடீப்ரவேசத்தில் குளிர்ந்த நீரைக் கையாலும் தொடலாகாது. இதில் பரிசுத்தமான குளிர்ந்த நீரே ஸ்நான பானாதிகளுக்கு உபயோக



மானது. பால், தேன், நெய் இவற்றைத் தனித் தனியாகவோ, இரண்டு மூன்று ஒன்று கூட்டியோ மிகுதியாகக் காலை போஜனத்திற்கு முன்பு உபயோகிக்கலாம். "யானை நெரிஞ்சலில் நன்கு முதிர்ந்திருப்பவைகளைச் சமூலமாய் கிரஹித்து, உலர்த்தி, மிருதுவாகச் சூர்ணம் செய்து, அதே செடியைப் பச்சையாக இடித்துச் சாறு பிழிந்து, அந்த இரஸத்தில் அச் சூர்ணத்தை ஊறவைத்து, இரஸம் முடியவும் உறியப்பட்ட பின்பு, அதையெடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். இதை ஒரு பலம் அளவில் தினத்திற்கு மூன்று முறை போஜனத்திற்கு முன்பு பாலுடன் உட்கொள்ளவேண்டும்." கோக்ஷுர ரஸாயநம் எனப்படும். இது வாதாதபிக முறையில் உபயோகிக்க தேஹ பலத்தை விருத்தி செய்து, ஆயுளை நீடிக்கச் செய்யவல்லதென்று கருதப்படுகிறது. நாரஸிஹ்ம க்ருதம், பிராஹ்மீரஸாயனம் சிலாஜது பஸ்மாதிகள், லாங்கல்யாதி குளிகை முதலிய ஔஷதங்களில் கிடைக்கக்கூடிய ஏதேனும் ஒன்றையும் அவ்வித குணம் பெறக் கருதி உட்கொள்ளலாம்.

## இரஸாயந மகிமை

ஆத்மஞ்ஞானத்தில் ஈடுபட்ட முனிவர்கள் முன்பு நீடித்த காலம் பயன் பெறுமளவும் யோகாப்யாசம் செய்து ஞானக் கண் படைக்கவும், பகவத் ஸாக்ஷாத்காரம் செய்யவும் விரும்பி, திடசரீரத்தையும் தீர்க்காயுளையும் கோரி, பெரு முயற்சியினால் இரஸாயந முறைகளைக் கண்டறிந்து, அவற்றைத் தாம் உபயோகித்து உத்தமபலனை அடைந்ததுடன், பிரபஞ்சத்திற் பிறரும் அவற்றால் பயன் படக் கருதி ஆயுர்வேதக் கிரந்தங்களில் அம் முறைகளை எழுதிவைத்துப் போயிருக்கிறார்கள். "குடீப்ராவேசிகாதி இரஸாயந முறையை விதிப்படி நிறைவேற்றிக்கொள்ளும் மனிதன் வயது சென்றவனாயினும் அவனுக்கு மேதை என்கிற அஸாதாரண புத்திப் பிரபாவம், ஞாபகசக்தி, அபூர்வமான தேஹ காந்தி, அரிய ஆரோக்கிய நிலைமை ஆயுளபிவிருத்தி, ஸகலேந்த்ரியங்களுக்கும் விசேஷ பலம், ஸ்த்ரீகளிடம் அதிக விருப்பம், ஜாடராக்னியின் அபிவ்ருத்தி, முகத் தெளிவு, குடலிற் சேர்ந்த வாயு கலைந்து சுகம் பெருதல் ஆகிய குணங்கள் ஏற்பட்டு, கிழத்தனத்தினாலான குரூபங்கள் விலகியவனாய் அவன் வாலிபப்பருவத்திற்கேற்ற உருவமைப்பு அனைத்தையும் அடைந்து விளங்குகிறான்" என்று ச்யவனர் செய்து கொண்ட இரஸாயந முறையைக் கூறுமிடத்தில் சரகர் விவரிக்கிறார் :—

मेधां स्मृतिं कान्तिमनामयत्वमायुःप्रकर्षं बलमिन्द्रियाणाम् ।
स्त्रीषु प्रहर्षं परमग्निवृद्धिं वर्णप्रसादं पवनानुलोम्यम् ॥

रसायनस्यास्य नरः प्रयोगात् लभेत जीर्णोऽपि कुटीप्रवेशात् ।
जराकृतं रूपमपास्य सर्वं बिभर्ति रूपं नवयौवनस्य ॥

### சரீரச் சீர்கேடும் இரஸாயநமும்

நமது ஆசார—வியவஹாரங்கள் யாவும் ஆபாஸ நிலைமையைப் பெற்றுள்ள இக்காலத்தில், பலவகையிலும் சீர்கெட்ட சரீரக் கட்டுக் கோப்பைச் சரிப்படுத்த இன்றியமையாச் சாதனம் இரஸாயநமுறையே. அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன்கூட அநேகம்பேர் அநாரோக்கியத்தினால் அலங்கோலமடைந்த நிலைமைக்குச் சரகர் கூறும் காரணத்தைக் கவனியுங்கள். "அபரிசுத்தமான கச்மலாஹாரங்களால் அநேகமாய் சரீரக்கோளாறுகள் ஏற்படுகின்றன; புளிப்பு; உப்பு, காரம் இவை அதிகமாய் அடங்கிய உணவுகளும், உலர்ந்து இரஸமற்றக் காய் கீரைகளும், உளுந்து-எள்-இறைச்சி-மாப்பண்டம் ஆகிய ஆஹார வகைகளும், கசிக்கசிந்தும்-பழகிப் பதனழிந்தும்-எளிதில் ஜீரணமாகவியலாயதுமுள்ள திண்பண்டங்களும், வியவஸ்தையில்லாத அளவிலும் நேரங்களிலும் உபயோகிக்கும் விஷமாசநம் என்னும் போஜனமும், மிதமின்றி யுட்கொள்ளும் அத்யசநம் என்கிற ஆஹாரமும், பயம் கோபம்-துன்பம்-உலோபித்தனம்-அறிவின்மை-மனோதேகக் கிலேசங்கள் ஆகியவைகளும் சரீர சீர்கேட்டுக்குக்காரணமாகின்றன. இக்காரணங்களால் மனிதரின் மாம்ஸபேசிகளென்னும் தசைநார்கள் தளர்ந்து மெலிவடைகின்றன; ஸந்திபந்தங்கள் என்னும் பூட்டுகள் கட்டுத் தளர்ந்து சோர்வுறுகின்றன; இரத்தம் கொதிப்படைந்து காந்தலுறும், மேதஸ் என்னும் கொழுப்புப்பசை மிகவும் உருகிக் கரைந்துவிடும்; எலும்புகளுக்குள் மஞ்ஜை யென்னும் வைரச்சோறு வலிவுறாது சிதையும் கடைசியாகச் சுக்ர தாது செழிக்காது; ஓஜஸ் என்னும் ஸகல தாது ஸாராம்சமான தேஜோதாது முடிவில் க்ஷயமடையும். இத்தகைய நிலைமைக்கு வந்த மனிதன் வாடி வதங்கி வருந்தி, உறக்கத்திற்கும் சோம்பலுக்கும் ஆலஸ்யத்திற்கும் ஆளாகி, உத்ஸாகமிழந்து, உரத்துப் பெருமூச் செறிந்த வண்ணம் தவிப்பான். அவன் உடலுழைப்புக்கும், உள்ளத்தால் யோசித்துச் செய்யும் செயல்களுக்கும் இயலாத மனிதனாய், அகமகிழ்ச்சி-அறிவு-முகத் தெளிவு ஆகியவற்றை முற்றிலும் இழந்தவனாய், நோய்களுக்கெல்லாம் நாடுமிடமாய்விடுவான்; ஆகவே வேத நூற் பிராயமான பூர்ணயுளைப் பெறாது அவனது வாணாள் வீணிலழியும். ஆனதுபற்றி முற்கூறிய விதமான ஆகாத ஆஹார விஹாரங்களை விலக்கிவிட்டு, இனிது ஆரோக்கியம் பெற இரஸாயநங்களை நீங்கள் உபயோகிப்பீர்களாக" என்று அடியில் வரும் அழகிய வாக்கியங்கள் உபதேசிக்கின்றன:—



सर्वे शरीरदोषा भवन्ति ग्राम्याद्याहारात्, अम्ललवणकटुकक्षारशुष्कशाकमाषतिलपिष्टान्नभोजिनान्, क्लिन्नगुरुपूतिपर्युषितभोजिनाम्, विषमाशनाध्यशनप्रियाणाम्, भयक्रोधशोकलोभमोहायासबहुलानाम्, अतोनिमित्ताद्धि शिथिलीभवन्ति मांसानि, विमुच्यन्ते सन्धयः, विदह्यते रक्तम्, विष्यन्दते चानल्पं मेदः, न सन्धीयतेऽस्थिषु मज्जा, न वर्धते-क्षयमुपैत्योजः। स एवंभूतो ग्लायति सीदति निद्रातन्द्रालस्यसमन्वितो निरुत्साहः श्वसिति। असमर्थश्चेष्टानां शारीरमानसानाम्, नष्टस्मृतिबुद्धिच्छायः, रोगाणामधिष्ठानभूतो न सर्वमायुरवाप्नोति। तस्मात् सर्वान् यथोक्तान् अहितानपास्य आहारविहारान् रसायनानि प्रयोक्तुमर्हति। (चरक चिकि. अ. १ पा. २.)

மேலும் முனீச்வரர்கள் கூட முன்னொரு ஸமயம் வீடுகளுக்குள்ளேயே அடைந்திருந்து சாலீநர்களாயிருந்து கொண்டும் (**शालीनाः**—கிருஹங்களிலேயே இருப்பவர்கள்) ஆகவே வாதாதப ஸேவையை அலக்ஷியம் செய்து கொண்டு, அதற்கு மாறாக வேறு சிலர் நாளொரு ஊராகத் திரிந்து அல்லும் பகலும் அலைந்தவாறு யாயாவரர்களாகக் காலங்கழித்துக் கொண்டும் (**यायावराः**—ஓரிடத்திலும் நிலைத்திராது நாடு திரிபவர்), ஒழுங்கில்லாத ஆஹாராதிகளை அருந்திக் கொண்டும் இருந்ததால் அநாரோக்கிய நிலைமைக்கு ஆளானார்களென்றும், அவ்வுண்மையறிந்து சிறந்த வாயுவையும் விசேஷ வெளிச்சத்தையும், தெள்ளிய தண்ணீரையும், புஷ்டிதரும் புதிய காய் கனிக் கிழங்குகளையும், கண்ணிக் கவரும் கானகத்தையும் இனிது பெற்று விளங்கும் இமயமலைச் சாரலையடைந்து இரஸாயந குணமுள்ள அமுதம் போன்ற அநேகம் ஔஷதிகளைச் சேவித்து, ஆயுளாரோக்கியாதிகளைப் பெற்று மேன்மையுற்றனர் என்றும் அமற்றோர் அத்தியாயத்தில் சரகர் இதிஹாஸ ரூபமான நிதர்சனத்தைக் கொண்டு ஹிதோபதேசம் செய்வது படிப்பதற்கு இனிதாயிருக்கும்.

### இரஸாயந ஸேவைக்குரியவர்.

எவ்வித இரஸாயநத்திற்கும் ஏற்றது நடுப்பிராயமே. அவ்விதமே எவ்வயதினருக்கும் அனுகூலமானது வாதாதபிக ரஸாயநம். முற்கூறிய ரீதியில் மலைப் பிரதேசம் முதலிய இடங்களிற் போய் இச்சிகித்ஸையைச் செய்து கொள்ள அனுகூலமில்லாதவர்களும், குடிப்ரவேசத்திற்கேற்ற ஸௌகர்யங்களைச் செய்துகொள்ள வியலாதவர்களும் அவரவரது இருப்பிடங்களிலேயே ஸாத்யமான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு சிலாஜது ரஸாயநம், லோஹரஸாயநம், அச்வகந்தாதி ரஸாயநம், ச்யவநப் பிராச

ரஸாயநம், ஆமலக-ஹரீதகீ ரஸாயநம் முதலிய ஔஷதங்களையும், பால், தேன் முதலிய உணவுகளையும் உபயோகிக்கலாம். எவ்வயதினரும் எவ்வித இரஸாயந ஸேவை செய்ய முயன்றாலும், அதற்கு முன்பாக தைலம் முதலிய ஸ்நேஹப் பிரயோகங்கள்-ஸ்வேதம் என்கிற வேது பிடித்தல் முதலிய பாஹ்ய சோதந முறைகளால் வெளியுடலையும், முற்கூறியவாறு வமந-விரேசநாதி அந்தச் சோதநமுறைகளால் குடல் முதலிய உட்புற அவயவங்களையும் சுத்தம் செய்து கொண்டவர்களே இரஸாயந சிகித்ஸைக்கு உரியவராவர். ஐஹிக ஸுகத்திற்கான வாஜீகரண சிகித்ஸை' ஐஹிகா முஷ்மிக ரூபமான இருவகை ஸுகங்களுக்கும் அனுகூலம் செய்யும் இரஸாயந சிகித்ஸை ஆகிய இவ்விரண்டாலும் ஏற்படக்கூடிய குணங்கள் முற்கூறிய வெளிப்புற-உட்புற சோதந முறைகளால் நிர்மலமாக்கப் படாத உடலில், அழுக்கடைந்த ஆடையில் ஏற்றப்படும் சாயம் போல் சிறிதும் பற்றுவதில்லை என்று வாக்படாதி ஆயுர்வேதாசிரியர்கள் விளங்க திருஷ்டாந்த புரஸ்ரமாய் வர்ணித்திருக்கிறார்கள்:—

अविशुद्धे शरीरे हि युक्तो रासायनो विधिः ।
वाजीकरो वा मलिने वस्त्रे रङ्ग इवामलः ॥

## இரஸாயநத்தின் பயன்.

குடீப்ராவேசிகம், வாதாதபிகம் ஆகிய இரண்டு முறைகளும் முக்கியமாகவும் நிர்பந்தமாகவு முள்ள நியமங்களுக்கு உட்பட்டு நிறைவேற்ற வேண்டியவை. அவரவர்களுக்குச் சௌகர்யமான இடங்களில் இருந்தவாறு தாது போஷணைக்கு மிகவும் உபயோகமான வீர்யவத்தான 'இரஸாயநௌஷதங்களைக் கைதேர்ந்த வைத்தியரின் உபதேசத்தை அனுசரித்து உபயோகிப்பது மூன்றாவது வகையான இரஸாயநமாம். இரஸாயநங்களை உபயோகிப்பதால் உண்டாகக்கூடிய நான்கு வித பிரபலமான பலன்களைக் கருதியே நம் பூர்வீகர்கள் இம்முறைகளைப் பிரவசநம் செய்தனர். அவற்றுள் தேஹாரோக்கியத்தைப் பலப்படுத்தி உடலுக்கும் உள்ளத்துக்கும் உரத்தைத் தேடுவது முதல் அம்சம் (2) அவ்விதம் செய்வதால் தேஹமனோ நிலைமைகளைப் பாதிக்கும் நோய்கள் எவையும் சரீரத்திற் பற்றாது. அவற்றைத் தடுத்துப்போடுவது இரண்டாவது அம்சம். (3) இவ்விரு அடிப்படையான அம்சங்கள் வலுப்படுவதிலிருந்து शतायुः पुरुषः என்கிற வேதம் விதித்துள்ளபடி நாம் நியதமாய் வாழ்ந்திருக்கக்கூடிய நூறாண்டுகளுக்குக் குறையாத தீர்க்காயுளைப் பெற்று சுகித்திருப்பது மூன்றாவது விஷயம். நான்காவது அம்சத்தைத் தான் முனிவர்கள் முக்கியமாகக் கருதினார்கள். தீர்க்காயுளைப் பெற்று இம்மையில் இந்த இரஸாயந



ஸேவி இனிது வாழ்வான் என்பதோடு இதன் பலன் நின்று விடுவதில்லை; ஆனால் முறை தவறாது இரஸாயநங்களை ஸேவிப்பவனுக்கு மறுமை அல்லது ஆமுஷ்மிக விஷயத்திலும் தேவர்ஷிகளுக்குக் கிடைக்கக்கூடிய புண்ணிய லோகங்களையும், சாச்வதமான மோக்ஷஸுகத்தையுங் கூட அடைவதற்கான ஆனுகூல்யங்களைச் சாதித்து வைப்பது இரஸாயநமே" என்கிற நான்காவது உத்தமோத்தம பலனும் இரஸாயநத்தினால் ஸித்திக்குமென்று சரகாதி மஹான்கள் நிர்ணயித்திருக்கிறார்கள் :—

न जरां न च दौर्बल्यं नातुर्यं निधनं न च ।
जग्मुर्वर्षसहस्राणि रसायनपराः पुरा ॥
न केवलं दीर्घमिहायुरश्नुते रसायनं यो विधिवन्निषेवते ।
गतिं स देवर्षिनिषेवितां शुभां प्रपद्यते ब्रह्म तथेति चाक्षरम् ॥

இரஸாயந முறைகள் ஐஹிக ஸுகஸாதநங்களாயிருப்பதோடு, யோகாப்யாஸாதி முறைகளுக்கு அவசியமான மனோபலத்தையும், மதிப்பிரபாவத்தையும், ஆத்மஞானத்தையும் அடைய அனுகூலமானவை. ஆகவே தான் "ஆதியில் கிழத்தனத்தினால் பாதிக்கப்பட்ட ச்யவநாதி முனிபுங்கவர்கள் தேஹமனோபலத்தையும் நீண்ட ஆயுளையும் அடைய விரும்பி, இரஸாயநங்களை உபயோகித்து அழிவில்லாத ஆயுளைப் பெற்று, அறிவு, தவம், பிரஹ்மசர்யம், அத்யாத்ம சிந்தை இவற்றிலும் கைதேர்ந்தவர்களாய், இவ்வுலகில் இனிது வாழ்ந்துவிட்டு, தமதிஷ்டப்படி இவ்வுடலை விட்டு விண்ணுலகையும் அடைந்து உஜ்ஜீவித்தனர்" என்று நமக்கு அறிவிக்கவே அவர்கள் அவ்வுண்மையை ஏட்டில் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள் :—

प्राणकामाः पुरा जीर्णाश्च्यवनाद्या महर्षयः ।
रसायनैः शिवैरेतैर्बभूवुरमितायुषः ॥
ज्ञानं तपो ब्रह्मचर्यमध्यात्मं ध्यानमेव च ।
दीर्घायुषो यथाकामं संभुज्य त्रिदिवं गताः ॥

இரஸாயந ஸேவை செய்து மனோநிலைமையை மேலான வலிமை பொருந்தியதாகச் செய்துகொண்ட யோகிகள் இஷ்டப்படி முடிவில் உடலை விடுத்து விண்ணுலகடைந்தனர். "यथाकामं त्रिदिवं गताः" என்று சரகாதிகள் கூறுவதிலிருந்து, "முதிர்ந்த வயதில் முனீச்வரர்களின தர்மத்தைத் தழுவி, முடிவில் யோக மகிமையினால் பௌதிக தேஹத்தை விட்டு மோக்ஷமடைய வல்லவர் இக்ஷ்வாகு வம்சத்தினர்" वार्धके मुनिवृत्तीनां योगेनान्ते तनुत्यजाम्" என்று கவி ஸார்வபௌமன் கூறிய அரும் பெரும்

பிரபாவமும் இரஸாயநத்தினால் மனிதருக்கு ஏற்படுமென்கிற தத்துவம் குறிப்பிடப்பட்டதாய் அறிக.

### நித்ய ரஸாயநம்

நிகில ஜனங்களும் நியதமாகவும் நிரந்தரமாகவும் அனுசரிக்க வேண்டிய நான்காவது இரஸாயநம் ஒன்றுண்டு. ஸத்தியமே பேசுதல், சினமொழித்தல், சித்தத்தையும் இதர இந்த்ரியங்களையும் ஆத்மார்த்த விஷயங்களிலே ஆற்றலுள்ளவையாகச் செய்தல், இரக்கமும் அமைதியுங் கொண்டு சான்றோர் உவந்த நித்ய கர்மங்களிற் கருத்தாயிருத்தல் ஆகிய ஒழுக்கமுள்ளவர் ‘நித்யரஸாயநிகள்’ என்றும், முற்கூறிய இரஸாயந ஸேவைகளால் ஏற்படும் நற்குணங்கள் இவர்களுக்குச் சுகமாயேற்படுமென்றும், நித்ய ரஸாயநிகளெனப்படுவோர் இதுகாறும் விவரித்துள்ள வேறு இரஸாயநங்களைச் சேவிப்பதும், இதனால் இம்மை மறுமைகளில் இனிது பலனடைவதும் வெகு எளிதென்றும் வாக்படாதி வைத்தியாசிரியர்கள் விஷய பரிசீலனை செய்து, தத்துவங்களைத் தெளிவுபடக் கூறியிருக்கிறார்கள் :—

सत्यवादिनमक्रोधं अध्यात्मप्रवणेन्द्रियम् ।
शान्तं सद्वृत्तनिरतं विद्यान्नित्यरसायनम् ॥
गुणैरेभिः समुदितः सेवते यो रसायनम् ।
स निवृत्तात्मा दीर्घायुः परत्रेह च मोदते ॥

(अष्टाङ्ग. उत्तर. अ. ४०.)

### முடிவுரை

ஸமீபத்தில் சில நாள் வரையில் மேனாட்டார் வாயில்லாப் பிராணிகளான வானரங்களை ஆயிரக்கணக்காக இந்நாட்டிலிருந்து பிடித்துப்போய், அவற்றின் உடலிலிருந்து சில கிரந்திகள் (கிளாண்ட்ஸ்) என்கிற உட்புற உறுப்புகளைக் கீண்டெடுத்து, அக்கிரந்திகளைக் கொண்டு ஏதோ மருந்துகளைத் தயார் செய்து, மனித தேஹங்களிற் குத்திச் செலுத்திக் கிழவரைக் குமாரராகவும், அற்பாயுளராயிருப்பவரை தீர்க்காயுளராகவும் செய்துவிடுவதாக வெளிவந்த பிரசாரங்களைக் கண்டு பிரமித்து, அமரர்களைப் போல் அழியாச் சரீரமடையக் கருதி, ருஜுவனேஷன் எனக் கூறப்படும் அம்முறைகளைச் செய்துகொண்டு முடிவில் வீணாசைக்காரராகப் போன நண்பர் சிலரை நான் அறிவேன். ஆனால் ஆயுர்வேத ரஸாயந முறைகள் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் கள்ளங் கபடற்ற முனீச்வரர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, அக்காலங்களிலேயே பலமுறை தமக்குத்



தாமே அனுஷ்டித்துப் பயனுள்ளவையெனத் தெரிந்து கொள்ளப்பட்டு, அப்பால் பிரஜைகளின் க்ஷேமத்தைக் கருதி, அவற்றை பிரசாரங்கள் மூலமாகவும் பிரபந்தங்கள் மூலமாகவும் நம் நாட்டினருக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் மஹருஷிகள் மனமுவந்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆரோக்கிய பரிபாலனத்திற்காகவும், அதன் மூலமாய் வியாதிகளைத் தடுத்து வயதை நீடிக்கச் செய்வதற்காகவும் திநசர்யை-ருதுசர்யை முதலிய பிரகரணங்களில் ஆயுர்வேதக் கிரந்தங்கள் கூறும் விஷயமெல்லாம் “ஸ்வஸ்த வ்ருத்தம்” எனப்படும். அதுதான் “நோயற்ற வாழ்வு” என்பது. அச்சாஸ்திரத்திற் கூறியபடி “ஸ்வஸ்த வ்ருத்தத்தை”த் தவறாது அனுஷ்டிப்பவன் “நித்ய ரஸாயநி” ஆவான்; அவ்வித புருஷன் நோய்களுக்கு வசப்படாது நூறாண்டளவும் நீடித்து இனிது வாழ்வான்” என்று உபதேசிக்கிறது ஆயுர்வேதம். அதுதான் இரஸாயநத்தின் முழுப்பலன்.

स्वस्थवृत्तं यथोद्दिष्टं यः सम्यगनुतिष्ठति ।
स समाः शतमव्याधिरायुषा न वियुज्यते ॥

---

ஸ்ரீ

## காயத்ரீ மஹாமந்த்ரம்

[ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், சென்னை]

சில நாள்களுக்கு முன் ஆங்கில பாஷையில் விசேஷ நைபுண்யத்தை அடைந்து பல தேசங்களிலும், தத்வக்ஞன், என்று ப்ரசித்தி பெற்ற மஹான் ஒருவர் காயத்ரீ மந்திரத்தைப்பற்றி ஒருகால் பேசும்போது அது ஒரு ப்ராசீனமான ஸ்தோத்ரம் (Prayer) என்று வ்யவகரித்தார். அப்பொழுது அதைப்பற்றி நான் பர்யாலோசிக்க நேரிட்டது. காயத்ரீயை நம்மவர்கள் அனைவரும் எவ்விதமான ஸித்தாந்த ஸம்ப்ரதாயஸ்தர் ஆனாலும் மந்த்ரம் என்றும், மஹா மந்த்ரமென்றுமே வழங்கி வருகிறார்கள். மேற்சொல்லிய மஹானுக்கு ஸ்தோத்ரத்திற்கும், மந்த்ரத்திற்கும் இருக்கும் பேதம் தெரியவில்லையென்று சொல்லத் துணியவில்லை. ஆயினும் அந்த பேதத்தை அவர் உணர்ந்திருந்தாராகில், அவர் அவ்விதம் பேசியிருக்க முடியாதென்று நாம் நிச்சயமாய் சொல்லக்கூடும்.

ஸ்தோத்ரம் என்கிற பதமானது ‘ஸ்து’ என்கிற தாதுவினின்றும் வந்ததால் ஸ்துதி செய்வது, அதாவது புகழ்ச்சியாக மேலிட்டுச் சொல்வது என்பதைக் குறிக்கும். ஆனால் ‘ஸ்துதி’ என்கிற பதத்திற்கும்

ஸ்தோத்ரம் என்கிற பதத்திற்கும் அர்த்த பேதம் உண்டு. ஸ்தோத்திரம் என்கிற பதத்தில் 'ஸ்து' என்கிற தாதுவுடன் 'த்ரா' என்கிற தாதுவைச் சேர்த்து, ஸ்தோத்ரம் என்கிற பதம் வருகிறது. "ஸ்தோதாரம் த்ராயதே இதி 'ஸ்தோத்ரம்' என்று ஸம்ஸ்கிருத பாஷையில் ஸமாஸம் சொல்லுகிறார்கள். அதாவது 'ஸ்துதி' செய்கிறவனை காப்பாற்றுகிறது 'ஸ்தோத்ரம்' எனப்படும். இப்படி இவ்விதமான அர்த்த வித்யாசம் ஏற்பட்டிருப்பினும், நம்மவர்களால் பெரும்பாலும் 'ஸ்துதி' 'ஸ்தோத்ரம்' என்கிற இவ்விரண்டு பதங்களும் அர்த்த வித்யாசமில்லாமலே உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. எல்லா ஸ்துதியுமே ஸ்தோத்ரமாகாதாகையால் இவ்விரு பதங்களுள் கூட இருக்கும் வித்யாசத்தைக் கவனித்து அர்த்த வித்யாசத்துடன் உபயோகிப்பதே உசிதமாகும்.

மந்த்ரம் என்கிற பதத்திற்கும் 'ஸ்துதி' என்கிற பதத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. ஸ்தோத்ர மென்கிற சப்தத்திற்கும், மந்த்ர மென்கிற சப்தத்திற்கும் பொதுவாயிருப்பது கடைசியில் இருக்கும் 'த்ரா' என்கிற தாது மாத்திரம்தான். மந்த்ரம் என்கிற பதத்திற்கு ஸமாஸம் இரண்டு வகையாகச் சொல்லுகிறார்கள். அவையாவன வெனில், 'மநநாத் 'த்ராயதே' இதி மந்தரம், 'மந்தாரம்' 'த்ராயதே' இதி மந்த்ரம். 'மந்' என்கிற தாதுவுக்கு நினைத்தல் என்று அர்த்தம். அது பற்றி மந்த்ரம் என்கிற பதத்திற்கு மநநம் அதாவது இடைவிடாது நினைத்தலால் ரக்ஷிப்பது அல்லது இடைவிடாது நினைக்கிறவனை ரக்ஷிப்பது மந்த்ரம் என்பதாகும். இவ்விரண்டு ஸமாஸமும் வேறாகத் தோன்றினாலும் கிடைக்கும் அர்த்தங்களில் விரோதம் ஒன்றுமில்லை. ஆதலால் ஸ்தோத்ரத்திற்கும் மந்த்ரத்திற்கும் ஏற்பட்டுள்ள பேதங்களை அடியில் வருமாறு தெளியலாம்.

ஸ்தோத்ர மெனப்படுவது வாயாலாவது சொல்லப்படவேண்டும், எழுத்தாலாவது எழுதப்படவேண்டுமென்பது. மந்த்ரமெனப்படுவது மனத்தினாலேயே உச்சரிக்கப் படவேண்டும். வாயைத்திறக்காமல் மனஸிலேயே உச்சரிக்கக்கூடுமென்பது எல்லாருக்கும் அநுபவஸித்தம். அதனால் வாயால் உச்சரிக்கவே கூடாதென்பது ஏற்படாது. அதனால் நிச்சயமாய் ஏற்படுவது யாதெனில், வாயால் உச்சரித்த போதிலும், மனஸினால் செய்யப்படும் உச்சாரணமானது அவச்யமென்று ஏற்படும். அதாவது மனஸ்ஸை ஏகாக்ரமாக்கி பதங்களுள் வரிசையாய் அமைக்கப் பட்டிருக்கும் அக்ஷரங்களாகிய சப்தங்களை தன் காது கூட கேழ்க்காமல் மனஸிலேயே அநுஸந்திப்பது.

ஸ்தோத்ரத்திற்கும், மந்த்ரத்திற்கும் மற்றொரு வித்யாசம் உண்டு. அதாவது 'ஸ்துதி' செய்வதென்பது ஒரு தடவை செய்தால் போதுமானது. மனுஷ்யர்களும் தேவர்களும் கூட அடிக்கடி ஸ்துதி செய்யப்



படுவதால் அதீவ ப்ரீதர்களாகக் கூடுமானாலும் ஒரே ஸ்துதியை ஒரே மாதிரியாக சொல்லுவதில் ப்ரீதி விசேஷம் உண்டாகக் கூடுமென்று நினைக்க இடமில்லை. ஆனாலோ மந்த்ரம் எனப்படுவது மனனத்தால் ஏற்படுவதால் எத்தனை தடவை திருப்பித் திருபபி ஜெபிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பலனை உண்டாக்கக்கூடியது. ஆகலால் ஆவர்த்தி ஜபம் என்பது, அதாவது, 10, 28, 108, 1008, முதலான எண்ணிக்கைகளால் ஆக்கப்படுவது.

ஸ்தோத்ரத்திற்கும், மந்த்ரதிற்கும் பின்னுமொரு வித்யாசமும் உண்டு. அதாவது மனனத்திற்கு இன்றியமையாத குணமான அர்த்தாநுஸந்தானம். இது விஷயத்தில் சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். ஏனெனில் அநேக மந்த்ரங்களில் சுத்தமாய் அர்த்தமே இல்லாத அக்ஷரங்களும் சப்தங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தோன்றும். ஆனால் அவ்வக்ஷரங்களுக்கும், சப்தங்களுக்கும் அர்த்தமே இல்லை யென்று நிர்த்தாரணம் செய்வது தவறு. அர்த்தம் தெரிவிக்கக்கூடியவர்கள் இல்லாமையினாலேயே அர்த்தமே இல்லை யென்று சொல்லமுடியாது. நாம் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமையினாலேயே அர்த்தமில்லை யென்று ஏற்படாது. அவ்விதம் அர்த்தமில்லாதவை போல் தோன்றும், அக்ஷரங்களும், சப்தங்களும், பீஜாக்ஷரங்கள் என்று சொல்லப்படும் ரீதியில் யாதாவது ரஹஸ்யார்த்தத்தை தெரிவிக்கக் கூடியதற்காகவே ஏற்பட்டவை. இவையெல்லாம் யோசித்தால் அர்த்தக் ஞானமில்லாமலே அநுஸந்திக்கப்படும், ஆவர்த்தி செய்யப்படும் மந்த்ரமானது நிஷ்ப்ரயோஜன மென்றே கருதப்பட வேண்டும். இவ்விஷயத்தில் வெறும் சப்தத்திற்கே ஒரு விதமான சக்தி உண்டென்று நம்மவர்களில் அநேகர் சொல்லிவருவதை நான் அறிவேன். ஆயினும் மந்த்ராநுஸந்தானத்திற்கு அர்த்தக் ஞானம் அதிசயித பலகர மாத்ரம் இல்லாமல் அத்யாவசிகமென்று கூடத்தோன்றுகிறது. காயத்ரீ மந்த்ரத்தை வைதிகமதத்தைச் சார்ந்த அனைவரும் மஹாமந்த்ரமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மந்த்ரங்கள் யாவற்றிலும் இதுவே ஸர்வோத்க்ருஷ்டமாயிருப்பதும் தவிர, அநாதியாய் ஏற்பட்டுள்ளது என்று கூட நினைக்க இடமிருக்கிறது.

இமமந்த்ரோப தேசத்தையே நம்மவர்கள் ப்ரம்மோப தேசமென்று வ்யவகரித்து உபநயன காலத்தில் உபதேசித்து வருகிறார்கள். மந்த்ரம் ரஹஸ்யமும், ஸர்வதா கோப்யமும், ஆனதால், இக்காலத்திலுங்கூட நாடகரீதியில் சுற்றி எழுந்தருளியிருக்கும் எல்லார்க்கும் ஏற்கனவே இந்த மந்த்ரம் தெரிந்திருந்த போதிலும் உபதேசிக்கும் ஆசார்யனோ, பிதாவோ, தன்னையும், உபநயிக்கப்படும் குமாரனையும், ஒரு பட்டு வஸ்திரத்தால் மூடிக்கொண்டு காதில் ரகஸ்யமாய் உபதேசிக்கிறான். தற்காலத்தில் எல்லா மந்த்ரங்களும் அச்சுப்புஸ்தகங்களில் ஏறி, இதர பாஷைகளிலும் கூட

ப்ரசுரப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மந்த்ரத்தினுடைய ரஹஸ்யதத்வத்தைக் குறித்து நாம் விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை. உச்சரிப்பும், ஸ்வரங்களும் புஸ்தகங்களிலின்றும் கிடைக்கா. அதுவுமன்றி ஆசார்யனால் உச்சரித்து உபதேசிக்கப்படும் மந்த்ரத்திற்கு சக்தியும், வீர்யமும், அஸாதாரணமாய் அமைந்துள்ளதென்று நம்மவர்கள் நம்பியிருப்பதற்கும், விசேஷ ஆஸ்பதம் உண்டு.

காயத்ரீமந்த்ர உபதேசத்தை நம்மவர்கள் ப்ரம்மோப தேசமென்று வ்யவகரிப்பதின் காரணத்தைக் கண்டறிவது ஆவச்யகமாம். இம்மந்த்ரத்தில் த்யானிக்கப்படுவது பதரீதியில் ஸவிதா அல்லது ஸூர்யனை ஏற்பட்டாலும் இதில் பரப்ரம்மத்தை ஸூர்யனாகவும், தேஜோ ராசியாகவும் சொல்லப்பட்டிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. இம்மந்த்ரத்தில் ப்ரம்மத்தை மனுஷ்யாக்ருதியாக, கண், கை, கால்களோடு புருஷாக்ருதியாய் வர்ணிக்காமல் அகிலாண்ட ப்ரம்மாண்டத்தையும் கவர்ந்த தேஜோ ராசியாய்த்யானத்திற்காக வர்ணிக்கப்பட்டிருப்பது யோசித்து நன்றாய் அறிய வேண்டியது அவச்யம். ஸவித்ருமண்டலவர்த்தியாக பகவானை நிதர்சித்திருப்பது யாவர்க்கும் தெரியும். இந்த பரமவ்யோம பாஸ்கரனைக் குறித்துத் தான் 'நதத்ரஸூரியோபாதி, குதோயமக்னி:' என்கிற வாக்யங்கள் பிறந்திருக்கின்றன.

காயத்ரீ என்கிற பதமானது 'காயந்தம் த்ராயதே' அதாவது எவனொருவன் இதைப் பாடுகிறானோ அவனைக் காப்பாற்றுவது என்பதாகும். எக்காரணத்தினால் ஜெபிக்கிறவனை என்று சொல்லாமல், பாடுகிறவனையென்று சொல்லப்படுகிறதோ, அதற்குச் சரியான காரணம் எனக்குப் புலப்படவில்லை.

உபநயன காலத்தில் ப்ரம்மோபதேச அவஸரத்தில் அஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களை உபதேசிக்காமல் ப்ரம்மத்தையே தேஜோராசியாய் த்யானிக்கிற மந்த்ரமானது உபயோகிக்கப்படுவது யாது காரணத்தினால் என்று நாம் விசாரித்தறிவது அவச்யம். இம்மந்த்ரத்தின் மஹிமையானது இம்மந்த்ரோபதேசத்தைப் பெற்றவுடன் பெறும் சிறுபிள்ளை, த்விஜனாகி விடுகிறான் அதாவது இரண்டாவது தரம் பிறந்தவனாகக் கருதப்படுகிறான். அதுவரையில் சூத்ரப்ராயமாக யிருந்தவன் ப்ரம்மோபதேசம் பெற்றவுடன்ப்ராம்மண ஜென்மம் பெறுகிறான். இந்த ரீதியில் இம் மஹாமந்த்ர உபதேசம் பெறுவது இவ்வளவு ச்லாக்யமாகக் கருதப்படுகிறது.

மந்த்ரத்தில் த்யானிக்கப்படுவது பதங்களில் ஏற்படும் மேல் அர்த்தத்தை மாத்திரம் யோசிக்குமிடத்து 'ஸவித்ரு' பதத்தினால் குறிக்கப்



படும் ஸூர்யனையும் ப்ரம்மத்தை வெறும் தேஜோமயமானதாகவோ, குறிக்கப்படுவதாகும். இவ்விதம் பராபரப்ரம்மத்தை ஓரே தேஜோராசியாகக் கணிசிப்பது தற்காலத்தில் பாச்சாத்ய ப்ராக்ருதி சாஸ்த்ர வித்வாம்ஸர்கள் கண்டு பிடித்து நிர்ணயித்திருக்கிறபடி ஒவ்வொரு அணுவுக்குள்ளும் இருக்கும் அணுவிலும் கூட 'இலக்ட்ரான்ஸ்' என்னும் வெகு ஸூக்ஷ்மமான தேஜோ சமூகங்கள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. என்று தெரியவருகிறதாகையால் இத்தகைய ஆதுநிக சாஸ்த்ரங்களுக்கும் பொருத்தமாயிருப்பது மிகவும் பர்யாலோசிக்கத் தக்கது. அதெப்படியிருப்பினும் இம்மந்த்ர ஸம்பந்தமாய் நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், பூலோக, புவர்லோக, ஸுவர்லோகமாகிய எல்லா லோகங்களையும் வ்யாபித்து தேஜோமயமான அந்த ப்ரம்மம் நம்மால் வந்திக்கப்பட்டு நம்முடைய புத்தியை தூண்டி வ்ருத்தி செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. அதாவது க்ஞான ஸம்பாதநத்திற்கு அத்யாவச்யகமான புத்தியின் கூர்மையையும், அபிவ்ருத்தியையும் அந்தத் தேஜோமயமான ப்ரம்மம் செய்யக் கடவதென்று ப்ரார்த்தனை ஆகும். அதுவும் நேராக நீ செய்யக்கடவாய் என்றாவது நீ செய்யவேணும் என்றுப்ரார்த்திக்கிறேன் என்றாவது இல்லாமல் படர்க்கையில் 'தத்' என்கிற பதத்தால் குறிக்கப்படும் அது அல்லது அந்த ப்ரம்மம் தூண்ட வேண்டியதென்று, அர்த்தம் ப்ராப்தமாகிறது. இதனால் எனக்குத் தோன்றுவது என்னவெனில் இப்ரார்த்தனை யானது நாம் செய்யும் ப்ரார்த்தனைக்கு இணங்கி ஒரு தெய்வம் நாம் விரும்புவதைக் கொடுக்கும், வரமல்ல, தானமல்ல, ஆனால் தேஜோமயமான அந்த ப்ரம்மம் எங்கும் வ்யாபித்திருக்கிறதாகையால் அதை ஸ்மரித்து அதற்கும் நமக்கும் அக்காரணத்தினாலேயே ஏற்பட்டிருக்கும் ஸம்பந்தத்தையும் மனனம் செய்து கொண்டு அது நம்முடைய புத்தியை அபிவ்ருத்தி செய்து கூர்மையாக்க வேண்டு மென்று தீவ்ரமாய் அடுத்தடுத்து விரும்புவதினாலேயே அதனுடைய ரீதியை அனுசரித்து ஏற்படக் கூடிய பரம லாபம். இது திடீரென்று ஓரே தடவை அல்லது சில தடவைகளில் ப்ரார்த்திப்பதால் வரக் கூடியதன்று. அது கொஞ்சங் கொஞ்சமாய் அணு அணுவாகவே ஒவ்வொரு தரம் ஆவர்த்தி செய்யும் போதெல்லாம் கிடைக்கக் கூடியது. ஆதலால்தான் எத்தனை ஆவர்த்தி செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சக்தி அதிகரிக்கும், பலனும் அதிக முண்டு. அதுவும் கவனத்துடன் மனனம் செய்துகொண்டு ஆவர்த்தி செய்தால்தான் கிடைக்கக் கூடியது.

இம் மஹா மந்திரத்தை ஜெபிக்கும்போது அகிலாண்ட ப்ரம்மாண்டத்தையும் கவர்ந்து நிற்கும் தேஜோ ரூபியான ப்ரம்மமானது தச திக்குகளிலுமிருந்து ஸூர்யகிரணங்கள் போல, நம்மை நாடிவந்து, நம்முட்புகுந்து

நமக்கு அற்புதமான திவ்ய சக்தி யொன்றை ஊட்டுவதாக மனோபாவம் செய்து கொண்டு ஜெபிப்பது யுக்தமும், விசேஷ பலகரமாயும் இருக்குமென்று தோன்றுகிறது.

இம் மஹாமந்த்ரத்தை குறித்த ரீதிகளில் ஜெபித்து சித்தி பெறுகிறவர்களுக்கு சாபானுக்ரஹசக்தி, அஸ்த்ர சஸ்த்ரங்களின் நைபுண்யம் இன்னும் பல விதமான சக்திகள் உண்டாகிறதென்று சில மஹான்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதை பரீக்ஷித்துப்பார்த்தாலொழிய நிச்சயமாய் நம்புவது கஷ்டமாயிருக்கிறது. அப்படியிருப்பினும் மனுஷ்ய புத்தியின், சக்தியும், கூர்மையும், மனுஷ்ய ஜன்மத்திற்கே மிகவும் முக்யம். புத்தியினாலேயே மனுஷ்யன் எல்லாவற்றையும் சாதிக்கிறான் அது இல்லாவிடில் மனுஷ்யன் பசுப்ராயன் ஆகிறான். ஆகலால் மனுஷ்யனால் பெற வேண்டிய புருஷார்த்தங்கள் யாவற்றிற்கும் அவச்யமான அஸ்திவாரம் போலும். அதுவும் இம்மஹாமந்த்ரம் ப்ரம்மசர்யாச்ரமத்தில் ஆரம்பத்தில் உபதேசிக்கப்படுவதாகையால், அவ்வாச்ரமத்தில் பெறவேண்டிய வித்தைக் ஞானம், வைராக்கியம், இந்த்ரிய ஜெயம், த்ரிகரணசுத்தி, முதலான எல்லா விதமான ச்ரேயஸ்ஸுகளுக்கும் காரணமாகிறது. இது மாத்திரமேயல்ல, வயஸ் அதிகமாகி வ்ருத்தாப்யம் வந்திடும்போது புத்தி பதே பதே குறைவை அடைகிறதென்று சொல்வது சுத்தத் தவறு. அவ்விதமானக் குறைவு ப்ரதி தினமும் தவறாமல் காயத்ரீ ஜெபம் செய்கிறவர்களுக்கு உண்டாகக் கூடியதன்று. அவர்கள் விஷயத்தில் ஆத்ம சக்தியான புத்தியானது வரவர வ்ருத்தி யடைந்துகொண்டிருக்கிற தென்றே சொல்லக் கூடும்.

இம் மஹாமந்த்ரத்தை, காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்று மூன்று ஸ்த்ரீ தேவதாரூபமாகச் சொல்லுகிறார்கள். அதுவும் தவிர மந்த்ர ஆவாஹனத்தில் இம்மந்த்ரத்தைச் சந்தஸ்ஸுகளுக்கு மாதாவென்றும், ஓஜஸ் என்றும், ஸஹஸ் என்றும் பலம் என்றும், ப்ராஜஸ் என்றும் தேவர்களுடைய 'தாமா' என்றும், விச்வம் என்றும், விச்வாயுஸ் என்றும், ஸர்வம் என்றும், ஸர்வாயுஸ் என்றும் இப்படி யெல்லாம் பலவிதத்தில் தேஜஸ்ஸு, சக்தி, இவைகளை விவரித்து வர்ணிக்கக்கூடிய பதங்களால் மனஸ்ஸில் த்யானம் செய்து ஆவாஹனம் செய்கிறார்கள். இவைகளைப்பற்றி யெல்லாம் தீர்க்கயோசனை செய்து கண்டுபிடிக்கவேண்டிய அம்சங்கள் வெகுவாயிருக்கின்றன.

அர்க்யப்ரதானத்திற்கும் இம்மந்த்ரமே உபயோகப்படுத்தப்படுகிறது. அப்படி உபயோகப்படுத்துவதற்குச் சரியான காரணம் தெரியவில்லை. வேதத்தில் இம்மந்த்ரத்தால் அபிமந்த்ரிக்கப்பட்டு விடப்படும் அர்க்ய



தீர்த்தமானது வஜ்ரம்போல் ஆகி ஸந்த்யா காலங்களில் சூர்யனை எதிர்க்கும் ராக்ஷஸர்களை மந்தேஹாருணத்வீபத்தில் தள்ளிவிடுகிறதென்று சொல்லியிருக்கிறது அது ஏன, எப்படி யென்பது நம்மால் விசாரித்தறியமுடியாது. இதுவும் இம்மந்த்ர ஸம்பந்தமாய் பர்யாலோசிக்கப்பட்டு நன்கறிய வேண்டிய அம்சங்களில் ஒன்று.

ஆதலால் இவ்வித காரணங்களை யெல்லாம் யோசித்து நம்மவர்கயு எல்லாரும் சிறுவர்களும், பாச்சாத்ய ப்ரக்ருதி சாஸ்த்ரங்களிலேயே ப்ரதிபத்தியுள்ளவர்களும்கூட இந்த காயத்ரீ மஹாமந்த்ரமானது, நம்முடைய புராதனமான வேதங்களின் மேன்மையாய் கொண்டாடப்பட்டிருப்பினும் தற்கால ப்ரக்ருதி சாஸ்த்திரத்தையும் அநுசரித்திருக்கிறதென்பதை நன்குணர்ந்து அதனுடைய ஜெபத்தினால் கிடைக்கக்கூடிய பலன்களையெல்லாம் பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

---

# உபாகர்மம்

[ஸ்ரீ. ஸ்ரீ.]

ஸ்ரீ பகவத்கீதையில் விபூத்யத்யாயத்தில் 'யஜ்ஞங்களுக்குள் ஜபயஜ்ஞமாயிருக்கிறேன்' என்றான் கண்ணன். இப்படி ஜபயஜ்ஞத்தைக் கொண்டாடுவதற்குக் காரணம் இதில் மற்ற விதியஜ்ஞங்களில் போல ஹிம்ஸையே இல்லாததும், பகவத் ப்ரீதியை ஸம்பாதித்துக்கொடுப்பதில் ஸர்வோத்க்ருஷ்டமாயிருப்பதுமே. இந்த ஜபத்திற்கு மந்திரங்கள் அவச்யமாதலால் அவற்றைக் கொண்டுள்ள வேதம் நாம் மிகவும் ஆதரிக்கத்தக்கது. அந்த வேதத்தை அத்யயனம் செய்ய ஆரம்பிப்பது தான் உபாகர்மமென்று வழங்குகிறது.

உபநயநம் என்னும் ஸம்ஸ்காரத்தைப் பெற்ற ஒவ்வொருவனும் இவ்வுபாகர்மத்தை அவச்யம் அநுஷ்டிக்கவேண்டும். யஜுர் வேதிகள் சிராவண மாதத்துப் பூர்ணிமையிலும், ரிக் வேதிகள் சிராவண மாதத்து சிரவண நக்ஷத்திரத்திலும், ஸாமகர்கள் ஹஸ்த நக்ஷத்திரத்தோடு கூடிய பஞ்சமி திதியிலும் அத்யய நாரம்பத்தைச் செய்ய வேண்டும். அது முதல் நாலரை மாதம் வேதாத்யயனம் செய்து விட்டு தைமாதம் உத்ஸர்க்கம் செய்ய வேண்டும் (நிறுத்த வேண்டும்). மற்ற மாதங்களில் வேதாங்கங்களின் ஞானத்தை ஸம்பாதிப்பார்கள். ஆனால் தற்காலத்தில் ஆயுள் பலம் சக்தி முதலிய பல ஸௌகர்யங்கள் குறைவாயிருப்பதினால் தை மாதத்தில் செய்ய வேண்டிய உத்ஸர்க்கத்தை அநுஷ்டிக்காது, அதற்குப் பிராயச்சித்தமாக

உபாகர்மதினத்தன்று காலை 'காமோ கார்ஷீத், மந்யு: அகார்ஷீத்' என்கிற ஜபத்தைச் செய்கிறார்கள். இப்படிச் செய்வதற்கும் சாஸ்திரங்களில் விதி இருக்கிறது.

இந்த உபாகர்மம் ப்ரஹ்மசாரி, கிரஹஸ்தன், வாநப்ரஸ்தன், மூவருக்கும் உண்டு. உபாகர்மகாலத்தில் உப்வீதம் முதலானவற்றைப் புதிதாகத் தரித்துக் கொள்ள வேண்டும்; முன்னமிருப்பது பழையதானாலும் புதிதானாலும் எடுத்து விட வேண்டியதே. 'உபாகர்மம் உத்ஸர்க்கம் இவைகளைச் செய்யும்போது பிராமணர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து தர்ப்பங்களில் ரிஷிகளை ஆவாஹநம் செய்து, ஆவாஹநம் செய்யப்பட்ட ரிஷிகளைப் பூஜிக்க வேண்டும். ப்ரஜாபதி முதலானவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று தடவை எள்ளும் ஜலமும் எடுத்துத் தர்ப்பணம் செய்யவேண்டும். பிறகு வேத புருஷனின் பிரீதியின் பொருட்டு ஹோமத்தைச் செய்து பெரியோர்களான ஆசார்யர்களைக் கொண்டு அத்யயநாரம்பம் செய்ய வேண்டும.

மறுநாள் செய்யப்பட்டு வரும் காயத்ரீஜபம் ஸம்வத்ஸரப்ராயச் சித்த ரூபமானது. வேதம் ஓதக்கூடாத மாதங்களிலும் அத்யயநம் செய்ததற்காக (मिथ्याधीत) இந்தப் பிராயச்சித்தம். இதற்கு 'ஸமிதாஹுதி' என்றும் பெயர் உண்டு. உபாகர்மத்தைப்போல ஒரொரு வேதத்திற்கு ஒரொரு நாள் இதற்குக் கூறுமையால், மூன்று வேதிகளும் இதை ஒரே நாளில் அனுஷ்டிக்கிறார்கள். காயத்ரீ ஜபம் செய்ய வேண்டிய நாளையும் விதித்திருக்கிறார்கள்; சிராவண மாதத்து பூர்ணிமைக்கும் ப்ரதமைக்கும் ஸந்தியானது ஸங்கவகாலத்திற்கு முன் இருக்குமானால், அந்த தினத்திற்கு முதல் நாள் உபாகர்மமும் அன்று காயத்ரீஜபமும். செய்ய வேண்டும் ஒரு தினத்தை ஐந்தாகப் பிரித்து, அதின் இரண்டாவது பாகத்திற்கு 'ஸங்கவம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். முன் கூறிய "பூர்ணிமைக்கும் பிரதமைக்கும் உள்ள ஸந்தி ஸங்கவகாலத்திற்குப பின்னும் (அதாவது ஸூர்யோதயத்திலிருந்து 7முதல் 12 நாழிகைக்குப் பின்னும்), ஆவர்த்தனத்திற்கு முன்னும் இருக்குமானால் அன்றே உபாகர்மம் காயத்ரீஜபம் இரண்டையும் செய்யவேண்டும்" என்று ஒரு ஸ்மிருதி கூறுகின்றது.

இந்த வருஷம் ஆடிமீ 27உ வியாழக்கிழமையன்று (11-8-1938) பூர்ணிமை 14-42 நாழிகை வரையிலிருக்கிறது. 12-28 நாழிகையிலுள்ள ஸங்கவகாலத்திற்குப் பிறகும் 15-36 நாழிகைக்கு ஏற்படும் ஆவர்த்தினத்திற்கு முன்னும் பூர்ணிமைக்கும் பிரதமைக்கும் ஸந்தி ஏற்படுகிறது. ஆகையால் இந்த வருஷம் ரிக்யஜுருபாகர்மதினத்தன்றே காயத்ரீஜபமும் அநுஷ்டிக்க வேண்டியது என்று தர்ம சாஸ்த்ரம் அறிந்த பெரியோர்களின் நிர்ணயம் (புதுக்கோட்டைப் பஞ்சாங்கத்திலும் அப்படியே குறிப்பிடப்பட்டிருக்கிறது.) ஸ்ரீ உ. வே. கோஷ்டிபுரம் ஸ்வாமி முதலான பெரியோர்களும் அப்படியே நிச்சயித்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீ:

# பக்தியும் ப்ரபத்தியும்

[ஸ்ரீ. உப. டி. ஈ. சடகோபாசாரியர், திருப்பாபுலியூர்.]

அநாதிகாலமாக கர்ம விலங்கினால் கட்டுண்டு நாநாவித ஜன்மங்களாகிற விசித்திர அறைகளால் அமைக்கப்பெற்ற ஸம்ஸாரமாகிற காராகிரஹத்துள் அஞ்ஞானவிருளில் உழன்று தடுமாறும் சேதனர்கள் அவ்விலங்குக் கட்டினின்று நீக்கி சிறைவிட்டு பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமான அளவற்ற ஞான ஒளியில் என்னாளும் உலாவுவதே மோக்ஷமாகும். இம்மோக்ஷத்தைப் பெறுவதற்கு நம் சாஸ்த்திரங்கள் இரண்டு மார்க்கங்களை விதிக்கின்றன. அவை பக்தியும் ப்ரபத்தியுமே. மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்து பரிபூர்ண ப்ரம்ஹாநுபவமாகிற மஹானந்தத்தில் மூழ்கி பரமாத்மாவிற்கு நித்ய கைங்கர்யம் செய்யும் ஒப்பிலாப் பெறும் பேற்றைப் பெற விரும்புவோர் பக்தியோகத்தின் பரகாஷ்டையாகிற பரம பக்தியின் வாயிலாவது பரபத்தியின் வாயிலாவது தம் முத்தேச்யத்தை ஸாதித்துக் கொள்ள முடியுமே தவிற மற்றொருமார்க்கம் கிடையாது. இப்போது இவ்வுபாயங்களின் ஸ்வரூபத்தையும் அவை எவ்விதமாக பரம புருஷார்த்தத்தை ஸாதிக்க வல்லன என்பதையும் விசாரிக்கப் ப்ராப்தம்.

பக்தியாவது ஸ்நேஹ பூர்வகமாய் த்யாநித்தல் பக்தி என்று முன்னோர்களின் நிர்வசனத்தின்படி ப்ரீதி பூர்வகமாய் இடைவிடாது செய்யப்படும் தியானமே பக்தியாகும். தியானம் என்னும் பதத்தின் ஸ்வாரஸ்யத்தால் அது மஹனீயர் விஷயத்தில் செய்யப்படுவதென்றும், சூசிக்கப்படுகிறது. ஆகையால் மனதின் ஏகாக்ரமான ஈடுபாட்டுடன் பேரன்பினால் கௌரவ புத்தியுடன் பரம புருஷனை இடைவிடாது சிந்திப்பதுதான் பக்தியெனப்படும். பக்தியின் ஸ்வரூபமாவது ஒரு பாத்திரத்திலிருந்து எண்ணையை தாரையாக கீழே பெருக்கினால் அது எப்படி ஒரே கம்பி போல் இடை வெளியில்லாமல் தொடர்ச்சியாய் பெருகுமோ அவ்விதம் வேறு ஒரு சிந்தையும் குறுக்கிடாமல் தியானிக்கப்படும் வஸ்துவின் சிந்தையே ஒரு பெறுக்காய் மனதில் குடிகொண்டிருப்பதுதான் பக்தியாகும். இது உத்கிருஷ்டமான வஸ்து விஷயத்தில் அப்யஸிக்கப்படுவதால் அல்பங்களும் அஸ்திரங்களுமான லௌகிக ரஸாநுபவங்களைப் போலிராமல் திவ்யாமிருத பானம் போல் அப்யாஸ காலத்திலேயே மேன்மேலும் ஆனந்தத்தை வளர்த்தி ஸ்வயம் ப்ரயோஜனமாய் இருப்பதுடன் காலாந்தரத்தில் ஸம்ஸாரம் என்னும் பிணியை தீர்த்து அளவிறந்தநித்ய மோக்ஷானந்தத்திற்கு ஸாதனமுமாகிறது.

ஒரு மனிதனுக்கு நிர்யாணக்ஷணத்தில் எவ்வித எண்ணம் மனதில் தோன்றுகிறதோ அவ்வித நிலைமையே அவனுக்கு உத்தர காலத்தில்

ப்ராப்தமாகிறது. என்பது சாஸ்திர நிச்சயம். ஒருவனுக்கு எந்த விஷயம் எப்போதும் சிந்திப்பதால் மனதில் நன்கு பதிந்து அது காரணமாக தேக வியோக காலத்தில் அதைக் குறித்து அந்திமஸ்மிருதி ஏற்படுகிறதோ அவ் விஷயத்திற்கு அநுகுணமாகவே ஜன்மாந்தரகதி அமைகிறது. ஆகையால் ஒரு ஜன்மத்திற்கு பின் வரும் கதி அதன் அந்திமஸ்மிருதியைச் சார்ந்திருப்பதால் அது ஸத் விஷயத்தில் அமைவதற்குத்தக்க உபாயத்தைத் தேடுவதே ஒவ்வொருவருடையவும் கடமையாகும். அந்திமஸ்மிருதியாவது ப்ராண வியோக காலத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி புத்தி சக்தியும் அடங்கி சரீரமும் காஷ்ட பாஷாணம்போல் இருக்கும் ஸமயத்தில் மனதின் உள்ளே உதிக்கும் சிந்தை. அத்துணையற்ற ஸமயத்தில் எல்லாவற்றிக்கும் மேற்பட்டு தவராமல் தோன்றக்கூடிய விஷயம் முன் ஏற்பட்ட ஸம்ஸ்கார விசேஷத்தின் பலத்தால் அந்தக் காரணத்தில் திடமாக வேரூன்றி எக்காலத்திலும் எக் காரணத்தினாலும் சலிப்பிக்க ஒண்ணாததாக இருக்கும். இத்தகைய ஸம்ஸ்காரம் ஏற்படுவதற்கு பூர்வாப்யாஸம் வெகு காலமாய் தொடர்ந்து வருவதாகவும் ஊர்ஜிதமாகவும் ப்ரிய விஷயமாகவும் இருக்கவேண்டும். இதைக் கணிசித்தே கீதாசாரியன் கீதையில் 'நெடுங்காலம் இடைவிடாது அதி சுந்தர்திவ்யரூபனை பரம புருஷனைக் குறித்து ஏகாக்ரமாய் அநுஷ்டிக்கப்படும் பக்தி யோகத்தின் பலத்தால் அவ்வதிகாரி அவன் தன்னையே எப்போதும் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டு முடிவில் அவனையே அடைகிறான்.

பகலில் ஏதாவது ஒரு வஸ்துவைக்குறித்து ஊக்கத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தால் இரவில் நித்திரை செய்யும்போது அந்தக் கரணம் தவிற மற்றெல்லா புலன்களும் ஒடுங்கி இருக்கும் ஸமயத்தில் அவ்வஸ்துவே கனவில் தோன்றுவது எல்லோருக்கும் அநுபவ ஸித்தமான விஷயம் இதற்குக் காரணம்—குளவி தன்னிறமாக்குவது என்று சொல்லுவது போல் நமது மனதாகிற இந்திரியம் எவ்விஷயத்தில் ஏகாக்ரமாய் செலுத்தப்படுகிறதோ அவ்விதமே தான் மாறும் ஸ்வபாவத்தை உடையதாய் இருப்பதுதான். இந்த விலக்ஷண ஸ்வபாவம் மனதிற்கு இருப்பதால் தான் மனுஷ்யன் சுபா சுப கர்மங்களுக்கு கர்த்தாவாகவும் அவற்றின் பலன்களின் போக்தாவாகவும் சாஸ்திரீய கர்மாநுஷ்டானத்திற்கு அவன் அதிகாரியாகவும் அமர்ந்திருப்பது. நம் மனதில் பகலில் பதிந்த வஸ்துவைப் பற்றியே இரவில் கனவு காண்பதுபோல் இத்தேகத்தின் வாழ்நாளாகிய பகலில் எந்த விஷயத்தைத் குறித்து மனதில் திடமான ஸ்ம்ஸ்காரம் ஏற்படுகிறதோ அதுவே, அப்பகலின் முடிவாகிய நிர்யாண காலத்தில் அந்தக் கரணத்தில் தோன்றும் என்பது நன்கு அநுமானிக்கத் தகும். இப்படி தூங்கும்போது கனவு காண்பதுபோல் மரணத்திற்குப் பிறகு



ஜன்மாந்தராநுபவம் ஏற்படக் கூடும். என்கிற அநுமானம் ஸர்வலோக ஸாதாரணமாய் ஒப்புக்கொள்ள தக்கதென்பது ஷேக்ஸ்பியர் என்ற ஒரு பிரசித்த ஆங்கில பாஷா கவியின் வாக்கியத்தாலும் ஊர்ஜிதமாகிறது. அவர் இயற்றிய ஹாம்லெட் என்கிற நாடகத்தில் கதாநாயகனாகிய ஹாம்லெட் என்பவன் ஒரு ஸந்தர்ப்பத்தில் பலவித துக்கங்களால் வருந்தும்போது அவைகளினின்று விடுபடுவதற்கு தன்னுயிரை மாய்த்துக்கொள்வது தக்க உபாயம் ஆகுமாவென்று தனக்குள் ஆலோசிக்கையில் சரீரத்திற்கு மரணம் நேர்ந்தால் நித்திரை செய்வதும்போல் ஸுகமாக விருக்கும் என்று ஒரு வகையில் நினைக்கக் கூடுமானாலும், நித்திரையில் கனவு காண்பதுபோல் மரணாநந்தரம் பயங்கரமான அநுபவம் ஏற்படுவதும் ஸம்பாவிதமாகையால் அப்படி புதிய துக்கங்களை தேடிக் கொள்வதைக் காட்டிலும் இப்போது இருக்கும் துக்கங்களையே ஸகிப்பது மேலானது என்று நிச்சயித்து தற்கொலையிலிருந்து நிவர்த்தித்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. ஸர்வ ஸமஞ்ஜஸமான நமது சாஸ்திர கொள்கைகளுக்கு வேறு ப்ரமாணம் தேட தேவையில்லை. ஆனாலும் இக்காலத்தில் நம் தேசத்தில் சிலர் மேனாட்டு நிபுணர்களின் அபிப்பிராயங்களை அதிகமாய் வெகுமானிப்பதை நாம் காண்பதால், அத்தகையோர்க்கும் நமது பெரியோர்களின் நிர்ணயம் எவ்விதத்திலும் குற்றமற்றது என்று நன்கு உணர்ந்து விச்வஸிக்கப் ப்ராப்தம் என்பது இதனால் ஏற்படக்கூடும். இப்படியே ஒவ்வொரு விஷயத்தையும் கூலங்கஷமாய் விசாரிக்கத் தொடங்கினால் ஸர்வ ப்ரகாரத்திலும் நமது சாஸ்திரக் கொள்கைகள் யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்கின்றன வென்று நன்கு விளங்கும். ஆகவே நமக்கு இத்தேகாவஸானத்தில் ஏற்படும் பரகதி அந்திம ஸ்மிருதியை பொருத்தது என்றும், அந்திமஸ்மிருதியானது அதற்குமுன் ஏற்பட்டுள்ள மனோ வாஸனையை பொருத்தது என்றும் ஸித்திப்பதால் நாம் அபேக்ஷிக்கும் பரகதியை ஸாதிப்பதற்கு அதற்கு அநுகுணமான அந்தக்கரண ஸம்ஸ்காரத்தை தேடிக்கொள்வதே உபாயம் ஆகும் என்று ஏற்படுகிறது. இவ்விதமான ஸம்ஸ்கார விசேஷங்களை ஸம்பாதிக்கும் மார்க்கங்கள் தான் தர்மங்கள் எனப்படுகின்றன. இப்படிப் பட்ட தர்மங்களை ப்ரதிபாதனம் பண்ணுவதுதான் ஸகல சாஸ்திரங்களுக்கும் முக்கிய உத்தேச்யமாகும்.

தொடரும்

# ஆழ்வார் திருநகரியில் அற்புதம்.

## திருப்புளியில் ரத்தப்பெருக்கு

[திருக்குருகூர் ஸ்ரீ. அ. தே. ராமாநுஜய்யங்கார்]

ஆழ்வார் திருநகரி கோயில் கட்டிடத்தின் மேல் ஆதிசேஷாவதாரமாய் ஒரே வேர் மூலம் ஏழு மரங்களாக பிரும்மாண்டமாய் வளர்ந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாயிருந்து வரும் புளியமர மகிமையை யறியாத ஸ்ரீ வைஷ்ணவர்களிருப்பது அபூர்வமாகும். எவரும் இதன் மகிமையை அறிவது அத்யாவசியமாகும். இப்புளியமரம் மற்றைய மரங்கள் போலின்றி இரவில் உறங்காமலிருப்பதுடன் இதன் காய்கள் பழுக்காமலே உதிர்ந்து விடுவதும் ஆச்சர்யமாகும். தவிர இதன் பூ காய்கள் சாப்பிட அதிருசியாயிருப்பதும் இந்நகர் எல்லைக்குள்ளிருக்கும் சகலபுளியமரங்களின் காய்களும்

பழுக்காமலே உதிர்ந்து விடுவதும் அதிசயமாகும். இம்மரத்தில் ஏதேனும் சேதமேற்படில் அவ்விடத்திலிருந்து மனிதரது உதிரம் போல் பெருகிக்கொண்டேயிருந்து பின் கோயில் அர்சகர்களால் சந்தனக்காப்பு சாத்தப்பட்டு பிருமணோத்தமர்களால் வேதமந்திரம் ஓதப்பட்ட பிறகே ரத்தப்பெருக்கு நிற்பதாயிருப்பது ப்ரத்யக்ஷமான அற்புதமாகும்.

சமீபத்தில் நடைபெற்ற வஸந்தோத்ஸவ சமயம் திருப்புளியின் அடிபாகத்தில் ரத்தப் பெருக்கேற்பட்டு, வழிந்து கொண்டிருந்ததை சேவார்த்தியாய் வந்திருந்த ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீமான் பிச்சுமணி அய்யங்காரால் கவனிக்கப்பட்டு யாவர்க்கும் அறிவிக்கப்படவே பலரும் கண்டு, அதிசயித்தனர். கோயிலார்களால் (சந்தனக்காப்பு சாத்தப்பட்டு) அவ்விடத்தில் விசேஷமாக சந்தனம் அப்பப்பட்டபின் ரத்தப்பெருக்கு நின்றது குறிப்பிடத்தக்கதாம். இம்மாதிரி பன்னிரு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

இம் மரத்திலேயே ஸ்வாமி நம்மாழ்வார் திருவவதாரமாய் சில காலம் வரை பசிதாகமின்றி யிருந்து மதுரகவி நாதமுனிகட்கு ப்ரத்யக்ஷமாய் உபதேசித்து அந்தர்த்தானமானதாய்ச் சொல்லப்படுவதால் இம்மரத்திற்கு திருப்புளியாழ்வார் என்ற திருநாமமும் உண்டு.

க்ருதேத்ரிஸஹுர் பகவாந் த்ரேதாயாம் ரகு நந்தந: ।
த்வாபரே நந்த ஸூநுச்ச கலௌ, தேவ: பராங்குச: ॥

என்றபடி சர்வலோக சரண்யனை ஸ்ரீமந் நாராயணனே ஸ்ரீ நம்மாழ்வாராயவதரித்து உறங்காப்புளியென வழங்கும் இவ்விருக்ஷத்தினடியிலேயே அந்தர்த்தானமானதால் இங்கு வருபவர் தூரவிருந்தே சேவித்துச் செல்வர். இதன் பட்டைகள் உதிர்ந்து கிடப்பதை உரைத்துண்போரின் சர்வவியாதிகளும் சொஸ்தமாவதாயும் தெரிகிறது. பிரதி ஆனித் திருமூலத்தன்றும் திருப்புளியாழ்வார் திருநக்ஷத்திரத்தின் வைபவம் அதி விமர்சையாய் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கதாம்.

## ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, சென்னை.

(30-6-38) வியாழக்கிழமை ஷை ஸபையின் ஆதரவில் ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணி பாடசாலை புரைசைவாக்கம் ஷை 29, கிருஷ்ணபவநத்தில் பகல் 11 மணிக்கு குருபுஷ்ய யோகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஷை பாடசாலையில் ஸ்ரீமான் சங்கீத வித்வான் நெரூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர் ஸ்வாமி திவ்யப் பிரபந்தத்திலுள்ள நித்யானுஸந்தான பாசுரங்களை ஸங்கீத முறைப்படி லயத்துடன் தினந்தோறும் அபேக்ஷகர்களுக்கு இரவு 8-9 மணி வரையில் பாடங் கற்றுக்கொடுக்கிறார். ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்திரங்களும் காவியங்களும் ஷை ஸபையின் உபாத்யக்ஷர் ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமியால் சொல்லிக் கொடுக்கப்படும்.

இவ்வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும். ஸம்பிரதாய அபிமானிகளான வைஷ்ணவர்கள், வித்யார்த்திகள், ஸ்திரீகள், சூத்திரர்கள் இவர்களுக்குத் தனித்தனியே கற்பிக்கப்படும். காரியதரிசி ஷை ஸபை.

2—7—38



விபீஷண—பாரதத்திற்கு த்ரௌபதியைப் போல ராமாயணத்திற்கு விபீஷணன்.

புஜங்கம—காளியன் என்னும் ஸர்ப்பம், உம் திருவடி அவன் தலைமேலேயிருந்த ஸம்பந்தத்தினால் அவனுக்கும் உம்பதஸமாஶ்ரயணம் உண்டு. அவன் பத்நிகள் சரணம் புகுந்தார்கள். 'ஸுமுகன்' என்னும் நாகம் என்றும் சொல்லுவார்கள். "ஒருக்கால் பகவான் பெரிய திருவடிமேல் ஏறியருளி ஸஞ்சரிக்கும்போது பெரிய திருவடி பசியால் பூமியில் ஸஞ்சரித்த 'ஸுமுகன்' என்கிற ஸர்ப்பத்தைப் பக்ஷிக்கவர, ஸுமுகன் பயாக்ராந்தனாய் பெருமானை சரணம்புக, அவர் வைநதேயன் ஸர்ப்பத்தைப் புஜிக்கவொட்டாமல் மேலே இழுக்க, அதற்குள் ஸுமுகன் புற்றில் நுழைந்துவிட்டான்" என்று பெரியார் வ்யாக்யானத்திலுள்ளது. 'புஜங்கம-விஹங்கம' என்று மேலே 25வது சுலோகத்தில் பேசுகிறது வேறு. இந்த ஸுமுக வ்ருத்தாந்தத்தில் ஒருவாறு இரண்டும் இங்கு சேரும்.

வ்ரஜ-கண—கோகுல வாஸிகளான ஆண் பெண்டங்களும். व्रजजनार्तिहृत् (வ்ரஜ-ஜநார்த்திஹ்ருத்) என்று கோபிகா கீதைக்கு 'வ்ரஜ ஜன' என்ற பாடம் பொருந்தும். அங்கு கோபர்கள் ஐந்து லக்ஷம்; இங்கு கோடிக்கணக்கான எல்லா ஜாதிகளான ஆண் பெண்கள் ப்ரார்த்திக்கின்றனர்.

அம்பரீஷ—'அம்பரீஷ சக்கரவர்த்தியினிடம் தூர்வாஸ மஹரிஷி த்வாதசியன்று பிக்ஷைக்கு வருகிறோம் என்று சொல்லி ஸ்நானத்திற்குச் சென்று விளம்பித்து வர, பாரணைகாலம் கழிவதைக்கண்டு, ஜலபாரணம் பண்ணி அம்பரீஷன் தூர்வாஸருக்காகக் காத்துக்கொண்டிருந்தான். தூர்வாஸர் வந்து ஜலபாரணம் பண்ணின ராஜாவைப் பார்த்துக் கோபித்து அவரை ஸம்ஹரிக்கத் தொடங்க, ராஜாவும் ஸுதர்ஶநாழ்வானும் பகவதாக்ஞையால் தூர்வாஸஸ்ஸைத் துறத்தி ராஜாவின் காலிலே விழும்படி செய்து அவ்வரசனைக் கொண்டே ரக்ஷித்தார்.

பக்தனுக்கு வந்த பயம் எதிரியான மஹரிஷி பேரிலேயே திரும்பி, அவரை புவநத்ரயமும் ஓட வடித்தது. ரிஷி பகவானைச் சரணம்புக, 'நாபாக புத்ரனை அம்பரீஷனையே சரணமடையும்; நான் பக்த பராதீனன்; அஸ்வதந்த்ரன்போல இருக்கிறேன்' என்று நீர் அவரைத் திருப்பிவிட்டீர். 'பக்த பராதீனன்' என்பதை எங்கள் ஆசை விஷயத்திலும் உண்மையாக்கவேண்டும்.

பய விமுக்திம் ஆபு:—ஸம்ஸார பயத்திலிருந்து விமோசநம் என்னும் மோக்ஷத்தை இப்போது ப்ரார்த்திக்கவில்லை; எங்கள் உயிரான உப

மைப் பற்றிய பயத்தின் நிச்சேஷ நிவ்ருத்தியையே கோருகிறோம். **भयकृत् भयनाशनः** (பய-க்ருத் பய-நாஶந:) என்கிறபடி பயத்தைச் செய்வித்த நீரே எங்கள் பயத்தைப் போக்கவேண்டும்.

ஸபதி—உடனே பயம் நீங்கவேண்டும். **त्रुटिर्युगायते त्वामपश्यतां** (த்ருடி: யுகாயதே த்வாம் அபஶ்யதாம்) என்று கோபீஜநங்களின் விரஹ-காநம். **क्षणं युगशतमिव यासां येन विना अभवत्** (க்ஷணம் யுக-ஶதம் இவ யாஸாம் யேந விநா அபவத்) என்றார் சுகர்; அப்படியே உம்விரஹம் எங்களுக்கு துஸ்ஸஹமாயிருக்கிறது.

ரங்கநாத—ரங்கம் ஓரிடம் நாதன் ஓரிடமாயிருப்பது நீங்கி, ரங்கத்தின் நாதன் ரங்கத்திலேயே இருக்கவேண்டும் என்று அடுத்த சுலோகத்தில் ப்ரார்த்திப்பது இங்கே அழகாக வ்யஞ்ஜிப்பிக்கப்படுகிறது.

भयं शमय रङ्गधाम्नि अनितराभिलाषस्पृशां
श्रियं बहुलय प्रभो! श्रितविपक्षमुन्मूलय ।
स्वयं समुदितं वपुस्तव निशामयन्तः सदा
वयं त्रिदशनिर्वृतिं भुवि मुकुन्द! विन्देमहि ॥ २० ॥

பயம் ஶமய ரங்க-தாம்நி அநிதராபிலாஷ-ஸ்ப்ருஶாம்
ஶ்ரியம் பஹுளய ப்ரபோ! ஶ்ரித-விபக்ஷம் உந்மூலய ।
ஸ்வயம் ஸமுதிதம் வபு: தவ நிஶாமயந்த: ஸதா
வயம் த்ரிதஶ-நிர்வ்ருதிம் புவி முகுந்த! விந்தேமஹி ॥ (20)

ப்ரபோ-ப்ரபுவே
ரங்க-தாம்நி-அரங்கமாநகரில்
அநிதராபிலாஷ-ஸ்ப்ருஶாம்-மற்றொன்றில் ஆசையைத் தொடாத பரமைகாந்திகளுடைய
பயம்-பயத்தை
ஶமய-தீரும்படி செய்யவேணும்.
ஶ்ரியம்-அடியார் குழாங்கள் ஸம்ருத்தியை
பஹுளய-விருத்தி செய்யவேணும்.
ஶ்ரித-விபக்ஷம்-ஆச்ரிதர்க்கு விரோதிகளை
உந்மூலய-வேரறுக்கவேண்டும்
(புவி) முகுந்த-இப்புவியிலுள்ளபோதே முக்திச் சுவையை அளிப்பவரே!
வயம்-நாங்கள்
தவ-உம்முடைய
ஸ்வயம் ஸமுதிதம்-ஸ்வயம் வ்யக்தமான
வபு:-திருமேனியை
(ரங்கதாம்நி-அரங்கமாநகரிலேயே)
ஸதா-எப்போதும்
நிஶாமயந்த:-ஸாக்ஷாத்தாக அநுபவித்துக்கொண்டு
புவி-பூலோகத்தில்
த்ரிதஶநிர்வ்ருதிம்-நித்யஸூரிகளின் ஆநந்தத்தை
விந்தேமஹி-அடைவோமாக



இதுதான் கோரிய பலம். மீமாம்ஸையின் இருபதாவது அத்தியாயத்தில் எல்லையற்ற மோக்ஷாநந்தமான நித்ய ஸூரிகளின் ஆநந்தத்தைக் காட்டியுள்ளது. இவரும் இருபதாவது சுலோகத்தில் மோக்ஷச் சுவை போன்ற இச்சுவைக்கு அபாயமில்லாமல் நித்யாநுபவத்தைப் பிரார்த்திக்கிறார். இந்த பரஸமர்ப்பணமே இந்த அபீதிஸ்தவத்தின் விஷயம். இதை 'இதி பர: ஸமர்ப்பித:' என்று அடுத்த சுலோகத்தில் அநுவதிப்பதாலும் இது தெரிகிறது.

பயம் ஶமய—கீழ் ஒவ்வொரு சுலோகத்திலும் 'பயம்' 'பீதி' என்று பயத்தையே ப்ரஸ்தாவித்தார். இதில் அந்த பயத்தின் சாந்தியைச் செய்யும் என்கிறார்.

அநிதர-அபிலாஷ-ஸ்ப்ருஶாம்—மற்றொரு பொருளின் ஆசையைக் கூடத் தொடமாட்டார்கள்; வஸ்துவைத் தொடுவது எங்கே?

ஶ்ரியம் பஹுளய—'ஸ்ரீரங்கஸ்ரீ பெருகவேண்டும்' என்றல்லவோ அங்கு வஸிப்பவர்களும் ஆசாஸிப்பது. ஸ்ரீ சங்கரரும் ததநுஸாரிகளும் **इदं श्रीरङ्गम्** (இதம் ஸ்ரீரங்கம்) என்று தினமும் த்யானம் செய்கிறார்கள்.

ப்ரபோ—இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்ற நீர் ஸமர்த்தரல்லவோ?

ஶ்ரித-விபக்ஷம் உந்மூலய—**न मे द्वेष्योऽस्ति** (நமே த்வேஷ்யோ அஸ்தி) என்றபடி உமக்கு விபக்ஷமில்லாவிடினும், எங்கள் விபக்ஷத்தை இனிக்கிளம்பாதபடி வேருடன் பிடுங்கி எறியவேணும்.

ஸ்வயம் ஸமுதிதம் வபு:—**यत् यत् धिया त उरुगाय विभावयन्ति तत्-तत् वपुः प्रणयसे मदनुग्रहाय** (யத் யத் தியா த உரு-காய விபாவயந்தி தத் தத் வபு: ப்ரயணயஸே மதநுக்ரஹாய) என்ற பாகவத வசனத்தையும், "தமர் உகந்த தெவ்வுருவம் தானே" என்பதையும், **इच्छागृहीताभिमतोरुदेहः** (இச்சா-க்ருஹீதாபிமதோரு-தேஹ:) என்பதையும் இங்கு நினைக்கிறார். இதனால் பராசர-சுகாதிகள் ஸம்ப்ரதாயமும் இதுவே என்று காட்டப்படுகிறது.

நிஶாமயந்த: ஸதா—**सदा पश्यन्ति सूरयः** (ஸதா பஶ்யந்தி ஸூரய:) என்பதுபோல் அடியோங்களும் உம்மை அரங்கத்தில் ஸதா ஸேவித்து 'ஜிதந்தே' 'பல்லாண்டு' என்று பாடிக்கொண்டிருக்க வேண்டும். 'நிஶாமயந்த:' என்றால் கேட்பதைச் சொல்லும்; 'அரங்கத்தில் அரங்கன் எழுந்தருளியிருக்கிறார்' என்று கதை கேட்பது போராது. 'நிஶாமயந்த:' என்றால் பார்ப்பது. நாங்கள் நேரில் பார்த்து ஸேவிக்கும்படி நீர் அநுக்ரஹிக்கவேண்டும்.

த்ரிதச நிர்வ்ருதிம்—(இந்த்ரலோகத்தியதான அச்சுவையை) பரமப்ர சுவையை.

புவிமுகுந்த — இங்கேயே எல்லையற்ற வைகுண்ட ஸுகத்தை கொடுக்குவமர்.

விந்தேமஹி — அடைவோமாக. இதை ஆத்மநேபதமாகப் ப்ர யோகித்திருப்பதால், பெருமானுக்கு இதனால் வரும் ப்ரயோஜனத்தில் விருப்பமில்லாவிட்டாலும் அவர் அடியார்களின் ப்ரயோஜனத்தைக் கருதி அவர் செய்யவேண்டும் என்பது ஸூசிப்பிக்கப்படுகிறது.

श्रियः परिवृढे त्वयि श्रितजनस्य संरक्षके
सदद्भुतगुणोदधौ इति समर्पितोऽयं भरः ।
प्रतिक्षणमतः परं प्रथय रङ्गधामादिषु
प्रभुत्वमनुपाधिकं प्रथितहेतिभिर्हेतिभिः ॥ २१ ॥

ஶ்ரிய: பரிப்ருடே த்வயி ஶ்ரித-ஜநஸ்ய ஸம்ரக்ஷகே .
ஸதத்புத-குணோததௌ இதி ஸமர்ப்பித: அயம் பர: ।
ப்ரதி-க்ஷணம் அத: பரம் ப்ரதய ரங்க-தாமாதிஷு
ப்ரபுத்வம் அநுபாதிகம் ப்ரதித-ஹேதிபிர் ஹேதிபி: ॥ (21)

ச்ரித-ஜநஸ்ய—ஆச்ரிதஜநங்களுடைய
ஸம்ரக்ஷகே—நன்றாய் ரக்ஷிப்பவனையும்
ஸத்—ஸத்யமும் (நல்லதும்)
அற்புத—ஆச்சர்யமுமான
குணோததௌ—குணக்கடலான
ச்ரிய: பரிப்ருடே—ஸ்ரிய: பதியான
த்வயி—உம்மிடம்
அயம் பர:—இந்த (உம் திருமேனியின் ரக்ஷண) பரம்
இதி—இப்படி
ஸமர்ப்பித:—ஸமர்ப்பிக்கப்பட்டது.

அத: பரம்—இதுமுதல்
ப்ரதிக்ஷணம்—ஒவ்வொரு க்ஷணமும்
ப்ரதித—மேல் மேல் கிளம்புகிற
ஹேதிபி:—ஜ்வாலைகளையுடைய
ஹேதிபி:—திருவாயுதங்களால்
அநுபாதிகம்—ஸ்வயம்ஸித்தமான
ப்ரபுத்வம்—வல்லமையை
ரங்கதாமாதிஷு—ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேசங்களில்
ப்ரதய—ப்ரகாசப்படுத்தும்

இதில் ஆழ்வார் எம்பெருமானார் வடக்குத் திருவீதிப்பிள்ளை வேர்க தேசிகன் எல்லோரும் ஏககண்டமாக 'உபாய தசையில் ஒரு மிதுனமே உத்தேச்யம்' என்று அறுதியிட்டதை அநுஸரித்து, 'திருமேனி ரக்ஷணம் என்னும் மனோரதத்தை ஸாதித்துக் கொடுக்கும் பரம் ஸ்ரிய:பதியான



உம்மிடமே வைக்கப்படுகிறது' என்கிறார். முதல் சுலோகத்தில் रमासखम-धीमहे என்றார். இரண்டாவதில் श्रियाध्युषितवक्षसः என்று ஆழ்வார் சரணாகதி பண்ணின "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா" என்னும் பாசுரத்தை ஸூசிப்பித்தார். 'மிதுநாயகா' என்றல்லவோ இவர்களுக்குப் பிரஸித்தி.

ஸ்ரிய: பரிப்ருடே—'பரிப்ருடம்' என்பது பதியையும் பெருமையையும் சொல்லும். ब्रह्मपरिवृढं सर्वतः (ப்ரஹ்ம பரி-ப்ருடம் ஸர்வத:) என்பர். எல்லையற்ற பெருமையுள்ளது என்பதுதான் ப்ரஹ்மலக்ஷணம். 'இந்த ப்ரஹ்மத்வமும் ஸ்ரீயின் அதிகமான கடாக்ஷங்கள் விழுவதால் கிடைப்பது' என்றார் பட்டர். अपाङ्गा भूयांसोयदुपरि परं ब्रह्म तदभूत् (அபாங்கா பூயாம்ஸோயதுபரி பரம் ப்ரஹ்ம ததபூத்) 'ஸ்ரிய:' என்று ஐந்தாம் வேற்றுமையாகக்கொண்டு ஸ்ரீயிடமிருந்து 'பரிப்ருடத்வம்' என்றும் 'ப்ரஹ்மத்வம்' கிடைத்தது.

ஸம்ரக்ஷகே—லக்ஷ்மியுடன் சேர்ந்தே ஸஹ ரக்ஷகனை உம்மிடம், ஸர்வ ஸித்தாந்தங்களும் இதை ஏகரூபமாக உத்கோஷிக்கின்றன. "ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடோறும் நைபவர்க்கு வானங்கொடுப்பது மாதவன்" என்ற அந்தாதிப்பாசுரத்தின் உரையில் ஸ்ரீ பிள்ளை லோகஞ்ஜீயரும் 'லக்ஷ்ம்யா ஸஹ' என்ற சுலோகத்தை உதாஹரித்து, "ஸர்வேச்வரன் சேதனரைக் கைக் கொள்ளும்போது பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்தே கைக்கொள்வது என்று ஸகல வேதாந்த ஸித்தமாகையாலே அவனுக்கு வல்லபனான ஸர்வேச்வரன்" என்று ஸாதித்தார்.

அத: பரம்—இது முதல்; இந்த க்ஷணம் முதல் என்றபடி.

ரங்க-தாமாதிஷு—எல்லா திவ்ய தேசங்களும் இப்படியே ரக்ஷிக்கப்படவேணும்.

कलिप्रणिधिलक्षणैः कल्तिशाक्यलोकायतैः
तुरुष्कयवनादिभिः जगति जृम्भमाणं भयं ।
प्रकृष्टनिजशक्तिभिः प्रसभमायुधैः पञ्चभिः
क्षितित्रिदशरक्षकैः क्षपय रङ्गनाथ ! क्षणात् ॥ २२ ॥

கலி-ப்ரணிதி-லக்ஷணை:, கலித-ஶாக்ய-லோகாயதை:
துருஷ்க-யவநாதிபி:ஜகதி ஜ்ரும்பமாணம் பயம் ।
ப்ரக்ருஷ்ட-நிஜ-ஶக்திபி: ப்ரஸபம் ஆயுதை: பஞ்சபி:
க்ஷிதி-த்ரிதஶ-ரக்ஷகை: க்ஷபய ரங்கநாத ! க்ஷணாத் ॥ (22)

ரங்கநாத—ரங்கநாதனே !
கலி-ப்ரணிதி-லக்ஷணை:—கலிக்குப் பிரதிநிதி போன்றவர்களால்
கலித-சாக்ய 'லோகாயதை:—சாக்கியர் நாஸ்திகர் இவர்கள் கலந்த
துருஷ்க-யவநாதிபி:—துருஷ்கர், யவகர் என்ற ஜாதி விசேஷங்களால்
ஜகதி—உலகத்தில்
ஜ்ரும்பமாணம்-பெருகும்
பயம்—பயத்தை

ப்ரக்ருஷ்ட நிஜ-சக்திபி:—உயர்ந்த தங்கள் சக்தியை யுடையவையும்
க்ஷிதி-த்ரிதச-ரக்ஷகை:—பூஸுரரை ரக்ஷிப்பவையுமான
பஞ்சபி: ஆயுதை:—ஐந்து ஆயுதங்களால்
க்ஷணாத்—ஓர் க்ஷணத்தில்
ப்ரஸபம்—பலாத்காரமாக
க்ஷபய—நீக்கவேணும்.

கலிப்ரணிதி-லக்ஷணை :—ரங்கராஜனுக்குப் பயமுண்டாக்குகிறவர் யார்? வேத விப்ரரையும் ஆலயங்களில் திவ்யமங்கள விக்ரஹங்களையும் ஸஹியாத கலி மஹா ராஜனுக்குப் பிரதிநிதிகளான சிலர்.

ஜ்ரும்பமாணம் பயம்—श्रीरङ्गश्रीश्च वर्धतां (ஸ்ரீ ரங்க ஸ்ரீஸ்ச வர்த்ததாம்) என்ற எங்கள் கோரிக்கைக்கு நேர் விரோதமாக அங்கேயே பயம் வ்ருத்தியடைந்து கொண்டே யிருப்பது உசிதமோ?

க்ஷிதி-த்ரிதச—(பகவத் பக்தி மிகுந்த) ப்ராஹமணர்கள். பஞ்சபி: ஆயுதை:—சங்கம், சக்கரம், கதை, வில், கத்தி என்ற ஐந்து திவ்யாயுதங்கள்; பாஞ்சஜந்யம், ஸுதர்ஸநம், கௌமோதகீ, ஸார்ங்கம், நந்தகம் என்று முறையே அவைகளின் பெயர்கள். க்ஷணாத்—எங்கள் ப்ரபத்தி ஆர்த்தப்பிரபத்தி; பலம் உடனே கிடைக்கவேணும். ஒரு க்ஷண விளம்பத்தையும் ஸஹியோம்.

दितिप्रभवदेहभिद्दहनसोमसूर्यात्मकं
तमःप्रमथनं प्रभो ! समुदितास्त्रवृन्दं स्वतः ।
स्ववृत्तिवशवर्तितत्रिदशवृत्ति चक्रं पुनः
प्रवर्तयतु धाम्नि ते महति धर्मचक्रस्थितिम् ॥ २३ ॥

திதி-ப்ரபவ-தேஹ-பித்-தஹந-ஸோம-ஸூர்யாத்மகம்
தம:-ப்ரமதநம் ப்ரபோ ! ஸமுதிதாஸ்த்ர-ப்ருந்தம் ஸ்வத: ।
ஸ்வ-வ்ருத்தி-வஸ-வர்த்தித-த்ரிதஸ-வ்ருத்தி சக்ரம் புந:
ப்ரவர்த்தயது தாம்நி தே மஹதி தர்ம-சக்ர-ஸ்திதிம் ॥ (23)



ப்ரபோ—ப்ரபுவே!
திதி-ப்ரபவ-தேஹ-பித்—திதியின் ஸந்ததிகளான அஸுரர்கள் தேஹங்களைப் பிளப்பதும்,
தஹந-ஸோமஸூர்யாத்மகம்—அக்நி, சந்த்ரன் ஸூர்யன், முதலியவற்றை தன்னுள்ளடக்கிக்கொண்டும்
ஸ்வத: தானாகவே
ஸமுதித-அஸ்த்ர-ப்ருந்தம்—எல்லா அஸ்திரங்களின் ஸமூஹமும் தன்னிடமிருந்து வெளிப்படும் மஹிமையை யுடையதும்
தம:—ப்ரமதநம்—தமோகுணத்தை (உள்ளிருட்டை)ப் போக்குவதும்
ஸ்வவ்ருத்தி-வஸ-வர்த்தித-த்ரிதஸ- வ்ருத்தி—தேவர்கள் வ்யாபாரமெல்லாம் தன்வசமாயுள்ளதுமான
தே சக்ரம்—உம்முடைய சக்ரம்,
தே—உம்முடைய
மஹதி தாம்நி—உயர்ந்த இடமாகிய கோயிலில்
புந:—மறுபடியும்
தர்ம-சக்ர ஸ்திதிம்—தர்மம் என்னும் உம்முடைய ஆக்ஞா சக்ரத்தின் ப்ரவ்ருத்தியை
ப்ரவர்த்தயது—நடத்திவைக்கவேணும்.

ஸ்ரீ காந்தனிடம் ப்ரபத்தியைச் செய்து இப்போது பஞ்சாயுதங்களின் உயர்ந்த சக்தியைக் கொண்டு எதிரிகளை அடக்கி ரக்ஷிக்கவேண்டும் என்கிறீர்; ஆயுதங்களின் ஸஹாயமில்லாமல் ஸ்ரிய: பதியால் ரக்ஷிக்க முடியாதோ என்று சங்கைவர, அதைப் பரிஹரிக்கிறார்.

நாங்கள் செய்யும் ப்ரபத்திக்கு தேவரீர் தத்க்ஷணமே எங்கள் பயத்தை நீக்கி எங்களுக்கு அபயம் அளிக்க ஸங்கல்பிக்கவேணும், தேவரீர் ரக்ஷண ஸங்கல்பம் என்றும் தத்வமே ஸ்ரீ ஸுதர்ஸநம் என்னும் சக்ரம். 'விஷ்ணுவின் ஸங்காஹமும் ஸங்கல்பமும் முறையே பக்ஷீஸ்வரனும் ஸுதர்ஸநமும் என்று பாஞ்சராத்ர- ஆகமங்களில் ப்ரஸித்தம்' என்று ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்தார். ஆகையால் ஸுதர்ஸநம் என்பது ஈச்வர ஸங்கல்பம்; தர்மமென்பதும் ஈச்வரனுடைய ஆக்ஞாசக்ரமான ஸ்ருதி ஸ்ம்ருதிகள். ஸுதர்ஸநமாகிய உமது சக்ரம் ஆக்ஞையான தர்ம சக்ரத்தை ஸரியாக சுழன்று சுழன்று வரும்படி செய்யவேண்டும். இந்த ஸுதர்ஸநமே பதினாறு (ஷோடஸ) ஆயுத ரூபமாகவும் இருக்கிறார் என்பது ஷோடஸாயுதஸ்தோத்ரத்தில் ஸ்வாமியால் காட்டப்பட்டது. 'தம் ஸங்கல்பத்தின் அம்ஸங்களான பதினாறு ஆயுதங்களோடு கூடின ஆயுதேஸ்வரரான பரமபுமான் உங்களை ரக்ஷிக்கட்டும்' என்று முதல் ஸ்லோகம். 'எல்லா அஸ்த்ரங்களும் எந்த ஸுதர்ஸனத்தினிடமிருந்து கிளம்புகிறதோ அந்த ஷோடஸாயுதமயரான ஸுதர்ஸநம் நம்மை ரக்ஷிக்கட்டும் என்று பதினேழாவது ஸ்லோகம். இப்படி எல்லா ஆயுதங்களும் ஸுதர்ஸனத்தின் ரூபங்களாகையாலும், ஸுதர்ஸநமும் உம்முடைய ஸங்கல்பமானதாலும், 'ஆயுதங்கள் உமக்கு ஸஹாயம்' என்றதுவும் 'உம்முடைய ரக்ஷண ஸங்கல்பமே உமக்கு ஸஹாயம், உம்மைவிட வேறான ஒன்றை நாங்கள் உபாயமாக வேண்டவில்லை' என்று சொன்னதாகும். सङ्कल्प एव-

**भवतो निपुणः सहायः** (ஸங்கல்ப ஏவ பவதோ நிபுண: ஸஹாய:) என்று வரதராஜ பஞ்சாசத்தில் சொன்னதும் இதை விளக்குகிறது.

திதி-ப்ரபவ-தேஹ-பித்—உம் திவ்யமான திருமேனியை பேதிக்க எண்ணும் அஸுரர்களின் தேஹத்தைப் பிளப்பது உம் ஸுதர்சநம் (உம் ஸங்கல்பம்).

அக்நி-ஸோமஸூர்யாத்மகம்—அக்னி, சந்த்ரன் ஸூர்யன், என்னும் தேஜஸ்ஸுக்களெல்லாம் ஸ்ரீ ஸுதர்சநதேஜஸ்ஸில் அடங்கியவை. **सुदर्शन महाज्वाल कोटिसूर्यसमप्रभ** (ஸுதர்சந மஹாஜ்வால கோடி ஸூர்ய ஸமப்ரப) ஆஸுரத்தைக் கொளுத்துகையிலும், அநுகூலர்க்கு சந்த்ரனைப் போல ஸௌம்யராயிருப்பவர். **सोमवत् प्रियदर्शनः** (ஸோமவத் ப்ரிய-தர்சந:) உள்ளிருட்டை நீக்குவது மற்ற தேஜஸ்ஸுக்களால் இயலாது; ஸுதர்சநம் அதையும் நீக்கும்.

'மறுபடியும் கோயிலில் உம்முடைய ஆக்ஞையான தர்மசக்ரம் நடைபெறவேணும்' என்பதால் அப்பொழுது தர்மாநுஷ்டானத்திற்கு விக்னமிருந்தது காட்டப்படுகிறது. (23)

मनुप्रभृतिमानिते *महति रङ्गधामादिके
दनुप्रभवदारुणैर्दरमुदीर्यमाणं [1]परैः ।
प्रकृष्ट गुणक ! श्रिया वसुधया च सन्धुक्षितः
[2]प्रयुक्तकरुणोदधे ! प्रशमय स्वशक्त्या स्वयम् ॥ २४ ॥

[*महितरङ्ग ; १ उदीयमानं ; २ प्रयुक्तकरुणांदधिः—पा.]

மநு-ப்ரப்ருதி-மாநிதே மஹதி ரங்க-தாமாதிகே
தநு-ப்ரபவ-தாருணை: தரம் உதீர்யமாணம் பரை :।
ப்ரக்ருஷ்ட-குணக ! ஸ்ரியா வஸுதயாச ஸந்துக்ஷித :
ப்ரயுக்த-கருணோததே ! ப்ரசமய ஸ்வ-சக்த்யா ஸ்வயம் ॥ (24).

ப்ரக்ருஷ்டகுணக—உயர்ந்த குணத்தோனே !
மநு-ப்ரப்ருதி-மாநிதே—மநுமுதலிய அரசர்களால் பூஜிக்கப்பட்ட
மஹதி—மிக்கமஹிமையையுடைய
ரங்க-தாமாதிகே—அரங்கநகர் முதலிய க்ஷேத்ரங்களில்
தநு-ப்ரபவ-தாருணை:—தநுவென்னும் அஸுரகுலத்தோரான அஸுரரான கொடியோர்களான
பரை:—சத்ருக்களால்
உதீர்யமாணம்-உண்டாகிவளரும்
தரம்—பயத்தை
ச்ரியா—பெரிய பிராட்டியாராலும்,
வஸுதயா ச—க்ஷமாதத்வமாகிய பூமிப் பிராட்டியாலும்
ஸந்துக்ஷித:—உத்ஸாஹப்படுத்தப்பட்டு
ப்ரக்ருஷ்ட-கருணோததே—(அவர்களால்) உபயோகப்படும்படி செய்யப்பட்ட கருணைக்கடலே !
ஸ்வ-சக்த்யா—உம்சக்தியாலே,
ஸ்வயம்—நீரகவே
ப்ரசமய—போக்கவேணும்



அவ—ப்ரணவத்தில் மகாரம் தன்னையே காட்டுகிறதென்கிற பக்ஷத்திலே ப்ரதமாக்ஷரப்ரதிபந்ந சேஷத்வம் ஸர்வ ஜீவ ஸாதாரணமாம்படி எங்ஙனே என்னவருளிச் செய்கிறார்.

மூ—அகாரார்த்தாயைவ ஸ்வமஹமென்று விசேஷித்து வ்யாக்யாநம் பண்ணினவர்களுக்கும் இவ்வநு ஸந்தாநம் ஸர்வ ஜீவ ஸாதாரணகார விஷயம்.

வ்யா—“ விசேஷித்து வ்யாக்யாநம் செய்தவர்களுக்கும்.” இதி

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்று ப்ரணவார்த்த விவரணத்திலே மகாரத்தை ஸாதாரணமாக வநுஸந்தித்தாலும் மந்த்ரத்தை விவரிக்குமிடத்திலே

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்கிற ச்லோகத்திலே அகாரார்த்தாயைவ ஸ்வமஹம் என்கிறது ப்ரண வார்த்த விவரணமாய் அதில் அகாரார்த்தாயைவ ஸ்வம் என்றுமளவு அகார உகார சதுர்த்யர்த்தங்களாய், அஹம் என்கிறது மகாரார்த்த தைச் சொல்லுகையாலே ப்ரணவகதமகாரம் அஹமர்த்தத்தைச் சொல்லு கிறதென்று திருவுள்ளம். விசேஷித்து வ்யாக்யாநம் பண்ணினவர்களுக் கும் இதி. ஜீவ ஸாமாந்ய மூகமாகவன்றிக்கே மகாரத்துக்கு விசேஷ்யமாக அஹமர்த்தாத்யாஹாரமுமின்றிக்கே இந்த மகாரத்தையே அஸ்மச் சப்த தில் வ்யஞ்ஜக மாத்திரமாகக் கொண்டு தன்னையே சொல்லுகிறதென்று விசிஷ்ய அஹமர்த்த பரமாக வ்யாக்யாநம் பண்ணினவர்களுக்குமென் படி. இமே ஸர்வ பரமென்பார்க்குமென்றும் இங்கு விசேஷித்து வ்யா யாநம் பண்ணினவர்களுக்கு என்றும் அருளிச் செய்த வாக்ய பங்க்யா பக்ஷபேதே யோஜநாபேதம் தோன்றினாலும் இந்த விரண்டு யோஜனையு பட்டர் தாமே இரண்டு ச்லோகங்களாலே அருளிச் செய்கையாலே ஸ,

ஸம்ப்ரதாய ஸித்தங்கள் என்னக் குறையில்லை. இந்த யோஜனையில் தனக்கொருத்தனுக்கே சேஷத்வம் தோற்றி, ஸர்வ ஜீவர்களுக்கு தோற்றுதாகையாலே அப்போது தன்னையொழிய எல்லாரும் சேஷிகளாகத் தோற்றுரோவென்னவருளிச் செய்கிறார். இவ்வநு ஸந்தாநம் ஸர்வ ஜீவ ஸாதாரணாகார விஷயம் என்று.

'ஸ்வாஸ்வொவஜெஸெஷு ஸவெஷு சுஹஜெத்வொவஜெஸாசு தயெவாக ஸ்வாஸ்வ ஸ்ரு திவசெகஸ்யாஹஜெத்வ ஸ்ருத்வமாக நஃ ஸ்வாஸ்வம்"

என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்கையாலே, தன்னைக் காட்டினாலும் ஸர்வாத்மாக்களும் தங்களை அஹம் என்றே அநுஸந்தித்துக் கொள்ளுகையாலே இந்த வ்யஜநமாத்திரமான மகாரம் அஹம்சப்தபர்யாயமாய் ஸர்வஜீவ ஸாதாரணாகாரமாயிருக்கும் என்றபடி. இம்மூன்று யோஜனைகளிலும் ப்ரமேயாம்சபேதமில்லையாகையாலே மூன்றும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தங்கள் என்றே திருவுள்ளம். இத்தால் சிலர் ஜீவஸாமாந்ய பரமான யோஜனையோடே ப்ரணவார்த்தத்தைத் தலைக்கட்டினது பட்டர் ஸ்ரீ ஸூக்த்யநாதரத்தாலேயாயிருக்கும். இதுதான் ஸ்மஷ்டி வாசகம். இம் மகாரம் ஜீவ ஸமஷ்டி வாசகமாகையாலே ஆத்ம ஸமஷ்டியைச் சொல்லுகிறது. இதிலேகவசனம் ஜாத்யேகவசநமாய் த்ரி விதாத்மவர்க்கத்தையும் சொல்லுகிறது என்று ரஹஸ்ய விவரணங்களான ரஹஸ்யத்ரயம் முதலான க்ரந்தங்களிலே இவ்வளவே காண்கிறதிறே.

அவ—ஆனாலும் இப்படி லுப்த சதுர்த்தியிலே ப்ரதிபந்நமான சேஷத்வம் உபாதியில்லாமையாலேயோ, அர்த்த ஸித்தாவதாரணத்தாலேயோ, யாவதாத்மபாவியாக ஸித்தித்தால் அக்கட்டளையிலே சேஷத்வந்தானும் "நாகிஂசித்குவ்வதஸ்ஸெஷக்ஷம்" என்கிறபடியே கிஞ்சித்கார ஸாபேக்ஷமாகையாலே அந்த கிஞ்சித்காரந்தானும் சேதநனுயிருப்பானுக்கு சைதந்யம் கொண்டாகவேண்டுகையால் அது தானும் பகவதபிப்ராய விருத்தமாம்போது "ஶஹெஸுவஸள தஷு)திஷஷுஜெதநத நதஷு)ெத வஸள வாஜ்ஞுஸீஂ" என்கிறபடியே ஸ்வாநர்த்தபர்யவஸிதமாயிருக்குமாகையாலே, பகவதபிப்ராயமடியாக வரவேண்டியதால் அதுக்காக பகவதபிப்ராயத்தை ஆராய்ந்தால் தஹூஜஜஸுஜாஞு ஸஜநீயா விஶெஷதஃ" என்று அவனே அருளிச் செய்திருக்கையாலே பகவத் பர்யந்தமாக ஸித்திக்கையாலே பகவச்சேஷத்வம் தான்யாவதாத்ம பாவியான கட்டளையிலே பாகவத சேஷத்வமும் யாவதாத்மபாவியாய் பகவச் சேஷத்வமது ஸந்திக்கு



மிடமெல்லாம் பாகவத பர்யந்தமாக அநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க ப்ரணவத்திலே அநுஸந்தியாதே நம: பதத்திலே அநுஸந்திப்பதற்கு ஔசித்யத்தை சங்காபூர்வகமாக வருளிச் செய்கிறார்.

மூ—பகவச்சேஷத்வம் தோற்றுமிடமேல்லாம் பாகவத சேஷத்வ பர்யந்தமாக வநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க ஔசித்யாதிசயத்தாலே மத்யம பதத்திலே இத்தை அநுஸந்திக்குமது உபபந்நம்.

வ்யா—"பகவச்சேஷத்வம்" இதி, சேஷத்வமாவது—அதிசயாதாநம் பண்ணுகை. தோற்றுமிடமெல்லாம் இதி—சதுர்த்தீ நமஸ்ஸுக்கள் தோற்றுமிடம். அன்றிக்கே மந்த்ரத்திலோ மந்த்ர பின்னஸ்தலங்களிலோ என்றபடி, பாகவத சேஷத்வ பர்யந்தமாக இதி—பயிலும் சுடரொளி நெடுமாற்கடிமைகளிலே ஆழ்வார் புருஷார்த்த காஷ்டையாக பாகவத சேஷத்வத்தை நிச்சயித்து அபேக்ஷித்திருக்கையாலே பகவச்சேஷத்வமபேக்ஷிதமானால் பாகவத சேஷத்வபர்யந்தமானால் தான் புருஷார்த்த காஷ்டையாமென்றபடி, அநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க இதி—சேஷத்வம் கிஞ்சித்கார ஸாபேக்ஷமானால் கிஞ்சித்காரந்தானும் பகவதபிப்ராயமடியாக வரவேண்டியிருந்தால், பகவதபிப்ராயந்தான் "ஐஐஜஹூஜ ஹெஜஷ வீ திஸஹ்யிகாஹவெகூ" இத்யாதி ப்ரமாணத்தின் படியே பாகவத பர்யந்தமாகவானால் தாவத்பர்யந்தம் அநுஸந்திக்கை ஆவச்யகமென்றபடி. ப்ரணவத்திலே அநுஸந்திக்காதே நமஸ்ஸிலே அநுஸந்திக்குமதுக்குக் காரணமருளிச் செய்கிறார். "ஔசித்யாதிசயத்தாலே" என்று—அதாகிறது—அஹங்காரமமகாரங்கள் நிவ்ருத்தமானலொழிய யதாவஸ்திதமான பகவச்சேஷத்வம் ப்ரகாசியாதாகையாலே, அகாரத்தில் சதுர்த்தியிலே சேஷத்வம் தோன்றி, அஹங்காரம் நிவ்ருத்தமானாலும் மத்யமாக்ஷர ஸித்தமான தாத்பர்யார்த்தத்தோடே உறவாயிருக்கிற இன் நமஸ்ஸில் மமகாரம் நிவ்ருத்தமானால் தான் பாகவத சேஷத்வ பர்யந்தமாய் யதாவஸ்திதமான பகவச் சேஷத்வம் ப்ரகாசிக்கும் என்கிற ஔசித்யம், ப்ரணவ நமஸ்ஸுக்களில் பாரார்த்ய பாரதந்த்ர்யங்கள் ஸித்திக்கையாலே அதடியாக "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்கிறபடியே ஸ்வதந்த்ரனை சேஷிக்கு இஷ்ட விநியோகார்ஹனபடியாலே ததீய சேஷத்வம் இங்கே ஸித்திக்கும் என்கையே ஔசித்யாதிசயம். ஆகையாலேயிறே ஸர்வேச்வரன் பக்கலிலே இம் மந்த்ரத்தை ஸார்த்தமாகக் கேட்ட திருமங்கையாழ்வார் இம் மந்த்ரத்தை விவரிக்கத் தொடங்கி "மற்றுமோர்

தைவமுளதென் றிருப்பாரோடொற்றிலேன்" என்று ததீய பர்யந்தமாக தேவதாந்தர சேஷத்வ நிவ்ருத்தியை ப்ரணவார்த்தமாக வநுஸந்தித்து நமச்சப்தார்த்தத்தை "உற்றது முன்னடியார்க்கடிமை" என்று பாகவத சேஷத்வ பர்யந்தமாக வநுஸந்தித்தார். "மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே" என்ற பின்னடியால் இப்பாட்டு திருமந்த்ர விவரணமாயிருக்கும், என்னக்குறையில்லை. திருமந்த்ரத்திலே அநேகார்த்தங்கள் உண்டேயாகிலும் அதில் ஜீவ ஸ்வரூபம் சேஷத்வத்துக்கு ஆச்ரயதயா ப்ரஸக்தமாகையாலும் பகவத் ஸ்வரூபம் நிரூபகதயா ப்ரஸக்தமாகையாலும் தத் விஷய கைங்கர்யம் சேஷத்வகார்யமாக தன்னடையே வருமாகையாலும், அநந்யார்ஹ சேஷத்வமே ப்ரதாந ப்ரதிபாத்யமாய் அது பாகவத பர்யந்தமானுலிறே நிலை நிற்பது. மத்யமபதத்திலே நமஸ்ஸிலே, "இத்தை" பாகவத சேஷத்வத்தை, பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவச் சேஷத்வத்தை என்றபடி, அநுஸந்திக்குமது உபபந்நம். ப்ரணவத்திலே மமகார நிவ்ருத்தி வாராமையாலே அஹங்கார நிவ்ருத்தமானுலும் அவதாரணார்த்தம் ஸ்திர ப்ரதிஷ்டிதமாயிராதபோது கதாசிதஹங்காரம் பின்னுடைவும் கூடுமாகையாலே அவதாரணார்த்தத்தோடுறவாயிருக்கிற இந் நமஸ்ஸில் பொருளே மமகாரத்தை நிவ்ருத்திப்பிக்கிறதாகையாலே இங்கே அநுஸந்திப்பது உபபத்தி யுக்தமாகிறது என்றபடி.

அவ—ஆனுலும் திருமந்த்ரத்திலே அகாரமும் நாராயண சப்தமும் பகவந்நாமமாயிருக்க, புநருக்தி பரிஹாரார்த்தம் ஒன்றை விசேஷணமாக்க வேண்டியதால் இரண்டு சதுர்த்திகளுக்கும் தாதர்த்ய ரூபைகார்த்யமன்றே ஸித்திப்பது. அப்போது கைங்கர்யம் ஸித்தியாமையாலே "ஸவாஸநாக்ஷராணாம்" என்கிறபடியே புருஷார்த்தமும் திருமந்திர ப்ரதிபாத்ய மென்கிற ஸம்ப்ரதாயம் விரோதியாதோ? ப்ரணவத்திலே தாதர்த்யம் தோன்றி அதன் பலமான கைங்கர்யம் த்ருதீய பதத்தில் சதுர்த்தியில் விவக்ஷிதமென்றில் திருமந்த்ரம் முழுக்க ஸ்வரூபரமாகையாலே ஒன்று விசேஷணமாய் நிரர்தகமாய் மற்றொன்று தாதர்யத்தைக் காட்டுமொழிய விசேஷண விபக்திக்கு தாதர்த்யமர்த்த மென்னும் விசேஷ்ய விபக்திக்கு கைங்கர்ய மர்த்த மென்னும் பின்னார்த்தத்துவம் கொள்ளுமது எங்ஙனே என்ன வருளிச் செய்கிறார்.



மூ—ப்ரதமத்விதீய சதுர்த்திகளுக்கு ஏகார்த்தத்வபிந்நார்த்தத்வங்களும் ப்ரமாணாநுகுண வாக்யார்த்த விவக்ஷா பேதத்தாலே சொன்னவை.

வ்யா—ப்ரதம த்விதீய சதுர்த்திகளுக்கு இதி—ப்ரணவத்துக்கு அகண்டமாயும் ஸகண்டமாயும் யோஜநா த்வயமுண்டு. அகண்டமானபோது லுப்த சதுர்த்திகமாயிருக்கும். ஸகண்டமானபோது அதிலுள்ள அகாரம் லுப்தசதுர்த்திகமாயிருக்கும். இவ்விரண்டு சதுர்த்திகளையும் ப்ரதம சதுர்த்தி என்கிறது. நாராயணாய என்கிறது த்விதீய சதுர்த்தி. "ஏகார்த்தத்வபிந்நார்த்தத்வங்கள் இதி. இரண்டுசதுர்த்திகளும் தாதர்த்ய ரூபைகார்த்தத்தையோ, ஸம்ப்ரதாந ரூபை கார்த்தத்தையோ, போதிக்கும் என்கிறது. ஏகார்த்தம் ப்ரதம சதுர்த்தீ தாதர்த்யத்தைச் சொல்லுகையாலே நாராயண சப்தத்தின் மேலுள்ள சதுர்த்தி, தாதர்த்யத்தை போதிக்கையில் ப்ரயோஜநமில்லாமையாலும் நித்ய ஸித்தமான தாதர்த்யம் ஆசாஸிக்க வேண்டாமையாலும் தத்பலமான கைங்கர்யத்தை போதிக்குமென்கிறது பிந்நார்த்தம். ப்ரமாணாநுகுண வாக்யார்த்த விவக்ஷாபேதத்தாலே சொன்னவை இதி—திருமந்த்ரம் ஸ்வரூபபரமென்றும் உபாயபரமென்றும் புருஷார்த்த பரமென்றும் இப்படி பல ப்ரகாரங்களாக வாக்யார்த்த வர்ணநம் எல்லாம் ப்ராமாணிகமாகையாலே அந்தந்த வாக்யார்த்தாநுகுண விவக்ஷா பேதத்தாலே சதுர்த்திகளுக்கும் அர்த்த பேதம் சொல்லக் குறையில்லை என்று திருவுள்ளம், ப்ரணவப்ரதிவாத்ய ஸஹாவவிஶிஷ்டாய நாராயணாய நம: என்றாலும் அகாரவாச்யாய நாராயணாயைவ நம: என்றாலும் இது ஏகவாக்யமாய் சதுர்த்தீ தாதர்த்யத்தையே காட்டும். இந்த யோஜனை அஹிர்புத்ந்யோக்த ஸ்தூலாநுஸந்தாந க்ரமத்தாலே உபாயபரை என்றும், ப்ராப்யாந்தர்கத சேஷ வ்ருத்தி பரை என்றும் இரண்டு படியாயிருக்கும்.

"நித்யாஜ்ஞஸ்யாஹ்யஹம் ஷடாஷரநமஸ்தேவ வாஜிந:"

, என்றதிறே. அகாரநாராயண சப்த வாச்யனுக்கே நான் நிருபாதிக சேஷபூதன். ம: ந எனக்குரியேனல்லேன் என்று இப்ரகாரங்களிலே இரண்டு வாக்யமாக யோஜிக்கும்போதும் ஹவிஸ் ஸமர்ப்பணந்யாயத்தாலே

ஆத்ம ஹவிஸ்ஸா, அகாரவாச்யாய நாராயணாய நாராயணன் பொருட்டே என்று ஸம்ப்ரதாந சதுர்த்தியாய்க் கொண்டு ம:ந என்றிப்படி இரண்டு வாக்யமாக யோஜிக்கும்போதும் தாதர்த்ய ரூபை கார்த்தத்தையோ, ஸம்ப்ரதாந ரூபைகார்த்தத்தையோ இரண்டு சதுர்த்தீ காட்டும். வாக்யத்ர மானபோது, ப்ரணவம் ஸ்வரூபபரமாய் நமச் சப்தம் உபாயபரமாய் நாராயணாய என்கிறது கைங்கர்ய ப்ரார்த்தநாபரமாய் நிற்கையாலே தாதர்த்யம் ப்ரதம சதுர்த்தியினர்த்தமாய் தத்பலமான கைங்கர்யம் மேல் சதுர்த்திக்கர்த்தமாய் இப்படி பிந்நார்த்தமாயிருக்கும். இப்படி ஏகார்த்த த்வபிந்நார்த்தத்வங்கள் ப்ரமாணாநுஸாரேண ஸம்ப்ரதாய ஸித்தங்களாகையாலே வாக்யார்த்த விவக்ஷாநுஸாரேண இவ்வர்த்தங்களை யோஜித்துக் கொள்ளுகை உசிதமென்று சொல்லித்தாகிறது. இவ்வர்த்தங்களை எல்லாம் பெரிய ரஹஸ்யத்திலே தெளியக் கேட்டிங்கே அநுஸந்திக்க ப்ராப்தம்.

அவ—ஆனாலும் திருமந்த்ரவிவரணமாயிருந்த த்வயத்திலே பூர்வோத்தர கண்டங்களிலே ஸ்ரீமச்சப்தமும் நாராயண சப்தமுமேகரூபமாயிக்க "[illegible]" என்கிற ந்யாயத்தாலே இரண்டிடத்திலும் சப்தப்ரதிபாத்ய யாவதாகாரவிசிஷ்டதயா போதந ஸ்வாரஸ்யத்துக்கு பாதகமின்றிக்கே இருக்க பூர்வோத்தர கண்டங்களிலே சில சில வாகாரங்களை பிரித்து அநுஸந்திக்கு மதுக்கு நியாமகத்தை சங்காபூர்வகமாக வருளிச் செய்கிறார்.

மூ—த்வயத்தில் பூர்வாபர ஸ்ரீமச்சப்தங்களிலும் பூர்வாபர நாராயண சப்தங்களிலும் சில வாகார விசேஷங்களைப் பிரித்து அநுஸந்திக்கு மது உபாயஃபலதசைகளுக்கு உபயுக்ததமாம்சநிஷ்கர்ஷம் பண்ணினபடி என்று

வ்யா— பூர்வாபர ஸ்ரீமச்சப்தங்களிலும், நாராயண சப்தத்தோடு ஸமஸ்தமாயும் வ்யஸ்தமாயுமுள்ள பூர்வாபர ஸ்ரீமச்சப்தங்களிலே. பூர்வாபர நாராயண சப்தங்களிலும், சரணசப்தத்தோடு ஸமஸ்தமான பூர்வ நாராயண சப்தத்திலும் சதுர்த்யந்தமான உத்தர நாராயண சப்தத்திலும். சிலவாகார விசேஷங்களை பிரித்தநுஸந்திக்குமது, இதி. இது



சங்காத்யோதகம். அதாகிறது த்வயம் தனியே மந்த்ரமாயிருந்ததேயாகிலும் திருமந்த்ரத்துக்கு வ்யாக்யாநமாயிருக்குமென்று ஸம்ப்ரதாயமாகையாலே இதுக்கு மூலமான திருமந்த்ரத்திலே ஆர்த்தமாயோ சாப்தமாயோ பிராட்டியையும் எம்பெருமானையும் அநுஸந்திக்கும் போது ஸர்வாகார விசிஷ்டதயா அநுஸந்தியா நிற்க இதிலுமப்படி அநுஸந்தியாதே இரண்டிடங்களிலும் சில குணங்களைப் பிரித்து அநுஸந்திக்கக்கூடுமோ என்று. இதுக்கு உத்தரம் அருளிச் செய்கிறார்—உபாய ஃபலதசைகளுக்கு உபயுக்த தமாம்ச நிஷ்கர்ஷம் பண்ணினபடி என்று. இதில் பூர்வ கண்டம் உபாயபரமாயும் உத்தர கண்டம் ஃபலபரமாயும் நிர்வஹிக்கையாலே உபாய ஃபலதசைகளுக்கு என்றது. உபயுக்ததமாம்ச நிஷ்கர்ஷம் பண்ணினபடி இதி. நாராயணனே சரண்யனும் ப்ராப்யனுமாகையாலே சரண்யனும் போதும் ப்ராப்யனும் போதும் லக்ஷ்மீ விசிஷ்டனாயே இருக்குமென்கைக்காகவும் தத்தனுகுண குணவிசிஷ்டனாய் இருக்கும் என்கைக்காகவும் பூர்வோத்தர கண்டங்களிலே ஸ்ரீமச்சப்தமும் நாராயணசப்தமும் கிடக்கையாலே பிராட்டியினிடத்திலும் எம்பெருமானிடத்திலும் தத்ததுபயுக்தங்களான ஆகாரங்களின் உபாயாநுஷ்டாந தசையிலும் ஃபலப்ரார்த்தநாதசையிலும் ப்ருதக் ப்ருதக்காக அநுஸந்தாநத்துக்காக, இதுகள் உபாயோபயுக்தங்களென்றும் இதுகள் ஃபலதசோபயுக்தங்களென்றும் நிஷ்கர்ஷித்தப்ரகாரங்கள் என்று திருவுள்ளம். ஆகையாலே பூர்வ கண்டத்திலே சில வாகாரங்களையும் உத்தர கண்டத்திலே சில வாகாரங்களையும் அஸங்கீர்ணமாக அநுஸந்திப்பது உபபந்நமென்றதாயிற்று. ஸ்ரீசப்தம் ஶ்ரிஞ் ஸேவாயாம், ஶ்ரு ஶ்ரவணே, ஶ்ரூ ஹிம்ஸாயாம், ஶ்ரா பாகே, இத்யாதி தாது பாடங்களாலே, ஸ்ரீயதே, ஶ்ரயதே, ஶ்ருணோதி ஶ்ராவயதி, ஶ்ருணாதி, ஸ்ரீணாதி, என்று இப்படி ஆறுபடியாக பகவச் சாஸ்திரங்களிலே நிருக்தங்களானால் அபேக்ஷித பதாந்தரங்கள் ஔசித்யத்தாலும், ப்ரமாண பலத்தாலும் சேர்ந்து புருஷகாரோபாய பாவங்களுக்கும் ப்ராப்யதைக்கும் உபயுக்தமான வாகாரங்களைச் சொல்லும் இதுகளில் புருஷகாரோபாய பாவங்களுக்கு உபயுக்தமானவாகாரங்களை பூர்வகண்ட ஸ்ரீமச்சப்தத்திலும் ப்ராப்யதைக் உபயுக்தமான ஸேவ்யத்வாதிகளை உத்தரகண்ட ஸ்ரீமச்சப்தத்திலும் அநுஸந்திப்பது. அப்படியே நாராயண சப்தத்திலும் வ்யுத்பத்திவசத்தாலே அநேகார்த்தங்கள் அநுஸந்

தேயங்களானாலும் பூர்வ கண்டத்துக்கு சரண்யதையிலே நோக்கானபடியினாலே நிகரில் புகழாயித்யாதிகளிலே ஸங்க்ரஹீதங்களான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய, ஸௌலப்ய, ஸர்வஜ்ஞத்வாதிகள், அநுஸந்தேயங்களாய் உத்தரகண்டத்தில் ப்ராப்தி தசையில் ஸமஸ்தகுண விபூதி விசிஷ்டன் அநுபாவ்யனானாலும் ஸ்வரூபக்ருதமாயும் குணக்ருதமாயும் வரும் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தித்வத்திலே நோக்கானபடியாலே அதுக்குபயுக்தங்களான சேஷித்வ நிரதிசய போக்யத்வாதிகள் அநுஸந்தேயங்களாயிருக்கும். இவ்வர்த்தங்கள் எல்லாம் பெரிய ரஹஸ்யத்திலே ஸம்ப்ரதாய க்ரமத்திலே கேட்டுத் தெளிவது. இத்தாலே பூர்வகண்டத்திலே ஸ்ரீமச்சப்தத்தை உபலக்ஷணமாக்கி இவளுக்கு பாயத்வமில்லை என்று சிலர் சொல்லுமது, "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம்" இத்யாதியான பட்டர் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமாகையாலே ஸத்ஸம்ப்ரதாயமாகாது. கிஞ்ச— "யாவயோர்… ராஜிதெதி விதிசா நாகம் வெரணஹ்ருதா" என்று ப்ராப்யமான தேச விசேஷம் ப்ரஸ்துதமாய் "யாவயோஸ்தாம் ராஜ்யா நீம் விதாம்" என்று அது தானும் எம்பெருமானுக்கும் பிராட்டியாருக்கும் ஸ்வம்மாயிருந்ததென்று ப்ராஜ்ஞ நிர்ணயமென்று பட்டர் அருளிச் செய்கையாலே உபய ஸ்வாமிகமாயிருந்த வஸ்துவிலே அந்யதரவிநிர் மோகே, அந்யதரனுக்கு ப்ரதாநாதிகாரம் வாராதாப்போலே இங்கும் எம்பெருமானுக்கு ப்ரதாநாதிகாரம் வாராதாகையாலே பிராட்டிக்குபாயத்வமில்லை என்னில் எம்பெருமானுக்குமுபாயத்வமில்லையாம். உபேயமானது இருவருக்கும் பொதுவாகையாலே இருவருமேயிறே கொடுக்கவேண்டியது.

அவ—ஆனாலும் த்வயத்தில் சரணங்களை உபாயமாகச் சொல்லுகையாலும் சரம ச்லோகாதிகளிலே எம்பெருமான் உபாய மென்கையாலும் இரண்டும் ப்ரமாணம் ஆகையாலே உபாயத்வித்வம் வாராதோ. கிஞ்ச-சரணமுபாயமென்றாலும் ஈச்வரன் உபாயமென்றாலும் "ஸத்ரவா… ஸ்வதந்த்ரா" இத்யாதிகளிலே பக்தி ப்ரபத்திகள் உபாயமென்றது பாதிதமாகாதோ என்ன வருளிச் செய்கிறார்.

மூ—சரணங்களை உபாயம் என்கிறத்துக்கு சரண விசிஷ்ட வசீகாரியன் பக்கலிலே தாத்பர்ய மாகையாலே ஸித்தோபாய பேதமும் ஸாத்யோபாய பாதமும் வராது.

# श्रीरामायणोदयम्

जयत्याश्रित सन्त्रास ध्वान्त विध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परम व्योम भास्करः ॥

भगवद्भाष्यकाराय भवसागरसेतवे ।
भूयोभूयो नमस्कुर्यां भूरि कल्याण राशये ॥ २ ॥

वेत्तारं सर्व विद्यानां जेतारं जिह्म वादिनाम् ।
त्रातारं भवतप्तानां तोतारंबात्मजं भजे ॥

வேதோபப்ரஹ்மணமான ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் எந்தசந்தர்ப்பத்தில் அவதாரமான தென்பதை பகவான் வால்மீகியின் ஸ்ரீஸூக்திகளாலேயே விசாரம் செய்வோம். முதன்முதல் கதாநாயகனை ஸீதாகாந்தனுக்கும் க்ரந்தகர்த்தாவான வால்மீகி மகரிஷிக்கும் சித்ரகூடத்திற்கு திவ்ய தம்பதிகள் எழுந்தருளுவதற்குமுன் ஸமாகமம் ஏற்பட்டது.

इति सीताच रामश्च लक्ष्मणश्च कृतांजलिः ।
अभिगम्याश्रमं सर्वे वाल्मीकिम भिवादयन् ॥

(अयो. 56. 14)

நித்ய தம்பதிகளை விபவாவதாரத்தில் தன்னுடைய ஆஸ்ரமத்திலேயே தான் நன்றாய் சேவித்தபிறகு வெகுகாலம் கழித்து பெருமாளுக்கும் பிராட்டிக்கும் காரணாந்தரத்தினால் வியோக மேற்பட்டு தேவியார் வால்மீகியின் ஆஸ்ரமத்திற்கு மறுபடியும் எழுந்தருளும் காலத்தில் அந்த கஷ்ட தசையிலும் அநந்ய பக்தியுடன் பர்த்தாவின் கல்யாண குணகணங்களை அநுஸந்தானம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது வால்மீகி பகவான் திருச்செவி சாத்தினார். அதன் பிறகு இவ்வளவு குணகண விசிஷ்டரான புருஷோத்தமனுடைய லக்ஷணங்களை யதாவத்தாய் அறியவேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு

**तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया** என்கிறபடியே நாரதபகவானிடம் ஆசார்யவரணம் செய்து **कोन्वस्मिन् सांप्रतंलोके** என்று தொடங்கி விண்ணப்

பம் செய்துகொள்ளுகிறார். அதற்கு நாரதபகவானும் ஸங்க்ரஹமாய் रामोस्ति, என்று பதில் சொல்லவேண்டி இருக்க ஸ்ரீராம கதையை ஸம்க்ஷேபமாய் உபதேசம் செய்கிறார். இதன் தாத்பர்யம் என்னவென்றால் வால்மீகிபகவானால் விஸ்தரிக்கப்பட்ட அநேக குணசமூஹங்களும் இந்த ஸம்க்ஷேப ராமாயணத்தில் அடங்கி இருப்பது என்பதே. அதன்பிறகு தன்னுடைய யோகபலத்தினால் விபவத்தில் ஸ்ரீராமனாயவதரித்தவன் விராட்புருஷனே என்று தெரிந்துக்கொண்டு புருஷோத்தமனை முதன் முதலில் சித்ரகூடப் பிராந்தத்தில்தான் தர்சனம் செய்து, பிறகு அவனுடைய குணங்களை செவியுற்று ஆசார்ய முகத்தினால் ஸம்சயமற உபதேசம் பெற்று தன் யோகபலத்தினால் ரகுநந்தனனுடைய யாதார்த்யத்தை அறிந்தார். இவ்வாறு ராமகுணானுபவம் பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் சிஷ்யஸமேதராய் அனுஷ்டானத்திற்கு जाह्नवी मविदूरतः என்று ஸமீபமிருந்த கங்காதீரம் போகுமளவில் அதில் அபிநிவேசம் இல்லாமல் ஒரு பல்வலத்திலேயே (கங்கையை யபேக்ஷித்து பல்வலம்போன்ற தமஸா நதியிலேயே) அனுஷ்டானம் செய்யும்போது பித்தம்பிடித்தவர்போலே ராமகதா ரஸாஸ்வாதனம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது வேடனொருவன் தன்னெதிரில் ஒரு பக்ஷியைச் சுட அப்போது தன்னையறியாமலே

मानिषाद प्रतिष्ठां त्वमगमश्शाश्वती स्समाः ।
यत् क्रौञ्च मिथुनादेक मवधीः काममोहितम् ॥ २ ॥

என்று சந்தோரூபமாக அந்த வேடனுக்கு ஒரு சாபத்தைக் கொடுத்து உடனே தன் கோபத்தினால் இவ்வாறு வெளியிட்டதைப்பற்றி அனுதாபப் படுகிறார். இதே சமயத்தில் ப்ரமதேவன் ஆவிர்பவித்து.

मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती ।

என்று அவருக்குத் தேறுதல் சொல்லி நீர் நாரத பகவானிடம் உபதேசம்பெற்ற ராம சரிதத்தை ஆத்மார்த்தமாகவும் லோகோஜ்ஜீவனார்த்தமாகவும் சந்தோரூபமாய் விஸ்தரித்துக் கசடற எழுதக்கடவீர் உம்முடைய நாவில் கிஞ்சித்தேனும் பொய் வராது உள்ளங் கைக்கனிபோல் ஸர்வமும் உமக்குத் தெரியக்கடவது என்று அனுக்ரஹித்து அந்தர்த்தானமானார். அதன்பின்பு தீக்ஷைபெற்று சரிதவ்ரதராய் ஸ்ரீமத்ராமாயணம் என்கிற திவ்ய சரித்ரத்தை எழுதி இதற்கு ஆதிகாரணம் பிராட்டியினுடைய ராமகீர்த்தனமாகையாலே இந்த இதிஹாஸத்திற்கு सीतायाश्चरितं महत्, என்று திருநாமமளித்தார்.



## ராமாயண மங்களச்லோகம்

मानिषाद प्रतिष्ठां त्वमगमश्शाश्वती स्समाः ।
यत् क्रौञ्च मिथुनादेक मवधीः काममोहितम् ॥

இந்த ஆதிகாவ்யத்தினாத்ய ச்லோகத்திற்கு மங்களச்லோக மென்று சொல்வது க்ரமமேயாகிலும் ஒரு வேடனுக்கு ஒரு சாபத்தை யளித்தது எவ்வாறு மங்களகரமாகுமென்று ஸந்தேகிப்பது உசிதமே. ஆகிலும் மகா கவியின் திருவாக்கில் இவ்வாறு யாத்ருச்சிகமாய் ஆவிர்ப்பவித்தது பரம மங்களமேயாகும் என்று ப்ரம்மதேவன் அனுக்ரஹித்துவிட்டபடியால் இந்த ச்லோகத்திற்கு அநேக விசேஷார்த்தங்களும் பொருந்தும். சடாரி முதலிய பெரியோர்கள் இந்த ச்லோகத்திற்கு அநேக ப்ரகாரமாய் வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். சிலர் முண்டகோபநிஷத்தில்

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्योऽभिचाकशीति ॥

இத்யாதி வாக்யங்களினாலே நிரூபிக்கப்பட்ட ஜீவாத்ம பரமாத்மாக்களின் சம்பந்த விசேஷத்தை இந்த மங்கள ச்லோகத்தினாலே அறியலாம் என்று விஸ்தரித்து வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். இதனுடன் அடியேன் செய்யும் ஒரு வியாசத்தையும் ஸ்வீகரிக்கவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறேன். இந்த ச்லோகமே நீர் செய்யும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு பீஜ ச்லோகமாக இருக்கக்கடவதென்று அனுக்ரஹித்தபடியாலே ஸ்ரீமத் ராமாயணத்தின் சப்த காண்டங்களுக்கும் இந்த ச்லோகத்தினாலேயே வ்யாக்யானம் செய்யலாமென்று அடியேனுடைய கொள்கை.

1. मानिषाद, என்பதினாலே பாலகாண்டத்தினுடைய பாவம் ஸூசிப்பிக்கப்படுகிறது.

அதாவது மாயா: நிஷாத பெரிய பிராட்டிக்கு வாசஸ்தானமாக இருப்பவனே, என்பதினாலே திவ்ய தம்பதிகளின் சேர்க்கை இதனால் ஏற்படுகிறது.

2. प्रतिष्ठां त्वमगमश्शाश्वती स्समाः நீடூழிகாலம் நீர் ப்ரதிஷ்டையை அடைவீர் என்பதினாலே பூலோக குபேரனான தசரதனுடைய திருமாளிகையில் ஸர்வேச்வரனான ராமன் அவதரித்து பித்ருவாக்ய பரிபாலன மென்கிற வ்யாஜத்தினாலே வேதப்ரோக்தமான உத்தமமான சரணாகதி தர்மத்தை லோகோஜ்ஜீவனார்த்தமாக தானே அனுஷ்டிக்கத் தொடங்கி அதற்கு பூர்வாங்கமாக ஸர்வ ராஜபோகங்களையும் துச்சமாக நினைத்து

தசரதனையும் பித்ருவாக்ய பரிபாலநத்தினால் கடைத்தேறிவிட்டபடியினாலே ராமனுக்கு விசேஷமாக ப்ரதிஷ்டை ஏற்பட்டது அயோத்தியா காண்டத்தினால்.

3. ச்லோகத்தின் உத்தரபாகத்தினால் காமமோஹிதர்களான திவ்ய தம்பதிகளின் பரஸ்பரவியோகம் ஏற்பட்டு அதனால் இருவரும் மனத்துயரை அடைந்தபடியினால் ஆரண்ய காண்டத்தின் கருத்து வெளியாயிற்று. இந்த இடத்தில் अवधीः, என்கிற பதத்திற்கு ஹிம்ஸித்தாய் என்கிற அர்த்தம்.

4. காமமோஹிதர்களான வாலி தாரை இருவர்களில் ஒருவனான வாலியை கொன்றாய் என்ற கிஷ்கிந்தா காண்டத்தின் பாவம் இந்த உத்தரார்த்தத்தினாலே ஏற்படுகிறது.

5. காமமோஹிதர்களான பெருமாளும் பிராட்டியும் பிரிந்து ஸமுத்ரத்தினக்கரையில் பிராட்டியும் இக்கரையில் பெருமாளும் ஒருவர்க்கொருவர் இருப்பிடம் தெரியாமல் பரிதபிக்கும் காலத்தில் சிறிய திருவடிகளான ஹனுமான் மூலமாக பரஸ்பர யோகக்ஷேமங்கள் தெரிந்து இருவர்களும் ஸந்தோஷப்பட்ட விஷயம். ஸுந்தரகாண்ட முக்யார்த்தம். இதுவும் இந்த உத்தரார்த்தத்தினால் ப்ரகாசமாயிற்று. இவ்விடத்தில் அவதீ:, என்கிற பதத்திற்கு அறிந்தாய் என்று பொருள், கத்தியர்த்தகாநாம் ஞாநார்த்தகத்வம் என்கிற ந்யாயத்தினால் ஹநதாதுவிற்கு அறிவது என்பதர்த்தம்.

6. காமமோஹிதனான ராவணன் மந்தோதரி இருவர்களில் ஒருவனான ராவணனுக்கு வதபர்யந்தமான தண்டம் ஏற்பட்டபடியால் யுத்த காண்டத்தின் முக்கிய கருத்தும் மேற்சொன்ன உத்தரார்த்தினாலே வ்யக்தமாயிற்று.

7. புநஸ்ச திவ்ய தம்பதிகளின் விச்லேஷமும் அவ்விருவர்களில் ஸ்ரீராமனின் வைகுண்டாரோஹணத்திற்கு முன்பாகவே பிராட்டியின் அவதார சமாப்தி ஏற்பட்டபடியால் உத்தர காண்டத்தின் கருத்தும் மேற்கூறிய உத்தரார்த்தத்தினாலேயே ப்ரகடனமாயிற்று.

## (விஸ்வாமித்திராகமனமும் ஸ்ரீராம குருகுலவாஸமும்)

லோகத்தில் ஸச்சிஷ்யனுக்கு ஸதாசார்யப்ராப்தி எப்படி துர்லபமோ அப்படியே ஸதாசார்யனுக்கும் ஸச்சிஷ்யப்ராப்தி துர்லபம். காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்த பகவத் ராமானுஜரை சிஷ்யவரணம் செய்வதற்காகவே ஸ்ரீ ஆளவந்தார் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளினது ஸுப்ரஸித்தம், ஸர்வேச்வரனை விபவாவதாரத்தில் சிஷ்யவரணம் செய்வதற்காகவே अभ्यागच्छन् महातेजा विश्वामित्रो महामुनिः, என்கிறபடியே விச்வாமித்ர பிரம்மரிஷி தசரத சக்ரவர்த்தியினிடம் வந்து சக்ரவர்த்தித் திருமகனைத் தன்னிடம் ஸாதிக்கும்படி யாசித்தார் தாடகாதாடகேய ஸம்ஹாரத்தை உத்தேசித்து ராமனை யாசித்தபோதிலும் வாஸ்தவமாய் ப்ரம்மரிஷியின் அபிப்ராயம் ராகவனுடைய ஸேவையை ஏகாந்தமாய் அநந்ய பக்தியுடன் அனுபவிக்க வேண்டுமென்பதும் ஸ்ரீராம குருகுலவாஸம் என்கிற வ்யாஜத்தினாலே வஸிஷ்டரைத் தன்னுடைய பூர்வஜாதியில் ஜயிப்பதற்காக மஹா பிரயாஸத்தினாலே தான் கற்ற அஸ்த்ரசஸ்த்ர வித்யைகள் எல்லாவற்றையும் தனக்கு பரகதிக்கு விரோதமானபடியாலே पुण्य पापे विधूय निरंजनः परमं साम्यमुपैति என்கிற கடோபநிஷத்தின் வாக்யத்தின்படியும் ஸர்வமும் ப்ரத்யக்ஷத்திலேயே ராமார்ப்பணம் செய்துவிடலாமென்றும் திருவுள்ளம். தவிர அகாலத்தில் கல்யாணம் செய்வது அயுக்தமென்றும் குருகுலவாஸம் செய்து வித்யாப்யாஸம் பூர்த்தியான பின்னிட்டுதான் விவாஹம் செய்துக்கொள்ளுவது சாஸ்த்ர ஸம்மதம் என்று லோகத்தாருக்கு தெரிவிப்பதற்காகவே ஸ்ரீராகவனுக்கு கல்யாணம் செய்ய வேண்டுமென்று யோசனை பண்ணும் காலத்தில் ப்ரம்மரிஷி அதி பரபரப்புடன் ஓடிவந்து அந்த யோசனையைத் தடுத்தார். பலை, அதிபலை முதலிய வித்யைகளை எல்லாம் உபதேசித்தபின் தான் பரீக்ஷாரூபமாக துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமவதரித்த மஹா புருஷனை துஷ்ட்ட நிக்ரஹார்த்தமாக தாடகாவதத்தையும் சிஷ்ட ரக்ஷணார்த்தமாக அஹல்யா சாபவிமோசனத்தையும் ஸ்ரீராமனைக் கொண்டு செய்வித்து குருகுலவாஸம் பூர்த்தியாய்விட்டதென்று ஸ்ரீராமனுக்கு ப்ரதிஷ்டாபத்ரம் கொடுத்ததுமல்லாமல் திருக்கல்யாணத்தையும் தானே செய்துவைக்க வேண்டுமென்ற திருவுள்ளத்துடன் ராமனை ஸீதாபதியாய்ச் செய்துவிட்டார். ராவணாதிகளை ஸம்ஹாரம் பண்ணவேண்டுமென்பது ஸ்ரீராமாவதாரத்தின் கருத்தானபடியாலே தன்னிமித்தம் பெருமாள் 14 வருஷம் தண்டகாரண்யம் எழுந்தருளுவதற்கு பூர்வாங்கமாக தாடகாவனம் முதலியவைகளுக்கு பெருமானைப் ப்ரம்மரிஷி எழுந்தருளப் பணணிக்கொண்டு அங்கே தபஸ்விகள் படும் கஷ்டத்தைப் பெருமாளுக்கு நேருக்குநேராக தெரிவித்து பவிஷ்யத் வனவாஸ ஸங்கல்பத்தை த்ருடீகரணம் செய்தார்போலும். அனேக யாகங்களை காரணாந்தரமாய் செய்த விச்வாமித்ர ப்ரம்மரிஷிக்கு ப்ரம்மரிஷி பட்டம் வந்த பின்னிட்டும் ஸர்வேச்வரனுக்கு விபவாவதாரத்தில் ஆசார்ய பதத்தை வஹிக்கும்படியான பாக்யம் ஏற்பட்டபின்னிட்டும் விச்வாமித்ரர் மறுபடியும் ஸித்தாச்ரமத்தில் தீக்ஷிதராய் ஒரு யாகம் செய்ததின் உத்தேசம் என்ன ?

மேற்சொன்னபடி பகவத்ஸாயுஜ்ய பதவிக்கு புண்ய பாபங்களிரண்டும் உபரோதமானபடியாலே தான் கற்ற அஸ்த்ரசஸ்த்ர வித்யைகளை ராகவ

னுக்கு உபதேசமென்கிற வியாஜத்தினுலே வாசா பகவதர்ப்பணம் செய்தகை இப்போது ராம லக்ஷ்மணர்களான பகவத்பாகவத ஸன்னிதானத்தில் அக்னி ஸாக்ஷியாய் க்ரியாரூபமாய் ஸ்மர்ப்பித்து விட்டாரென்பது இந்த யாகத்தின் முக்ய உத்தேசம்.

தம்மிடம உபதேசம் பெற்றமையை உடனே தாடகா அஹல்யா விஷயங்களில் பெருமாள் அனுஷ்டித்துக் காட்டக் கண்டு, முனிவரும் திருப்தராய் பின்வரும் ப்ரதிஷ்டா பத்திரம் உகந்தளித்ததாகக் கம்பர் அருளிச் செய்கிருர்.

> " இவ்வண்ணம் நிகழ்ந்தவண்ணம்; இனி இந்த உலகுக்கெல்லாம்
> உய்வண்ணமன்றி மற்ருேர்துயர் வண்ணமுறுவ துண்டோ
> மைவண்ணத் தரக்கிபோரில் மழைவண்ணத் தண்ணலே! உன்
> கைவண்ண மங்குகண்டேன் கால்வண்ண மிங்கு கண்டேன் "

இந்த ப்ரதிஷ்டாபத்திரத்தில் ஒரு விசேஷமுமுண்டு உலகத்தில் ஸாதாரணமாய் கையால் தானம் செய்து ப்ரீதியை காட்டுவதும் காலால் உதைத்து நிக்ரஹம் செய்து அப்ப்ரீதியை காட்டுவதும் ஸகஜம். ஸ்ரீராகவனே கையாலே நிக்ரஹம் செய்து காலினுல் அனுக்ரஹம் செய்தார். இதுவே அவதாராரம்பத்தில் பரம புருஷ ஸௌசகத்தைக் காட்டுகிறது. ஸ்ரீராமாவதாரத்திலும் க்ருஷ்ணுவதாரத்திலும் முதல் நிக்ரஹமும் முதல் அனுக்ரஹமும் ஸ்த்ரீகள் விஷயமாகவே, (தாடகா பூதனை நிக்ரஹமும்—அஹல்யா கோபிகாஸ்த்ரீகளுடைய அனுக்ரஹமும்.) ஸாதாரணமாய் ஸ்த்ரீ வதம் பாபஜநகமா யிருந்தபோதிலும் அத்யுத்கடமான பாபங்களைச் செய்தால் ஸ்த்ரீகளானுலும் வத்ய கோஷ்டியில் சேர்ந்தவர்களென்று இதனுல் நிதர்சிக்கப்படுகிறது.

---

## राम सुप्रभातम्

कौसल्या सुप्रजाराम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥

(1) **कौसल्या सुप्रजाः,** லோகத்தில் ஸாதாரணமாக ஒருவருடைய பெயரைச் சொல்லும் காலத்தில் வக்தா புருஷனுக இருக்கும் பக்ஷத்தில் தகப்பனுடைய பெயரையே சொல்லி அவனுடைய குமாரனென்னும் வக்தா ஸ்திரீயாக இருக்கும் பக்ஷத்தில் தாயின் பெயரைச் சொல்லி அவளுடைய குமாரனென்றும் சொல்வது லோக வழக்கம். இந்த ப்ரகரணத்



தில் விச்வாமித்ர மஹரிஷி பெருமாளை எழுப்பும் காலத்தில் **दाशरथे,** என்று கூப்பிடுவது பொருத்தமும், கௌஸல்யா ஸுப்ரஜா: என்று சொல்வது கொஞ்சம் அலௌகிகமாகவும் தோன்றலாம். ஆனுல் இது விஷயம் பர்யாலோசனை செய்தால் விச்வாமித்ர ப்ரம்மரிஷி சொன்னது தர்ம லௌகிக சம்மதமேயாகும். ப்ரதமத்தில் சக்ரவர்த்தியின் ஸன்னிதானம் ப்ரம்மரிஷி போகும் காலத்தில் இவர் கேட்பதற்கு முன்னுலேயே **कथ ते परमं कामम् करोमि किमु हर्षितः,** என்றும் **कर्ताचाह मशेषेण दैवतं हि भवान् मम,** என்றும் வ்யக்தமாய் சொல்லிவிட்டு ப்ரம்மரிஷி ரகுநந்தனை தனக்கு ஸகாயமாக அனுப்பும்படி ப்ரார்த்திக்கும் காலத்தில் **नरामम् नेतुमर्हसि,** என்றும் **नैवदास्यामि पुत्रकम्,** என்றும் சக்ரவர்த்தியார் பதில் கூறினுர். இப்படி விச்வாமித்ர தசரத ஸம்வாதத்தை அருகாமையிலிருந்து செவியுற்ற கௌஸல்யா தேவியார் **कृतस्वस्त्ययनं मात्रा पित्रा दशरथेनच** என்கிறபடி ஒருவித அப்யந்தர மல்லாமலே ராகவனுக்கு மங்களாசாஸனம் செய்து விச்வாமித்ர ப்ரம்மரிஷிக்கு கைங்கர்யம் செய்யும்படி அவர் பின்னுல் அனுப்பிவிட்டார். முதலில் தனக்கு ஏகபுத்ரனுக இருந்தபோதிலும் தாயாரான கொஸல்யா தேவியார் ராகவனை வன மனுப்ப முன்வந்தபடியாலும் தன் விஷயத்தில் நான்கு புத்ரர்கள் இருந்த போதிலும் அவர்களில் ஒருவனுன ராமனை முதலில் கொடுக்க சம்மதியாமல் தசரத சக்ரவர்த்தி ப்ரதிக்ஞாபங்கம் செய்தபடியாலும் தசரதன் வஸிஷ்ட வ்யபதேசியாக இருந்து படிப்பில் எவ்வளவு ஏற்றத்தை உடையவராக இருந்தபோதிலும் பக்தியும் பாரமார்த்திக க்ஞானமும் கேவலம் கௌஸல்யா தேவியினிடத்தில் விசேஷமாய் குடிகொண்டது என்று எண்ணி புண்யகாலமான ஸந்த்யா காலத்தில் உத்தமியான கௌஸல்யா தேவியை நினைப்பது யுக்தமே தவிற தசரத ஸ்மரணமும் வருவது அவ்வளவு ஸமீசீனமில்லை யென்று திருவுள்ளத்தினுல் தாசரதே, என்று சொல்லாமல் கௌஸல்யா ஸுப்ரஜா: என்று ஸம்போதனம் செய்தருளினுர்.

(2) **राम,** ரமயதீதிராம: என்றும் ரமந்தேயோகிந: யஸ்மிந்நிதி ராம: என்றும் ஸர்வஜனரஞ்சகனும் யோகிகளுக்கு உபாயமும் உபேயமுமான படியாலே அனேகமாயிர வருஷங்களாய் தபஸ்ஸு செய்து தான் ஸித்தியடைந்ததற்கு நிதர்சனம் ராமகுணுனுபவமே. தன்னுடைய தேகாவஸானத்தில் பகவானுடைய நித்ய விபூதியை அனுபவிப்பதைக் காட்டிலும் இந்த கர்மபூமியிலேயே பகவானுடைய லீலாவிபூதியை ஏகாக்ர சித்தராய் தான் அனுபவித்த நித்யத்தில் பகவானுடைய யோகநித்ரையையும் விபவத்தில் திருமகனுரின் சயனுத்ஸவ வைபவத்தையும் ஸாத்ரிசியம்

கொண்டு ப்ரம்மரிஷி உஷஃ காலத்தில் ராம குணாநுபவம் செய்கிறார் என்பது கருத்து.

(3) **पूर्वा सन्ध्या प्रवर्तते,** எப்படியானால் லோகோபத்ரவம் செய்கிற திருடர்களும் ரஜனீசரர்களான ராக்ஷஸர்களும் ஸூர்யோதயமான பிறகு அவர்களுடைய க்ரூர செயல்களை நிறுத்திக் கொள்வார்களோ. அதே மாதிரி பூர்வஸந்த்யையைபோல் அவதரித்த மஹா புருஷன் படுக்கையிலிருந்து எழுந்த உடனே ராக்ஷஸாதிகளின் கொழுப்பு அடங்குவது மல்லாமல் அக்ஞானாந்தகாரத்தில் முழுகின அனந்தகோடி சேதனர்களும் பகவானுடைய க்ஞான வைராக்யானுஷ்டானங்களாலேயே க்ஞானோதய முண்டாகி பகவத் கருணைக்கு பாத்ரமாவார்களென்று விளங்குகிறது.

(4) **उत्तिष्ठनरशार्दूल,** நித்ய விபூதியில் யோகநித்ரையில் நீர் இருந்த போதிலும் விபவத்தில் **आत्मानं मानुषं मन्ये,** என்று திருவுள்ளப்படுகிறபடியால் லோக ஸங்ரஹார்த்தம் அருணோதயத்திற்கு முன்பாகவே எழுந்திருப்பது சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பதினாடி வேங்கைப்புலி தூங்கும் காலத்தில் காட்டிலுள்ள முயல் முதலிய சிறிய மிருகங்கள் யதேஷ்டமாய் ஓடியாடும். ஆனால் அந்த புலி விழித்து எழுந்த உடனே இந்த சிறு மிருகங்கள் கண்ணுக்ககப்படாமல் ஓடி ஒளியும், இல்லையேல் புலிக்கு இரையாய்விடும் அதுபோல் ராகவா! நீர் இந்த வனத்தில் தூங்கும் காலத்தில் தாடகை சுபாகு மாரீசன் முதலிய குள்ளநரிகள் போன்ற அரக்கர்கள் நீர் எழுந்த உடனே சிலர் ஓடுவர் சிலர் மாறுவர் என்ற கருத்து.

(5) **कर्तव्यं दैवमाह्निकम्,** நீர் விராட்புருஷனாக இருந்தபோதிலும் மனுஷ்யாவதாரத்தில் ஸந்த்யா காலத்தில் ஸந்த்யாவந்தன ஜபஹோமாதிகளைச் செய்வது லோக ஸங்க்ரஹத்திற்காக யுக்தமேயாகும். ஆனால் இந்த வாக்கியத்தினால் சில விசேஷார்த்தம் போதனமாகிறது. கர்த்தவ்யம் என்கிற க்ரியாபதத்திற்கு செய்யவேண்டும் என்று அர்த்தம் யார் செய்யவேண்டும் என்று விசாரம் செய்தால் த்வயா கர்த்தவ்யம் என்பது பாஹ்யார்த்தமும் மயா கர்த்தவ்யம் என்பது விசேஷார்த்தமுமாகத் த்வனிக்கிறது. இதன் கருத்து அனேக வருஷகாலங்களாய்தான் தபஸ் செய்து அதனுடைய பல ப்ராப்திகாலம் ராம கடாக்ஷத்தினால் வந்துவிட்டதென்றும் தான் செய்யவேண்டிய நித்யகர்மானுஷ்டான ஜபஹோமங்களை பகவத்ஸன்னிதானத்திலே நேருக்கு நேராகவே பகவதர்பணம் செய்து அதனால்தான் க்ருதார்த்தனாக வேண்டுமென்பது ப்ரம்மரிஷியின் வாஸ்தவமான கருத்தென்பது இதனால் வ்யக்தமாயிற்று.

ஸ்ரீராமனும் ஸுமந்த்ரனும்

சக்ரவர்த்தித் திருமகன் பித்ருவாக்ய பரிபாலனார்த்தம் ஸ்ரீமதயோத்யா பட்டணத்தைவிட்டு தண்டகாரண்யம் செல்லும் ஸமயத்தில்

# FOR SALE

1. **RAMAYANA RATNA MALIKA**
   (Sanskrit Text with Tamil Commentary) **Re. 0 8 0**
2. **RAMAYANA MUKTAVALI**
   (In Devanagari—Familiar quotations from Valmiki) **Re. 0 6 0**
3. **Do ENGLISH TRANSLATION**
   (In the Press) **Re. 0 6 0**

**Apply to :—**

**T. SRINIVASA RAGHAVACHARYA,**

*Branch Manager,*

The United India Life Assurance Company,

CHITTOOR.

Registered No. M. 3778.


சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

**வைர நகையே.**

ஸ்ரீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள்



குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் மிகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."

உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.


Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras

# SRI VEDANTA DIPIKA

VOL. 27] AUGUST 1938 [PART 8

# ஸ்ரீ வேதாந்த தீபிகை



பகுதான்ய ௵ ஆவணி ௴

பத்ராதிபர்கள் :

**வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**

**வி. அனந்தாசாரியர்**

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை


1. ஸ்ரீராமாநுஜ தயாபாத்ர மஹா மந்த்ரத்தின் சிறப்பு 177

2. பக்தியும் ப்ரபத்தியும் 180
   [ஸ்ரீ. உப. டி. ஈ. சடகோபாசாரியர், திருப்பாபுலியூர்]

3. ஆசார்ய வைபவம் 183
   [ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசாரியர், திருவாதி]

4. ஸ்ரீ பராசரபட்டரின் திருமஞ்சனக் கவிகள் 189
   [ஸ்ரீ. ஸ்ரீ.]

5. மையல் செய்த மணவாளர் 193
   [ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்.]

6. अभीतिस्तवः 49—56
   [ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்யர், M. A., B., L., அட்வகேட், திருச்சி]

7. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 105—112

8. வேதாந்த ஸாரம் 73—80



अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால். இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்!　　　　எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

**விலை மலிவு! சுவை பெரிது!**

**நன்மை தரும்!**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள்!　　　　கொடுக்கும் பணத்திற்கு**

**நல்ல பெப்பர்மெண்டு!!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. SHIYALI & T. N. MOTHA SONS**
**CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE*:—**Phone No. 3658 : Res. No. 4258**
304, Thambu Chetty St., G. T. Madras.

---

**L**　　**காயம்—பெருங்காயம்**　　**G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய்　　சென்னை　　கும்பகோணம்

श्रीः
श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

| ஸம். 27. | பகுதான்ய ௵ ஆவணி ௴ | ஸஞ். 8 |
|---|---|---|

## ஸ்ரீராமாநுஜ தயாபாத்ர மஹாமந்த்ரத்தின் சிறப்பு

இது ஒரு ச்லோக ரூபமாயிருக்கும். ஆயினும் இதுக்கு மஹாமந்த்ரம் என்றே பெயர்தகும். மந்த்ரம் என்னும் சொல்லுக்குப் பொருள் முன் தீபிகையில் விரிவாய் உரைக்கப்பட்டது. எம்பெருமான் முதல் தொன்று தொட்டுவரும் ஆசார்ய பரம்பரையில் தோன்றின ஒரு ஆசார்யரின் விஷயமாய் ஆதுநிகர்களால் இயற்றப்பட்ட ஒரு ஸ்துதி ரூபமான செய்யுளுக்கும் இந்த மந்த்ரம் என்ற பெயர் உண்டு. இந்தப் பெயர் வேதத்தைச் சேர்ந்த சொற்களுக்கு மாத்திரமே ஒற்றது. மற்றதுக்கு இல்லை என்று சொல்வது சரியல்ல. புராணங்களிலிருந்தும் இதிஹாஸாகமங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட அநேக ச்லோகங்களை நாம் நமது வைதிக க்ரியைகளில் வேதமந்த்ரங்களோடு சேர்த்து அநுஸந்திக்கிறோம். ரிஷிகள் வாயிலிருந்து வந்ததுக்கே மந்த்ரம் எனப்பெயர் தகும் மற்றதுக்கு இல்லை என்று சொல்லுவதற்கு சரியான ப்ரமாணம் யாதும் இல்லை. ஆதுநிகாசார்யர்கள் விஷயமாய் ஆதுநிக கவிகளால் இயற்றப்பட்டிருப்பினும் அநாதி ஸித்தமான ஆசார்ய பரம்பரையில் ஸம்பந்தம் உண்டானதால் அந்த ஆதுநிகாசார்யனுக்கும் அவன் விஷயமாக இயற்றப்பட்ட செய்யுளுக்கும் மகிமை தன்னடையே வந்துவிடுகிறது என்று சொல்லுவதில் ஆக்ஷேபமில்லை. இப்படிப்பட்ட செய்யுளுக்கு தமிழில் தனியன் என்ற பெயர் வழங்கி வருகிறது. இச்

சொல்லுக்குப் பலர் பலவிதமாய் பொருள் கூறியதைக் கேட்டிருக்கிறேன. ஆனாலும் அடியேனுடைய சிற்றறிவில் தோன்றியதொன்றை குறிப்பிடுகிறேன். இந்தத் தனியன் என்ற சொல்லுக்கு, ஒரே செய்யுளில் அடங்கியதொரு ப்ரார்த்தநா வாக்யம் என்று பொருளாகும். இப்பொருள் மிகப் பழமை வாய்ந்த தமிழகராதியில் காணப்படுகின்றனது. ஆனால் அந்த அகராதியில் தனிக்காப்பு என்னும் சொல்லுக்கு மேற்சொன்ன பொருள் கூறப்பட்டிருக்கிறது. நமது முன்னோர்கள் காப்பு என்ற பதத்தை எடுத்துவிட்டு தனியன் என்று பெயராக்கி இருக்கலாம் எனத் தோன்றுகிறது. எப்படியானாலும் கூறப்பட்ட பொருள் நமது ஆசார்ய தனியன்களுக்கு மிகப் பொருத்தமானது என்பதில் யாருக்கும் ஆக்ஷேபம் இருக்க இடமில்லை. தாம் கற்கப்போகும் நூலில் அடங்கிய நுட்பமான பொருட்கள் யாவையும் எளிதில் அறியவேண்டி சிஷ்யன் ஆசார்யனை ப்ரார்த்தித்து வணங்குதல் இதன் முக்கிய நோக்கமாம். இது ஒரே செய்யுளில் அடங்கியிருப்பதால் இதற்குத் தனியன் எனப் பெயர் உண்டாயிற்று. ஆகையால் மற்றெல்லாப் பொருளைக் காட்டிலும் இப்பொருள் ஒப்புக்கொள்ளத் தக்கது என்று அடியேனுக்குத் தோன்றுகிறது.

இந்த ராமாநுஜ தயாபாத்ர மந்த்ரத்தை இயற்றியது யார்? எப்போது? இதற்கு இவ்வளவு கௌரவம் வந்ததற்கு காரணம் என்ன? என்பதைப்பற்றி கொஞ்சம் விசாரிப்போம்.

இதை இயற்றியது ஸ்ரீதேசிகனுடைய ஸாக்ஷாத் சிஷ்யனான ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி. இது அவதரித்த காலம் கலி பிறந்து 4440-வது ஸம்வத்ஸரமான பஹுதாந்ய ஹூ ஆவணி மீ ஹஸ்த நக்ஷத்திரம் சுக்ல பக்ஷம், துவிதீயா திதி. இந்த ஸம்வத்ஸரம் திதி ஒன்று தவிர்த்து மிகுதி எல்லாம் அமைந்து இருக்கின்றன. மேற் சொன்ன விஷயத்துக்கு ப்ரமாணம் த்விதீய ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச் செய்த குரு பரம்பராப்ரபாவம் பன்னீராயிரப்படி. இந்த க்ரந்தம் இப்போது கிடைப்பதில்லை. ஆனாலும் த்ருதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச் செய்த மூவாயிரப்படி குரு பரம்பராப்ரபாவம் என்ற கிரந்தம் கிடைப்பதால் அதில் இது விசதமாய் நிரூபிக்கப்பட்டது. அதாவது— ஸ்ரீதேசிகன் திருநாராயணபுரத்தில் எழுந்தருளி இருந்தபோது ஸ்ரீபகவத் விஷய காலக்ஷேபகோஷ்டி தொடக்கமாயிற்று. அந்த கோஷ்டியில் ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி மாத்திரம் அந்வயிக்காமல் இருந்தார். ஸ்ரீதேசிகன், நீர் இக்கால க்ஷேபகோஷ்டியில் அந்வயிக்காததேன்? என்று கேழ்க்க, அதற்கு அவர் அடியேனுக்கு பகவத் விஷயம் ஒன்றே அதிகரிக்க வேண்டிய[illegible] குமாரவரதாசாரியரிடம் ஆசார்யப்ரதிபத்தி செய்ய



அடியேனுக்கு விருப்பமுண்டு. இந்த பகவத் விஷயபரம்பரையில் குமார வரதாசாரியருடைய திருநாமம் வழங்குமாறு அடியேனுக்கு அந்த ஸ்வாமி முகமாய் பகவத் விஷயம் அநுக்ரஹிக்கவேணும் என்றார். ஸ்ரீதேசிகனும் அப்படியே நியமிக்க, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி குமார வரதாசாரியருக்கு ஸ்ரீமன் லக்ஷ்மண யோகீந்த்ர இத்யாதியான தனியனையும் ஸ்ரீதேசிகன் விஷயமாக ராமாநுஜ தயாபாத்ரம் இத்யாதியான தனியனையும், செய்தருளி ஸ்ரீதேசிகனிடம் சென்று இந்தத் தனியன்களை அடியோங்கள் அநுஸந்திக்கும்படி அநுக்ரஹிக்கவேணும். இந்த ராமாநுஜ தயாபாத்ரம் என்ற தனியனை பகவத் விஷயத்துக்கு மாத்திரம் அநுஸந்தேயமாக நியமிக்கவேணும் என்று பிரார்த்திக்க, ஸ்ரீதேசிகனும் அப்படியே உகந்தருளினார். அன்று முதல் இது பகவத் விஷயத்துக்குமாத்திரம் தனியனாக அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. இந்த விஷயத்தை வாத்ஸ்ய அஹோபிலாசார்யரும், சந்த்ரகிரி வெங்கடாசார்யரும் தாங்கள் அருளிச் செய்த தனியன் வ்யாக்யாநங்களில் தெளிவாய் கூறியிருக்கிறார்கள். ஆகையால் இந்த தனியனுடைய கர்த்தாவைப் பற்றியும், அவதார காலத்தைப் பற்றியும மாறு அபிப்ராயம் கொள்வது உசிதமல்ல. ப்ராசீநக்ரந்தங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு விஷய நிர்த்தாரணம் செய்யவேணுமே அல்லாமல் தங்களுடைய கொள்கைக்கு விரோதம் வராதபடி விமர்சம் செய்து ப்ராசீநக்ரந்தங்களை அநாதரிப்பது ப்ராமணிகர்களுக்கு யுக்தமன்று. ஆகையால் இந்த தனியன் ஸ்ரீதேசிகனே திருச்செவி சாற்றி அநுஸந்திக்கும்படி நியமிக்கப் பெற்றது பற்றி இதை மஹாமந்த்ரம் என்று கொள்ளக் குறையில்லை. ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களனைவரும் மேற்சொன்ன விஷயத்தை நன்கறிந்து த்ருடமான அத்யவஸாயத்துடன் ஸமீப காலத்தில் நடைபெறப்போகும் ஸ்ரீராமானுஜ தயாபாத்ர மஹோத்ஸவத்தில் யதா சக்தி அன்வயித்து நாம் அனைவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டி இவ்வைகமத்யத்தால் உண்டாகும் ரஸத்தை அநுபவிக்க வேண்டுகிறோம். இந்த மஹாமந்த்ரத்தின் பேரில் சிலர் அஸூயையால் வெளியிடும் தூஷணங்களை காது கொடுக்காமல் தள்ளி விட்டு "நாளும் உகக்க இங்கே நமக்கோர் விதிவாய்க்கின்றதே" என்று கொண்டாட ப்ராப்தம்.

ஸ்ரீ:

# பக்தியும் ப்ரபத்தியும்

[ஸ்ரீ. உப. டி. ஈ. சடகோபாசாரியர், திருப்பாபுலியூர்.]

பொதுவாக தர்மங்கள் ப்ரவ்ருத்தி தர்மம் என்றும் நிவ்ருத்தி தர்மம்
என்றும் இரு வகைப்படும். அவற்றுள் ப்ரவ்ருத்தி தர்மம் ப்ராக்ருத
சுகத்திற்கு ஸாதனமாகும். நிவ்ருத்தி தர்மம் "மாமுபேத்யது" என்று
கீதாசாரியன் கூறியபடி புனராவ்ருத்தி சங்கையற்ற நிரவதிகமான பரி
பூர்ண ப்ரஹ்மானுபவ மஹாநந்ததிற்கு உறுப்பாகும். இவ்விருவகை தர்
மங்களுக்கும் ஸ்வரூபபேதத்தால் வேறுபாடில்லை. அபிஸந்தி பேதத்தால்
வேறுபாடு என்பது கவனிக்கத்தக்கது.

भावशुद्धिर्मनुष्याणां प्रमाणं सर्ववस्तुषु ।
अन्यथालिङ्ग्यते कान्ता स्नेहेन दुहितान्यथा ॥

என்று பெரியோர் கூறியபடி அல்பாஸ்திரங்களான பலங்களை அடையவேண்
டும் என்கிற அபிஸந்தியுடன் யாகாதி தர்மங்கள் அனுஷ்டிக்கப்பட்டால்
அவை ப்ரவ்ருத்தி தர்ம கோஷ்டியில் சேர்ந்து ஃபலங்களை மட்டும் தந்து
சரிதார்த்தங்கள் ஆகின்றன. அதே தர்மங்கள் ஃபலாபிஸந்தியில்லாமல்
கேவலம் பகவதாராதன ரூபமாய் அனுஷ்டிக்கப்பட்டால் மோக்ஷ ஸாம்ராஜ்
யத்திற்கு ஹேதுவாகின்றன.

இதுவே :—

सुखाभ्युदयिकं चैव नैश्रेयसिकमेव च ।
प्रवृत्तं च निवृत्तं च द्विविधं कर्म वैदिकं ॥
इह चामुत्रवा काम्यं प्रवृत्तं कर्म कीर्त्यते ।
निष्कामं ज्ञानपूर्वं तु निवृत्त मुपदिश्यते ॥
प्रवृत्तं कर्म संसेव्य देवानामेति साम्यताम् ।
निवृत्तं सेवमानस्तु भूतान्यत्येति पञ्चवै ॥

என்று மனுஸ்மிருதியில் ஸங்காஹிக்கப்பட்டது. இங்கு காம என்று
ஏகவசன ப்ரயோகத்தால் தர்ம ஸ்வரூபத்தில் பேதமில்லை என்றும் அபி



ஸந்தி பேதமே விபாஜக ஹேது என்றும் சூசிதமாகின்றது. ஒரே ஔஷ
தம் அனுபான பேதத்தால் வெவ்வேறு ப்ரயோஜனத்தை தருவதுபோல்
இங்கும் அப்படியே கண்டுகொள்வது. இது நிவ்ருத்த கர்மமே கீதாசாரி
யனல் கர்மயோகமென்று வ்யபதேசிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கர்ம
யோகம் அனுஷ்டிக்கப்படுவதால் க்ரமேண ராகத்வேஷங்கள் அடங்கி
மனது இந்திரியங்களின் வழியில் ஈடுபடாமல் ஆத்மாபிமுகமாய் செலுத்
தப்படுவதால் ஞானவிகாஸம் ஏற்பட்டு, ஆத்ம ஸாக்ஷாத்காரம் பிறக்கிறது.
இதுவே பக்தி யோகத்திற்கு அங்குரார்பணம் ஆகும்.

பின்பு கர்மயோகத்தால் விஷய வைராக்யம் பிறந்தவனும் ஆத்ம
ஸாக்ஷாத்காரத்தால் விகஸித ஞானனுமான இவ்வதிகாரி பரமாத்ம
ஸாக்ஷாத்காரத்தை பெறுவதற்காக பக்தியோகத்தில் ப்ரவ்ருத்திக்கிறன்.
இந்த பக்தி யோகந்தான் நிதித்யாஸனம் என்றும் பரபக்தி என்றும் வ்யப
தேசிக்கப்படுகிறது. இது நிரந்தரம் அப்யஸிக்கப்படுவதால் மேன்மேலும்
வ்ருத்தி அடைந்து பகவத் ஸாக்ஷாத்காரத்தை ஸாதித்துத் தரும். இந்த
தசை தான் "த்ரஷ்டவ்ய :" என்ற ச்ருதிவாக்யத்தில் தர்சனமாக நிர்தே
சிக்கப்பட்டது. இதற்கு பரஞானம் என்றும் வ்யபதேசம் உண்டு. இந்த
தசை ஏற்பட்டவுடன் ஸாக்ஷாத் கிருதமான பரப்ருஹ்மஸ்வரூபத்தின்
நீர்மையில் ஈடுபட்டவனை இவ்வதிகாரிக்கு இனி க்ஷணங்கூட அந்தவி
லக்ஷணானுபவத்திநின்றும் பிரிந்திருக்க ஒண்ணாத உத்கடேச்சை "ஜனிக்
கிறது. இதுதான் பரமபக்தி. இதன் ஃபலமாக இவனுக்கு பரிபூர்ண
ப்ரஹ்மானுபவமாகிற மோக்ஷ ஸாம்ராஜ்யம் கிடைக்கிறது. இந்த க்ர
மத்தை கணிசித்தே பக்தியோகம் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் உபாயம் என்
றும், கர்மயோகமும் ஞானயோகமும், ஆத்ம ஸாக்ஷாத்காரத்வாரா, பக்தி
யோகத்திற்கு ஸாதனமாகும் என்றும் கூறப்படுகிறது. இதுதான் கீதா
சாரியனுடைய மதம் என்பதை கீதார்த்த ஸங்க்ரஹ ப்ரதம ச்லோகத்தில்
ஸ்ரீ ஆளவந்தார் நிர்ணயித்தார்.

பரபக்தி என்கிற பக்தியோகத்தை அனுஷ்டிக்க புகுவதற்குமுன்,
அதற்கு விஷயபூதனன பரமாத்மாவின் ஸ்வரூப குணாதிகளைப் பற்றி
தெளிவான ஞானம் ஏற்படவேண்டியது அவச்யமாகும். ஏனென்றால்
ஒரு வஸ்துவைப்பற்றி சிந்திக்கவேண்டுமானல் அவ்வஸ்துவின் ஸ்வரூப
ஸ்வபாவங்களை விசதமாய் அறியாமல் சிந்திப்பது அஸாத்யமாகும்.
மேலும் பக்தி யோகம் ப்ரீதி பூர்வானுத்யானமானபடியால் அதற்கு விஷய
பூதனன பரமாத்மா நம் ப்ரீதிக்கு விஷயமாக தக்கவன் என்று தெளிவதற்
காக அவனது திவ்ய கல்யாண குணங்களையும் திவ்ய ரூப குணங்களையும்
செவ்வனே அறிவது யுக்தமாகும். இது பற்றியே பத்தியோகத்தை

விதிக்கும் வாக்யத்தில் அதற்கு பூர்வாங்கமாக ச்ரவண மனனங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி ச்ரவண மனனங்களால் பரமாத்ம ஸ்வரூபத்தை அறிந்து அவன் ஸர்வாந்தர்யாமியாயும் ஸர்வசேஷியாயும், ஞானானந்த ஸ்வரூபனாயும் இருப்பதுடன் ஸகல ஜந்துவிமோஹனமான திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டன் என்றும் தெரியவே "ச்ருத்வாகுணாந்" என்று ஸ்ரீ ருக்மணீ தேவி அநுஸந்தித்தப் ப்ரகாரம் அவசமாய் நம் மனது அவனது குணங்களால் இழுக்கப்பட்டு அவனுடைய தியானத்தில் அவாவுடன் தானாகவே ப்ரவர்த்திக்கிறது. இவ்வவாதானே தினந்தோறும் விருத்தி அடைந்து காலக்ரமத்தில் ஃபலத்தை ஸாதித்துத் தரும்.

மேலும் தன்னிடத்தில் ஒப்பற்ற அன்பு பாராட்டும் பக்தன் திறத்தில் பரம புருஷனுக்கும் ப்ரேமாதிசயம் ஏற்பட்டு தன்னுடன் பிறந்தார் நிர்பந்தத்தில் அகப்பட்டு வருந்தின ருக்மணீ தேவியை ஸ்ரீ க்ருஷ்ண பகவான், விரோதிகள் கையிலிருந்து விடுவித்து தாம் மணம் பூண்டபடியே ப்ராப்ய விரோதிகளாய நிற்கும் ஸமஸ்த பாபங்களையும் போக்கி சிறை நீக்கி தமக்கு ப்ரியதமனான பக்தனை தானே வரித்து தன்னுடைய பரிபூர்ணானுபவ மஹானந்தத்தை அவனுக்குத் தந்து உகக்கின்றான். இவ்விதமான பரமாத்ம ஸ்வரூப ஞானம் பக்தியோகத்தில் இழிவார்க்கு அவச்யாபேக்ஷிதமாய் இருப்பது ஒரு புறமிருக்க பக்தியோகத்திற்கு ஸாதனமாய் உரைக்கப்பட்ட கர்மயோக ஞானயோகங்களுக்கும் இது மிகவும் உபகாரகமாய் இருக்கிறது. கர்மயோகம் என்பது பலாபிஸந்திரஹிதமாய் கர்மங்களைச் செய்வது என்று முன் கூறப்பட்டது. ஆனால் தனக்கொரு ப்ரயோஜனமின்றி மூடன் கூட முயற்சி செய்யமாட்டான் என்கிற லௌகிகந்யாயத்தின்படி ஃபலத்தில் ஆசையில்லாமல் கர்மம் செய்வது அஸாத்யமாகும் என்கிற சங்கை ஏற்படும். ஆனால் இது கீதையில் முதல் ஷட்கத்தில் நிர்தேசிக்கப்பட்ட தேஹாத்ம விவேகம் மட்டில் பிறந்து கர்மயோகத்தில் இறங்கும் அதிகாரிக்கு அத்யந்தம் கஷ்டமாய் இருந்த போதிலும்,இரண்டாவது ஷட்கத்தில் உபதேசிக்கப்படும் உத்தமாதிகாரிக்கு அவ்வளவு ச்ரமம் ஏற்படாது. என்னென்றால் இவ்வதிகாரிக்கு முன் கூறியபடி ச்ரவண மனனங்களால் தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிவு பிறந்து பகவதாஞ்ஜை என்ற ஒரே ஆகாரத்தை இட்டு, சோதித கர்மங்களை ஃபலாபிஸந்தி ரஹிதமாய் க்லேசமின்றி அநுஷ்டிக்கப் ப்ராப்தம்.

மேலும் குணவானான பதியின் சிச்ரூஷை ஒரு பதிவ்ரதோத்தமைக்கு எப்படி ரஸ்யமாய் இருக்குமோ, அப்படியே பக்தனுக்கு பக்திரஸஸ்நிக்தமாய் கர்மானுஷ்டானம் செய்வது பரமபோக்யமாய் இருக்கும். இவ்வாறு இந்த பரமாத்ம யாதார்த்ய ஞானத்தால் கர்மயோகிகளுக்கு உபகாரம் ஏற்படுவதுபோல் ஞான யோகிகளுக்கும் அதனால் விசிஷ்ட ப்ரயோஜனம் உண்டு.



யமம் நியமம் முதலிய அஷ்டாங்கங்களுடன் கூடியதும் யோகம் என்னும் சொல்லுக்கு அஸாதாரண விஷயமாயும் உள்ள அப்யாஸ விசேஷம் ஞான யோகம் என்று வ்யபதேசிக்கப்படும். இதற்கு ஸாக்ஷாத்ஃபலம் ஸ்வாத்ம ஸாக்ஷாத்காரம். இந்த ஞான யோகத்தால் ஸ்வாத்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகு நிரதிசய சுகாவஹமான ஆத்ம வஸ்துவின் அநுபவத்தில் ஈடுபட்டு அக்கைவல்ய போகத்திலேயே, கால் தாழ்ந்து மேலே பரம புருஷ ப்ராப்தியாகிற மஹானந்தத்தை அடைவதற்கு முயற்சிக்காமல் வ்ருதா காலக்ஷேபம் செய்யும்படி சிற்சில அதிகாரிகளுக்கு நேரிடுவது போல் இல்லாமல், இவ்வதிகாரிக்கு பரம புருஷயாதாத்மிய ஞானம் ஏற்கனவே நன்கு அமைந்திருப்பதால் இவன் இவ்வாத்மாவலோகன ஸித்தியை தனக்கொரு சுப நிமித்தமாக விச்வ ஸித்து பரமோத்ஸாகத்துடன் பரதேவதா ப்ராப்திக்கு உறுப்பான பக்தியோகத்தில் ப்ரவ்ருத்திக்கிறான்.

தொடரும்.

---

# ஆசார்ய வைபவம்

[ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசாரியர், திருவாதி]

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

"श्रीश श्रीशठजिद्यतीशनिगमान्तार्य प्रभावोज्ज्वलस्सु श्लोकोऽवततार दिव्य-महिमा रामानुजोक्त्यादिमः ।" என்று அருளிச்செய்தபடியிலே ஸ்ரீய:பதி முதலாக நம் தேசிகனளவாக உள்ள ஆசார்யர்களின் பெருமையைச் சுருங்கத் தெளிவிக்குமதாய் மஹாரத்ந கர்ப்பமான மாணிக்கச் செப்புபோலேயுள்ளது இத்தனியன்.

இது திருநாராயணபுரத்தில் நயினாராசார்யர் ஸந்நிதியில் பகவத் விஷயத்தை அதிகரிக்கும்போது ப்ரம்ம தந்த்ர ஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்டது.

இதில் நான்கு பாதங்களாலும் அடைவே நம் தேசிகனுடைய ஸர்வாசார்ய கடாக்ஷ ஸம்பத்தியும், கல்யாண குணங்களும், அவதார வைபவமும், உபயவேதாந்த ஸ்தாபன ப்ரவர்த்தனங்களும், நிரூபிக்கப்படுகின்றன.

"**रामानुजदयापात्रं**" (1) இதனால் "காவலனெங்கள் கிடாம்பிக் குல பதியப்புளார்தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர்தம்மருளால் நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்ற" ஏற்றம் சொல்லப்படுகிறது. "கிடாம்பியப்புள்ளார் கிளிப்பிள்ளையைப் பழக்கிவைத்தாற்போல் பழக்கி வைத்த' என்றும், "வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோமுள்ளத் தெழுதியது" என்றும் ஸ்வாசார்ய கடாக்ஷத்தையே நித்யானுஸந்தானம் பண்ணும் ஆசார்யனுடைய திருவுள்ளத்தை நோக்கி முகப்பில் ஆசார்ய ஸம்பந்த வைலக்ஷண்யத்தை நிரூபித்தது.

(2) அன்றிக்கே, "மாறன் துணையடிக்கீழ் வாழ்வை யுகக்கும் ராமானுஜமுனி வண்மைபோற்றும் சீர்மையன்" என்கிறபடியே எம்பெருமானாருடைய திவ்ய கடாக்ஷ விஷயீபூதராயிருப்பவர், "ஏரணி கீர்த்தி ராமானுஜ முனியின்னுரை சேர் சீரணி சிந்தையினோம்" என்று அனுஸந்தித்தும் இவருடைய ஸித்தாந்தத்தை ஸ்ரீ பாஷ்யாதி ப்ரவசன முகத்தாலே விசேஷமாக ப்ரவர்த்திப்பித்தும், சததூஷணீ முதலிய க்ரந்தங்களால் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்தும், **निर्विघ्नं यतिसार्वभौमवचसामावृत्तिभिर्यौवनं**, "**अङ्गीकृत्य सतां प्रसक्तिमसताङ्गर्वोऽपि निर्वापितः**" என்று இதுவே யாத்ரையாகக் கொண்ட நம் ஆசார்யனுடைய திருவுள்ளம் குளிரும்படியாக எம்பெருமானாருடைய திவ்யகடாக்ஷத்தை முன்னிடுகிறது.

(3) அன்றிக்கே '**राम**' சப்தத்தால் ஸ்ரீராமமிச்ரரை விவக்ஷித்து **रामस्य अनुजाः** என்றும் **रामः अनुजः येषाम्** என்றும் விக்ரஹித்து தத்புருஷ பகுவ்ரீஹி ஸமாஸங் கொண்டு ஜ்ஞான ஸந்ததியில் முற்பட்டவரும் பிற்பட்டவருமான ஸ்ரீய:பதி தொடங்கி அப்புள்ளாரளவுமுள்ள ஆசார்யர்களுடைய கடாக்ஷ விஷயீபூதர் என்றும், நிர்வஹிப்பார்கள்.

(4) '**राम**' சப்தமானது **रमा** ஸம்பந்தம் உள்ளவன் என்றும் யோகிகள் இவனிடத்தில் ரமிக்கிறார்கள் என்றும, க்ரமத்திலே ஸ்ரிய:பதியைச் சொல்லுவதாய் அவருக்குப் பின்னுள்ள பிராட்டி முதலான முன்கூறிய ஸந்ததியை **अनुज** சப்தத்தாலே விவக்ஷிக்கவுமாம். இவ்வாறான பல நிர்வாஹங்களில்,

(5) **राम** சப்தத்தாலே நம்பி மூத்தப்பிரானைச் சொல்லி **अनुज** சப்தத்தாலே இவருக்குப்பிறகு அவதரித்தவரான கண்ணனைக் காட்டி அவருடைய தயாவிஷயத்வத்தைச் சொல்லுகிறது என்றும் பெரியோர்களால் நிர்வஹிக்கப்பட்டது.

(6) அந்த க்ரமத்தை அனுஸரித்து ஓர் அர்த்தம் தோன்றுகிறது. அதாவது ஸ்ரீ தேவாதிராஜனுடைய கடாக்ஷத்துக்குப் பாத்ரமானவர் என்பது. அது எங்ஙனே என்னில் இத்தனியனில் மூன்றாவது பாதத்தினால் திருவேங்கடமுடையானுடையவும், நான்காவது பாதத்தினால் ஸ்ரீரங்கநாதனுடையவும் அனுக்ரஹ விசேஷம் ஆசார்யனுக்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த க்ரமத்தில் நம் பேரருளாளன் கடாக்ஷமும் இத்தனியனில் விவக்ஷிதமென்பது பொருத்தமானது. நம் ஆசார்யன் அதிகார ஸங்க்ரஹத்தில் கோயில் திருமலை பெருமாள் கோயிலென்று திவ்ய தேசங்களில் ப்ரதானங்களான மூன்று திருப்பதிகளைப் பற்றி மூன்று பாசுரம் அருளிச் செய்துள்ளார். அதில் அத்திகிரியைப் பற்றிய பாசுரம் :—



> "உத்தமவமர்த்தல மமைத்ததோ ரெழிற்றனு வுயர்த்தகணையால்
> அத்திரவரக்கன் முடிபத்து மொருகொத்தென வுதிர்த்த திறலோன்.
> மத்துறுமிகுத்த தயிர்மொய்த்த வெணெய்வைத்ததுணு மத்தினிடமாம்
> அத்திகிரி பத்தர்வினை தொத்தறவருக்கு மணிபத்திகிரியே."

என்பது. ஒரே பாணத்தினால் ராவண ஸம்ஹாரம் செய்துபோந்த ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனே வெண்ணெய் யுகந்துண்ணும் கிருஷ்ணாவதாரம் செய்து அவனே ஹஸ்திகிரியில் ஸ்ரீ தேவாதிராஜனாய் அர்ச்சாரூபியாயுள்ளான் என்று இதில் அனுஸந்தித்துள்ளார் ஆசார்யன். ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனான அவதாரத்தில் ஓலை கொடுத்தனுப்புவாரில்லாமையால் தூது செல்லக்கூடிய ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தைச செய்து அக்குறையைத் தீர்த்துக்கொண்டானென்பதாக ஆழ்வாரும் அனுஸந்தித்தார் :—

> முன்னோர்தூது வாநரத்தின் வாயில் மொழிந்தரக்கன்
> மன்னூர்தன்னை வாளியினால் மாள முனிந்தவனே
> பின்னோர் தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார்
> இன்னார் தூதனெனநின்றான் எவ்வுள் கிடந்தானே."

என்று. இதை யனுஸரித்து ஸ்ரீராமாவதாரத்துக்கும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்துக்குமுள்ள தொடர்பு இங்கும் ஆசார்யனால் அநுஸந்திக்கப்பட்டது. ஆகவே ஸ்ரீராமனும் பின்னவதரித்த கிருஷ்ணனும் பேரருளாளனாக அவதரித்திருப்பதால் ராமானுஜ சப்தத்தினால் பேரருளாளனை விவக்ஷித்து அவருடைய ஜாயமான கடாக்ஷம் முதலிய அனுக்ரஹத்துக்குப் பாத்ரபூதராயிருப்பவர் என்கிற அர்த்தமும் பொருத்தமானது.

"**ज्ञानवैराग्यभूषणम् ।**" என்று முன்சொன்ன ஆசார்ய கடாக்ஷத்தினால் ஏற்பட்ட ஜ்ஞான வைராக்யாதி குணங்களை பூஷணமாக உடையவரென்கிறது. இங்கு ஜ்ஞான வைராக்யங்களாவது :—

"முக்கிய மந்திரங்காட்டிய மூன்றில் நிலையுடையார்
தக்கவையன்றித் தகாதவையொன்றும் தமக்கிசையார்."

என்று இவ்வாசார்யனாலேயே அருளிச்செய்யப்பட்ட ஸ்வரூபோபாய புருஷார்த்த ஜ்ஞானமும், வைஷயிக போகங்களில் வைராக்யமும்.

"அறமுன்றாலகில் சுவையான கல்விகள் சூழவந்தாலும்
தொகையிவை ?......

என்று கழிக்கப்பட்ட ஜ்ஞானம் இங்கு பூஷணமாக விவக்ஷிதமன்று." "ज्ञानवैराग्यराशये । नाथाय"—என்று பக்தியோக ப்ரவர்த்தகரான நாதருக்கு ஸ்ரீ ஆளவந்தார் அனுஸந்தித்த இக்குணத்தை ப்ரபத்தி வித்யா ப்ரவர்த்தகரான வேங்கடநாதனுக்கும் இங்கு அனுஸந்திக்கிறார்.

(2) இங்கு ஜ்ஞான வைராக்யங்களுக்கு பூஷணமாயிருப்பவர் என்றும் கொள்ளலாம். எப்படி என்னில் "பொற்றாமரைப் பூவில் பரிமளத்துக்கு அல்லாத்தாமரைப்பூவில் பரிமளத்தைக் காட்டில் ஆச்ரயவைலக்ஷண்யத்தாலும் அதிசய முண்டாயிருக்குமிறே" என்று அபயப்ரதான ஸாரத்தில் இவ்வாசார்யனே அருளிச்செய்தபடியிலே ஜ்ஞான வைராக்யங்கள் இவ்வாசார்யனை யடைந்து தறம் பெருகின்றன. "भूषा गुणै रधिगतं निजकान्तिहेतोः" என்று ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத்திலும் அருளிச் செய்தார். गुणास्सत्यज्ञान प्रभृतय उत त्वद्गततया शुभीभूयं याताः" என்று ஆழ்வானும் பேரருளாளனிடத்தில் அனுஸந்தித்தார். "आभरणस्याभरणं प्रसाधनविधेः प्रसाधनविशेषः" என்றான் மஹாகவி காளிதாஸனும். அந்த ரீதியிலே இந்நிர்வாஹமும் ஸ்வரஸம். இப்படிப்பட்ட குணவிசேஷங்களுக்கு ஹேதுவான அவதார வைபவம் சொல்லுகிறது.

"श्रीमद्वेङ्कटनाथार्यं" என்பதால் "वेङ्कटेशावतारोयं" என்கிறபடியே திருவேங்கடமுடையான் திவ்யாவதாரமாகையால் அத்திருநாமம் பெற்றவர். இங்கு श्रीमत्त्व மாகிறது:—திருவேங்கடமுடையான் சேதனருக்குக் கரணகளேபரப்ரதானம் செய்தும் சாஸ்த்ரங்களைக் கொடுத்தும் திருவேங்கட மலையிலே அர்ச்சாரூபியாய் நின்றும் தன்க்ருஷிபூர்ணமாய் பலியாமையால் பிறகு ஸ்ரீ தேசிகனாய் அவதரித்து दुर्मतदुर्वाद ரோகங்களைப் பரிஹரித்தருளினமையால் ஏற்பட்ட புகருடமை. இவ்வர்த்தத்தை—

"அன்றிவ்வுலகினை யாக்கியரும் பொருணூல்விருத்து
நின்றுதன்னீள் புகழ்வேங்கட மாமலைமேவிப் பின்னும்
வென்றிப்புகழ் திருவேங்கட நாதனெனுங் குருவாய்
நின்றுநிகழ்ந்த மண்மேனின்ற நோய்கள் தவிர்த்தனனே."



என்று ஸ்ரீ குமாரவரத தேசிகன் அருளிச்செய்தார். "பயிலுந் திருவுடையார்" என்கிறபடியே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பத்தான கைங்கர்ய லக்ஷ்மி இங்கு ஸ்ரீமத் சப்தார்த்தம் என்றும் கொள்ளலாம்.

"वेदान्तदेशिकम्" இப்படி இவ்வாசார்யனுடைய உபய வேதாந்த ப்ரவர்த்தனங்களால் உகந்து அழகிய மணவாளன் ப்ரஸாதித்தருளிய வேதாந்த தேசிக பிருதத்தைப் பெற்றவர். "वेदान्तदेशिकपदे विनिवेश्यबालं" இத்யாதிகளான இவர் ஸூக்திகள் அனுஸந்தேயங்கள். இப்படி அழகிய மணவாளன் ப்ரஸாதித்த வேதாந்தாசார்ய பதத்தை இவ்வாசார்யன் நிர்வஹித்துப் போந்தபடி எப்படி என்னில்—"येना भाणि द्विशतं ब्रह्म भाष्यं ......तं वेदान्ता चार्य मीडे सदाहं" என்று இவருடைய வைபவ ப்ரகாசிகையில் மஹாசார்யர் ஸாதித்திருக்கிறபடியே தாம் இருநூறு தடவைகள் ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரவசனம் செய்தருளினார். இதனால் "त्रिंशद्वारं श्रावित-शारीरक भाष्यः" என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்ததும் அந்த க்ரந்தம் செய்தருளும் ஸமயத்தில் முப்பது தடவை ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் முடிந்திருப்பதைக் குறிக்கின்றதென்று கொள்ளவேண்டும். தத்வடீகை, தத்வமுக்தாகலாபம் ஸர்வார்த்தஸித்தி. சததூஷணி முதலிய க்ரந்தங்களாலும் வேதாந்தாசார்ய பதத்தை நிர்வஹித்துக் காட்டினார். "तेन देवेन दत्तां वेदान्ता चार्य संज्ञामवाहित बहुवित्साथं मन्वर्थयामि" என்று தாமே ஸாதித்திருப்பது அனுஸந்தேயம். இவ்வாறாகவே "ग्रन्थैश्चतुस्सप्ततिभिस्सहस्रै श्चतुस्सहस्रार्थविशेष युक्तैः । यष्षट्सहस्रस्य चकार वृत्तिं तन्देशिकं नौमि शतं सहस्रं" என்று வைபவ ப்ரகாசிகையில் மஹாசார்யர் ஸாதித்தபடியே பகவத விஷயம் திருவாறுயிரப்படிக்கு எழுபத்தினாலாயிரப்படி என்று வ்யாக்யானம் செய்தருளி அந்த வ்யாக்யானத்துடன் பகவத் விஷயத்தை பல தடவைகள் ப்ரவசனம் செய்தருளினார். இவ்வாசார்யனுடைய க்ரந்தங்களின் பெருமை "तत्रालमेकः खलु भुक्ति मुक्त्योः" என்றும் "ஒரொன்றுதானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு" என்றும் பின்புள்ள மஹான்களால் கொண்டாடப்பட்டது அனுஸந்தேயம்.

இத்தனியனிலுள்ள वेदान्त பதம் உபயவேதாந்த ஸாதாரணமாயிருக்கச் செய்தேயும், ப்ராக்ருதத்தில் இச்லோக ப்ரவர்த்தகரான ப்ரம்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி இத்திராவிட வேதாந்தார்த்தங்களை தம்முடைய திருவுள்ளத்தில் தங்கி ப்ரவர்த்திக்கும்படி தமக்கு அநுக்ரஹித்த க்ருபா பரீவாஹத்தி லீடுபட்டு இப்பாசுரத்தை வெளியிட்டதாக பூர்வ க்ரந்தங்களில் ப்ரஸித்தமாய் சிஷ்டானுஷ்டானமும் அப்படியே யிருப்ப

தால் **वेदान्तदेशिकं** என்று த்ராவிட வேதாந்தார்த்த ப்ரதர்சகத்வத்தை **विशेषरूपेण** காட்டுகிறதென்றும் பூர்வாசார்யர்கள் நிர்வஹித்தார்கள்.

"**वन्दे**" இப்படிப்பட்ட மஹா குணநிதியாய் பரமோபகாரகரான ஆசார்யன் விஷயத்தில் நித்யரிணியான அடியேன் செய்யவடுப்பதொரு ப்ரத்யுபகார மில்லையாகையால் "போற்றியுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ்சாற்றி வளர்ப்பது" மாக கிஞ்சித்காரம் செய்கிறேன். இது நித்யானு வ்ருத்தமானது என்றபடி.

"**आचार्यवान् पुरुषोवेद**" என்று முக்ய காரணமா யோதப்பட்ட ஆசார்ய ஸம்பத்து முதல் பாதத்தினால் சொல்லப்பட்டது. "**श्रोत्रियं ब्रह्मनिष्ठं**" என்று சொல்லப்பட்ட வேதாந்தார்த்த ஸ்ரவணமும் "**परमात्मनियोरक्तो विरक्तोऽपरमात्मनि**" என்கிற ப்ரஹ்மநிஷ்டையும் இரண்டாம் பாதத்தில் நிரூபிக்கப்பட்டது.

ஆகவே இவருக்கு வேதாந்த தேசிகத்வத்தை இவ்விசேஷங்களாலும் ஸமர்த்தித்ததாகிறது. இவ்வாறான பற்பல அர்த்த விசேஷங்கள் சிறிய கண்ணாடி பெரிய உரு காட்டுமாப்போலே தெளிவிக்கிறது இத்தனியன்.

**रामनुजदयापात्र सूक्त्यर्थामृत वारिधेः ।**
**स्वादु द्वित्रकणास्वादमात्रमेतत्कृतम् मया ॥**

---

# ஸ்ரீ பராசரபட்டரின்

## (4)

## திருமஞ்சனக் கவிகள்

ஸ்ரீ. ஸ்ரீ.

॥ हरिः ओं ॥

*नानानुवृत्तिविषयं नतराजहंसं
नानाण्डजातसमधिष्ठितमब्जरम्यं ।
सेवावतीर्णसुमरुद्गणमद्य रङ्गिन् !
भावानुरूपनदमित्यनुमन्महे त्वाम् ।

**नारायण परं ब्रह्म** என்றும், "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் சொல்லுகிறபடியே நிரங்குஶ-ஸ்வதந்த்ரனையிருக்கச் செய்தேயும், [1]"**इमौ स्म मुनिशार्दूल किङ्करौ समुपस्थितौ । आज्ञापय यथेच्छं ते शासनं करवाव**

---

நாநா—பலருடைய
அநுவ்ருத்தி—அநுஸரிப்பதற்கு
விஷயம்—விஷயமாயும்
நத—வணங்கின
ராஜஹம்ஸம்—ராஜச்ரேஷ்டர்களை யுடையவராயும்,
நாநா—அநேக
அண்டஜாத—ப்ரஹ்மாண்டங்களால்
ஸமதிஷ்டிதம்—அடையப்பட்டவராயும்
அப்ஜ—ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தாலே
ரம்யம்—மனோஹரராயும்
ஸேவாவதீர்ண—(திருநாள்) ஸேவிக்கைக்காக இறங்கின
ஸுமருத்கணம்—தேவதைகளையுடையவராயும் இருப்பவரான
த்வாம்—உம்மை,
ரங்கிந்—ஸ்ரீ ரங்கநாதனே !
பாவாநுரூப—ஆச்ரிதருடை அபிப்ராயப்படி பிரவஹிக்கும்
நதம்—ஆறாக
அத்ய—இன்று
மந்மஹே—எண்ணுகிறோம்.

ஆறும் பலரால் அநுஸரிக்கப்பட்டதாயும், ராஜ ஹம்ஸங்களோடும் மற்றும் பல பக்ஷிகளோடும் கூடியதாயும், தாமரைகளால் அழகாயும் மந்த மாருதத்தோடு கூடியதாயும் இருக்கும்.

1. முனிச்ரேஷ்டர் (விச்வாமித்ர)–தாஸர்களான நாங்கள் இருவரும் இதோ வந்து நிற்கிறோம்; உம் இஷ்டப்படி ஆக்ஞாபியும். நாங்கள் இப்போது என்ன செய்ய வேண்டும்?

क्ति ॥" என்றும், "உன் தனக்கு அன்பரானார் அவருகந்தமர்ந்த செய்கை உன் மாயை" என்றும் சொல்லுகிறபடியே ப்ரணத-பரதந்த்ர-ஸர்வ-ப்ரவ்ருத்திகராகையாலே, [2]"பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்கிறபடியே கிடையழகு காண ஆசைப்பட்ட ஆஸ்ரிதர் அபேக்ஷாநுகுணமாக பெரிய பெருமாளைக் கொண்டு "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக் கையால் அடிவருடப் பள்ளி"கொண்டு, அதற்கு மேலே "ஆணிச் செம்பொன்மேனி எந்தாய் நின்றருளாய்" என்கிறபடியே ஆசைக்கிடான 'அழகிய மணவாள'ராய்க் கொண்டு திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ நிலையாற நின்றருளி, பின்னையும் அறிந்தறிந்து இவர் வீதி போதுமாகில்' என்றும், "ஞாலத்தூடே நடவாய்" என்றும் ஆசைப்படுகிற ப்ரணயிநீ-பரிஜநங்களுக்காக திவ்யோத்ஸவாப தேஸத்தாலே மேனகை முதலானோர் வெள்கி ஆடல் மாறும்படி வீதி உலாவியருளி "தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்" "மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறு சாந்தும் அஞ்சனமும் கொண்டு வைத்தேன்" 'ஆடி அமுது செய்' என்று அபேக்ஷிக்கிற அந்தரங்கருக்காக இப்போது திருமஞ்சனமாடி அருளி, ஸௌந்தர்ய-ப்ரபாவத்தாலே சூழ்ந்திருந்து ஏத்துவாரை அறச் சுழியாறு படுத்திக்கொண்டு நிற்கிற நிலை ஓராற்றோடே ஸ்லேஷித்து விண்ணப்பம் செய்யலாயிரா நின்றது. அதெங்ஙனேயென்னில்:

நாநாநு வ்ருத்தி விஷயம்—ஆறானது [3]ஸ்நாந-பாநாதி-காமநயா நாநாவித-ப்ராணிகளுடைய அநுவர்த்தநத்திற்கு விஷயமாய் [4]வேக-வைபவ விவஸ-விவித-பதார்த்த-ஸார்த்த-அநுகம்யமானமுமாய் இருக்கும்; தேவரீர் "मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु" என்கிறபடியே த்யாந-அர்ச்சந-ப்ரணாமாதி. ரூபேணவும், [5]பஜந-ப்ரபதந-ரூபேணவும் நாநாவிதமான ஆஸ்ரயணத்திற்கு விஷய பூதராய் இராநின்றீர்.

நத-ராஜ-ஹம்ஸம்:—'அன்னமாடுலவு மலை புனல்' என்கிற ந்யாயத்தாலே ஸம்ஸ்லேஷத்தாலே துவண்ட வடிவையுடைத்தான ராஜஹம்

---

2. திருப்பாற்கடலில் நீ சயனித்த அழகை நாம் கேட்கும்போதேகால்அழுந்தும்.

3. स्नानपानादिकामनया—ஸ்நாநபாநாதிகளைச் செய்யும் விருப்பத்தால்

4. वेगवैभवविवशविविधपदार्थसार्थानुगम्यमान — அதிவேகத்தால் தன் வசமின்றி இழுத்துக்கொண்டு போகப்படுகிற பல வஸ்துக்களை யுடையதாய்.

5. भजनप्रपदनरूपेण—பக்தி சரணாகதி இவற்றைச் செய்வது.



ஸத்தையுடைத்தாயிருக்கும்; தேவரீர் [6]'அநுகூல-மஹீபால-வ்யாநம்ர-மௌளி-பரம்பரா-மணி- மகரிகா- ரோசிர்- நீராஜித-அங்க்ரி-ஸரோருஹ' என்கிறபடியே திருவடிகளாலே ப்ரணதரான ராஜஸ்ரேஷ்டரையுடையராயிராநின்றீர்.

நாநா-(அ)ண்டஜாத-ஸமதிஷ்டிதம்—ஆறானது நாநாவித-காரண்டவாதி அண்டஜங்களாலே அதிஷ்டிதமாயிருக்கும்; தேவரீர் [7]"रोमकूपे ह्यनन्तानि ब्रह्माण्डानि भ्रमन्ति ते" என்றும் [8]"अण्डानां त्वदुदरमामनन्ति सन्तः स्थानं" என்னும்படி அநந்தங்களான அண்டங்களாலே அடையப்பட்டிராநின்றீர்.

அப்ஜ-ரம்யம்—ஆறானது செவ்வித்தாமரைப் பூக்களாலே தரித்திருக்கும்; செந்தலித்திருக்கும். தேவரீர் "தவள வொண்சங்கு" என்னும்படி திருநிறத்திற்குப் பரபாகமான வெளுப்பையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலே அழகியராயிராநின்றீர்.

ஸேவா-(அ)வதீர்ண- ஸுமருத்-கணம்—ஆறானது ஆகந்துக-(அநந்த?) பத்ம.[9]ஸௌகந்திகளின் அபரிமிதமான பரிமளங்களை அணைந்து ஏறிட்டுக்கொள்ளுகைக்காக இறங்கின அழகிய மந்த-மாருத-ப்ருந்தத்தை உடைத்தாயிருக்கும்; தேவரீர், திருநாள் ஸேவிக்கைக்காக ஸ்வர்க்கத்திலிருந்து இறங்கின "வடிவுடைவானோ"ரான [10]ஸுந்தர-ப்ருந்தாரக-ஸந்தோஹத்தையுடையராயிராநின்றீர்.

அத்ய ரங்கிந்! பாவாநுருப நதம் இதி அநுமந்மஹே த்வாம்-

---

6. अनुकूल-महीपाल-व्यानम्र-मौलिपरंपरा-मणिमकरिका-रोचिर्नीराजिताङ्घ्रिसरोरुह-அநுகூலர்களான ராஜாக்களின் வணங்கின தலைகளின் வரிசைகளின் (கிரீடங்களின்) ரத்னங்களின் காந்திகளால் நீராஜனம் செய்யப்பட்ட தாமரைபோன்ற திருவடிகளை யுடையவர்.

7. உம் ரோமகூபங்களில் அநந்தமான ப்ரஹ்மாண்டங்கள் இருக்கின்றன.

8. உம் திருவுதரத்தை பல அண்டங்களுக்கு இருப்பிடமாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

9. सौगन्धिक—நீலோத்பலம்,

10. सुन्दर-वृन्दारकसन्दोह - அழகிய தேவதைகளின் கூட்டத்தை.

ஆக இப்படிகளாலே[11] காட்டில் காணும் ஆற்றோடொத்திருக்குமதாய் அவைபோலே தான் நினைத்தவாக்கிலே போகையன்றிக்கே “पश्यन् मनः प्रवणमोघमिवाऽऽश्रितस्य”[12] ஆச்ரிதருடைய அபிப்பிராயத்தை அநுஸரிக்கும தான “அரங்கமாநகருளான்” என்கிற அம்ருதவாஹினது அகிலதாபங்களையும் ஆற்றும்படி அபிமுகமாய் நிற்கிற நிலைபோலே இருந்தது.

हरिः ओं ॥

---

11. ‘காட்டில் ஆறுநேரொடொத்திருக்குமதாய்’ என்று மூலத்தில் உள்ளது.
12. दयामृतस्य என்று மூலத்தில் உள்ளது.

ஸ்ரீ.

# மையல் செய்த மணவாளர்.

[ஆரியூர் வ. ரங்கநாத ராமாநுஜ தாஸன்.]

‘தென் திரைக் கடல் கடைந்து தெள்ளமுதில் வரும் திருவை திரு மார்பில் வைத்த நம்பி’ ‘அன்பர் மனம் விட்டு அகலாத மணவாளப் பெருமாள்’ ஆகிய செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரது திருக்கோயிலிலே, கோயிலைப் பாருக்குள்ளே, ‘கண்டவர் சிந்தையைக் கவர்ந்து மையலேற்றி மயக்கும் அழகிய மணவாளப் பெருமாளெதிரிலே, திருமணத் தூணருகிலே இரு பெண்மணிகள் நின்று கொண்டிருக்கின்றனர். அவ்விருவருள் ஒருத்தி, பொற்பாவை உயிர் பெற்று நிற்பது போன்ற அழகிற் சிறந்த இளமங்கை; மற்றொருத்தி, காலம் கடந்த வயதுடைய அவளது அன்னை. தன்னை ‘மையல் செய்து மனங் கவர்ந்து கொண்ட நம்பி மணவாளன்’ எதிரிலிருந்தும், குனிந்த தலை நிமிராமல் நிலத்தை நோக்கிக் களித்த வண்ணமிருக்கிறாள் அவ்விள மங்கை. அவளது கருவிழிகளிலிருந்து பெருகும் கண்ணீர்த் தாரைகள், அவளது அழகிய பாதங்களை நனைத்துக்கொண்டிருக்கின்றன. அவளது தலைவனெதிரிலே தலை நிமிர்ந்து நின்று என்னென்னவோ கேட்கவேண்டுமென்று அவளது மனம் பெரிதும் துடிதுடித்துக்கொண்டிருந்தது; அவனெதிரில் நிற்க நேர்ந்துள்ள இப்போதோ, அவளது மனத்திற்குள் பொங்கிக் கொண்டிருக்கும் பல வேறு உணர்ச்சிகளுள் ஏதையும் வாய் விட்டு வெளியிட முடியாதபடி, கோபமும் நாணமும் கூடிக்கொண்டு அவளைப் பேசவொட்டாமல் தடுத்துத் தலை கவிழ்ந்து நிற்கச் செய்து விட்டன. அந்நிலையிலே, பெருமானது பிரிவாற்றாமல் அவள் பட்ட பாடுகளையெல்லாம் அருகிலிருந்து கண்டு அகம் கரைந்து உருகி நின்ற அவளது அன்னையே, அவற்றையெல்லாம் பெரிய பெருமாள் பக்கலிலே விண்ணப்பம் செய்து நிற்க நேர்ந்துவிட்டது. தன் நிலைமையைத் தன் வாயினால் சொல்ல முடியாதபடி தளர்ந்து உருகித் தவித்து நிற்கும் அவ்விள மங்கையின் நெஞ்சைப்போலவே அவளது அன்னையின் மனமும் பெரிதும் தளர்ந்தேயிருந்தது. எனினும், ‘பெருமாளினும் இளையபெருமாளுக்குத் தளர்த்தி உண்டாயிருக்கச் செய்தே, பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளைய பெருமாள் உணர்ந்திருக்குமாபோலே’, தன் மகள் அநுபவிக்கும் துன்பங்களை நீக்க முயலவேண்டுமென்ற ஆர்வமிகுதியினாலே, தளர்ந்து உருகிக் கிடந்த தனது நெஞ்சுக்கும் துணிவூட்டிப் பலப்படுத்திக்கொண்டு, அவளது தாயார் பெரிய பெருமாளை நோக்கிப் பின் வருமாறு முறையிடத் தொடங்குகிறாள் :—

‘கதிரையும் மதியையும் படைத்துப் பகலையும் இரவையும் அமைத்த வியன் எம்பெருமானே! தொழிலில் தலைப்பட்டு உழைக்கும் உயிர்கள் களைப் பாறுவதற்காக, அவ்வுயிர்களுக்கு உறக்கத்தை அளித்தருளினாய். உலகத் தார் இரவில் உறங்கித், தமது களைப்பைத் தீர்த்துக்கொள்கின்றனர்; காத லர்களோ, இரவில் விழித்திருந்த சிரமம் தீர, பகலில் உறங்குகின்றனர். இரவிலும் பகலிலும் எந்நேரத்திலும் உன்னையே நினைத்து நினைத்து நெஞ்சு உருகிக் கலங்கி நிற்கும் இவளுக்கு, உறங்குவதற்கு உரிய இரவுக் கும் விழித்திருப்பதற்கு உரிய பகலுக்கும் இடையிலுள்ள வேற்றுமை கூட தெரியவில்லை. நெடுங்காலமாக, நித்திரைச் சுகம் எத்தகையதென்பதை இவள் அனுபவித்தறியாள். இந்த மங்கையுடன் நீ கூடிக் கொஞ்சிக் குல விக்கொண்டிருந்த நாட்களிலே, உனது அஸாதாரண அற்புத லீலைகளி ஞல் நீ இவளைச் சிறிது நேரங்கூட உறங்கவிடவில்லை; உன்னைப் பிரிந்த பின்போ, மீண்டும் உனது கூட்டுறவு எப்பொழுது வாய்க்குமோ என்ற ஏக்கமொன்றே இவளது நெஞ்சில் குடிகொண்டு விட்டதால், இவளால் சிறிது நேரங்கூட உறங்கமுடியவில்லை. எந்த கணத்திலும் உன்னைப் பற்றிய சிந்தனையிலேயே ஈடுபட்டிருக்கும் இவளுக்கு, ஒரு கணநேரங்கூட உன்னை மறந்திருக்க முடியாதிருப்பதால், நித்திரா தேவி இவளை நெருங்க அஞ்சி என்றும் விலகியே நிற்கிறாள்.

அவ்வண்ணம் எந்நேரத்திலும் உறங்காமல் விழித்தபடியேயிருந்த இவளது கருவிழிகளிலிருந்து, இவளது மனத்தினின்றும் பொங்கிப் பெருகிய துயரத்தின் பயனாக, கண்ணீரருவி பெருகி வழியத் தொடங்கியது. அடியவர்களுக்கு இரங்கும் அருட்பெரு வள்ளலாகிய நீ, எந்த நேரத் திலும் தன் முன் வந்து தோன்றக் கூடுமென்ற எண்ணமும் இவளது நெஞ்சில் பன்முறை தோன்றியது. அவ்வெண்ணம் இவளது நெஞ்சில் தோன்றியபோதெல்லாம், உனது வடிவழகைக் கண் குளிர அநுபவிக்க முடியாதவாறு பெருகுகிற கண்ணீரருவியைத் தடுத்து நிறுத்த வேண்டுமே யென்ற கவலையும் கூடவே தோன்றியது. ‘கடல் கொண்ட கண்ணீர் அருவி’யாகப் பெருகிக்கொண்டிருக்க, அவ்வருவியைத் தனது தளிரினும் மெல்லிய சிறு பணிக் கைகளினால் இறைத்து நிறுத்த முயன்றாள் இவள். அம் முயற்சி பயன்படாதொழிந்ததால், இவள் பெரிதும் சோர்ந்து நின்றாள்.

அவ்வாறு இவள் சோர்ந்து நின்ற வேளையிலே, அன்பர்களுக்கு நேரும் துன்பங்களை விரைந்து வந்து நீக்கிக் காத்தருள்வதையே தமது இயல்பாகக் கொண்ட உனது வெற்றிச் சங்கும் வீரச் சக்கரமும் அங்கு விரைந்து வந்து இவளது அகக் கண் முன்பே அருளொளி வீசி நின்றன. அருளே



உருவான அவ்வாழ்வார்கள் இருவரையும் கண்ட இவள், தன் குறைகளை யெல்லாம் விரித்து விளக்கிக் கூறி முறையிட முயன்றாள். ஆனால், அவ் வேளையிலே, இவள் வாயைவிட்டு ஒரு வார்த்தைகூட வெளிப்பட்ட பாடில்லை. வாய் விட்டுக் கூறி முறையிட முடியாமற்போன குறை தீர, இவள் தனது ஆற்றாமையெல்லாம் தோற்றும்படி ஏங்கிச் சோர்ந்த கண்க ளால் அவர்களை நோக்கி, ஒரு அஞ்சலி செய்து நின்றாள். அவ்வாழ்வார் களை ஏந்தும் திருக்கைகளுடைய நீ அங்கு அப்போது வந்து நின்றிருந்தால் தனது நெஞ்சைக் குளிர்வித்திருக்கக்கூடிய உனது செந்தாமரைக் கண்க ளைச் சிந்தித்தாள். உடனே, இவள் அவர்களை நோக்கி, “வெற்றிச் சங்கே! வீரச் சக்கரமே! மங்கையர் மனத்தில் மையலேற்றி மயக்கும் மாயமோகன வித்தையில் தேர்ந்துவிட்ட எம்பெருமானது செந்தாமரைக் கண்களி லிருந்து கிளம்பும் அருள் அலைகள், அவனது இரு கரங்களிலும் விளங்கும் உங்கள் மீது மோதுவதுண்டல்லவா? அவ்வருள் அலைகள், எனக்கு என்ன செய்தி சொல்லியனுப்பின?”—என்று வினவினாள். அவ்விருவரும் எவ் வித பதிலுமே கூறாமல், மாயமாக மறைந்துபோய் விட்டனர். பின்னர், “உன் தாமரைக் கண்களால் நோக்காய்!”—என்று உன்னையே பிரார்த் திக்க முயன்ற இவள், ‘தாமரைக்கண்’—என்று சொல்லி, மேலேசொல்ல முடியாமல் தடைப்பட்டு நின்று, நெடுநேரம் தளர்ந்து கிடந்தாள்.

இவள், “என் நெஞ்சை மையல் செய்து அடிமைகொண்ட மணவா ளப் பெருமானே! உனது வடிவழகு எத்தகையதென்பதை, நீ ஒருமுறை கண்ணாடியிலேனும் கண்டறிந்ததில்லையோ? அறிந்திருந்தால், நம்மைப் பிரிந்த நமது மெய்யன்பர்கள் நம்மை விட்டு எப்படித் தரித்திருக்க முடி யும் என்பதை, நீ சிறிதேனும் சிந்தித்துப் பார்த்திருப்பாயன்றோ? ‘இவ் வுடலுடன் கிட்டமுடியாது’—என்று ஆகியிருக்க, லோகாந்தரமாகிய பரமபதத்தில் வீற்றிருப்பவனிடம் ஆசைப்பட்டேனோ? ‘அக்காலத்தில் உதவப் பெற்றிலேன்’—என்று ஆகியிருக்க, விபவாவதாரங்களில் ஆசைப் பட்டேனோ? ‘புறக் கண்களால் காண முடியாது’—என்று ஆகியிருக்க அந்தர்யாமித்வத்தில் ஆசைப்பட்டேனோ? அடியவர்களது தொல்வினைகளை அறுத்தெறிந்தாலன்றி, அரவணையை விட்டு எழுந்திரேனென்று கிடந்தரு ளும் பேரருளாளனாகிய உன்னிடமன்றோ நான் ஆசைப்பட்டது! அருட் பெரு மரகதமலையாகிய உன்னைவிட்டுப் பிரிந்து, என்னால் எவ்விதம் தரித் திருக்க முடியும்?” என்று உன்னைக் குறித்து முறையிட்டுக் கதறி அழு தாள். இவளது கண்களிலிருந்து பெருகி வழிந்த கண்ணீர், இவள் அமர்ந்திருந்த இடத்தைச் சுற்றிலும் பரவி மண்ணோடு கலந்து சேறாகி விட்டிருந்தது. நீ உனது திருவடிகளினால் தழுவிய நிலத்தை, இவள் தன்

கைகளால் துழாவிப் பார்த்தாள்; பின் அதுவும் செய்ய முடியாமல் துயரமே வடிவானதொரு சிலைபோல், அசைவின்றிச் செயலற்றிருந்து கலங்கலானாள்.

இளமைச் செழுமையால் செம்மை பெற்றுச் செருக்கிய அழகிய கயல்கள் துள்ளி விளையாடும் தெள்ளிய நீர்வளமுடைய திருவாலிப் பெரு நகரில் பள்ளிகொண்டுள்ள பரம்பொருளே! கார (ஜல)த்தைப் பற்றிய மீன்கள் மேனி செழித்துச் சிவந்து மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருக்க; நாராயணனாகிய உன்னைப் பற்றிய இவள் உடல் வெளுத்துக் குளிர்ந்து உள்ளம் கலங்கியிருப்பது முறைதானோ? அச் செங்கயல் நீரை விட்டுப் பிரிந்து தரித்திருக்க முடியுமானாலன்றோ, இவளும் உன்னை விட்டுப் பிரிந்து தரித்திருக்க முடியும்? உன்னுடைய ஊரில் பகுத்தறிவற்ற உயிர்கள் பெற்றிருக்கும் மகிழ்ச்சியைக் கூட, உன்னைச் சரணாகதி அடைந்த இவள் பெற வேண்டாமோ? பரம ரஸிக சிகாமணியான உனது அருட் குளிர் விழிகளுக்குப் பரம போக்யமாயிருந்த இவளது மாந்தளிர் போன்ற அழகிய பொன்மேனி, உன்னைப் பிரிந்து அநுபவித்த விரக வேதனையின் பயனாக எவ்வாறு வெளுத்து மெலிந்து தளர்ந்து துவண்டு நிற்கிறதென்பதை, உனது கண்களாலேயே சற்று கவனித்துப் பார்!

தனது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து மையலேற்றி மயக்கிய உனது செந்தாமரைக்கண்களை நினைந்து கரைந்து உருகித் தரையில் தளர்ந்துவிழுந்த இவள், அருள் அலைகளை வீசிக் குளிர்ந்து சுழலும் அம் மோகனக் கண்களை நினைந்து புலம்பிய வண்ணமே உணர்ந்து எழுந்தாள். "உனது மோகனக் கண்களால் என்னைத் தோற்பித்து அடிமையாக்கிக் கொண்டுவிட்ட நீ, அவ் வருட் கண்களால் என்னைக் குளிர நோக்கியருளவேண்டாமோ? அன்பர் களது அகத்தில் இன்பத்தைப் பெருக்கவேண்டிய உனது அருட்கண்களால் அவர்களது அகத்தில் துன்பத்தைப் பெருக்கி நீ வேடிக்கை பார்த்து நிற்பது முறைதானோ? அடியேன் விஷயத்தில், இன்னும் என்ன தான்செய்ய எண்ணியிருக்கிறாயோ? கருணைப் பெருங்கடலும் ஸர்வ சக்தனுமாகிய நீயே அடியேன் விஷயத்தில் திருவுள்ளம் இரங்காவிட்டால், அபலையும் அசக்தையுமான எளியேனால் என்ன செய்யமுடியும்?" - என்று இவள் உன்னை நோக்கி முறையிட்டாள். அவ்வேளையிலே, இவளது கருவிழிகளி லிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது; அடிக்கடி பெருமூச் செறிந்து, மனக் கொதிப்பினாலும் உடல் வெப்பத்தினாலும் உள்ளமும் உடலும் ஒருமிக்க உருகி நின்றாள். "முற்பிறவிகளில் செய்த வல்வினைகளே! மறைந்து நின்று என்னை இவ்வளவு பாடு படுத்தி நிற்கும் நீங்கள் உண்மை யில் சக்தியுடையவர்களானால், என் கண்ணெதிரில் வந்து நில்லுங்கள்!"—



என்று வினைகளை நோக்கி அறை கூவினாள். "காட்டிலும் மேட்டிலும் நீரிலும் நிலத்திலும் வேற்றுமையின்றிப் பொழிந்து எல்லா உயிர்களையும் குளிர்விக்கும் கருமுகில்களின் தன்மைமாறாத கருத்தாத கருணையை உடைய பெருமானே! அடியேன் மீது அல்லல்களுக்கு எனது முன்னைய வல் வினையையே காரணமாகக் காட்டிவிட்டு நீ ஒதுங்கி நின்றுவிடலாமா? உனது பெருங் கருணைக்குப் பொருந்துமோ? உனது குளிர் விழிகளிலிருந்து புறப்படும் அருள் அலைகளை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி, எத்தகைய வல் வினைக்கேனும் உண்டோ?"—என்று உன்னை நோக்கி முறையிட்டாள். முன்பு, இவ்வுலகைப் படைத்து, எல்லா உயிர்களையும் ஊழிக்காலத்தில் வயிற்றில் வைத்துக் காத்து, பின்பு இருளில் கிடைத்த அவ்வுயிர்களை வெளிப்படுத்தி, எல்லாப் பொருள்களின் மேலும் திருவடிகளை வைத்து அளந்து மகிழ்ந்து நின்ற முழுமுதற் தலைவனாகிய முகுந்தனே! இவளை இவ்வாறு தவிக்கவிட்டு பிணித்து நிற்கும் வல்வினையையே வெல்லும்படி விட்டுவிடப் போகிறாயா? அல்லது, உனது திருவருளின் பெருவலிமை உலகு உணரும்படி, இவளை அவ்வினை வலையினின்றும் விடுவித்து மகிழ் வூட்டப் போகிறாயா? உன்னையன்றி வேறு எத்துணையையும் உணராத இவள் விஷயத்தில், என்னதான் செய்ய எண்ணியிருக்கிறாய்?

மெல்லியலார்க்கு நல்லுயிர் போன்ற வெட்கத்தையும் இவள் துறந்து விட்டாள்; தாயொருத்தி அருகிலிருக்கிறேனே யென்றும் நினையாமல், நாணத்தையும் விட்டு விட்டு, என்னெதிரிலேயே உனது வடி வழகைப் புகழத் தொடங்கிவிட்டாள். நானாகக் கேட்பினும் மறைக்க வேண்டியவற் றைக்கூட, தானாகவே வெளியிடத் தொடங்கிவிட்டாள். உனது வடிவழ கையும் ஸௌலப்யத்தையும் நெஞ்சில் தேக்கிக்கொண்டு, அந் நெஞ்சில் பொங்கித் ததும்பும் காதல் முழுதும் வெளிப்படும்படி, உனது திரு மேனியை நினைவூட்டும் நீல வானத்தை நிமிர்ந்து நோக்கி, 'ஏ! மணி வண்ணனே!'—என்று ஓலமிட்டழைத்தாள். அந்த ஆர்த்தத்வனி கேட்ட பின்னும், நீல வானிலேயே தங்கி நிற்கக் கூடிய அவ்வளவு கடிய மனம் உடையவனாக நீ இருந்துவிடமாட்டாயென்றும், அன்று 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்ட ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்குத் திருவருள் புரிய விரைந்து வந்து தோன்றியதேபோல் இப்பொழுதும் தன் முன் வந்தருள்வாயென் றும் எண்ணி, நீல வானத்தையே நெடுநேரம் பார்த்து நின்றாள். அப்பொழுதுங்கூட, நீ வந்தபாடில்லை; அதன் பயனாக, இவள் அறிவு கலங் கிப் பெரிதும் மயங்கி நின்றாள். "பெருமிடுக்குடைய வல்லரக்கர்களின் உயிர்களையெல்லாம் உண்ட வெற்றிக்கணைகளை ஏந்தி நின்ற ஒப்புயர்வற்ற தனிப்பெருவீரனே!"—என்றாள். உடனே, உனது சீரிய வீரச் செயல் களெல்லாம், இவளது மனக்கண் முன்பு ஒன்றின் பின் ஒன்றாய்த் தோன்ற

லாயின. அத்தகைய சிரிய வீர நாயகனாகிய நீ, தனது துன்பங்களைத் தொலைக்க வந்தபாடில்லையே என்பதை எண்ணி எண்ணி, உள்ளம் பெரிதும் உருகி நின்றாள். "கண்கள் காண்டற்கு அரியனாய்க் கருத்துக்கு நன்றும் எளியனாய் நிற்கும் நீ, சுய-முயற்சியினால் உன்னைக் காண முயல்பவர்க்கு அரியவனே! எனினும், 'உன் அருளாலே உன் தாள் வணங்க' விரும்பி நிற்போர்க்கு நீ என்றும் எளியவனையன்றோ? உனது வடிவழகை அநுபவிக்க, உனது திருவருள் துணை ஒன்றையே இன்றும் நான் நம்பி நிற்கின்றேன். காட்டிலிருக்க நாகரிகர்களுக்கும் காட்டில் திரிந்த வநவாஸிகளுக்கும் தாமே தனது வடிவழகைக் காட்டிக் கொடுத்தருளிய காகுத்த வள்ளலல்லவா நீ? நவரத்னமாலையும் பொன்னிற உடையும் பூண்டு, கோபிகைகளாகிய பெண்மயில்களின் முன்னே, மழை முகில் போலும் தோன்றி வடிவழகைக் காட்டி மயக்கி நின்ற கள்ளபிரானன்றோ நீ? அவ்வவதார காலங்களிலே அருகிலிருந்து அநுபவிக்கப் பெறாமற் போன நான், ஒரு பெரும் பாவியே; ஆயினும், அத்தகைய துர்ப்பாக்கியவதியான என்னைப் போன்ற எளியோர்க்கு அக் குறை தீர்ந்து வடிவழகைக் காட்டி மகிழ்விப்பதற்கன்றோ, திருவரங்கப் பெரு நகரில் நீ கருடக் கொடி கட்டிக்கொண்டு படுத்துக் கிடப்பது! உனது திருக்கோயில் மதிள்களில் அசைந்தாடிக்கொண்டிருக்கும் கருடக்கொடிகள், "பெரிய பெருமாளது வடிவழகை அநுபவிக்க வருவோர் எல்லோரும், வாருங்கோள்! வாருங்கோள்;"—என்று கைகளை நீட்டி அழைப்பதுபோலல்லவா அசைந்தாடிக்கொண்டிருக்கின்றன!"—என்று பேசினாள் இவள். இவளது மனத்தில் இவ்வளவு மையலேற்றி மயக்க, நீ இவளுக்கு இட்ட மாய மந்திரந்தான் என்னவோ?

சில சமயங்களில், இவள் உடல் இவள் வசப்பட்டிருக்கவில்லை; அப்போது, இவளது கைகளையும் கால்களையும் இவளது தோழிகள் எப்படிக் கிடத்தி வைத்திருந்தனரோ, அப்படியே அசைவற்றுக்கிடந்தன அவை. நெடும்போது அப்படிக்கிடந்த பின், அணையும் விளக்கு எழுந்து எரிந்து அணைவதே போல், காதற்பித்தப்பெருக்கினாலே சுய உணர்வின்றி எழுந்திருந்து சற்றுநேரம் உலாவிக்கொண்டிருந்தாள். பின்னர், திடீரென்று மோகித்து விழுந்து மயங்கிக்கிடந்தாள். அந்நிலையிலுங்கூட, இவளது மணிக் கைகள் தமது பழைய பழக்கத்தால் இவளை அறியாமலே அஞ்சலி செய்வன ஆயின. அந்நிலையைக் கண்ட பின்னுங்கூட, நீ இவளிடம் மனம் இரங்கி இவள் முன் வந்து தோன்றவில்லை. அதன் பயனாக, இவள், 'ஐயோ காதற்பாதை தான், எவ்வளவு கடினமாயிருக்கிறது!" என்று வெறுத்துரைத்து மூர்ச்சித்து விழுந்தாள். "பல உயிர்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு ஒன்றோடொன்று பிணங்காதபடி காக்கும் நீலக் கடலையொத்த



நீ, என் விஷயத்தில் கடினனானாய்! அடியவர்களுக்கு நேரும் இடர்களைக் களைவதிலேயே ஆர்வம் மிகுந்து என்றும் சுழன்று கொண்டிருக்கும் அருளாழி ஏந்திய வீரக் கையனே! கையும் திருவாழியுமான அவ்வீரத் திருக்கோலத்துடனே என் முன் வா! வா! வா! வந்துவிடு! வந்துவிடு!! என்று போர்வைக்குள் கதறிக் கதறிப் புலம்பிவிட்டு மீண்டும் மயங்கி விழுந்து விட்டாள். பெரிய பிராட்டியாரின் மனத்தையும் நெக்குருகித் துடிக்கச் செய்யும் நிட்டூரனே! இவள் விஷயத்தில், இன்னும் என்ன செய்யத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாய்?

அந்தி வேளையிலே, இரணியனது உடலை இருகூறாகப் பிளந்தருளிய பெருமானே! ப்ரயோஜநாந்தர பரர்களும் அபிமானிகளுமான அமரர்களுக்காக, அலைகடலைக் கடைந்து, இன்னமுதத்தை அமரர்களுக்கு அளித்து அவ்வமுதொடு தோன்றிய பெண்ணமுதத்தைத் தனது திருமார்பில் அணிந்து, மெய்யன்பர்களின் நெஞ்சுக்கும் நாவுக்கும் என்றும் திகட்டாத 'ஆராத அருளமுது'வாய் விளங்கும் பெருமானே! இவள், நீ இவளுடன் கூடிக் கொஞ்சிக் குலவிக்கொண்டிருந்த பழைய நாட்களையும், உனது ஸௌந்தர்ய ஸௌலப்யாதி கல்யாண குணங்களையும் நெடுநேரம் சிந்தித்துக் கிடந்தாள்; அப்போதே உன்னைக் காணப் பெறாமையாலே, பழைய அநுபவங்களைச் சிந்தித்தபடியே மயங்கி விழுந்தாள். திடீரென்று எழுந்து, எக்காரணமுமின்றியே, ஆசைப்பட்ட அபேக்ஷிதத்தை அடைந்து விட்டவள் போல், மனம் தேறினாள். சரமதசையில் பிறக்கும் தெளிவு அஞ்சுவதற் கிடமாதலின் அதைக் கண்டு எனது நெஞ்சு பெரிதும் அஞ்சிக் கலங்கியது. உன்னைத் தொழுது தொழுது பழக்கப்பட்டு விட்ட இவளது தளிர் மணிக் கைகள், இவளுக்கிருந்த மற்ற அவஸ்தைகளால் பாதிக்கப்படாமல், இவளை அறியாமலே தாம் மட்டும் அடிக்கடி இடையிடையே அஞ்சலி செய்து கொண்டிருந்தன! திருவரங்கச் செல்வனே! மெய்யன்பர்களின் ஒரு அஞ்சலிக்காக, நீ எதைச் செய்யவும் எதைக் கொடுக்கவும் துணிந்து விடுபவனன்றோ? அங்ஙனமிருந்தும், இவளது அஞ்சலியைக் கண்டும் இரங்காதிருக்க, உனது திருவுள்ளம் எப்படித்தான் துணிந்ததோ? உனது திருவுள்ளம் இரங்காதொழியினும், இவளது மனம் இவள் முன்னே உனது மாயத் தோற்றத்தைத் தோற்றுவித்தது. உடனே, இவளது வாய், இவளை அறியாமலே, 'தாமரைக் கண்ணனே!' 'கோலக் கனி வாய்ப் பெருமானே!' 'முகவொளி திகழ முறுவல் செய்து நிற்கும் முகில் வண்ணா!' 'புரைப்பிலாத பரம்பரனே!' 'பொய்யிலாத பரஞ்சுடரே!'—என்று ஒரு வந்தியைப்போல் துதி பாடத் தொடங்கிவிட்டது. இவளது உள்ளம் குளிர்ந்த அவ்வேளையிலே, இவளது கண்களும் குளிர்ந்து ஆனந்தக் கண்ணீரைச் சொரிவன ஆயின; இவளது வாயோ; 'வா!' 'வா!' 'வா!'—என்று

கூவிக்கொண்டேயிருந்தது. எதிரில் தோன்றிநின்ற உனது மாய மோகனத் தோற்றம் மறையவே, இவள் மீண்டும் மயங்கி விழுந்தாள்.

"என் பக்கலிலே பேரன்பு காட்டி, எனது நெஞ்சை மயக்கிக் கவர்ந்து கொண்ட பெருமானே! உனது 'உயர்வற உயர்நல'த்தை நினையாதே, தாழ நின்று, பணிமொழிகளைச் சொல்லி, பண்ணுதன பண்ணி, என்னுடன் கலந்து உறவாடி, எனது எளிய நெஞ்சை மயக்கி உருக்கி அடிமை கொண்ட பெருமா மாயப் பெருமானே! உனது செங்கனிவாயைக் காட்டி, எனது நெஞ்சை நிலை குலைப்பித்து, 'நான் என்றும் உன்னவனன்றோ?'—என்று கொஞ்சிக் கூறி, மலர் மறையும்போது எங்குமொக்க ஒரு புத்தழகு தோன்றுவதுபோல், எங்குமொக்க ஒரு தனிப் பொழுது தோன்றும்படி புன்னகை பூத்து நின்ற 'மாசறு சோதி என் செய்ய வாய் மணிக்குன்றே!' முன்பு, அச் சோலை முழுவதையும் குளிர்விக்க உனது மோகனச் சிரிப்பைப்போல், இன்றும் ஊர் முழுவதையும் குளிர்விக்கப் பாய்ந்து பாயும் பொங்குநீர்க் காவிரி சூழ்ந்த பூம்பொழில் அரங்கவாணனே! பார்த்த அளவிலேயே எதிரிகள் நடுங்கி ஒடுங்கும்படி பயமுறுத்தி நிற்கும் வாள்-தண்டு-சங்கு-சக்கரம்-வில் எனும் ஐம்படைகளையும் ஏந்தி நிற்கும் வீர நாயகனே! அன்பர்களைக் காப்பதன் பொருட்டே நீ ஏந்தி நிற்கும் அவ் வீரப்படைகள், என்னைத் துன்புறுத்தும் விரோதிகளை ஒழிக்க வந்து உதவாததோடு, எனது மனத்தில் காதல் தீயையும் வளர்த்து எரித்து நிற்பதும் முறைதானோ? எந்த கைய பகைவர்களுமே இல்லாத திரு நாட்டிலே, அலங்காரார்த்தமாகவே அந்த ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களை ஏந்தி நின்று நித்யஸூரிகளை மகிழ்வித்து நிற்கும் நீ, விரோதிகளால் தாக்குண்டு கலங்கி நிற்கும் அபலையாகிய எளியேனிடம் அவ்வாழ்வார்களை அனுப்பி வைத்து எனது பகைவர்களை ஒழிப்பித்து அவ்வாழ்வார்களின் மஹா வீரத்தை இம் மண்ணுலகுக்கு உணர்த்தியருளவேண்டாமோ?"—என்று முறையிட்டு நின்றாள் இவள். இவ்வாறு புலம்பி அடிக்கடி தரையில் விழுந்து கிடக்கும் இவளிடம் திருவுள்ளம் இரங்காமல், நீ மட்டும் உனது ஸ்பர்ச விசேஷத்தால் விரிந்து குளிர்ந்த பணங்களையுடைய திருவனந்தாழ்வானாகிய மெல்லிய பள்ளியிலே ஆனந்தமாகச் சாய்ந்து கிடப்பதும் முறைதானோ? இவளும் நீயுமான சேர்த்தியழகைக் கண் குளிரக்காண விரும்பி நிற்கும் எனக்கு, அச்சேர்த்தியைக் காணமுடியாமல் தடுத்து நிற்பதும் எனது கொடிய தீவினைப் பயனே போலும்! இனி, இவள் துன்பத்தை நீக்க நான் என்ன செய்யக்கூடும் என்பதையேனும், நீ கருணை கூர்ந்து சொல்லவல்லாயோ?

(தொடரும்)



ப்ரக்ருஷ்ட—குணம்!—உம்முடைய உயர்ந்த குணங்களோடு கூடியிருந்து நீர் ரக்ஷகராகிறீர். அதனால் உமக்கு எப்படி அத்விதீயத்வத்திற்குக் குறைவில்லையோ, அப்படியே தேவிமாரோடுகூடி ரக்ஷகராகுலும் பாஹ்ய ஸஹாயாபேக்ஷை யற்றவர் என்று சொல்லக் குறையில்லை. ஸ்ரீதேவியே கருணாதத்வம், பூதேவி க்ஷமாதத்வம். இதெல்லாம் தயாசதகத்தில் கூறப்பட்டிருக்கிறது. உம் தேவிமார்தான் உம்முடைய தயை முதலிய கல்யாண குணங்களை ஸந்துக்ஷணம் செய்பவர். त्वत्करुणानिरीक्षण-सुधासन्धुक्षणात् (த்வத்- கருணா - நிரீக்ஷண-ஸுதா - ஸந்துக்ஷணாத்) என்பதைக் காட்ட 'ஸந்துக்ஷித:' என்கிறார்.

'பிராட்டி உம்முடைய ப்ரபை உம் ஶக்திபோல் உமக்கு அநந்யை' என்பதை ஸ்வ-ஶக்த்யா என்று காட்டுகிறார். இந்தச் சேர்த்தியைத்தானே மநுமுதலானோர் பூஜித்தனர். முதலில் மநுவும் பின்பு மைதிலீரமணனாக அக்குலத்தில் மனுஷ்யனாகவே அவதரித்து நீரும் உம்மையே பூஜித்தீர். ஆகையால் மனுஷ்யராகிய எங்களுக்கு நீர் ஸ்வந்தமான பெருமாள். 'மநுவிடமிருந்து பிறந்தவர் மனுஷ்யர், மாநவர்' என்றார் பாணினி. பெருமான் ஸூர்யனுக்கும், ஸூர்யன் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுவுக்கும் உபதேசித்தார்கள் என்று உபதேச பரம்பரை. இங்கு மநுப்ரப்ருதி என்பதால், அந்த ஆசார்ய பரம்பரையை ஸூசிப்பித்து, ஆழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், பெரிய நம்பிகள், எம்பெருமானார், ஆழ்வான், பட்டர் முதலிய பெரியோரையும் ஸூசிப்பிக்கிறார். 24

भुजङ्गमविहङ्गमप्रवरसैन्यनाथाः प्रभो !
तथैव कुमुदादयो नगरगोपुरद्वारपाः ।*
अचिन्त्यबलविक्रमास्त्वमिव रङ्गसंरक्षकाः
'स्थितं त्व' इति बिभ्रतो [illegible] ॥ २५ ॥

புஜங்கம-விஹங்கம-ப்ரவர-ஸைந்யநாதா: ப்ரபோ!
ததைவ குமுதாதயோ நகர-கோபுர-த்வார-பா: ।
அசிந்த்ய-பல-விக்ரமா: த்வமிவ ரங்கஸம்ரக்ஷகா:
'ஸ்திதம் த்வ' இதி [illegible] ॥ 25 ॥

[illegible]

ப்ரபோ!—ப்ரபுவே!
அசிந்த்ய-பல-விக்ரமா:—எண்ணுதற்கரிய பல பராக்ரமங்களை யுடையவர்களும்,
த்வமிவ—உம்மைப்போல
ரங்க-ஸமரக்ஷகா:—அரங்கத்தைக் காக்க வேண்டியவர்களும்,
புஜங்கம-விஹங்கம-ப்ரவர-ஸைந்ய நாதா:—ஸர்பச்ரேஷ்டன் (சேஷன்), பக்ஷிராஜன், ஸேனாநாதன் ஆகியவர்களும்,
ததைவ—அப்படியே
நகர-கோபுர-த்வார-பா:—நகரம், கோபுரம், த்வாரம் இவற்றைக் காப்பவர்களும்,
ஜிதம்தே—'உனக்கு ஜயம் வருக'
இதி வாதிந:—என்று சொல்லிக்கொண்டு
ஜகதநுக்ரஹே—எங்களை 'அநுக்ரஹிப்பதில்
ஜாக்ரது—விழித்திருக்கவேணும்.

பள்ளிகொண்டிருக்கும் எம்மை தாஸரான நீங்கள் எழுப்பலாமோ? 'பயத்தினால் இப்படிச் செய்கிறோம்' என்றால் உங்களைக் காக்க நம் காவல்காரர்களில்லையோ என்று சங்கைவர, அவர்கள் விழித்து இருந்து தங்கள் சேஷத்வத்திற்கேற்றபடி 'ஜிதம்தே' என்று மங்களம் பாடினால் போதும்; அவர்களும் தூங்குகிறார்களோ என்றுதான் கவலை.

புஜங்கம—ஸ்ரீ சங்கராசாரியரும் இவ்வரங்கத்தை **इदं हि रङ्गं** (இதம் ஹி ரங்கம்) என்கிற சுலோகத்தையிட்டு தினமும் மங்களாசாஸனம் செய்தார். "**पाणौ रथाङ्गं शयने भुजङ्गं**" (பாணௌ ரதாங்கம் சயநே புஜங்கம்) என்று கையார் சக்கரத்தையும் நாகசயனத்தையும் கீர்த்தனம் செய்வர். **भुजङ्गमाङ्गशायिने विहङ्गमाङ्गगामिने तुरङ्गमाङ्गभेदिने नमो रथाङ्गधारिणे ॥** என்று ஸர்வஜ்ஞமுனியின் ஸம்க்ஷேபசாரீரகத்தின் முடிவுமங்களம். அவர் கிரந்தத்தை ஸ்ரீ சங்கரர் பார்த்துப் புகழ்ந்தாரென்பர்.

புஜங்கமப்ரவர—"ஆங்கு ஆரவாரமது கேட்டு" என்றபடி சீற்றம் வேண்டாம் - வாதிந: என்பதால் 'ஜிதம்தே' என்று நாக்கினால் உச்சரித்தால் போதும்.

ஸைந்யநாத—இவர் 'விஷ்வக்ஸேனர்'—இவர் இல்லாத இடமில்லை; ஸேனைத்தலைவரும் ஸேனைவீரரும் தூங்குவரோ?

நகர-கோபுர-த்வார-பா:—நகரவாசல், கோபுரவாசல், ஸந்நிதிவாசல் எங்கும் காவல். இந்தக் காவலரெல்லாம் தூங்கவேணுமோ? ஸநத்குமாரர் முதலான குமாரர்களைத் தடுத்த காவல்காரர்கள் சத்ருக்களைத் தடுக்க வேண்டாவோ? 25.

विधिस्त्रिपुरमर्दनस्त्रिदशपुङ्गवः पावको
यमप्रभृतयोऽपि यद्विमतरक्षणे न क्षमाः ।
रिरक्षिषति यत्र च प्रतिभयं न किञ्चित् क्वचित्
सः नः प्रतिभटान् प्रभो ! शमय रङ्गधामादिषु ॥ २६ ॥



54712

விதிஸ்-த்ரிபுரமர்த்தந: த்ரிதசபுங்கவ: பாவகோ
யம-ப்ரப்ருதயோபி யத்-விமத-ரக்ஷணே ந க்ஷமா:
ரிரக்ஷிஷதி யத்ர ச ப்ரதிபயம் ந கிஞ்சித் க்வசித்
ஸந: ப்ரதிபடாந் ப்ரபோ! சமய ரங்க-தாமாதிஷு ॥ 26 ॥

விதி:—ப்ரஹ்மாவும்,
த்ரிபுர-மர்த்தந:—மூன்று புரங்களை எரித்தவரும்,
த்ரிதச-புங்கவ:—தேவர்கள் தலைவனான இந்திரனும்,
பாவக:—அக்கினியும்,
யம-ப்ரப்ருதய: அபி—யமன் முதலானோரும்
யத்விமத-ரக்ஷணே—எந்த உம் விரோதியை ரக்ஷிப்பதில்
நக்ஷமா:—ஸமர்த்தரல்லவோ,
யத்ர—எந்த நீர்
ரிரக்ஷிஷதி—ரக்ஷிக்க இஷ்டப்பட்டபோது
க்வசித்-ஓரிடத்திலும்
கிஞ்சித்—ஒன்றும் (எதுவும்)
ப்ரதிபயம் ந—பயங்கரமாக கொஞ்சமேனும் ஆகாதோ,
ஸ:—அந்த நீர்
ரங்கதாமாதிஷு—அரங்கம் முதலிய திவ்ய தேசங்களில்
ந:—எங்களுடைய
ப்ரதிபடாந்—எதிர்படரை
சமய—அடக்கவேணும்.

உம் திருமேனியைக் காட்டிலும் எங்களுக்குப் பிரியமான வஸ்து இல்லை; அதற்குக் கெடுதலைச் செய்பவர்கள் எங்கள் சத்ருக்கள்; எங்களுடைய சத்ருக்கள் உம் சத்ருக்களாகவேணும். "என் பஞ்சப்ராணரான பாண்டவர்களை நீ த்வேஷிக்கிறாய்; ஆகையால் நீ எனக்கு த்வேஷி" என்றார் ஸ்ரீ கிருஷ்ணன். இப்படி உமக்கு விரோதியாயிருப்பவனை நீர் கொல்ல நினைத்தால் ப்ரஹ்மா, ருத்ரன், இந்த்ரன், யமன் முதலான ஒருவரும் அவனை ரக்ஷிக்க முடியாது. ஆகையால் எங்கள் ப்ரதிபடரை அடக்கவேண்டும்.

விதி:—ஊருக்கெல்லாம் விதிப்பவர் ப்ரஹ்மா; அவருக்கும் விதிப்பவர் நீர்; ஸம்ஹரிப்பவனுக்கும் ஸம்ஹாரகர்; ஸுரநாயகனையும் நியமிப்பவர்; அக்னியைக் கொளுத்துபவர், ஜல ரூபியாயிருந்து ஸம்ஹரிப்பவர்; யமனுக்கும் யமன்' என்று யமனே சொன்னான். ராவணனிடம் **ब्रह्मा स्वयंभूः**, என்று திருவடி பாடிய சுலோகமும் இங்கே கொள்ளப்பட்டது. சிறிய திருவடியும் கோயிலில் காவலிருக்கிறார். முன் சுலோகத்தில் பெரிய திருவடியினுடையதுபோல இங்கு சிறிய திருவடியின் ஜிதந்தே,'

ப்ரதிபயம் ந கிஞ்சித்—'**कदाचन**', '**कुतश्चन**' (கதாசந, குதஶ்சந) பயமில்லையென்றது சுருதி; 'க்வசந' என்று முன்பு சேர்த்தார்; இங்கு 'கிஞ்சித்' என்கிறார். 'ஒன்றும் பயத்தை உண்டாக்கமாட்டாது' என்று ஒரு பொருள்; 'கிஞ்சித்தும் (துளிக்கூட) பயமில்லை' என்னவுமாம்.

*நஃ ப்ரதிபடாந்—யமனும் யமபடர்களும் எங்களைக் கண்டு நடுங்க வேண்டியிருக்க, இம் மனுஷ்ய படர்களைக் கண்டு நாங்கள் நடுங்கும்படி நேரலாமோ? 26

स कैटभतमोरविः मधुपरागजञ्झामरुत्
हिरण्यगिरिदारणः त्रुटितकालनेमिद्रुमः ।
किमत्र बहुना ? भजद्भवपयोधिमुष्टिंधयः
त्रिविक्रम ! भवत्क्रमः क्षिपतु मङ्क्षु रङ्गद्विषः ॥ २७ ॥

ஸ கைடப-தமோ-ரவிஃ மது-பராக-ஜஞ்ஜா-மருத்
ஹிரண்ய-கிரி-தாரணஃ த்ருடித-காலநேமி-த்ருமஃ।
கிமத்ர பஹுநா ? பஜத்-பவ-பயோதி-முஷ்டிம்-தயஃ
த்ரிவிக்ரம! பவத்-க்ரமஃ க்ஷிபது மங்க்ஷு ரங்க-த்விஷ: ॥ 27 ॥

த்ரிவிக்ரம—த்ரிவிக்ரமனே !
கைடப-தமோ-ரவி:—கைடபன் என்னும் இருட்டுக்கு ஸூர்யன் போன்றதும்,
மது-பராக-ஜஞ்ஜா-மருத்—மது என்னும் அஸுரனை தூசிக்குப் பெருங்காற்றுப் போன்றதும்,
ஹிரண்ய-கிரி-தாரண:—ஹிரண்யன் என்னும் மலையைப் பிளப்பதும்,
த்ருடித-காலநேமி-த்ரும:—முறிக்கப்பட்ட காலநேமி என்னும் வ்ருக்ஷத்தையுடையதும்,
அத்ர—இவ்விஷயத்தில்
கிம்பஹுநா—அதிகம்சொல்லுவானேன் (சுருக்கமாக)
பஜத்-பவ-பயோதி-முஷ்டிம்தய:—ஆச்ரிதருடைய ஸம்சார ஸமுத்ரத்தை ஒரு சிறங்கை ஜலத்தைப்போல் உறிஞ்சிவிடுவதுமான,
ஸ;—அந்த (அவ்விதமான)
பவத்-க்ரம:—உம் பராக்ரமம்
மங்க்ஷு—சீக்கிரத்தில்
ரங்கத்விஷ:—ரங்க க்ஷேத்ரத்தின் விரோதிகளை
க்ஷிபது—நிரஸநம் செய்யட்டும்

ஸங்கல்பஸூர்யோதயம் இரண்டாமங்கத்திலும் இந்தச்சுலோகமுளது. உம் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தவர் அத்திருவடியாலேயே அபயம் பெறுவது உசிதமாகையால், உம் உலகளந்த திருவடி பலத்தால் எங்கள் சத்ருக்கள் அடங்கி நாங்கள் அபயம் பெறவேணும். 'லோகவிக்ராந்தமான உம் சரணங்களை ஶரணம் பற்றினோம்'.

முன்பு 'மருத்-தரணி-பாவக' என்றார்; இங்கு ஸூர்ய ஸூர்யனை நீர் தான் ஸூர்யன், காற்றுக்கும் சண்டமாருதமான நீர் தான் பெருங்காற்று என்கிறார். முன் இரண்டாம் சுலோகத்தில் ஜகத்தின் பாபங்களையெல்லாம் உண்ணும் பெருவாயன் என்றார்; இங்கு பாபக்கடலை உறிஞ்சுபவன் என்கிறார். தொடங்கியதுபோல முடிக்கிறார். எங்கள் பாபக்கடலை உம் திருவடி



யல்லால் மற்றொன்று கடக்கவல்லதல்ல; ஆயுதங்களும் வேண்டாம், யுத்தமும் வேண்டாம், உம் திருவடி பலமே போதும்.

ஹிரண்ய-கிரி-தாரண:—மலையைக் கிழிக்க நகங்களே ஆயுதம். 27.

यतिप्रवरभारतीरसभरेण नीतं वयः
प्रफुल्लपलितं शिरः परमिह क्षमं प्रार्थये ।
निरस्तरिपुसंभवे क्वचन रङ्गमुख्ये विभो !
परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय ॥ २८ ॥

யதி-ப்ரவர-பாரதீ-ரஸ-பரேண நீதம் வயஃ
ப்ரபுல்ல-பலிதம் ஶிரஃ பரமிஹ க்ஷமம் ப்ரார்த்தயே।
நிரஸ்த-ரிபு-ஸம்பவே க்வசந ரங்க-முக்யே விபோ!
பரஸ்பர-ஹிதைஷிணும் பரிஸரேஷு மாம் வர்த்தய ॥ 28 ॥

விபோ—ப்ரபுவே!
யதி-ப்ரவர-பாரதீ-ரஸ-பரேண—யதிராஜனுடைய ஸார தம ஸரஸ்வதீரஸாநுபவகனமாகவே
வய:—யௌவனவயதானது
நீதம்—சென்றது.
ஶிர:—தலை
ப்ரபுல்ல பலிதம்—மலர்ந்த புஷ்பம் போல் வெளுத்துவிட்டது.
பரம்—இனி
இஹ—இவ்வுலகில்
க்ஷமம்—(எனக்குத்) தக்கதை
ப்ரார்த்தயே—வேண்டுகிறேன்.
நிரஸ்த-ரிபு ஸம்பவே—சத்ருக்கள் இருக்கலாம் என்று ஸந்தேஹிக்கக் கூட அவச்யமில்லாமல் நிர்ப்பயமான
ரங்க-முக்யே—அரங்கம் முதலிய க்ஷேத்ரங்களில்
பரஸ்பர ஹிதைஷிணும்—ஒருவருக்கொருவர் ஹிதத்தையே விரும்பி ஸ்நேஹித்திருப்பவரின்
பரிஸரேஷு—அருகில்
மாம்—அடியேனை
வர்த்தய—இருக்கச்செய்யவேணும்.

அரங்கம் மட்டுமல்ல; நம்திவ்ய தேசங்களெல்லாம் சத்ருஹிம்ஸை இல்லாமல் இருக்கவேணும். கச்சியைவிட்டு அரங்கம் வந்தனக்கு ஸ்ரீபாஷ்யாதிப்ரவசநம் செய்வதிலேயே நீண்டகாலம் இன்பமாய் வயதெல்லாம் சென்றது; பரஸ்பரஹிதைஷிகளும் பரமபாகவதர்களுமான பெரியோர்களுடைய ஸத்ஸங்காஸமும் அனுபவிக்கப்பட்டது. இந்த ரஸங்களுக்கு விச்சேதமில்லாமல் ஆயுளின் மிகுதியும் அரங்கத்திலேயே கழியவேணும்.

யதி-ப்ரவர-பாரதீ-ரஸ-பரேண—ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் எமக்கு நித்யம். प्रपद्ये प्रणवाकारं भाष्यं रङ्गमिवापरं (ப்ரபத்யே ப்ரணவாகாரம் பாஷ்யம் ரங்கமிவாபரம்). दृष्टं श्रीरङ्गधामनि (த்ருஷ்டம் ஸ்ரீரங்கதாமநி) என்று

சொல்லாமல் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் கூடுமோ? அரங்கத்திற்கு ஆபத்து வந்தால் பாஷ்யகாலக்ஷேபம் இன்பமாக எப்படி நடக்கும்? நிர்ப்பரராயினும் பாஷ்யத்தின் ரஸபரம் அளவேயில்லை. யதிராஜனுடைய கத்யங்களை தினமும் அநுஸந்தித்து ரஸத்தில் முழுகுகிறோம். இங்கேயே ஸ்ரீ ரங்கத்தில் ஸுகமாக வஸிப்பாய் என்று தேவரீர் நியமனத்தைச்சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். யதி ராஜன் திருநாமத்தைச் சொல்லி, அவர் ஆக்ஞையை விருத்தியும் அபிவிருத்தியும் செய்யவேண்டுமென்றும்; யதிராஜனுடைய அரங்கம வாழவேண்டுமென்றும் பிராத்தித்தால் பெருமாள் மறுக்க மாட்டார் என்று முடிவில் அதைப் பிரார்த்திக்கிறார். ஸுந்தர பாஹுஸ்தவத்தில் முடிவில் ஆழ்வானும் யதிராஜனோடு அரங்கத்தில் வஸிப்பதைப் பிரார்ததித்தார். 28

प्रबुद्धगुरुवीक्षणप्रथितवेङ्कटेशोद्भवां
इमां अभयसिद्धये पठत रङ्गभर्तुः स्तुतिम् ।
भयं त्यजत भद्रमित्यभिदधत् स वः केशवः
स्वयं घनघृणानिधिः गुणगणेन गोपायति ॥ २९ ॥

ப்ரபுத்த-குரு-வீக்ஷண-ப்ரதித-வேங்கடேஶோத்பவாம்
இமாம் அபயஸித்தயே படத ரங்க-பர்த்து: ஸ்துதிம்।
பயம் த்யஜத பத்ரமித்யபி-ததத் ஸ வ: கேஶவ:
ஸ்வயம் கன-க்ருணா-நிதி: குண-கணேன கோபாயதி ॥ 29 ॥

ப்ரபுத்த—சிறந்த ஞானமுள்ள
குரு—ஆசார்யனுடைய
வீக்ஷண—கடாக்ஷத்தால்
ப்ரதித—யஶஸ்ஸைப்பெற்ற
வேங்கடேச—வெங்கடேசரிடமிருந்து
உத்பவாம்—தோன்றிய
இமாம்—இந்த
ஸ்துதிம்—ஸ்தோத்ர்த்தை
ரங்கபர்த்து:—ரங்கப்பிரபுவின்
அபயஸித்தயே—அபயம் ஸித்திப்பதற்காக (கோவில் நிரபாயமாயிருப்பதற்காக)
படத—படியுங்கோள்
பயம்—'பயத்தை
த்யஜத—விட்டுவிடுங்கள் (அஞ்சல், அஞ்சல்).
வ:—உங்களுக்கு
பத்ரம்—சுபம் (உண்டாகட்டும்)
இதி—என்று
அபிதத்—சொல்லிக்கொண்டு
கநக்ருணா நிதி:—கருணாநிதியான
ஸ:—அந்த
கேஶவ:—(ப்ரஹ்ம ஈசாதிகளுக்குக் காரணமான) கேசவன்
குணகணேன—தம கல்யாண குணங்களால்
கோபாயதி—ரக்ஷிப்பான்.



இந்த ஸ்துதி ஸ்ரீ ரங்க பர்த்தாவான ரங்கநாதன் விஷயமென்றும், இதன் ப்ரயோஜனம் அரங்கத்திற்கும் ரங்க பர்த்தாவுக்கும் அபயஸித்தியே என்றும் விஷயம் ப்ரயோஜனம் இரண்டிலும் சேரவேண்டும் என்பதற்காகவே 'ரங்க பர்த்து:' என்னும் பதம் 'அபயஸித்தயே' 'ஸ்துதிம்' என்ற இரண்டுக்கும் நடுவில் இருக்கிறது. அவன் விஷயமான நமது அச்சம் தீருவதும் அவனைத் துதித்தேதான் ஸித்திக்கவேணும்.

இந்தத் துதி தோன்றினது 'கவிஸிம்ஹம்' 'வேதாந்தாசார்யர்' என்று ப்ரஸித்தி பெற்ற வேங்கடேசனிடமிருந்து; அந்தப் பிரஸித்திக்குக் காரணம் ப்ரபுத்தர்களான (ஸர்வஜ்ஞர்களான) ஆசார்யர்களின் கடாக்ஷம்.

பயம் த்யஜத பத்ரம்—அபயமுத்ரை காட்டுவதோடு மட்டும் நிற்காமல், அஞ்சல் என்று பேசுவார். பாலகாண்டத்தில் அஶ்வமேதத்தில் ப்ரஹ்மா முதலிய தேவர்கள் துதிக்கையில், भयं त्यजत भद्रं वः (பயம் த்யஜத, பத்ரம் வ:) என்று அபயமளித்த வார்த்தையையே இங்கே அமைக்கிறார்.

குணகணேந கோபாயதி—அவருடைய கல்யாண குணங்களின் கூட்டங்களின் அனுபவமே உங்களுக்குப் பிரயோஜனம்; அந்த குணங்களை அனுபவிக்கத்தருவதே எங்களுக்கும் ரக்ஷணம்' सोऽश्नुते सर्वान् कामान् - (ஸோ ஶ்நுதே ஸர்வாந் காமாந்). ஸ்வயம் அபிதத்—யதிராஜனுடைய திருநாமத்தையும் ஸரஸ்வதீரஸத்தையும் பேசவே, பெருமாளும் வாய்திறந்து பேசுவார். 'பேருளாளர்' போல் சோதி வாய்திறந்து பேசுவார் என்பதைக் காட்ட கனக்ருணா நதி-அருள் நிரம்பிய நிதி' என்கிறார். முதலில் 'தூர்யம் மஹ:' என்று ஆரம்பித்தது போல் முடிவில் 'கைடபதமோரவி:' 'மதுபராகஜஞ்ஜாமருத்' என்று மத்ஸ்ய-ஹம்ஸ ஹயக்ரீவாவதாரங்களைப் பேசுகிறார். मत्स्याश्वकच्छप - (மத்ஸ்ய-அஶ்வ கச்சப) என்று சுகரும் மத்ஸ்யாவதாரத்தோடு 'அஶ்வ' அவதாரத்தையும் அநுஸந்தித்தார். "ஹம்ஸ-மத்ஸ்ய-ஹயக்ரீவ நரநாராயண-கீதாசார்யாத் யவதாரங்களாலே தானே வெளி நின்று தத்வ ஹிதங்களைப் பிரகாஶிப்பித்தும்" என்று ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம் குருபரம் பராதிகாரம்.

கேஶவ:—'அதிலங்கித-த்ருஹிண-ஶம்பு ஶக்ராதிகம்' என்று முதல் சுலோகத்தில் விஸ்தரித்துக் கூறியதை இந்த ஒரு பதத்தால் சுருங்கக் காட்டுகிறார். न दैवं केशवात् परं - (நதைவம் கேஶவாத் பரம்) என்று மஹரிஷிகளின் ஸபையில் வேதாசார்யன் தம் கையைத் தூக்கி சபதம் செய்தது ஸூசிப்பிக்கப்படுகிறது. அப்படியே 'க: என்று ப்ரஹ்மாவின் பெயர்; நான்

ஸர்வதேஹிகளுக்கும் ஈஶன்; நாங்கள் இருவரும் உம்திருமேனியிலிருந்து பிறந்தவர்கள்; ஆகையால் உமக்குக் 'கேஶவன்' என்று திருநாமம்' என்று எதிரிகையாலே விடு தீட்டானபடி அவர்கள் சொன்ன பாசுரங்களையே ஸூசிப்பித்து ஸ்திரப்படுத்துகிறார்.

'அபீதிः என்று தொடங்கி 'கோபாயதி' என்று முடிப்பதால், அபயத்தை விரும்புவோருக்கு இந்த ஸ்தோத்திரத்தால் த்ருப்தனான ஸர்வேஶ்வரன் அபயப்ரதானம் செய்து ரக்ஷிக்கிறான் என்ற பலஸித்தி சொல்லப் படுகிறது.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

---



வ்யா—சரணங்களை உபாயம் என்கிறதற்கு இதி, "ஸுஹ்ருதய ந வாஸுதேவ" "ஸுசரணம்" "த்வத்பாதாவேவோபாயோபேதாவேவ" என்று அவனை உபாயமாகச் சொல்லச் செய்தே, சரணாகதி மந்த்ரத்திலே, திருவடிகளை உபாயமென்றதற்கு என்றபடி. சரண விசிஷ்ட வசீகார்யன் பக்கலிலே தாத்பர்யமாகையாலே இதி—சரணாகதி விதாயக வாக்யத்திலே "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று விக்ரஹ விசிஷ்டன் இலக்காய் தோற்றுகையாலே, அவனே உபாயமாய் "சரணௌ" என்கிற சப்தம் நித்யமான திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு உபலக்ஷணமாய் விக்ரஹ விசிஷ்டனிலே தாத்பர்யமாகையாலே ஸித்தோபாய பேதமில்லை. திருவடிகளை உபலக்ஷணமாக்கவேண்டித்து— "ஸித்தாஸ்ய ஸ்ரீநவஸளகய க்ஷ வொதக்ஷ் கூதாஷிஸி: । உபாயகவிஹ ஶாஷிவாஷயொர நாஸம்ஹிதம்" என்றருளிச் செய்தபடியே, தாஸ்யத்தின் ஔசித்யாதிசயத்தாலும், "அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்" என்கிறபடியே க்ருபொத்கம் பகவாதிசயத்தாலும் தவாம்ருதஸ்யந்திநி இத்யாதிகளிற்படியே போக்யத்வாதிசயத்தாலும் திருவடிகளை அவலம்பிக்கையாலே ஆகையால் ஸித்தோபாய பேதமில்லை. உபாயாநுஷ்டாநத்துக்கு முன்பே ஈச்வரன் ஸித்தனாகையாலும் இவன் உபாயம் அநுஷ்டித்தாலும் பலப்ரதாநம் பண்ணுவானவனாகையாலும் அவனை ஸித்தோபாயமென்கிறது. சரண விசிஷ்டன் வசீகார்யனும்போது ஸாத்யோபாய விசேஷத்தை முன்னிட்டல்லது வசீகார்யனாகான். இப்படிக் கொள்ளாதபோது இத்தனை காலமாய் முக்தனாகாமைக்கு வழியில்லை.

"ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேச: ஸதா காருணிகோபி ஸந் ।
ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥

என்கிறபடியே, ஸர்வ முக்தி ப்ரஸங்கம் வாராமைக்காக ஸாத்யோபாயாபேக்ஷை பண்ணுகிறனாகையாலே அவன் வசீகார்யனும்போது வசீகரண ஸாதநமாயிருந்த ஸாத்யோபாயத்தை பாதிக்கவொண்ணாதென்று திருவுள்ளம். வசீகார்ய என்கிறவிடத்தில் ஸ்வாதந்த்ர்யத்தாலே அநாத்யபராதத்தாலே நிக்ரஹத்தை உண்டாக்கி அதடியாகவநாதியாய் வச்யனன்றிக்கே இருந்து இன்று வச்யனாக வேண்டினால் அந்நிக்ரஹ நிவ்ருத்திக்கு ஒரு ஸாத்யோபாயாநுஷ்டாநம் வேண்டி வச்யனாகவேணுமிறே. பக்தனுக்கு ஈச்வரன் உபாயம் ப்ரபந்நனுக்கு சரணங்கள் உபாயம் என்று அதிகாரி பேதேந ஸித்தோபாய பேத கல்பநமும் ஸத்ஸம்ப்ரதாயமன்று என்றதாயிற்று. அப்படியே ஈச்வரனும் ஸித்தோபாயனாக ஸித்தனாகையாலே ப்ரபத்தி விதாயக வாக்யத்திலே வ்ரஜ என்கிறது ஜாநீஹி என்கிற மாத்திரமாய் அப்ரவ்ருத்த ப்ரவர்த்தந ரூபவிதி யன்றிக்கே அஜ்ஞாதஜ்ஞாபந விதியாய்

நான் உபாயமென்றறி என்றிவ்வளவே விவக்ஷிதமாய் ஸாத்யோபாயமாகவொன்றில்லை என்றிப்படி ஸாத்யோபாயபாதம் சொல்லுமதுவும் ஸத் ஸம்ப்ரதாயமன்று. வாக்யஜந்யஜ்ஞாந மாத்திரத்தாலே மோக்ஷமென்கை ஸ்ரீபாஷ்யாதி விருத்தம். அப்படியே ஸாத்யமாக ப்ரபத்தி என்று ஒன்றனுஷ்டேயமானாலும் அது உபாயமல்லாமையாலே ஸாத்யோபாய சப்த வாச்யமாகாது. என்கிறதும் “ தகவ்யூாத்யெவ தஹீாஜாஹ்வி ஜஉயவ்யூவ செதா ந்யுஸ்ஒ௨ கூஹ்கொடிஸஹஸ்ரெவஹாணாவி ஸாய நஹ்வீதி ஙோநஃ ” என்கிற ஸ்ரீ பாஷ்யகாரரருளிச் செயலுக்கும் “ ஶாணவாணவா.மியம்யா ஜ்ஒ௨ வாஷ தஷயிகம் நகிம்வி நீ௨ ஸஜஹ௨ஹி௨தாஸம்ஷம் ஸாயநம்” என்ற ஆழ்வான் ஸ்ரீஸூக்திக்கும்

“ தவஹஒோஹ௨கோஸிஷியாதி-ஒெகஃ
ஶாண தித்யவிவாவ௨ஒெைஸிாம் ।
ஜதி ஸஹாகூிகூயநு ஜஷ௨ஜ்௨ாம்
கூாஹாம்தவாஜய ாஸாா ॥

என்கிற பட்டர் ஸ்ரீ ஸூக்திக்கும் விருத்தமாகையாலே ஸத் ஸம்ப்ரதாயமன்று. இப்படி ஸித்தோபாய வசீகரணார்த்தமாக ஸாத்யோபாயாநுஷ்டாநம் ஆவச்யகமென்று பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்தி ஸித்தமாகையாலே இதுக்கே தேனுமொரு கண்ணழிவு பண்ணுமதெல்லாம் யாதவ ப்ரகாசீய க்ஷேப மூலமாகையாலே ஸாத்விகராயிருப்பார்க்கு அநாதரணீயம்.

அவ—ஆனாலும் ப்ரதமத்விதீய ரஹஸ்யங்களிலே நமஸ்ஸேக ரூபமாயிருக்க, இதுக்கு நமஸ்காரத்திலே ப்ரசித்தியுமிருக்க, இதுக்கு நாநார்த்தகத்வம் கூடும்படி எங்ஙனே என்னவருளிச் செய்கிறார்.

மூ—நமஸ்ஸு நாநார்த்தமாக நிருக்தமாகையாலே ப்ரதமத்விதீய ரஹஸ்யங்களில் மத்யமசரம பதங்களுக்கு வாக்யார்த்தாநுகுணமாக அர்த்தபேதம் கொள்ளலாம்.— என்று.

வ்யா—நமஸ்ஸுக்கு ஸ்தூல ஸூக்ஷ்ம பரங்கள் என்று மூன்று யோஜனை கொண்டு அஹிர்புத்ந்யன் பலபடியாக நிர்வசநம் பண்ணி வைக்கையாலே ப்ரதம ரஹஸ்யமாயிருந்த திருமந்த்ரத்திலே நடுவில் பதமாய் த்விதீய ரஹஸ்யமாயிருந்த த்வயத்திலே முடிவில் பதமாயிருந்த நமஸ்ஸுக்கு திருமந்த்ரத்திலே ஸ்வரூபோபாய புருஷார்த்த பரமாயிருந்த பத்துபடியான யோஜனைக்கு அநுகுணமாக ந௨ந என்று இரண்டு பதமாக்கி ப்ரஸக்த ஸ்வாதந்த்ர்யாதி நிவ்ருத்தியையும், ஏக பதமாக்கி ஆத்ம ஸமர்ப்பண நமஸ்காராதிகளையும் அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனையையும், த்வயத்தில் பூர்வகண்டம் உபாய பரமாய் உத்தர கண்டம் பல பரமாயிருந்த யோஜனையிலே நமஸ்ஸிலே அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனையும் பூர்வோத்தர கண்டங்கள் இரண்டும் ஸாங்க பர ஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறதென்றும் யோஜனையில்



வா௨ாதூநி நாாாணாம் ஸவஹாாஸ௨வணாஜ ।
ஸஜ்ஞா தம்ஒெநாஒெகூ்ம்தா ந௨ ஜத்யாவ்யஒெத வாஒெயஃ ॥

என்கிறபடியே நைரபேக்ஷ்ய பரமாய் அன்றிக்கே ஹவிஸ் ஸமர்ப்பணத்தில் “ இத மிந்த்ராய நமம ” என்னுமாப்போலே அஹம் ஸ்ரீமதே நாராயணாய என்று ஸமர்ப்பித்து நமஃ என்று தன்னுடன் துவக்கறுக்கிறதென்றும் இப்படி பல அர்த்தங்கள் சொல்லுமதெல்லாம் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தமென்றபடி. இப்படி பல அர்த்தங்களை ஸதாசார்ய ஸகாசத்திலே அறியாமையாலே பிறே பல ரஹஸ்ய க்ரந்தங்களிட்டாலும் ஒரு யோஜனையோடு தலைக் கட்டினது.

அவ-ஆனாலும் கார்யமொன்றானால் உபாயமுமேகமாக வேண்டி அகிஞ்சநாதிகாரிக்கு மோக்ஷரூப ஏக கார்யத்திலே த்வயத்திலும் சரமச்லோகத்திலும் உள்ள சரண சப்தம் ஈச்வரனுக்கு உபாயத்வத்தைச் சொல்லுகையாலும் ப்ரபத்திக்கு உபாயத்வம்கொண்டால் “ஸாய நஒெகவ்யூவஒ ஜுயூ ஸாய நஉயஉாவஒெதஜ । வ்யூவதிஹஸமவாம்ஒெஹ்தி” என்கிறபடியே உபாயத்வித்வ ப்ரஸங்கம் வருமாகையாலும் ஸாதநத்வமாதல் ஸித்த ஸாதந ஸஹகாரித்வமாதல் கொண்டால் ஸித்தோபாயமான வீச்வரனுடைய ஏகத்வம் ஸித்தத்வம் பரம சேதநத்வம் பரம காருணிகத்வம் ஸர்வ சக்தித்வம் நிரபேக்ஷத்வம் முதலான ஸ்வபாவ விசேஷங்களுக்கு விரோதம் ப்ரஸங்கிக்குமாகையாலும் ஸாத்யோபாயாநுஷ்டாநம் பண்ணினாலும் உபாஸநாதிகளைப்போலே தனக்குத் பாதகமாகவாதல் வயஜகமாகவாதல் தம் ஸஹகாரியாகவாதல் த்வாரமாகவாதல் ஒன்றாலபேக்ஷை யறும்படி நித்யமாய் உபசயாபசய ரஹிதமாய் ஸர்வதா பரிபூர்ணமான ஸஹஜ காருண்யாதிகளை உடைத்தாய் ஸங்கல்பமுண்டானபோது த்வார நிரபேக்ஷமாக கார்யம் பிறக்கும்படி ஸத்யஸங்கல்பமாயிருக்கிற ஸித்தோபாயத்துக்கு ஒருபகாரமில்லாமையாலும் ஸாத்யோபாயாநுஷ்டாநமாகாது என்கிற வார்த்தையும் தாங்களும் ஸ்ரீ பாஷ்யகார ஸம்ப்ரதாயாநு ப்ரவிஷ்டர் என்று சொல்லுபவர் வார்த்தையாலே இதுவும் ஸதுக்தியாயிருக்குமென்று சிலர்க்குத் தோன்றினால் ந வாஷிஒெஹஷம்ஜநஒெயஜ என்கிற கணக்கிலே இவ் வார்த்தையை அப்யுபகமம் பண்ணி தாத்பர்யம் அருளிச் செய்கிறார்.

மூ—த்விதீயத்ருதீய ரஹஸ்யங்களில் கிடக்கிற ஶரண சப்தம் உபாய பரமானதடியாக வசீகரணோபாயத்துக்கு சிலர் பண்ணும் திரஸ்காரமெல்லாம் ஸித்தோபாயப்ராதாந்ய பரம்

வ்யா—த்விதீயத்ருதீய ரஹஸ்யங்கள்—த்வயமும் சரம ச்லோகமும்.

த்வயம் திருமந்த்ரத்துக்கு நேரே வ்யாக்யாநமாகையாலே இரண்டாவதாய் த்வயத்துக்கும் வ்யாக்யாநமாயிருக்கையாலே சரம ச்லோகம் மூன்றாவதா யிற்று. "சரண சப்தமுபாய பரமானதடியாக" இதி

"उपाये गृहरक्षित्रोः शब्दः शरणमित्ययम् ।
वर्तते सांप्रतं चैष उपायार्थैकवाचकः ॥

என்று ப்ரபத்தி ப்ரகரணபடிதமாயிருந்த சரண சப்தம் உபாய பரமாகை யாலே என்றபடி, "வசீகரணோபாயத்துக்கு" இதி—வசீகரண என்றது ஸாபிப்ராய விசேஷணம், எம்பெருமான் தனியே ஸஹஜ காருண்யாதி விசிஷ்டனாய் ஸர்வ சக்தனாய் நிரபேக்ஷனாயிருந்தானேயாகிலும் அநாத்ய பராத பரம்பரைகளாலே "க்ஷிபாமி" "நக்ஷமாமி" என்றிருக்கிறானாகை யாலே இந்த நிக்ரஹம் நிவ்ருத்தமானாலல்லது அவன் வசீக்ருதனாகானாகை யாலே, நிக்ரஹம் நிவ்ருத்தமாய் அவனை வசீகரிக்கைக்கொரு உபாயம் வேணும். உபாய நிரபேக்ஷனாய் வசீக்ருதனுமாகில் அநாதியாக எல்லாருக் கும் வசீக்ருதனாக இருக்கலாம். ஸ்வாதந்த்ர்யத்தாலே நியமம் சொல்லில் வைஷம்ய நைர்க்ருண்ய தோஷங்கள் வரும். ஈச்வரனுடைய ஸஹஜ காருண்ய ஸ்வாதந்த்ர்ய சக்த்யாதிகள் இவன் செய்கிற அல்ப வ்யாஜத்தைக் கொண்டு அநாதி நிக்ரஹ ஸங்கல்பத்தை தான் நினைத்தபோதே ஒருபடி போக்கித் தன் பேறாக ரக்ஷிக்கைக்கும் விலக்கவல்லாரில்லாமைக்கு முறுப் பாம். இது வசீகரணோபாயாநுஷ்டாநத்துக்கு விருத்தமன்று. சிலர் என் றது ஸம்ப்ரதாயத்திலே ப்ரச்சந்நராயிருந்த சிலரென்றுதல் அவர் வார்த் தையாலே கலங்கின பரமாஸ்திகராயிருந்த சிலர் என்றுதலாகவுமாம். பண் ணும் திரஸ்காரமெல்லாமென்றது, "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்; அன்றென்னைப் புறம்போகப் புணர்த்த தென் செய்வான்" என்கிற ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியைக்கொண்டு ஈச்வர ஸ்வாதந்த்ர்ய ஸஹஜ காருண்யங்களடியாகவும் ஈச்வரன் சேஷியாயிருக்க, நாம் "கர்ப்ப பூதாஸ்தபோதநா:" என்றும் கணக் கிலே ஸ்தநந்தயப்ராயராயிருக்க தாய் முலைப்பாலுக்கு ஆர்த்தனாய் அழுதல் செய்யுமன்றிக்கே கூலி கொடுப்பாரைப்போல நாம் ஆத்ம ஸமர்ப் பணம் பண்ணுகையும் ரக்ஷிக்கவேணுமென்ற பேக்ஷிக்கையும் விச்வஸிக்கையு மென்றுப்போலே சொல்லுமவையெல்லாம் ஸ்வரூபத்துக்குப் பொருந்தாது என்று ஸம்பந்தமடியாகவும் திருமந்திரத்திலே சேஷத்வம் தெளிந்து பரம புருஷார்த்தா பேக்ஷை உண்டாய்த்தாகில்

"उज्जीवनेच्छा यदि ते स्वसत्तायां स्पृहा यदि ॥
आत्मदास्यं हरेः स्वाम्यं स्वभावं च सदा स्मर ॥



என்று நீ தாஸனாய் ஈச்வரன் ஸ்வாமியாயிருக்கிறது ஸ்வபாவ ஸித்த மென்று தத்துவத்தில் தெளிவோடேவர்த்தி, என்றதொழிய ஆத்ம ஸமர்ப் பண மென்றதொரு விதேயமில்லை என்றும், ப்ரபத்தி என்று வசீகரணோ பாய முண்டென்றாலும் அது தானு மநுஷ்டாநரூப மின்றிக்கே ஸ்வரக்ஷ ணார்த்த ஸ்வவ்யாபார நிவ்ருத்தி ரூபமாயிருக்குமென்று மிப்புடைகளிலே ஸாத்யோபாய நிஷேதம் பண்ணினதெல்லா மென்றபடி. ஸித்தோபாய ப்ராதாந்யபரம் என்றது, ஸாத்யோபாய மநுஷ்டித்தாலும் இது ப்ரஸா தநமாத்ரமாய் சாந்த நிக்ரஹமான ஸித்தோபாயமே பலப்ரதாநம் பண்ண வேண்டி அவ்யவஹித காரணமாய் நிற்கையாலே இப்படி ஸித்தோபாய த்தின் ப்ராதாந்யம் தோற்றவிப் புடைகளிலே ஸாத்யோபாய திரஸ்காரம் பண்ணினார்கள் அல்லது வசீகரணார்த்தமாயிருந்த உபாயாநுஷ்டா நத்திலே தாத்பர்யமில்லை என்றபடி. இவர்கள்தான் சில க்ரந்தங்களிட்டு,

"विहितः सर्वशास्त्रेषु प्रपत्तिर्विनयादिभिः ।
विपर्यये तु नैवास्य प्रतिषेधाय पातकम् ॥"

"பரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாயிற்று" இத்யாதிகளாலே வசீகரணோபாயாநுஷ்டாநத்தை பலபடியாக நிஷேதியாநிற்க இப்படி தாத் பர்ய மருளிச் செய்தது இவர் வார்த்தையை விச்வஸித்திருந்தே ஆஸ்தி கராயிருப்பார் பாழ்படவொண்ணாதென்றும் திருவுள்ளத்தி லிரக்கத்தாலே. ஆகையாலேயிறே க்ருபாமாத்திர ப்ரஸந்நாசார்யரில் பிள்ளையைத் தலைவ. ரென்று பெரியவரருளிச் செய்கிறது. இத்தாலேயாயிற்று "தூப்புற் பிள்ளையாய்ந்த பொருளன்றி உய்யும்வகை இல்லை" என்று நிஷ்கர்ஷித் திருக்கிறது. உபாயாநுஷ்டாநத்தை பஹுப்ரகாரமாக ஸமர்த்தித்த பிள்ளை யும் ஸித்தோபாயமே ப்ரதாநமென்று கொண்டு

"किं वा करीश कृपणे मयि रक्षणीये
यज्ञादिबाह्यसहकारिसमपेक्षणेन ।
नन्वस्ति विश्वपरिपालनजागरूकः
सङ्कल्प एव भवतो निपुणस्सहायः ॥

என்று ஸாத்யோபாயத்துக்கு அப்ராதாந்யம் தோற்ற வருளிச் செய்தது. அவர்கள் தானும் சில க்ரந்தங்களிலே ப்ரபத்தி ஸாதநமென்றுகொண்டு ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள் அங்கமென்றும் ப்ரார்த்தநாந்வித பரந்யாஸமே அங்கி என்றும் இதில் வேத்யாகாரம் நிரபேக்ஷோபாயத்வமென்றும் இது, தானே அநுஷ்டிக்கவுமாம். தனக்காக ஆசார்யன் அநுஷ்டிக்கவுமாம் என்று

மிவ் வர்த்தங்களை ஸங்கீர்ணமாகச் சொன்னார்கள். இவை இத்தனையும் அநா தரித்தாயிற்று பின்னுள்ளார் தோன்றினபடி சொல்லுவது.

அவ—ஆனாலும் சக்தனுக்கு பக்தி என்னும் அசக்தனுக்கு ப்ரபத்தி என்றும் சொல்லப்போமோ? பக்தியோகம் ஆவ்ருத்த ப்ரத்யயமானாப்போலே ப்ரபத்தியும் "ஆபஃஸ்ம்-ா நாஸாநாெநந ஸஹஸைவஷம் வகூா" என்றும் "தத்ஸூ ஹூதந்ஹஶாஜீநாயெவஃநாஊெஸ" என்றும் ஸம்ப்ரதாயத்தாலே ப்ரபத்யே என்றவநுஷ்டாந வாக்யத்திலே வர்த்தமாந கால வ்யபதேசத்துக்கு வர்த்தமாநதேஹாவதியாக ப்ரபத்தி கர்த்தவ்யதையை வ்ரஜ என்று விதிக்கிறதென்றும் ப்ரபத்தி காலத்தில் தான் ஸங்கல்பித்த படியே ஆநுகூல்யாதிகள் ப்ரபத்தி பரிகரமாகவே அநுவர்த்திக்கிறபடியைக் காட்டுகிறதென்றும் சொல்ல வேண்டியிருக்க மேலும் "விஶ்வாஸாபாஸ ஹெநூநந்யஸந ஜநமயோ: ஶாஜெ கோ விஶேஷ:" என்கிற கண்க்கிலே "கலவெள் கட்டுப்போய் கலவெண்ணையாயிற்று" என்று எம்பார் அருளிச் செய்த கட்டளையிலே ப்ரபத்தியும் க்ருச் ச்ரஸாத்யமாயிருக்க அகிஞ்சநாதிகாரமாம்படி எங்ஙனே யென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஸ்வாநு ஸந்தாந பரமாயும் விதிபரமாயும் நிற்கிற வாக்யாதங்களில் ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகமில்லாமையாலும் அநாவ்ருத்திக்கு கண்டோக்தி உண்டாகையாலும் வர்த்தமாந வ்யபதேசம் அநுஷ்டாந காலாபிப்ராயம்.

வ்யா—"ஸ்வாநுஸந்தாந பரமாயும்" இதி—ப்ரபத்யநுஷ்டாந ப்ரகாசகமாய் கரணமந்த்ரமாயிருந்த த்வயத்திலே அநுஷ்டேயதயா ஸ்வாநுஸந்தாந பரமாயு மென்றபடி. அயலாரைப்பற்ற அநுஷ்டிக்கும்போதும் அவர் பரத்தையும் தன்னதாகவே கொண்டு அநுஷ்டிக்க வேண்டியத்தால் ஸ்வாநுஸந்தாந பரமாயிருக்கு மென்னக் குறையில்லை. ஆகையாலேயிறே உத்தமனாகவேண்டிற்று. "விதிபரமாயும்" இதி—வ்ரஜ என்று சரமச்லோகத்தில் அநுஷ்டேயதயா விதிபரமாயிருக்கிற என்றபடி "ஶிஷ்யஸ்தேஹம்" என்று அபிமுகனை சேதநனைக் குறித்து விதிக்கையாலே மத்யமனாயிற்று. "ஆக்யாதங்களிலே" இதி—ப்ரபத்யே என்கிற விடத்திலே ஆக்யாதம் கதிவாசியான தாது—ஶதஸ்ய பாஸ்ய: என்று புத்யர்த்தமாய் "ஈக்ஷிஷ்ய தீவிஶ்வாஸ:" என்று சொல்லப்பட்ட ஸாராமாங்கத்தை விவக்ஷித்து அம்முகத்தாலே அநுஷ்டாந பர்யந்தமான ஸாங்கபர ஸ்மர்ப்பணத்தைச் சொல்லுகிறதென்று திருவுள்ளம். அப்படியே வ்ரஜ என்கிறவிடத்திலும் ஆக்யாதம் அவச்ய கர்த்தவ்யத்வ போதகம் என்று திருவுள்ளம். ஆக்யாதங்களிலே ஆக்யார்த்த விஷயங்களான



தாத்வர்த்தங்களிலே. ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகம் இல்லாமையாலும் இதி. வேதாந்தங்களிலே வேதநாதி சப்தார்த்தங்களுக்கு ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகமாக ஸர்வ வேதாந்த ப்ரத்யய ந்யாயமும் குருலகு விகல்பாநுபபத்தியும் வித்யுபாஸிகளுக்கு வ்யதிகர ப்ரயோகமும் "ஆவ்ருத்திரஸக்ருத்" என்று ஸூத்ரமுமிருக்கிறாப்போலே இதுக்கொரு ஜ்ஞாபகமில்லை என்றபடி. ஆவ்ருத்திக்கு கண்டோக்தி உண்டாகையாலும் இதி—பக்திக்கு ஸூத்ர கண்டோக்தி உண்டாயிருந்தது. இதுக்கப்படி இல்லாத மாத்திரமன்றிக்கே "ஸக்ருத் க்ருதஶாஸ்த்ரார்த்த:" என்கிற ஸாமாந்ய ந்யாயமன்றிக்கே விசிஷ்ய "ஸக்ருதேவ ப்ரபந்நாய॥" "ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம்" இத்யாதிகளாலே ஆவ்ருத்தி வேண்டாமென்று கண்டோக்தி யுமுண்டாயிறே இருப்பது என்றபடி ப்ரம்மாஸ்த்ரபந்தம் போலே ஸ்வபலத்தில் உபாயாந்தர ப்ரயோகா ஸஹமாயிருக்கிற மாத்திரமன்றிக்கே புந: ஸ்வப்ரயோகத்தையும் ஸஹியாதேயாயிற்றிருப்பது. "ஏதத்வ்ரதம்மம" என்றவன் ஸக்ருதேவ என்றானால் அதனுடைய புநரநுஷ்டாநம் அவிச்வாஸத்தாலேயாயிருக்கும். அப்போது

"ஈக்ஷஸ்வநாமவிஸ்ரம்ஸ க்ஷுஜெநயஸ் பலெந ।
யதாவிஶஷிதாஸ்ய ஸ்ரோவாஸ்த்ரபலநா ॥
தயா பஃஸாமவிஸ்ரம்ஸ ப்ரபத்தி: ப்ரயுக்தாஹவெஸ ।
தஸ்ஸாஸ்ரம்ஸ யஃதாநாம் ஶக்திம் ஹாஸ்யதி ஸாஹிராஸ ॥"

என்றதிறே—"வர்த்தமாநவ்யபதேசம்" இதி—ப்ரபத்யே என்று ப்ரபத்திகரண மந்த்ரத்திலே ஒருக்கூவே ஷனாய் வர்த்தமானேலட் என்றநுசாஸநத்தாலே ஸித்தித்த வர்த்தமாந வ்யபதேசம் என்றபடி. வ்ரஜ என்றது விதிலோட்டாகையாலே பவிஷ்யதர்த்தகமாயிருக்கும். "அநுஷ்டாந காலாபிப்ராயம்" இதி—"பஹிர்தெவஸஷநம்ஷாதி" இத்யாதிகளான பர்ஹிர்லவநாதி மந்த்ரங்களிலே, தாமி இத்யாதிகளான வர்த்தமாந வ்யபதேசம் அநுஷ்டாந காலாபிப்ராயமென்று ந்யாயவித்துக்கள் நிர்ணயித்திருக்கையாலே அப்படியே இந்த வர்த்தமாந வ்யபதேசமும் அநுஷ்டாந காலாபிப்ராயமாயிருக்கும். இங்ஙனன்றிக்கே வர்த்தமாந தேஹாவதியாய் ப்ரபத்தி கர்த்தவ்யதையைச் சொல்லுகிறதென்றும் மஹா விச்வாஸாநு வ்ருத்தியைச் சொல்லுகிறதென்றும் இப்புடைகளிலே சொல்லுமதெல்லாம் "ஸக்ருதேவ ப்ரபந்நாய" "கர்யோநிவ்ருத்தி ஸஞ்ஜாதோயஸ் க்ருத்ஸ்நஶ்ரம:" இத்யாதிகளிலே ஸாங்கஸக்ருத் கர்த்தவ்யதாவிதிக்கு விருத்தமாம். ஸாங்காநுஷ்டாந போதகமாயிருந்த தாதுவின் மேலே வர்த்தமாந ப்ரத்யயமாகையாலே அது பவிஷ்யத் காலாநுஷ்

டாநத்தைக் காட்டாதாகையாலே ஸக்ருத்வம் ஸித்தமென்னக் குறையில்லை.

அவ—ஆனாலும் ஸோமாசியாண்டான் ஸம்ப்ரதாயத்திலே வர்த்தமாந ப்ரத்யயத்தைக் கொண்டு யாவத்ஃபலம் ஸாங்கமாக ப்ரபத்தி அநுஷ்டிக்கவேண்டுமென்றும் ப்ரபத்தி ப்ரகரணங்களிலே ஸக்ருத் என்றதற்கு ஸஹஸா என்றர்த்தமாகையாலே இது ஆவ்ருத்திக்கு பாதகமாகாதென்றும் இப்படி முமுக்ஷூபாய ஸங்க்ரஹத்திலே நிர்ணயித்தது விரோதியாதோ என்னவருளிச் செய்கிறார்

மூ—ப்ரபத்திக்கு யாவஜ்ஜீவாநு வ்ருத்தி சோல்லுவார்க்கு "த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" இத்யாதிகளில் சோன்ன ஸாகாஸிகையிலே தாத்பர்யம் கோள்ளலாம்.

வ்யா—ப்ரபத்திக்கு என்றது—வேத, உபாஸீத, என்றுப்போலே ப்ரபத்யே என்றேதின வைதிகமான ப்ரபத்தி வித்யைக்கு என்று தாத்பர்யம். "யாவஜ்ஜீவாநு வ்ருத்தி சொல்லுவார்க்கு" இதி—இதுவும் வைதிகமாகையாலே வேதாந்த சோதிதமான வித்யைகளிலே ஒரு வித்யையில் ஒதி அங்கங்களாய் தோற்றின வர்ணாச்ரம தர்மங்களும் கதி சிந்தநாதிகளும் வித்யாந்தரங்களிலே வருமோபாதி ப்ரபத்தி வித்யையிலும் வரக்குறையில்லை. அப்படியே "ஸவெஷ்வம் வதந்யநூாவஷாயஷம் ஜூவநெ ஷா கூஷி ஸம்வஜூெத" என்கிற ச்ருதியிலும் "ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" என்கிற ஸூத்ர விவக்ஷிதமாக ஸ்ரீ பாஷ்யமிட்டருளுகையாலே ப்ரபத்திக்கா வ்ருத்தியும் ததங்கங்களாக கர்மாத்யநுஷ்டாநங்களும் கதி சிந்த நாதிகளும் ஆவச்யகமென்றாயிற்று இவர் சொல்லுவது. "த்வயமர்த்தாநு ஸந்தாநேநஸஹ ஸதைவம் வக்தா இத்யாதிகளிலே சோன்ன ஸாகாஸிகையிலே தாத்பர்யம் கோள்ளலாம்" இதி—ப்ரபத்திக்கு ஆவ்ருத்தி சொல்லுவார்க்கும் மோக்ஷ ஸாதநதயா ஆவ்ருத்தியிலே தாத்பர்யமில்லாதே உபாயோபேயதசையிலுள்ள குணாநுஸந்தாநத்தாலே பலஸித்தியிலே நிஸ் ஸம்சயதையும் நிர்ப்பரதையுமுண்டாய் வரப்போகிற பரிபூர்ண பகவதநுபவ ரஸாநுஸ்மரணத்தாலே நிரதிசயாநந்த யுக்தனாய் வாழுநாளெல்லாம் என் படப்புகுகிறேனென்று அலமர்ந்திராதே ஸுகமாகப்போது போக்கையிலே தாத்பர்யமென்றபடி. த்வயமாகிறது "ஸக்ருதேவ ப்ரபந்நாய" "ஸர்வதர்ம்மாந் பரித்யஜ்ய" என்கிற ச்லோகத்வயத்தில் விவக்ஷிதமாய் உபாயோபேய ரூபமாயிருந்த வர்த்தத்வயத்தை விசதமாக ப்ரதிபாதிக்கும் மந்த்ர விசேஷம். இது ப்ரபத்தி வித்யைக்குக் காரணமாயிருக்கும். உபாயோபேயாந்தரங்களில் அவக்ற்ற



द्युप्रभृतिपृथिव्यन्तानां मूर्धादिपादान्तावयवत्वकल्पनं तथानुस्मृत्यर्थं ब्रह्मप्रतिपत्तय इति बादरिः ।

த்யுலோகம் முதல் ப்ருதிவீவரை எல்லாவற்றையும், தலை முதல் பாதம் வரை அவயவங்களாக கல்பித்தது, ப்ரஹ்மத்தை அவ்விதம் உபாஸிப்பதன் பொருட்டு என்று பாதரி என்ற ஆசார்யர் சொல்லுகிறார்.

सू—सम्पत्तेरिति जैमिनिस्तथाहि दर्शयति ॥ १. २. ३२॥

"उर एव वेदिर्लोमानि बर्हिर्हृदयं गार्हपत्यः" इत्यादिना उपासकहृदयादीनां वेद्यादित्वकल्पनं विद्याङ्गभूतायाः प्राणाहुतेः अग्निहोत्रत्वसंपादनार्थमिति जैमिनिः । दर्शयति च श्रुतिः—"य एतदेवं विद्वानग्निहोत्रं जुहोति" इति । एते पक्षाः स्वीकृताः । पूजार्थमाचार्यग्रहणम् ।

சாந்தோக்யோபநிஷத்தில் வைச்வாநர வித்யையில் ப்ராணாஹுதியாலே பரமாத்மாவை ஸமாராதனம் செய்யவேணும் என்று விதிக்கப்பட்டது. அந்த ப்ராணாஹுதியை அக்னிஹோத்ரமாக நினைக்கவேண்டும். அப்படி நினைப்பதின் பொருட்டு அக்னிஹோத்ரத்திற்கு அங்கமான வேதி முதலியவற்றை காட்டி இருக்கிறது. மார்பு முதலான இடத்தை வேதி முதலானதுகளாக சொன்னது இந்த ப்ராணாஹுதியை அக்னிஹோத்ரமாக நினைப்பதற்காக. மேல் ப்ரகரணத்திலும் எவன் ஒருவன் இதை மேல் சொன்னபடி நினைத்து அக்னிஹோத்ரம் செய்கிறானோ, அவனுக்கு ஹோமம் பூர்த்தி ஆகின்றது என்று சொல்லப்பட்டது. இந்த பக்ஷங்களை ச்ருதி ஒப்புக்கொண்டது. இவ்விடத்தில் ஜைமினி முனியின் பெயரை குறித்தது இந்த மதம் ப்ராமாணிகம் என்று இந்த மதத்திற்கு ஒரு கௌரவத்தை காட்டுவதற்காக.

सू—आमनन्ति चैनमस्मिन् ॥ १. २. ३३ ॥

एनम्-परमात्मानम्, अस्मिन्–उपासितृशरीरे प्राणाहुतिवेलायाम् अनुसन्धानार्थं "तस्य हवा एतस्य ... मूर्धैव सुतेजाः" इत्यादि

आमनन्ति च ॥ उपासकस्य मूर्धादिरेवास्य परमात्मनो मूर्धादिरित्यर्थः ॥

இந்த பரமாத்மாவை உபாஸிப்பவனுடைய சரீரத்தில் ப்ராணாஹுதி செய்யுங்காலத்தில் அனுஸந்திப்பதற்காக உபாஸகனுடைய தலை முதலியவற்றை இந்த பரமாத்மாவினுடைய தலை முதலியவற்றாக ச்ருதி கூறுகிறது.

வைச்வாநராதிகரணம் முடிந்தது

த்விதீயபாதமும் முடிந்தது

---

## ॥ द्युभ्वाद्यधिकरणम् ॥

### सू—द्युभ्वाद्यायतनं स्वशब्दात् ॥ १. ३. १ ॥

"यस्मिन्द्यौः पृथिवी चान्तरिक्षम्" इत्यादौ द्युपृथिव्यादीनामायतनम् आधारः परमपुरुषः, "तमेवैकं जानथात्मानम्" इत्यात्मशब्दात् ॥ निरुपाधिकात्मत्वं हि परमपुरुषस्यैव "अमृतस्यैष सेतुः" इति तदेव द्रढयति, "बहुधाजायमानः" इति परत्वं न निवारयति, "अजायमानो बहुधा विजायते" इति कर्मभिरजायमानस्यैव आश्रितवात्सल्यात् छन्दतो जननं तस्य हि श्रूयते ॥

முண்டகோபநிஷத்தில் எந்த வஸ்துவினிடத்தில் ஆகாசம் ப்ருதிவீ ஸ்வர்கலோகம் இவை எல்லாம் தொக்கி நிற்கிறதோ அது ஒன்றையே ஆத்மாவாக அறியவேண்டும் என்று கூறப்பட்டது. இங்கு த்யு ப்ருதிவீ முதலியவற்றிற்கு ஆதாரமாகச் சொன்னது பரமபுருஷனே. ஏன்எனில் அந்த வஸ்துவையே ஆத்மாவாக கூறி இருப்பதால்; ஆத்மா என்னும் சொல் பரம புருஷனையே முக்கியமாக குறிக்கும். அம்ருதம் என்னும் மோக்ஷத்தை அடைவதற்கு அவனே உபாயம் ஆகின்றான் என்று மேலே சொன்னதும் இந்த அபிப்பிராயத்தையே உறுதிபடுத்துகிறது. பலபடியாய் பிறக்கிறான் என்றது இவனுடைய ஏற்றத்தை குறைக்க வந்தது அல்ல. ஜீவர்களைப்போலே கர்மம் அடியாக பிறப்பு இல்லை. ஆனாலும் ஆச்ரிதரிடத்தில் அன்புகொண்டு தன்னிச்சையால் பிறக்கிறான் என்றல்லவோ வேதங்கள் கூறுகின்றன.



### सू—मुक्तोपसृप्यव्यपदेशाच्च ॥ १. ३. २ ॥

"तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति", "तथा विद्वान् नामरूपा द्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम्" इति च पुण्यपापविनिर्मुक्तानां प्राप्यतया व्यपदेशाच्चायं परः ॥

பரமாத்மாவை உபாஸிப்பவன் புண்ய பாபங்களை உதறி, களங்கமற்றவனாய் பரமாத்மாவோடு ஸாம்யத்தை அடைகிறான் என்றும், இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த நாமரூபங்களை விட்டு பரம புருஷனை அடைகின்றான் என்றும், புண்ய பாபங்களினின்றும் விடுபட்டவர் போய் சேரவேண்டிய இடமாக சொல்லி இருப்பதால் கீழ் ஸூத்திரத்தில் சொன்னது பரமாத்மா என்றே கொள்ளவேண்டும்.

### सू—नानुमानमतच्छब्दात्प्राणभृच्च ॥ १. ३. ३ ॥

यथा न प्रधानमतच्छब्दात्, तथा न प्राणभृदपीत्यर्थः ॥

ப்ரதானத்தைச் சொல்லும் பதம் இல்லை ஆதலால், இங்கு அது சொல்லப்படவில்லை, என்று ஒப்புக்கொள்கிறோம் அல்லவா அது போலே ஜீவனைச் சொல்லும் பதம் இல்லை ஆதலால் இந்த ப்ரகரணம் ஜீவனைச் சொல்லவந்ததல்ல.

### सू—भेदव्यपदेशात् ॥ १. ३. ४ ॥

"अनीशया शोचति मुह्यमानः। जुष्टं यदा पश्यत्यन्यमीशम्" इत्यादिना प्रत्यगात्मनो भेदेन व्यपदेशाच्चायं परः ॥

இதே உபநிஷத்தில் பல இடங்களில் ஜீவனைக் காட்டிலும் பரமாத்மாவை பேதப்படுத்தியே சொல்லி இருப்பதால் மேல் சொல்லியது பரமாத்மாவே.

### सू—प्रकरणात् ॥ १. ३. ५ ॥

"अथ परा यथा तदक्षरमधिगम्यते" इत्यादि परस्य हीदं प्रकरणम् ॥

இந்த ப்ரகரணம் பாமாத்மாவையே சொல்ல வந்தது. இதில் ஜீவாத்மாவை சொல்லுவது சரியல்ல

सू—स्थित्यदनाभ्याञ्च ॥ १. ३. ६ ॥

"तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्यो अभिचाकशीति" इति जीवस्य कर्मफलादनमभिधाय, अनश्नतो दीप्यमानस्य स्थित्यभिधानाच्चायं परमात्मा ॥

இந்த ஜீவன் கர்மபலத்தை அநுபவித்துக் கொண்டிருப்பதைச் சொல்லி, மேலே இந்த கர்மபலத்தை அனுபவிக்காமல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு வஸ்துவைச் சொல்லி இருப்பதால் அது பாமாத்மாதான்.

த்யுப்வாத்யதிகரணம் முற்றிற்று.

---

## ॥ भूमाधिकरणम् ॥

सू—भूमा सम्प्रसादादध्युपदेशात् ॥ १. ३. ७ ॥

"सुखं त्वेव विजिज्ञासितव्यम्," "भूमैव सुखम्" इत्युक्त्वा भूम्नः स्वरूपमाह, "यत्र नान्यत् पश्यति नान्यच्छृणोति नान्यद्विजानाति स भूमा" इति, यस्मिन् सुखेऽनुभूयमाने तद्व्यतिरिक्तं किमपि सुखत्वेन न पश्यति न शृणोति न विजानाति स भूमेत्युच्यते, "अथ यत्रान्यत्पश्यति अन्यच्छृणोति अन्यद्विजानाति तदल्पम्" इति वचनात् ॥

சுகத்தை விசாரிக்கவேண்டும் என்றும் பூமா என்பது தான் சுகம் என்று சொல்லி அந்த பூமா இன்னதென்பதை மேலே விளக்கிக்காட்டுகிறது. எந்தப் பொருளை அனுபவிக்கும்போது மற்ற பொருள் காணப்படுகிறது இல்லையோ, கேழ்க்கப்படுகிறது இல்லையோ, சிந்திக்கப்படுகிறதில்லையோ அது பூமா. எந்த வஸ்துவை அனுபவிக்கும் போது வேறு சில வஸ்துக்களை பார்க்கவும் கேழ்க்கவும் சிந்திக்கவும் இடமுண்டாகின்றதோ அது அல்பமான பொருள் என்று சொல்லி இருப்பதால் இங்கு பூமா என்று சொன்னது பரமாத்மாவே.



तथा च महाभारते—

"दिव्यानि कामचाराणि विमानानि सभास्तथा ॥
आक्रीडा विविधा राजन् पद्मिन्यश्चामलोदकाः ॥
एते वै निरयास्तात स्थानस्य परमात्मनः" ॥ इति ।

அப்படியே மஹாபாரதமும் கூறுகிறது. தேவலோகத்தில் உண்டான வையும், நமது இஷ்டம்போல் ஸஞ்சாரம் செய்வதுமான விமானங்களும், ஸபைகளும், பல விதமான பூந்தோட்டங்களும் நிர்மலமான நீர் நிறைந்த தாமரைக் குளங்களும்இப்படிப்பட்டவை எல்லாம் அந்த பரமாத்மாவின் ஸ்தானங்களுக்கு நரகங்கள் எனப்படும்.

"एष तु वा अतिवदति यस्सत्येनातिवदति" इति प्रस्तुतश्चातिवादित्वमेवमेव समञ्जसम् । अतिवादित्वं हि स्वोपास्यपुरुषार्थाधिक्यवादित्वम्, "तदल्पम्" इत्यल्पप्रतियोगित्वेन, "भूमा" इत्युक्तप्रकारवैपुल्याश्रयसुखरूपवाची ॥

தன்னால் உபாஸிக்கப்படும் புருஷார்த்தத்தை சிறந்ததாகச் சொல்லுபவனுக்கு அதிவாதீ எனப் பெயர். ஸத்யம் எனப்படும் பாமாத்மாவைக் கொண்டு எவன் ஒருவன் மேற் சொன்னபடி அதிவாதம் செய்கிறானோ, அவனே உண்மையான அதிவாதி ஆகின்றான் என்று கீழ் வாக்கியத்தில் சொன்னதும் இப்போது ஸமஞ்ஜஸமாகும். மேலே அல்பம் என்று சிலவற்றைச் சொல்லி அதற்கு எதிரிடையாக பூமாவைச் சொல்லி இருப்பதால் இந்த பூமா என்னும் பதத்திற்கு அளவில்லாத விஸ்தாரமான சுகம் என்று பொருள்.

अयं भूमशब्दव्यपदिष्टः परमात्मा, संप्रसादादध्युपदेशात्— संप्रसादः प्रत्यगात्मा, "अथ य एष संप्रसादः" इत्यादिश्रुतेः । "एष तु वा अतिवदति यस्सत्येन" इत्यादिना प्राणशब्दनिर्दिष्टात् प्रत्यगात्मनः ऊर्ध्वमर्थान्तरत्वेन अस्योपदेशात् ॥

இந்த பூமா என்னும் சப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாதான் என்று கொள்ளவேண்டும் ஏனெனில் இந்த பரமாத்மாவை ஜீவனைக் காட்டிலும் வேறு பொருளாக ச்ருதியில் உபதேசித்திருப்பதால்.

## सू—धर्मोपपत्तेश्च ॥ १. ३. ८ ॥

" स भगवः कस्मिन् प्रतिष्ठितः.... स्वेमहिम्नि " इत्यादावुपदिष्टानां स्वमहिमप्रतिष्ठितत्वसर्वकारणत्वसर्वात्मकत्वादिधर्माणां परस्मिन्नेवोपपत्तेश्च भूमा परः ॥

சாந்தோக்கியோபநிஷத்தில் இதே சந்தர்பத்தில் பரமாத்மாவிற்கு இன்றி அமையாத தர்மங்களைச் சொல்லி இருப்பதால் அப்படிப்பட்ட தர்மங்களுடன் கூடிய பூமா பரம புருஷனே. ஜீவன் அல்ல.

பூமாதிகரணம் முற்றிற்று

---

## ॥ अक्षराधिकरणम् ॥

## सू—अक्षरमम्बरान्तधृतेः ॥ १. ३. ९ ॥

" एतद्वै तदक्षरं गार्गि ब्राह्मणा अभिवदन्ति अस्थूलमनणु " इत्यादिना अभिहितमक्षरं परं ब्रह्म अम्बरान्तधृतेः ॥ " यदूर्ध्वं गार्गि दिवः " इत्यारभ्य सर्वविकाराधारतया निर्दिष्ट आकाशः, " कस्मिन्नोतश्च " इति पृष्टे " एतद्वैतदक्षरम् " इति निर्दिष्टस्याक्षरस्य वायुमदम्बरान्तधृतेः सर्वविकाराधारो ह्ययमाकाशः वायुमदम्बरान्तकारणं प्रधानम्, तद्धारकं परं ब्रह्म ॥

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ஏதத்வைததக்ஷரம் என்று தொடங்கின வாக்யத்தில் அக்ஷரம் என்னும் சொல்லுக்கு பரப்ரஹ்மம் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஏனெனில் ஆகாசத்திற்கும் காரணமாகிய ப்ரதானத்தை தரிக்கக்கூடிய சக்தி பரமாத்மாவிற்கே உண்டு. இந்த ஆகாசம் எதால் தரிக்கப்படுகிறது என்று கேள்வி கேட்டு, அதற்கு சமாதானம் அக்ஷரம் என்ற பொருளாலே தரிக்கப்படுகிறது, என்று சொல்லப்பட்டது. ஆகையால் ப்ரதானத்திற்கு காரணம் பரமாத்மாவே தவிற ஜீவன் அல்ல.



## सू—सा च प्रशासनात् ॥ १. ३. १० ॥

सा च धृतिः, " एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि " इत्यादिना प्रकृष्टाज्ञया क्रियमाणा श्रूयते ॥ अत इदमक्षरं प्रत्यगात्मा च न भवतीत्यर्थः ॥

ப்ரதானத்தை தரிக்கும் சக்தி ஜீவாத்மாவினிடத்திலும் இருக்கக் கூடுமே என்ற ஸந்தேகத்தை விலக்குகின்றது இந்த சூத்திரம். இந்த அக்ஷரத்தினுடைய மேன்மை பெற்ற கட்டளையின் கீழ் இவ்வுலக மனைத்தும் நிற்கின்றது. ஸர்வவஸ்துக்களையும் தன்னுடைய கட்டளைக்கு உட்படுத்தும் சக்தி பரமாத்மாவைத் தவிர்த்து மற்றவனுக்கு இல்லை.

## सू—अन्यभावव्यावृत्तेश्च ॥ १. ३. ११ ॥

अन्यभावः—अन्यत्वम्, " अदृष्टं द्रष्टृ " इत्यादिना परमात्मनोन्यत्वं ह्यस्याक्षरस्य व्यावर्तयति वाक्यशेषः, अतश्च पर एव ॥

மேல் வாக்கியத்தில் மற்றவனால் காணப்படாதது என்றும் தான் எல்லாவற்றையும் காண்கிறது என்றும் இது முதலிய குணங்களைச்சொல்லி இவ்வக்ஷரம் பரமாத்மாவைத் தவிர்த்து வேரல்ல என்று கூறி இருப்பதால் அக்ஷரம் என்ற பதத்திற்கு பரமாத்மா என்றே பொருள்.

அக்ஷராதிகரணம் முற்றிற்று.

---

## ॥ ईक्षतिकर्माधिकरणम् ॥

## सू—ईक्षतिकर्म व्यपदेशात्सः ॥ १. ३. १२ ॥

" यः पुनरेतं त्रिमात्रेणोमित्यनेनैवाक्षरेण परं पुरुषमभिध्यायीत " इत्यारभ्य, " स एतस्माज्जीवघनात्परं पुरिशयं पुरुषमीक्षते " इत्यत्र ध्यायतिपूर्वकेक्षतिकर्म सः प्रशासिता परमात्मा इत्यर्थः, उत्तरत्र "तमोङ्कारेणैवायनेनान्वेति विद्वान् यत्तच्छान्तमजरममृतमभयं परञ्च "

इति परमपुरुषासाधारणधर्मव्यपदेशात् “यत्तत्कवयो वेदयन्ते” इति तदीयस्थानस्य सूरिभिर्दृश्यत्वव्यपदेशाच्च ॥

ப்ரச்னோபநிஷத்தில் மூன்று மாத்திரையால் உச்சரிக்கப்படும் “ஓம்” என்ற அக்ஷரத்தைக் கொண்டு பரமபுருஷனை இடைவிடாது தியானம் செய்யவேண்டும் என்று தொடங்கி இந்த ஸம்ஸார மண்டலத்தைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருக்கும் ஸர்வ ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் அந்தராத்மாவாக இருக்கும் புருஷனை காண்கிறான் என்று சொல்லுமிடத்து காண்கை என்ற வினைக்கு கர்மமாகச் சொல்லப்பட்டது பரமாத்மாவே. அந்த பரமாத்மாவிற்கே இன்றியமையாத குணங்களைச் சொல்லி இருப்பதால்.

ஈக்ஷதிகர்மாதிகரணம் முற்றிற்று

158717

## ॥ दहराधिकरणम् ॥

दहर उत्तरेभ्यः ॥ १. ३. १३ ॥

“अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोस्मिन्नन्तर आकाशः तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यम्” इत्यत्र दहराकाशशब्दनिर्दिष्टः परमात्मा, उत्तरेभ्यः वाक्यगतेभ्यः तदसाधारणधर्मेभ्यः ॥

சாந்தோக்யோபநிஷத்தில் தஹர வித்யையில் பரமாத்மா வஸிக்கும் பட்டணமாகிய இந்த சரீரத்தில் தாமரைப்பூவடிவமான ஹ்ருதய குகை ஒன்றுண்டு. அந்த ஆகாசம் உபாஸிக்கத்தக்கது என்று சொல்லப்பட்டது அந்த தஹராகாசம் என்பது எது? பஞ்சபூதங்களில் ஒன்றாகிய ஆகாசமா? ஜீவாத்மாவா? அல்லது பரமாத்மாவா? என்று ஸம்சயம் வர இங்கு தஹராகாசம் பரமாத்மாவையே குறிக்கின்றது. ஏனெனில் மேல் வாக்கியத்தில் காணப்படும் ஹேதுக்களைக் கொண்டு; மேலே கர்ம ஸம்பந்த மற்றவன் மூப்பில்லாதவன், மிருத்யுவுக்கு இரை ஆகாதவன் துக்கமற்றவன் பசிதாஹமில்லாதவன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன், இது முதலிய பரமாத்மாவிற்கே அஸாதாரணமான தர்மங்களைச் சொல்லி இருப்பதால்.


# SRI VEDANTA DIPIKA

VOL. 27] SEPTEMBER 1938 [PART 9


# ஸ்ரீ வேதாந்த தீபிகை




பகுதான்ய ஹு — புரட்டாசி மீ



பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மகாராஜா காலேஜ், புதுக்கோட



CONDUCTED BY

**Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,**

NI VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை


1. ஸ்ரீராமாநுஜ தயாபாத்ர மஹோத்ஸவம் 201

2. உபநிஷத்துகளும் மோக்ஷஸ்வரூபமும் 208
[ஸ்ரீ. உப, வேதாந்த சிரோமணி, தேசிக தர்சன துரந்தர,
தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]

3. உபாகர்ம காயத்ரீ ஜபகால விசாரம் 214
[ஒரு ஸுவிமர்சி]

4. காயத்ரீஜப கால நிர்ணயம் 219
[ஸ்ரீ. உப. தேசிகதர்சந விஜயத்வஜ, புத்தங்கோட்டகம்
ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்,
ஸ்ரீரங்கம்]

5. ஸ்ரீ பராசரபட்டரின் திருமஞ்சனக் கவிகள்—5 227
[ஸ்ரீ. ஸ்ரீ.]

6. மையல் செய்த மணவாளர் 230
[ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்.]

7. தத்வடீகை 234

8. வேதாந்த ஸாரம் 81—88



अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்:**

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

**விலை மலிவு! சுவை பெரிது!**

**நன்மை தரும்!**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு**

**நல்ல பெப்பர்மெண்டு!!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. SHIYALI & T. N. MOTHA SONS**
**CONFECTIONARY, LTD.,**

*MADRAS OFFICE*:—**Phone No. 3658 : Res. No. 4258**

304, Thambu Chetty St., G. T. Madras.

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

श्रीः

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

| ஸம். 27. | பகுதான்ய ஹு புரட்டாசி மீ | ஸஞ். 9 |
| --- | --- | --- |

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

## ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ர மந்திரத்தின் பத்தாவது ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம்.

रामानुजदयापात्रं ज्ञानवैराग्य भूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தை अखिलतमः कर्शनं दर्शनं नः என்று தாமே கொண்டாடும்படியாக செய்தருளிய ஆசார்ய ஸார்வ பௌமனை ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுக்கு ஆசார்ய கடாக்ஷத்தின் அடியாக வந்த பெருமையை வெளிப்படுத்துகிற ராமாநுஜ தயாபாத்ரம் என்று ஆரம்பிக்கும் தனியனை ஸ்ரீ ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி விண்ணப்பம் செய்து கொண்ட தினம் கலி 4440 பஹுதான்ய வருஷம் ஆவணி மாதம் ஹஸ்த நக்ஷத்திரம் என்பதை

कल्यब्देषु चतुःसहस्रशतिपङ्क्त्यब्दे यदुक्ष्माधरे
हस्तर्क्षे बहुधान्यवत्सर नभः शुक्लद्वितीयायुते ॥
श्रीशश्रीशठजिद्यतीशनिगमान्तार्यप्रभावोज्वलः ।
सुश्लोकोऽवततार दिव्यमहिमा रामानुजोक्त्यादिमः ॥

என்கிற ச்லோகத்தால் பூர்வாசார்யர்கள் வெளியிட்டார்கள்.

இந்த அவதாரத்தின் பத்தாவது ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை கொண்டாடி அனுபவிக்க வேண்டும் என்கிற எண்ணங்கொண்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சென்னை ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ப்ரசார ஸபையார் செய்திருந்தார்கள். அந்த ஏற்பாட்டின்படியே நமது ஸம்ப்ரதாயத்திற்கு மூலபூதரான ஸ்ரீ பொய்கை ஆழ்வார் திரு அவதாரம் செய்தருளிய திருவெஃகா என்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்கருகில் நமது ஆசார்ய ஸார்வபௌமன் திரு அவதாரம் செய்த திருத்தண்கா என்னும் ஹிமவனம் என்னும் சொல்லப்படும் க்ஷேத்திரத்தில் தீபப்ரகாசர் ஸன்னதிக்கு முன்பே ஸ்ரீ பரகால ஸ்வாமியின் ஆதரவில் ஜடா ப்ரம்ஹசாரியரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸன்னதி மண்டபத்தில் நிகழும் பஹுதான்ய வருஷம் ஆவணிமாதம் 2-ம் தேதி வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு பக்தர்கள் அனைவரும் கூடினார்கள். அப்போது ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் ஸ்ரீ தேசிகன் குமார வரதாசாரியர் ப்ரும்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி இவர்கள் திருமுன்பே ஸஹஸ்ரநாம பாராயணமும், அபீதிஸ்தவமும் அனுஸந்திக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ குமாரவரதாசாரியரும், ப்ரும்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியும் தோளுக்கினியானில் அந்த மண்டபத்தில் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸ்ரீ தேசிக கத்யானுஸந்தானத்துடனே, ஸ்ரீ தேசிகனை அனுகி இந்த மஹோத்ஸவத்தை கண்டருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள் ஸ்ரீ தேசிகனும் அப்படியே நியமனம் கொடுத்தார். இது உத்தர ப்ரத்யுத்தர ரூபமான ச்லோகங்களால் நடந்தது.

பிறகு திருவாராதனம், சாத்துமுறை கோஷ்டியும், நடந்து ஸப்ததி ரத்ன மாலிகை அனுஸந்திக்கப்பட்டது. ஸ்ரீ தேசிகன் ஸன்னதி முன்னிலும், தீபப்ரகாசர் ஸன்னிதியிலும், பந்தல் முதலியவைகள் வெகு அலங்காரமாய் போடப்பட்டு, இவ்வுத்ஸவம் வெகு விபவமாய் நடந்தது.

மறு நாள் முதல் ப்ரதிதினம் காலை 7-மணிக்கு திவ்ய ப்ரபந்த பாராயணமும், வேத பாராயணமும், உபக்ரமிக்கப்பட்டன. வந்திருந்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ தேசிகன் ஸன்னிதி ப்ராகாரத்தில் ததீயாராதனம் நடந்தது மாலை 3 மணிக்கு ஸ்ரீ. உ. ப. வே. ஐபா கிருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி "முதலாழ்வார்களும் ஸ்ரீ தேசிகனும்" என்னும் விஷயத்தை வெகு அபூர்வமாக உபன்யஸித்தார். அதன்மேல் ஸ்ரீ. உ. வே. நாவல்பாக்கம் நரஸிம்ஹாசாரியஸ்வாமி ஸ்ரீதேசிகனுடைய இரண்டு தனியன்களில் "श्रीमान् वेंकट" என்பது ஸம்ஸ்கிருத ப்ரபந்தங்களைச்சேர்ந்தது "ராமாநுஜதயா பாத்ரம்" என்பது த்ராவிட ப்ரபந்தத்தைச் சேர்ந்தது, என்று முன்னோர் செய்த நியமத்தின் ஔசித்யத்தை வெகு ரஸவத்தான பாவங்களை உபபாதித்த உபன்யஸித்தார். பிறகு மேல்பாக்கம் வைத்யாத்னம் பண்டிட் எம்

ஆவணக்காப்பக
சென்னை-600 00



ரை ஸ்வாமி ஐய்யங்கார் தாம் இயற்றிய அதி விசித்திரமாகவும், ஹ்ருதய ரஞ்ஜகமாகவுமுள்ள "ஸ்ரீராமாநுஜ தயாபாத்ரரத்னமாலிகா" ன்ற ச்லோகங்களைப் படித்து பொருள்களையும் சுருக்கமாக வெளியிட்டார். மறுபடி மாலை திவ்ய ப்ரபந்தவேத பராயணுதிகள் உபக்ரமிக்கப்பட்டு, சாத்து முறை நடந்தது. முடிவில் ஸ்ரீ தேசிகனை ப்ரதக்ஷிணமாக எழுந்தருளப் பண்ணி ப்ரபந்த ஸாரத்தின் முதலாழ்வார்கள் மங்களாசாஸன பாசுரத்தை அனுஸந்திப்பதோடு உத்ஸவம் முடிக்கப்பட்டது.

ப்ரதிதினமும் ப்ரபந்தஸாரத்தின் க்ரமமாக ஆழ்வார்களுடைய மங்களாசாஸனங்களும் திவ்ய ப்ரபந்த பாராயணங்களும் நடந்தன. இதில் ஸ்ரீ மஹாமஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமி, திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணசார்ய ஸ்வாமி, புத்தங்கோட்டகம் ஸ்ரீனிவாஸசாரி ஸ்வாமி, மைசூர் காலேஜ் வேதாந்தோபத்யாய ரிக்ஷாசார்ய ஸ்வாமி திருக்குடந்தை இளையவில்லி ஸ்ரீனிவாஸாசாரிய ஸ்வாமி, சேட்லூர் ஸ்ரீனிவாஸ மூர்த்தி ஸ்வாமி, பரவஸ்து ஸ்ரீனிவாசாரியஸ்வாமி திருக்கோட்டியூர் ஸ்ரீராம தேசிகாசாரியர் திருப்பதி காலேஜ் வித்வான் லபேகாசாரியார், மேற்படி உத்தமூர் வீரராகவாசாரியர், மேற்படி, திருமலை தாதாசாரியர், திருக்குடைந்தை அக்னிஹோத்ரம் தாதாசாரியர், இவர்களும் இன்னும் அனேக பெரிய வித்வான்களும் ப்ரதிதினம் மாலை 3-மணி முதல் 6 மணி வரையில் ஸ்ரீ தேசிகனுக்கு ஆழ்வாராதிகளிடத்தில் இருந்த பக்தியையும் அனுபவத்தையும் பற்றி விசேஷமாக உபன்யஸித்தார்கள்.

பத்தாம் உத்ஸவமாகிய 28-8-38 ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு க்ரந்த பாராயணுதிகள் உபக்ரமிக்கப்பட்டு, சாத்துமுறை நடந்தவுடன் ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து எழுந்தருளின ஸ்ரீ முகம் ஸகல மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டது. மாலை 2-30 மணிக்கு பரகால மடத்திலிருந்து வந்த ஸ்ரீ முகம் ஸகல மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டு, இரண்டு ஸ்ரீ முகங்களும் கோஷ்டியில் ஸேவிக்கப்பட்டன. இந்த உத்ஸவத்தில் கூடி இருந்த பண்டிதர்கள் அனைவரும் ஒரு பரிஷத்தாககூடி இவ்வுத்ஸவத்தை இவ்வளவு விமர்சையாக நடத்தி வைத்த, ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீனிவாஸ ஐய்யங்காருக்கு தக்கதாகிய பிருது ஒன்று அளிக்க வேண்டும் என்று • தீர்மானித்து தங்கள் ப்ரார்த்தனையை ஸ்ரீ . பரகால ஸ்வாமி மடத்திற்கும் ஸ்ரீ அஹோபில மடத்திற்கும் அனுப்பி இருந்தார்கள். அப்படியே மேற்படி இரண்டு ஆஸ்தானங்களிலிருந்தும் ஏகோபித்து இச் சமயத்தில் இம் மஹானுக்கு பிருது அளிப்பது மிக அவச்யம் என்றும் "தேசிக தர்சன ரத்ன தீபம்" என்ற பிருதே அமையும் என்றும், ஸ்ரீமுகத்வாரா நியமனம் கிடைத்தது. அந்த நியமனங்களை

மைசூரிலிருந்து வந்த தீக்ஷாசாரிய ஸ்வாமியும் ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்துவந்த ஸ்ரீ வெங்கடராமாசாரிய ஸ்வாமியும் சபையில் வாசித்து மேற்படி மடங்களிலிருந்து வந்த துப்பட்டா முதலிய மரியாதைகளுடன் கூட ஸப்யர்களுடைய கரகோஷ ஆனந்தத்துடன் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீனிவாஸ ஐய்யங்காருக்கு கொடுத்தார்கள்.

அதன்மேல் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீனிவாஸ ஐய்யங்கார் எழுந்திருந்து இந்த உத்ஸவத்தை நடத்துவதில் நமது மடாதிபதிகளுக்கும், ஆசார்ய புருஷர்களுக்கும், மற்றுமுள்ள வித்வான்களுக்கும், இப்படிப்பட்ட குதூஹலம் இருக்கக் காண, தனக்கு மிகவும் ஸந்தோஷமாக இருக்கிறது எனக் கூறி மேற்படி பிருது முதலிய மரியாதைகளை வெகு ஆதரத்துடன் பெற்றுக்கொண்டார். இந்த ஸபையில் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அக்ராஸனத்தில் அமர்ந்த பின்பு ஸ்ரீ வைஷ்ணவ ப்ரசார ஸபையின் சார்பாக அடியில் கண்டபடி வித்வான்களுக்கு பிருதுகளும் ஸம்மானங்களும் அளிக்கப்பட்டன.

### ஸ்ரீ தேசிக தர்சந பரமை காந்தி

(1) ஸ்ரீ. உப. வே. ஜடாப்ரும்ஹசாரி, ஆராவமுதாசாரியர்

### ஸ்ரீ தேசிக தர்சந விஜயத்வஜ:

(2) ” ஜயா கிருஷ்ண தாதாசாரியர் ஸ்வாமி.

(3) ” சேட்லூர் மஹாமஹோபாத்யாய நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி.

(4) ” திருக்கோட்டியூர் வித்வான் தேசிக தர்சநாசார்ய ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி.

(5) ” புத்தங்கோட்டம் ஸ்ரீனிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமட வித்வான், ஸ்ரீரங்கம்.

(6) ” தீக்ஷாசார்ய ஸ்வாமி, மஹாராஜா ஸம்ஸ்கிருத காலேஜ், மைசூர்.

### ஸ்ரீ தேசிக தர்சநாசார்ய:

(7) ” வெங்கடராமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், ஸ்ரீரங்கம்.

(8) ” காரக்குருச்சி தட்டை, கோபாலரங்காசார்ய ஸ்வாமி.

(9) ” திருக்கோஷ்டியூர் ஸ்ரீராம தேசிகாச்சார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.



### ஸ்ரீதேசிக தர்சநாநந்த:

(10) ஸ்ரீ. உ. ப. வே. ஸ்ரீவேங்கடாசார்யர், தேனூர்விளாகம்.

### ஸ்ரீ தேசிகதர்சந துரந்த்ர:

(11) ” இளங்காடு ரங்காசாரியர், காஞ்சீபுரம்.

(12) ” அம்மணம்பாக்கம் நரஸிம்ஹாசாரியர், ஸ்ரீ அஹோபிலமடம்.

(13) ” இளையவல்லி ஸ்ரீநிவாஸாசாரியர், திருக்குடந்தை.

(14) ” பரவஸ்து ஸ்ரீனிவாஸாசாரியர், சென்னை.

(15) ” சேட்லூர் ஸ்ரீனிவாஸமூர்த்தி ஐயங்கார், சென்னை.

(16) ” தேவநாதாசாரியர், நாவல்பாக்கம்.

(17) ” தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.

(18) ” டி. டி. தாதாசாரியர், பிரின்ஸிபல் ஸம்ஸகிருத காலேஜ், திருப்பதி

(19) ” உத்தமூர் வீரராகவாசாரியர், ஸம்ஸ்கிருத காலேஜ், திருப்ப்தி.

(20) ” நீலமேகாசாரியர், ஸ்ம்ஸ்கிருத காலேஜ் திருப்பதி.

(21) ” ப. லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியர், தேவனூர் விளாகம்.

(22) ” ஆயுர்வேத பண்டிட் வைத்திய ரத்ன மேல் பாக்கம் துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை.

(23) ” வெங்கடாத்ரி அகரம் அனந்தாசாரியர், சென்னை.

### ஸ்ரீ தேசிக தர்சந உத்தாரக:

(24) ” தி. ஈ. சடகோபாசாரியர், திருப்பாபுலியூர்.

(25) ” தோட்ட்டாலம் ராஜகோபாலாசாரியர்.

(26) ” கோமடம் ஸ்ரீனிவாஸ ஐய்யங்கார், சென்னை.

(27) ” ஆர். கேசவ ஐயங்கார், சென்னை.

(28) ” எஸ். லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியர், சென்னை.

(29) ” ஏ. ஸ்ரீனிவாஸராகவாசாரியர், புதுக்கோட்டை.

பிறகு காலத்தின் அவகாசக் குறைவினால் உபயகோஷ்டி கைங்கர்யபரர்கள் முதலியவர்களுடைய திருநாமங்கள் வாசிக்கப்பட்டு அவர்களுக்கு உள்ள ஸம்மானத்தை ஸபை கலைந்தபிறகு பெற்றுக் கொள்ளும்படி ப்ரார்த்திக்கப்பட்டது.

## அக்ராஸநரின் முடிவுரை

பிறகு அக்ரஸனுதிபதி—'இந்த மஹோத்ஸவத்தில் இந்த ஸம்பாவனையைச் செய்யும்படியான பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தது பெரும் பேறே. ஸபாத்யக்ஷரான ஸ்வாமி இது விஷயத்தை என்னிடத்தில் சற்று முன்பு கூடச் சொல்லவில்லை. அவரால் சொல்லப்பட்டபடியே ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவ ஜகத்தும் அந்யோந்யம் பக்தியுள்ளவர்களாய் பரஸ்பரம் ஸ்நேஹம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று எப்பொழுதும் ப்ரார்த்திக்க வேண்டியது நமது கடமை. இத்தால் மற்றவர்களிடத்தில் த்வேஷம் செய்யவேண்டும் என்பது இல்லை. நாம் ஒன்று சேர்ந்து குதூஹலத்துடனும் ப்ரீதியுடனும் இருக்கிறாப்போலே மற்றவர்களையும் நம்முடன் சேர்த்துக்கொண்டு பாராட்டி அனுபவிக்க ஸித்தமாயிருக்க வேண்டும். லோகத்திலுள்ள எல்லோருமே நம்மைப்போல் ஸந்தோஷமாயிருக்க வேண்டும் என்று ஆசைப்பப்பட வேண்டியதும் நமது கடமையாகும். இதுதான் எனது ப்ரார்த்தனை. இப்படிப்பட்ட உத்ஸாகத்தை நமக்கு உண்டுபண்ணிக் கொடுத்த ஸ்ரீமான். வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அரோகத்ருடகாத்திரராய் இன்னும் 1000 வருஷங்கள் இருக்கவேண்டும் என்றும் பகவானை ப்ரார்த்திக்கிறேன. அப்பொழுது நமது ஸம்ப்ரதாயத்திற்கு குறைவு என்பது இருக்காது. மற்றவர்களிடம் பணம் இருந்தால் அவர்கள் அதை நல்ல கார்யத்தில் செலவழிக்கலாம் கெட்ட கார்யத்திலும் செலவழிக்கலாம். ஆனல் நமது ஸ்ரீநிவாஸ அய்யங்காரிடம் பணம் இருந்தால் அது நமது ஸம்ப்ரதாய ப்ரவசனத்திற்காகவே உபயோகப்படும் என்பதில் யாதொரு சந்தேஹமுமில்லை. ஆகையினல் ஸர்வேச்வரன் அவருக்கு ஆரோக்கியத்தையும் அபரிமிதமான ஐச்வர்யத்தையும் அனுக்ரஹிக்கவேணுமாய் ப்ரார்திப்பதில் என்னுடன் எல்லோரும் சேரவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.'

பிறகு ஸ்ரீ. உப. தேசிகதர்சநதுரந்தர வி. அநந்தாசார்யர் ஸபையோர்களின் சார்பாக அக்ராஸனுதிபதியான ஸ்ரீ. உப. க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்காருக்கு வந்தனேபசாரத்தைத் தெரிவித்து ஆசார்ய ஸார்வ பௌமன் நமது ஸம்ப்ரதாயத்தில் நமக்கும் ச்ரத்தை உண்டாகும்படி அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்தார். பிறகு அத்யாபக கைங்கரியத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும், வேத பாராயண கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டது. நாலாயிரமும் ஸேவிக்கக் கூடியவர்களுக்கும், அசிதித்வயத்தையும் பாராயணம் பண்ணியவர்களுக்குமே ஸம்பாவனை செய்யப்ப்பட்டது. இந்த மஹோத்ஸவம் 10 தினங்களிலும் ஆறாயிரப்படி, ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகள் இவற்றைப்



பாராயணம் பண்ணிவந்தவர்களுக்கும் ஸ்தோத்திர பாட பரீக்ஷையில் முதன்மையில் நின்றவர்களுக்கும் ஸம்மானம் அளிக்கப்பட்டது.

பிறகு மாலை 6 மணிக்கு ஸ்ரீ தேசிகனுக்கு திரு வீதி உத்ஸவம் நடைபெற்றது. தாங்கள் ஸம்மானமாகப் பெற்ற புதிய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு உபய கோஷ்டிகளிலும் ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்த ப்ரகாரம் மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. வீதி உத்ஸவம் விசேஷ விபவத்துடன் நடத்தப்பட்டது. உத்ஸவத்தில் ஸேவை ஸாதித்த ஸ்ரீ தேசிக பக்தர்களின் ஸங்க்யை 3000 க்கு குறையாது. தெருவில் சுமார் அரை மைல் தூரம் இந்த கோஷ்டியே சென்று கொண்டிருந்தது. சின்ன காஞ்சீபுரம் சென்று ஊர்வலம் வந்து, சென்னை எம். டி. ப்ரதர்ஸ் கம்பெனியாரால் ஸ்ரீ ரங்கராஜவீதியில் கட்டப்பட்டிருக்கும் ஸ்ரீதேசிக தாசந புஸ்தக சாலையில் மண்டகப்படி கண்டருளி மீண்டும் ஆஸ்தானம் எழுந்தருளி உடனே ஸ்வாமிகளுக்கு ததீயாராதனம் நடந்தது. பிறகு நாலாயிரம் சாற்றுமுறையும் கோஷ்டி விநியோகமும் நடந்தது. உத்ஸவம் முடிய காலை 4 மணி ஆகிவிட்டது. மறுநாள் அசலூரில் இருந்து வந்த கைங்கர்ய பரர்களுக்கு உசிதமாக ரயில் சத்தமும் கொடுக்கப்பட்டது.

இந்த உத்ஸவம் முழுவதிலும் 'ராமாநுஜ தயாபாத்ரம்' தனியனை இரண்டு தடவை அநுஸந்திப்பது உசிதம் என்று பெரியோர்கள் நியமித்தபடியால் அப்படியே ஒவ்வொரு ஸமயமும் இரண்டு தடவை அநுஸந்திக்கப்பட்ட விஷயம் குறிப்பிடத் தக்கது.

---

ஸ்ரீ:

# உபநிஷத்துகளும் மோக்ஷஸ்வரூபமும்.

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி, தேசிக தர்சந துரந்தர, தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]

உபநிஷத் ஸித்தங்களான வைதிகர்களின் ஸம்ப்ரதாயங்களிலும் பல மதங்கள் உண்டாயிருக்கின்றன. அவை சாங்கரமதம், யாதவமதம், பாஸ்கரமதம், ராமாநுஜ மதம் ஆநந்த தீர்த்தமதம், நிம்பார்க்க மதம், சைதந்யமதம், ஸ்ரீ கண்ட மதம் என்று இது முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மதங்களுக்கு வேதங்களேயும் (உபநிஷத்துக்களேயும்) அவைகளே யநுஸரித்த ஸ்ம்ருதி புராண இதிஹாஸ ஆகமங்களேயும் ப்ரமாணமாகக் காட்டுவதுடன் ஒவ்வொருவரும் தங்கள் மதமே அந்த ப்ரமாணங்களுக்கு ஒத்திருக்கிறது என்றும் நம்பியிருக்கிறார்கள். உண்மையிலோ அம்மதங்கள் பரஸ்பர விரோத முள்ளவைகள். இப்படி பரஸ்பர விருத்தமான மதங்களே வேதம் தான் எப்படி போதிக்கக் கூடும்? அப்படி போதிக்குமாகில் அவ்வேதம் தான் ப்ரமாணமாவ தெப்படி? அப்பொழுது அது உந்மத்த வாக்யம் போலல்லவோ புலப்படும்! இதற்காக வேதமே ப்ரமாணமல்ல வென்று தான் கொள்ளப் போமோ? அப்படி கொள்வதற்கில்லே. அநாதிகாலமாக ஸர்வ சிஷ்டர்களாலும் ப்ரமாண தமமென்று பரிக்ரஹிக்கப்பட்டு வரும் வேதத்தில் ஈஷத்தும் குறை சொல்ல ந்யாய மில்லே. அதை வ்யாக்யாநம் செய்தவர்களிடத்திலேயே எங்காகிலும் குறை யிருந்திருக்க வேண்டுமே யல்லாது அக்குறையை மூலத்தில் ஏற்றி வைப்பது உசிதமல்ல. உண்மையில் ஒரு ப்ரமாண க்ரந்தம் ஒரு ரீதியான மதத்தை போதிக்குமே யல்லாது அதற்குக் கொஞ்சமேனும் மாறுபாடான மற்றொரு மதத்திற்கும் அது அநுகூல மாயிருக்கக் கூடுமென்று அங்கீகரிக்க இடமில்லே. ஆகையால் இத்தகைய பலமதங்களுள் ஒன்று தான் வேதஸித்தம் (வைதிகம்) மற்றது அத்தகைய தல்ல என்று நிச்சயமாகத் தீர்மானிக்க வேண்டிவருகிறது. ஆகையால் இவற்றுள் யாருடைய மதம் வேதஸித்தமானது என்று தீர்மானிப்பதும் மிக ச்ரமஸாத்யமான கார்யமே.

ஆயினும் அப்படி பரஸ்பர விருத்தங்களான சில மதங்களிலுள்ள ஸாரதமமான சிற்சில அம்சங்களே எடுத்துக் கொண்டு இவைகளில் எம் மதத்திற்கு உபநிஷத்துக்களின் அநுக்ரஹம் பூர்ணமாயிருக்கிறது, எம் மதத்திற்கு முற்றிலும் இல்லே என்று ஒருவாறு விசாரித்து நிச்சயித்தால் அந்த அம்சங்கள் அடங்கியிருக்கும் மதம் வேதஸித்தம் (வைதிகம்) என்று நாம் தைரியத்துடன் உத்கோஷிக்கலாமல்லவா? இந்த பரீக்ஷையே இந்த லேகநத்தின் ப்ரதானமான ப்ரயோஜநமாகும்.



இங்கு முதலில் மோக்ஷஸ்வ ரூபத்தை எடுத்துக்காட்டி எந்த மதஸ்தர்கள் சொல்லும் மோக்ஷம் வேதஸித்தம் என்ற அம்சத்தை நிரூபிப்போம். அதன் பின் மற்ற விஷயங்களேயும் நிரூபிக்கலாம். "அநாதிகர்ம ரூபமான அவித்யையால் மறைக்கப்பட்ட தன் ஸ்வாபாவிகமான குணங்களே யுடையனாய் ஸம்ஸரித்து வரும் ஜீவாத்மா ஒரு பகவது பாஸநத்தால் ஸ்தூல தேஹத்திலிருந்து மூர்தந்ய நாடியின் வழியால் வெளிக்கிளம்பி அர்சிராதி மார்கத்தால் அப்ராக்ருத தேசவிசேஷமான பரமபதம் சென்று நிரந்தர பரிபூர்ண பகவதநுபவம் செய்தல் மோக்ஷமாகும்" என்று விசிஷ்டாத்வைதிகளின் மதம் (ராமாநுஜ மதம்). இத்தால் இம்மதஸ்தர்கள் 'சித் அசித் ஈச்வரன்' என்ற தத்வத்ரயத்தையும் அவைகளின் ஸ்வாபாவிகமான பேதத்தையும் அங்கீகரித்தவர்களாகிறார்கள். இம்மதத்தையே சற்றேறக்குறைய (த்வைதிகளும்) ஆநந்த தீர்த்த மதஸ்தர்களும் அங்கீகரித்தவர்கள். சாங்கரமதஸ்தர்களோ வென்றால் இப்படிகளில் அப்ராக்ருத தேச விசேஷத்தில் அநுபவிக்கும் அநுபவ மெல்லாம் அநித்யமானதென்றும் நிர்குண ப்ரஹ்ம பாவந்தான் (தான் நிர்விசேஷ ப்ரஹ்மமாக ஆய்விடுகை) மோக்ஷ மென்றும் அதற்கு தேசவிசேஷாபேக்ஷயும் கமநாபேக்ஷயுமில்லே யென்றும் சொல்லுகிறார்கள். இதற்கு ப்ரமாணமாக '[illegible]' என்றிது முதலிய வாக்யங்களேக் காட்டுகிறார்கள்.

மோக்ஷஸ்வ ரூபத்தையும் அதற்கு அநுபந்தியான விஷயங்களேயும் நன்கு எடுத்துக் காட்டுகின்ற ப்ரமாண க்ரந்தங்களுள் ப்ரதானமானவை 'தசோப நிஷத்துக்கள்' என்ற பத்து உபநிஷத்துக்கள். மற்றும் நான்கு அல்லது ஐந்து உபநிஷத்துக்களும் இவற்றைப் போலவே ப்ரமாணங்களாக எல்லோராலு மங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுபநிஷத்துக்களின் அநுக்ரஹம் 'எம்மதத்தினருடைய மோக்ஷஸ்வரூபத்திற்கு இருக்கிறது' என்பதே இங்கு ப்ரதானமாக விசாரிக்கப்பட வேண்டிய விஷயம். இதற்கநுகுணமாக ஈசாவாஸ்யோபநிஷத் முதற்கொண்டு ஒவ்வொரு உபநிஷத்திலும் மோக்ஷஸ்வ ரூபத்தை நிரூபிக்கு மிடத்தை எடுத்துக் காட்டி எந்த மதத்தினருடைய மோக்ஷஸ்வ ரூபத்துக்கு அவ்வோ உபநிஷத்துக்களின் பரிபூர்ணநுக்ரஹ முண்டாயிருக்கிற தென்றும் அல்லது எதற்கு ஏக தேசத்தில் அவ்வநுக்ரஹமிருக்கிற தென்றும் அல்லது எதற்கு முற்றிலும் உபநிஷத்து விருத்தம் என்னு மம்சத்தை முதலில் நிரூபிப்போம்.

### ஈசாவாஸ்யோபநிஷத்

இவ்வுபநிஷத்து வாஜஸநேயஸம்ஹிதையின் கடைசி பாகம். இது சேதநன் அசேதநன் ஈச்வரன் என்கிற தத்வத்ரயத்தின் ஸ்வரூபத்தையும் பகவதுபாஸந தத்பலங்களேயும் விசதமாக போதிக்கிறபடியால் இதற்கு

உபநிஷத் என்கிற வ்யவஹாரம். அப்படியாகில் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் இதற்கும் அந்தர்பாவம் இருக்க வேண்டியதேயல்லாமல் ஸம்ஹிதையில் இதற்கு பாடம் எப்படி பொருந்துமெனில் ஸம்ஹிதையில் ப்ரதிபாதிக்கப்பட்ட கர்மகலாபம் முழுவதும் ப்ரஹ்மவித்யாங்கமாகவும் விதிக்கப்பட்டிருக்கிறதென்று தெறிவிப்பதற்காகவே கர்மகாண்டாந்தத்தில் இவ்வுபநிஷத்துக்கு பாடம் ஏற்பட்டபடி.

இதில் சேதநாசேதநாத்மகமான ஸமஸ்த ப்ரபஞ்சமும் பரமபுருஷாதீநமென்று முதலில் ப்ரஸ்தாபித்துக் கொண்டு முமுக்ஷுவுக்கு வைராக்ய பூஷிதமான வ்ருத்தியையும் உபதேசித்து கர்மயோக ஜ்ஞாந யோகங்களைப் பரிகரமாகக் கொண்ட பகவதுபாஸநத்தை விதித்து அதற்கு பலத்தைச் சொல்லும் பொழுது ப்ரஹ்மஸூத்ரங்களிலும் மற்ற வித்யாப்ரகரணங்களிலுமுள்ள ரீதியில் அர்சிராதி மார்கத்தைச் சொல்லி பலம் தலைக்கட்டியிருக்கிறது. இதில் கடைசி மந்த்ரம் *'அக்னே நய ஸுபதா ராயே' என்பது. இது அர்சிராதி மார்கபரம் என்று ஸ்ரீ சங்கரபாஷ்யம்.

இதில் 11வது மந்த்ரத்தில் 'வித்யயாம்ருதமச்நுதே' என்ற பாகத்தில் இங்கு விதித்த உபாஸநத்துக்குப் பலம் 'அம்ருதத்வ ப்ராப்தி' எனத் தெறிகிறது. இந்த 'அம்ருத' சப்தத்தால் 'தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி' என்கிற புருஷஸூக்தமும் உத்தர நாராயணநுவாகமும் ப்ரத்யபிஜ்ஞாபிதமாய் அங்கு "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்ட 'அப்ராக்ருத ஸதாந விசேஷத்தில் திவ்ய தேஜோமயமான திவ்ய மங்கள விக்ரஹத்துடன் கூடிய பகவானை யநுபவித்தல் இவ்வித்யைக்கு ப்ரயோஜநமென்று ஸ்பஷ்டமாகிறது. அவ்வாறே இவ்வுபநிஷத்தின் 16வது மந்த்ரத்தில் "யத்தே ரூபம் கல்யாணதமம் தத்தே பச்யாமி" 'நிரதிசய போக்யனை உமக்கும் ஸௌந்தர்யாதி குணாதிசயத்தால் மற்றவைகளை விட கல்யாணதமமான உம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தைக் காண விரும்புகிறேன்' என்று சொல்வதால் முன்சொன்ன உபாஸனத்துக்குப் பலமாகக் கூறிய 'அம்ருதத்வம்' 'ஆதித்ய வர்ண திவ்யமங்கள விக்ரஹத்துடன் கூடிய பகவதநுபவம்' என்று செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இதின் மேல் பாகம் அந்தர்யாமியை 'அஹம்' (நான்) என்று அநுஸந்திக்க வேணுமென்று சொல்லுகிறது. அங்கிருக்கும்

* ஓ அக்னியே! (முன் நின்று அழைத்துச் செல்லக்கூடிய பரமாத்மாவே) ராயே=சாச்வத தனமாகிய உன்னை அநுபவிக்கும் பொருட்டு, ஸுபதா=நல்ல மார்க்கத்தால் (அர்சிராதி மார்க்கத்தால்) நய=அழைத்துப் போ என்று இதன்பொருள். நல்ல மார்கம் என்றதால் (தூமாதி தக்ஷிணயண) மார்கத்திற்கு நிவ்ருத்தி.



'புருஷ' சப்தமும் அந்த உபாஸ்யன் புருஷஸூக்த ப்ரஸித்தமான ஆதித்யவர்ண திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டன் என்றே போதிக்கின்றதாகும்.

இவ்வளவால் சித் அசித் ஈச்வர தத்வங்களின் பேதம் உண்மையென்றும் அந்த ஈச்வரோபாஸநம் மோக்ஷோபாயம் என்றும் அந்த மோக்ஷமென்பது அர்சிராதி மார்கத்தால் தேசவிசேஷம் சென்று அந்த ஈச்வரனை யநுபவித்தல் என்றும் இந்த ஈசாவாஸ்யோபநிஷத்ப்ரதிபாத்யம் என்பது ஸ்பஷ்டமாயிற்று. இங்கு இந்த மோக்ஷம் அநித்யமான கர்ம பலமென்றோ அல்லது இதைவிட விலக்ஷணமானது மோக்ஷ பலமென்றோ சொல்லக்கூடிய ஒரு சப்தங்கூட இவ்வுபநிஷத்தில் காணப்படவில்லை. எங்கும் முதலில் தத்வ நிரூபணம் செய்து உபாஸநத்தை உபதேசித்து அதன் பலத்துடன் தலைக் கட்டுவதுதான் வழக்கமானது. அவ்வாறே இங்கு மிருப்பதை ஸ்பஷ்டமாகக் காணலாம். ஒவ்வொரு உபநிஷத்தும் அவ்வோ அதிகாரிக்கு அபேக்ஷிதமான தத்வஹித புருஷார்த்தங்களை போதிக்க ப்ரவர்த்தித்தது என்றது ஸர்வராலும் அங்கீக்ருதமான விஷயம். இதைவிட வேறு விலக்ஷணமான பலமுண்டாயிருந்தால் அதையல்லவோ உபநிஷத்தின் முடிவில் எடுத்துக் காட்டவேண்டும். அப்படியில்லாமல் அர்சிராதிமார்க ப்ரார்த்தனையுடனேயே முடித்திருப்பதால் அர்சிராதி க்ஷேத்ரஸாத்யமான பலந்தான் முமுக்ஷுக்களுக்கு அபேக்ஷிதமான மோக்ஷம் என்று இந்த ஈசாவாஸ்யோபநிஷத்தின் கருத்தென ஸ்பஷ்டமாகிறது. இவ்வாறே மற்ற உபநிஷத்துக்களையுமாராய்வோம்.

## கேநோபநிஷத்

இது ஸாமவேதத்தைச் சேர்ந்தது. இதற்கு தலவகாரோபநிஷத் என்றும் பெயருண்டு. இது நான்கு கண்டங்களடங்கியது. இதில் முதல் கண்டத்தின் முதல் வாக்யத்தில் சிஷ்யன் ஆசார்யனிடம் கேட்கிறான் 'அசேதநங்களான சக்ஷுஸ் ச்ரோத்ரம் மனஸ் ப்ராணன் முதலியவைகளுக்கு ப்ரேரகன் (ஏவுகிறவன்) யார்' என்று. அதற்கு ஸமாதானமான அடுத்த வாக்யத்தில் 'எது சக்ஷுராதி களால் ப்ரகாசிக்கப் பெறாமல் சக்ஷுராதிகளை ப்ரகாசிக்கும்படி செய்கிறதோ அது ப்ரஹ்மம்' என்று சொல்லி 'இவ்விதமுபாஸிக்கிறவர்கள் இந்த உலகத்திலிருந்து சென்று பரமபதமடைந்து முக்தர்களாகிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்யத்தில் 'அதிமுச்ய தீரா: ப்ரேத்யாஸ்மால்லோகாதம்ருதா பவந்தி' என்று இந்த லோகத்திலிருந்து சென்று முக்தராகிறார்களென்று ஸ்பஷ்டமாகக் கூறுவதாலும் 'அம்ருத' சப்தத்தால் முன்சொன்ன ரீதியில் புருஷ ஸூக்த ப்ரத்யபிஜ்ஞை ஏற்

பட்டு அதனால் அங்கு சொன்ன திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனான பரமாத்மாவை அநுபவிக்கிறார்களென்று அங்கீகரிக்க வேண்டியிருப்பதால் அது அர்சிராதி மார்க்கத்தால் தான் அடையக்கூடியதாதலால் இங்கிருக்கும் 'ப்ரேத்யாஸ்மால்லோகாத்' என்றதற்கு அர்சிராதி மார்க்கத்தால் பரமபதம் சென்று முக்தராகிறார்களென்று அர்த்தம் செய்ய வேண்டியவதச்யமாகிறது. மோக்ஷத்திற்கு லோகாந்தரகமநம் அபேக்ஷிதமில்லாமலிருந்தால் இந்த 'ப்ரேத்யாஸ்மால்லோகாத்' என்கிற பாகம் முற்றிலும் பொருந்தாது.

இவ்வர்த்தத்தை ப்ரபஞ்சநம் செய்வதற்காகவே ஏற்பட்டது இவ்வுபநிஷத்தின் மேல்பாகம் முழுவதும். அதில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ப்ரபஞ்சநம் செய்வதற்காக வந்தது முதல் இரண்டு கண்டங்கள் முழுவதும். அதை முடிக்கும் ஸமயத்திலும் இந்த வித்யைக்கு ப்ரயோஜநம் 'இந்த லோகத்திலிருந்து சென்று அம்ருதனாகிறா'னென்றே சொல்லியிருக்கிறது. இது ப்ரதான பலமானபடியால் ஆதரம் தோற்ற பல தடவைகளில் கூறப்படுகிறது. இவ்வுபநிஷத்தின் மூன்றாவது நான்காவது கண்டங்கள் முதலிரண்டு கண்டங்களில் சொன்ன அர்த்தத்தையே ஒரு ஆக்யாயிகை மூலம் நன்கு விஸ்தரிப்பித்துக் காட்டுகிறது. இரண்டாவது கண்டத்தின் முடிவிலிருக்கும் 'ஆத்மநா விந்ததே வீர்யம்' (வித்யா நிஷ்பத்திக்கு அநுகூலமான வீர்யம் பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் தான் பெறத்தக்கது) என்றதற்கு முக்யமாக உபப்ரஹ்மணம் மேலிரண்டு கண்டங்கள். இவற்றில் முதலில் ஒரு ஸமயம் தேவாஸுர யுத்தத்தில் பகவானுடைய அநுக்ரஹத்தால் தேவர்களுக்குக் கிடைத்த அஸுர விஜயத்தில் தேவர்கள் கர்வமடைந்து தங்கள் ஸாமர்த்யத்தாலேயே இந்த விஜயம் தங்களுக்கு ப்ராப்தமாயிற்றென்று இருந்த காலத்தில் அவர்களுக்கு நல் புத்தியைப் புகட்ட வெண்ணி ஸர்வேச்வரன் அவர்கள் முன் ஒரு யக்ஷரூபத்துடன் தோன்ற அதை இன்னதென்றறியமாட்டாத தேவர்கள் அதை ஒருவாறு அறிய விரும்பி தங்களுள் சிறந்த சக்தி வாய்ந்த அக்னியை யழைத்து நீர் சென்று இதை யறிந்து வாருமென்றனுப்ப அக்னியும் அந்த யக்ஷத்தினிடம் சென்றதும் அக்னியைப் பார்த்து 'நீர் யார்? உமக்கு என்ன சக்தி' என்று யக்ஷம் வினவ, அக்னி தன் பெயரைச் சொல்லி 'இப்புவியிலிருக்கும் எல்லாப் பொருள்களையும் கொளுத்துவேன்' என்றதும் அதற்கு யக்ஷம் அக்னியின் முன்னிலையில் ஒரு த்ருணத்தை வைத்து 'இதை கொளுத்தும்' என்று சொல்ல அக்னி தன் ஸர்வ சக்தியை உபயோகித்தும் அதைக் கொளுத்தமாட்டாமலும் அந்தயக்ஷத்தை இன்னதென்றறியமாட்டாமலும் திரும்பினான். பின் தேவர்கள் வாயுவை யழைத்து 'நீர் பார்த்து வாரும்' என்றனுப்ப அவரும் அருகில் சென்றதும் அந்த யக்ஷம



முன்மாதிரியே இவரையும் கேட்க அதற்கிவர் 'இப்புவியிலுள்ள எல்லாப் பொருள்களையும் நான் தூக்கிச் செல்வேன்' என்று பதில் கூறியதின் பேரில் முன்போலவே இவர் எதிரிலும் ஒரு த்ருணத்தை (புல்லை) வைத்து இதை யெடுத்துச் செல்லச் சொல்ல இவரும் தன் ஸர்வசக்தியை உபயோகித்தும் அதை யசைக்கக்கூட மாட்டாமல் வெட்கப்பட்டு திரும்பி வந்து விட்டார்.

பின் அதை இன்னதென்றறிய இந்திரன் தானே நேரில் சென்றான். உடனே அந்த யக்ஷம் மறைந்து விட்டது. அதே ஆகாசத்தில் மிக்க அழகு வாய்ந்த ஹிமவானின் புதல்வியான உமை தோன்றினாள். இந்திரன் அவளைக்கண்டு அந்த யக்ஷத்தின் ஸ்வரூபத்தை யறிவிக்குமாறு வேண்டினான். (மூன்றாம் கண்டம் முற்றிற்று; மேல் நான்காவது கண்டத்தில்) அதற்கு உமை "அது ப்ரஹ்மம். உண்மையில் அந்த ப்ரஹ்மம்தான் அஸுரர்களை ஜயித்தது. அந்த ஜயத்தை உங்களுடையதாக வெண்ணி நீங்கள் பெருமைகொண்டிருக்கிறீர்கள். ஆகவே அந்த அபிமாநத்தை விட்டு விடுங்கள்" என்று பதில் சொன்னாள்' என்று கதையை முடித்து "ஆகையால் மற்ற தேவர்களைவிட அக்னி வாயு இந்த்ரர்கள் உயர்ந்தவர்கள்; ஏனெனில் அவர்கள் தான் அந்த ப்ரஹ்மத்தை ஸமீபத்தில் தர்சித்தார்கள். அவர்களில் ஒருவன் இது ப்ரஹ்மம் என்று பார்வதியின் மூல மறிந்தான். அம்மூவர்களிலும் இந்த்ரனே மிகவும் உயர்ந்தவன். ஏனெனில் அவனே அந்த ப்ரஹ்மத்தை வெகு ஸமீபத்தில் தர்சித்ததுடன் அது ப்ரஹ்மம் என்று முதன் முதல் அறிந்துகொண்டதும் அவனே" என்று சொல்லி இந்த ஆக்யாயிகை முடிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு தேவர்களுக்குக் கிடைத்த அஸுர விஜயம் பரமாத்மாவின் ப்ரஸாதாதீனம் என்ற உதாஹரணத்தின் மூலம் 'சேதநர்கள் செய்யும் ஒவ்வொரு கார்யமும் ஸபலமாவது பரமாத்மாவின் அநுக்ரஹத்தின் மூலமாகத்தான்' என்று ஏற்படுவதால் 'வித்யாநிஷ்பத்திக்கு அநுகூலமான வீர்யம் பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் தான் ஏற்படுகிறது' என்றுதான் 'ஆத்மநா விந்ததே வீர்யம்' என்றதற்கு பொருள் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இந்த ஆக்யாயிகை அந்த வாக்யத்தின் பொருளை விஸ்தரிப்பித்து உபபாதனம் செய்ய வந்ததாகுமென்பது பொருந்தும்.

இவ்வளவால் சேதநாசேதநங்களின் பேதமும் இவைகளுக்கு நியாமகனான ஸர்வேச்வரனுடைய பேதமும் ப்ராமாணிகம் என்றதாயிற்று.

இப்படி இவ்வர்த்தத்தை ப்ரகாசிப்பித்து சாஸ்த்ரத்தை முடிக்கும் ஸமயத்திலும் "தஸ்யை தபோ தம: கர்மேதி ப்ரதிஷ்டா வேதா:

த்ருஷ்டி" என்று இவ்வுபநிஷத்தின் கடைசிவாக்கியம். இங்கு 'ஸநாதே' பதம் காலபரிச்சேத மில்லாமையைக் காட்டுகிறது. அதாவது:—நித்யம் என்று அதன் பொருள். 'ஜ்யேஷ்டே' என்றதற்கு ச்ரேஷ்டம் என்று பொருள். இதால் ஸர்வோத்க்ருஷ்ட மென்றதாயிற்று. இப்படி நித்யமாயும் ஸர்வோத்க்ருஷ்டமாயுமிருக்கும் தேசம் 'பரமபதம்' என்றும் 'வைகுண்டம்' என்றும் எல்லா உபநிஷத்துகளிலும் ப்ரஸித்தமானதே. இவ்வளவால் இந்த 'ஸுபாலோபநிஷத்' என்ற ஸுபாலோபநிஷத்தும் 'அப்ராக்ருததேச விசேஷம் சென்றுதான் அநுபவிக்கத்தக்கது மோக்ஷம்' என்ற அர்த்தத்தையே ஸ்திரப்படுத்தியதாயிற்று. மற்ற உபநிஷத்துகளின் விசாரம் அடுத்த ஸஞ்சிகையில்.

---

ஸ்ரீ:

# உபாகர்ம காயத்ரீ ஜபகால விசாரம்

[ஒரு ஸம்விமர்சி]

நிகழும் பஹுதான்ய ஸ்ம்வத்ஸர உபாகர்ம காயத்ரீவிஷயமாக நடக்கும் பண்டிதர்களின் சர்சையை ஆர்யதர்ம மித்திரன்கள் மூலமாக அறிந்து இனிமேல் வித்வான்களுக்கு இவ்விஷயத்தில் இம்மாதிரி ஸம்சயம் உதிக்காமைக்காக அதன்பேரில் கொஞ்சம் விமர்சம் செய்யப்படுகிறது. தர்மநிர்ணயத்தில் ஸ்தாலீபாக ப்ரகரணத்தில் உதாஹரிக்கப்பட்ட காத்யாயன லோகாக்ஷி வசனங்களில் பர்வப்ரதிபத் ஸந்தி வருங்காலத்தில் மறுநாள் ப்ரதமாதிதியின் வ்ருத்திஹ்ராஸ விபாகாநுகுணமாக பூர்வதினமான தர்சபூர்ணமாஸ திதிகளிலும் வ்ருத்திஹ்ராஸங்களைக் கொள்ளவேண்டும் என்று விதிக்கப்பட்டு இருக்கிறது.

அந்த வ்ருத்திஹ்ராஸங்களை கதாசித் உபாகர்மகாலமாக வரும் பர்வப்ரதிபத் ஸந்திவிஷயத்திலும் உபயோகப்படுத்தவேண்டுமா? வேண்டாமா? என்பது ஸந்தேஹம். வேண்டுமென்பது முதல் பக்ஷம்; கூடாது என்பது இரண்டாவது பக்ஷம். அதில் முதல் பக்ஷம் சாஸ்த்ரத்திற்கும் ந்யாயத்திற்கும் பொருந்தியதல்ல. இரண்டாம் பக்ஷமே அவ்விரண்டிக்கும் பொருந்தியதென்று இதில் நிரூபிக்கப்படுகிறது.

அதில் பூர்வபக்ஷீ 'பர்வஸந்தித்வா விசெஷாத்' இந்த தர்மங்களை அங்கும் ஏன் அதிதேசிக்கக் கூடாதென்கிறார். அது ஸரியன்று:—ஏனெனில்:—ந்யாயஸித்த தர்மமானால் அந்த ந்யாயப்ரவர்த்திக்கு அர்ஹமான ஸர்வஸ்தலத்திலும் அதிதேசிக்கலாம். இது வசனஸித்த தர்மமானையினால் இவ்வசனம் எந்த ப்ரகரணத்தில் படிக்கப்பட்டு இருக்கிறதோ



அந்த ப்ரகரணத்திலுள்ள பர்வத்திற்கு மாத்திரம்தான் இந்த தர்மம் வருமேயொழிய வேறு இடத்திற்கு இதைக்கொண்டுபோவது மீமாம்ஸா ந்யாயவிருத்தம்.

அப்படி ப்ரகரணஸித்த தர்மங்களை வேறு இடத்திற்குக் கொண்டு போகவேண்டுமானால் ப்ரகரணத்திற்கு மேல்பட்ட வாக்யமோ, லிங்கமோ, ஸ்மிருதியோ, வேண்டும். ஆகையினால் தான் ப்ராக்ருத ப்ரகரணத்தில் படிக்கப்பட்ட ப்ராக்ருத தர்மங்களை விக்ருதிக்கு கொண்டுபோக வேண்டுமானால் "ப்ரக்ருதிவத் விக்ருதி: கர்த்தவ்யா" இத்யாதி அதிதேச வாக்யகல்பநம் அபேக்ஷிக்கப்படுகின்றது.

ஸ்ருதப்ரகாசிகையிலும் (ஸ்ரீமத் ஸ்ருதப்ரகாசிகா 63 பக்கம்) "த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்ய: இதி வாக்ய விசார சமயத்தில் நந்வேவம் ஸர்வோபாஸனங்களுக்கும் தர்சந ஸமாநாகாரநிதித்யாஸந ரூபத்வம் ஸித்திக்காது. "த்ரஷ்டவ்ய:.....நிதித்யாஸிதவ்ய:" என்கிற வாக்யம் மைத்ரேயி ப்ராஹ்மணத்திலேயே இருப்பதால் அங்குள்ள வித்யை ஒன்றுக்கே அந்த ரூபம் வரும் என்று பூர்வபக்ஷம் பண்ணிக்கொண்டு எல்லா வித்யைகளுக்கும் விகல்பத்தை ஸூத்ரகாரரே சொல்லப்போகிறபடியால் துல்யபலஜநகத்வ ரூபவஸ்து ஸாமர்த்ய ரூபலிங்கபலத்தாலே இந்த தர்சந ஸமாநாகாரத்வத்தை எல்லாவித்யைக்கும் கொண்டுபோகலாம் ப்ரகரணத்தைக் காட்டிலும் லிங்கம் பலீயஸ், என்று சொல்லியிருக்கிறார்.

ப்ரஹ்மஸூத்ரம் 3-வது அத்யாயத்தில் ஆநந்தாதி கரணத்திலும் "ஆச்ரயமான ப்ரஹ்மம் எல்லா வித்யைகளிலும் உபாஸ்யமாக இருக்க அதை யாச்ரயித்து இருக்கும் குணங்களில்ஆநந்தாதிவித்யா ப்ரகரண படிதங்களான ஸத்யத்வஜ்ஞாநத்வாதிகளான ஐந்து குணங்கள் மாத்ரம் ஸர்வ வித்யைகளிலும் உபாஸ்யங்களாவானேன் என்னில் அர்தஸாமர்த்ய ரூபலிங்க பலத்தால் அவ்வைந்து குணங்களும் ஸர்வவித்யாநுயாயி களாகின்றன. இதர குணங்களுக்கு அம்மாதிரி லிங்க பலமில்லாமையால் அவ்வோப்ரகரண படிதங்கள் அவ்வோவித்யைகளிலு பாஸ்யங்களாகின்றனவென்று "ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய" என்கிற ஸூத்ரத்தில் நிர்ணயித்தார்.

ஆகையால் ஒரு ப்ரகரணத்தில் ஸித்தமான தர்மத்தை வாக்யலிங்காதி ப்ரபல ப்ரமாணமன்றிக்கே மற்றொரு இடத்திலதிதேசிப்பது ந்யாய விருத்தமே.

இந்த காத்யாயனலோகாக்ஷி வசனங்களை காலமாதவீய், நிர்ணயஸிந்து, தர்ம நிர்ணயாதி ஸவர்நி பந்தநகாரர்களும் ச்ரௌதஸ்மார்த இஷ்டி ப்ரகர

ணங்களிலேயே விசாரித்து இருப்பதாலும் ஒருவராவது மற்ற இடங்களில் இவ் வசனங்களை எடுக்கவில்லையாகயாலும் இவைகள் காத்யாயன லொக க்ஷயாதி ஸ்ம்ருதிகளிலும் இஷ்டி ப்ரகரணத்திலேயே இருக்கு மென்பதில் அநுமான ரீதியை யறிந்த ஒரு ப்ராமாணிகர்களுக்கும் விவாத முதியாது. மூலஸ்ம்ருதி கிடைத்தால் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கலாம். இவ்விஷயத்தில் “ஸ்ருவஸ்யபி லிஜ்ஞாநேநாவயவோஹ” என்கிற தோழப்பர் வாக்ய கடகமான “ஸ்ரு” ஶப்தமும் உபோத்பலகம்.

இதை ஆர்ய தர்மம் 28-6-38ல் 5-வது பக்கத்தில் “நிபந்தனகாரர்கள் இஷ்டி ப்ரகரணத்தில் இதை விசாரம் செய்து இருப்பது உண்மையே. இந்த விசாரம் இஷ்டி ப்ரகாரணத்தில் இருந்தாலும்” என்கிறவளவால் பூர்வபக்ஷிகளுமொப்புக் கொண்டதாகத் தெரிகிறது. ஆகையா லிஷ்டி ப்ரகரணத்தில் விஹித தர்மங்களை வாக்யலிங்காதிகள் இல்லாமல் இருக்கச் செய்தே உபாகர்ம விஷயத்திலும் அதிதேசிப்பது ந்யாயமாகாது.

ஸித்தாந்தமிப்படி இருக்க இந்த பூர்வபக்ஷிஸ்வாமி 9-7-38ல் சுதேசமித்திரன் 10-வது பக்கம் 1-வது பாராவில் “காத்யாயனுதி வசனங்களில் இஷ்டிபதம் இல்லாததினுல் இஷ்டி மாத்ர விஷயமென்று ஸங்கோசப்படுத்த ப்ரமாணமில்லை என்று நாம் எடுத்துக் காட்டி இருக்கிறோம்” என்று எழுதுகிறார்.

அப்படி இஷ்டிபதம் ச்லோகங்களிலிருந்தால் அவை வாக்யங்களாகும். அப்பொழுது வாக்யம் தான் இஷ்டி மாத்ரவிஷயமென்று ஸங்கோசப்படுத்த ஶக்தமென்றும் ப்ரகரணம் ஒரு தர்ம விஷயத்தில் ஏகாந்தேன ஒரு தர்மத்திற்கு விநியோஜகமாகாதென்றும் மீமாம்ஸாபிக்ஞரான இந்த ஸ்வாமியே நினைப்பது போல் தோன்றுகிறது. இது மத்யஸ்தர்களுக்கு ஸரியாகத் தோன்றவில்லை. அப்படியாகில் ப்ரயாஜாதிவிதாயக வாக்யங்களிலும் தர்ஶ பூர்ணமாஸ ஶப்தங்களை யபேக்ஷிக்க வேண்டி வரும்.

மேலும் முன் காட்டின ஆர்ய தர்மத்தில் காத்யாயனுதி வசநங்களை இஷ்டி ப்ரகரணத்திலிருப்பதாக ஒப்புக் கொண்ட விவர், ஸித்தாந்தி, வாக்யலிங்காதி ப்ரபல ப்ரமாணமன்றிக்கே ஒரு ப்ரகாண ஸித்ததர்மத்தை மற்றொரு ப்ரகரணத்திலதிதேசிக்கமுடியாதென்று உரைத்து, சுருதப்ரகாசிகையும் காட்டின பிறகு ஷை மித்திரன் 2-வது பாராவில் “காத்யாயனுதி வசனங்கள் அநாரப்யா தீதங்களாகத் தெரிகிறது. ஆதலால் பர்வ ப்ரதிபத் ஸந்திபதீமுள்ள மற்ற விதிகளுக்கும் பொதுவாகலாம். நிபந்தநகாரர்கள் இஷ்டி ப்ரகரணத்தில் இந்த வசனத்தை எடுத்திருப்பது



கொண்டு மாத்திரம் இவைகளுக்கு ப்ரகரணபாட மிருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகையால் ப்ரகரணத்தை பாதிக்கக் கூடிய லிங்கங்கள் அபேக்ஷிதங்களல்ல” என்கிறார். இது தத்காலமிப்படி அநாரப்யாதீதமென்று சொல்லிவைத்தால் ஸித்தாந்தி, மூலஸ்ம்ருதியை ஸம்பாதித்து இதற்கு ப்ரகரண பாடத்தை நிரூபிக்கும் பொழுது வேறு வழியை பார்த்துக்கொள்ளலாம் என்கிற எண்ணத்தால் எழுதுவது போல் மத்யஸ்தர்களுக்கு தோன்றுகிறது. இது ருஜுவான வழியன்று. எல்லா நிபந்தநகாரர்களும் இஷ்டி ப்ரகரணத்திலேயே இவ்வசனங்களை எழுதியிருப்பதாலும் இதர ப்ரகரணங்களிலெடாததாலும் இவ்வசனங்கள் மூலஸ்ம்ருதியிலும் இஷ்டி ப்ரகரணத்திலேயே இருக்க வேண்டுமென்று நிர்துஷ்டாநுமானமே ஸித்தாந்திக்கு, இவ்வசனங்களுக்கு இஷ்டி ப்ரகரண பாட ஸாதகம்.

இனியவர் மூலஸ்ம்ருதியைக் கொண்டு நிரூபிக்க வேண்டியதில்லை. “அநாரப்யாதீதங்களென்று தெரிகிறதென்று” எழுதும் இவர் தான் பூர்வோத்தர வசநங்களை எழுதி இவைகள் அநாரப்யாதீதங்களென்று நிரூபிக்கவேண்டும். இவரிதை அநுமானுதிகளாலே ஸாதிக்க முடியாது. இஷ்டி சப்தா கடிதத்வம் ஆரப்யாதீதாநாரப்யாதீதங்களுக்கு ஸாதாரணமாகையினுல் வ்யபிசரிதமாம். ஆகையால் அதை ஹேதுவாக்கி அநாரப்யாதீதத்வத்தை ஸாதிக்கமுடியாது. ஆகையினுல் அநுஷ்டேயமான கர்ம விஷயத்தில் தமக்கே நிச்சயமில்லாத விஷயத்தைச் சொல்லி எப்படியாவது உபாகர்ம விஷயத்தில் இந்த தர்மாதிதேசத்தை ஸாதிக்க நினைப்பது ஸிஷ்டாக்ரேஸராய் தர்மாநுஷ்டாநத்தில் மிக ச்ரத்தை உள்ளவரான பூர்வபக்ஷிஸ்வாமியின் மதஸிர்க்கே ஸரியாக இராதென்பது மத்யஸ்தாபிப்ராயம்.

அப்படியே அவ்வசனங்களை அநாரப்யாதீதங்களென்று வைத்துக் கொண்டாலும், ஸம்ப்ருத்யதிகாணந்யாயப்படி இவ்வசன ஸித்த வ்ருத்தி ஹ்ராஸ தர்மங்களை உபாகர்ம விஷயத்திலதிதேசிப்பது யுக்தமாகாது. ப்ருஹ்மஸூத்ரம் 3வது அத்யாயம் 3பா ஸம்ப்ருத்யதிகரணத்தில் அநாரப்யாதீதங்களான ஸம்ப்ருதித்யுவ்யாப்திகள் எல்லா உபாஸனங்களிலும் வருமா? வராதா? என்று விசாரித்து அல்பாயதந விஷயங்களான தஹர ஶாண்டில்யாதி வித்யைகளில் த்யுவ்யாப்தி அஶக்யோப ஸம்ஹார்யங்களாகையினுல் அங்கு வராது என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டு இருக்கிறது. அது போல் விரோதமிருப்பதால் உபாகர்ம விஷயத்திலும் இவர் சொல்லும் அநாரப்யாதீத தர்மங்கள் உபஸம்ஹரிக்க முடியாது. ஏனென்றால்: ஔதயிக பர்வத்திலேயே உபாகர்மம் செய்ய வேண்டுமென்று விதி. 12 நாழிகைக்கு கொஞ்சம் மேல்பட்ட பர்வம் ஔதயிகமென்றும், ஸங்க

வத்திற்கு மேல் 1 நாழிகை உள்ள பர்வம் ஔதயிகம் என்றும் இம்மாதிரி ரிஷிகளும் நிபந்தனகாரர்களும் நாழிகையை குறிப்பிட்டு ஔதயிக பர்வத்தை நிச்சயித்து இருக்கிறார்கள். இவர் சொல்லும் அநாரப்யாதீததர்மங்களை அங்கு உபஸம்ஹரித்தால் குறிப்பிட்ட நாழிகை மாறி ஔதயிக பர்வம் அந்யதாவாம். அதையப்படி மாற்ற, விரோதமில்லாத வேறு ஒருயிடத்தில் சரிதார்த்தமாகக் கூடிய அநாரப்யாதீதமான இந்த வசனத்திற்கு சக்தியில்லை. ஆகையால் இதில் இஷ்டாபத்தி பண்ணுவது மீமாம்ஸக ஸம்ருதயங்கமமாகாது.

ஆகையால் அநாரப்யாதீத பர்ணதை ப்ராக்ருதமாத்ரகாமியாகிறாப் போலவும், அநாரப்யாதீத ஸாப்ததச்யம் மித்ரவிந்தாதி மாத்ரகாமியாகிறாப் போலவும், அநாரப்யாதீத காத்யாயனாதி வசன ப்ராப்த தர்மங்களும் இஷ்டிமாத்ரத்திலேயே செல்லக்கூடியவைகளே யொழிய உபாகர்ம விஷயத்தில் செல்ல சக்தியற்றவைகள்.

மேலும் பூர்வபக்ஷிஸ்வாமி ஷை மித்திரன் ஷை பாராவிலேயே காத்யாயனதி வசனங்கள் விதாயகங்கள் என்றும், விதிரூபமாக இருப்பவைகள் மற்ற இடங்களில் வராதென்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் ஸ்தாலீபாக விஷயத்தில் இவர் என்ன பதில் சொல்லுகிறார்? என்றும் இம்மாதிரி பல விடங்களில் தர்ம சாஸ்த்ரங்களில் ச்ரௌத தேஷ்டி ப்ரகாணத்தில் படிக்கப்பட்ட காத்யாயன வசனத்தில் சொல்லும் தர்மங்களை ஸ்தாலீபாகத்தில் அதிதேசித்து இருப்பதுபோலும் அது ப்ராக்ருதத்தில் ஸித்தாந்திக்கு விருத்தம்போலவும் எழுதுகிறார். இது தர்மஜ்ஞர்களுக்கு விஸ்மயத்தை தருகிறது.

ஆகையால் ஸ்மிருதிவசனங்களெல்லாம் இரண்டிற்க்கும் பொதுவாகவே ப்ரவ்ருத்தங்கள். ஆகையால்தான் தசநிர்ணயீ க்ரந்தத்தில் தோழப்பர் "[illegible]" என்று ஆரம்பித்து "[illegible]" இத்யாதி வசனங்களாலே ஸ்தாலீபாக காலத்தைச் சொல்லி "[illegible]" என்றாரம்பித்து அதில் பலவசனங்களைச் சொல்லி "[illegible]" என்று ஆரம்பித்து காத்யாயனதி வசனங்களையும் உதாஹரித்து இருக்கிறார். காலமாதவீயாதிக்ரந்தங்களில் இப்படி இவர் ஸ்தாலீபாக ப்ரகரணத்தில் உதாஹரித்த பலவசனங்களையு முதாஹரித்து இந்த காத்யாயன வசனங்களும் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஸ்தாலீபாக விஷயத்தில் ஸர்வ தர்மங்களையும் வசனங்களாலேயே தோழப்பர் சொல்லியிருக்க, ஒரு நிபந்தனகாரர்களும் ச்ரதேஷ்டியிலிருந்து ஸ்தாலீபாகத்தில் தர்மாதி



தேசத்தை செய்யாமலிருக்க "அப்படியானால் ஸ்தாலீபாக விஷயத்தில் இவர் என்னபதில் சொல்லுவார்" என்று இவர் எழுதியிருப்பதற்கு காரணம் தெரியவில்லை. ச்ரௌதவிதிகள் எங்கேயாவது ஸ்மார்த்தத்தில் அதிதேசிக்கப்பட்டு இருந்தால் அந்த அதிதேச வாக்யமே ப்ரகரண பாதகம். ஆகையால் உபாகர்ம விஷயத்தில் இந்தவசனார்தம் வரவழியில்லை. அதனால் உபாகர்மாவையும் காயத்ரியையும் ஒரு தினத்தில் செய்வதே சோபனம்.

---

## காயத்ரீஜப கால நிர்ணயம்—2

[ஸ்ரீ. உப. தேசிகதர்சன விஜயத்வஜ, புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், —ஆஸ்தான வித்வான்,—ஸ்ரீ அஹோபிலமடம்,—ஸ்ரீரங்கம்]

காளயுக்தி பகுதான்ய ஸ்ரீ ஆடிமாதத்தில் அனுஷ்டிக்கப்பட்ட உபாகர்ம காயத்ரீஜபங்களை சாஸ்திரப்படி 27உ யான ஒரே தினத்தில் தான் செய்ய வேண்டுமென்று முன்னமேயே ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ மத்பரஹம்ஸேத்யாதி அழகிய சிங்கர்ஸன்னிதியில் பல வித்வான்களும் சேர்ந்து நிச்சயித்தார்கள்

அந்நிர்ணயம் அக்கினி ஹோத்ரம் ஸ்ரீ உ. வே. கோபால தேசிகாசாரியர்ஸ்வாமி திருவுள்ளத்துக்குப் பொருந்தாததினால் அந்தஸ்வாமி ஷை விஷயத்தை தூஷித்தும் வெவ்வேறு தினங்களில் அனுஷ்டிப்பது தான் ப்ராமாணிகமென்றும் எழுதி இருக்கிறார். அந்தஸ்வாமி பத்ரிகைகளில் அப்படி எழுதி இருந்தாலும் மிகவும் ப்ரஸித்தர்களான அனேகம் பண்டிதர்கள் இந்த விஷயத்தை நன்றாக விசாரித்துப்பார்த்து உபாகர்மாவையும் காயத்ரீஜபத்தையும் இந்த வருஷத்தில் ஒரே தினத்தில் செய்வது தான் சாஸ்திரஸம்மதமென்று நிச்சயித்து பெரும்பாலும் ஆடி ஸ்ரீ 27உ யன்று ஒரே தினத்தில் அனுஷ்டித்திருக்கிறார்கள்.

நடந்துபோன இந்த காயத்ரீ ஜப கால விஷயத்தில் இனிமேல் உதாஸீனமாக இருப்பதே உசிதமானாலும் இனிமேலும் வரப்போகிற வருஷங்களில் இம்மாதிரியான ஸந்தேகம் ஸம்பவிக்கலாமாகையால் அந்தஸ்வாமியினால் எழுதப்பட்ட தூஷணங்களைப் பரிஹரித்து வாஸ்தவமான சாஸ்திரார்த்தத்தை வெளியிடவேண்டுமென்று சில பெரியோர்களுடைய நியமனத்தினால் முடிந்துபோன விஷயத்தில் நாம் ப்ரவர்த்திக்கும்படி ஸம்பவித்திருக்கிறது.

## பூர்வ பக்ஷத்தின் ஸங்க்ரஹம்

காலமாதவீயம் நிர்ணயஸிந்து, தசநிர்ணயம், தீக்ஷிதீயம் போன்ற க்ரந்தங்களில் இஷ்டிப்ரகரணத்தில் (காத்யாயந:)

வஹெர் ஹி வபிகா ந்ரு ஙிநாஃ தயெவா ஹ்யிகாஷ்யாஃ ।
தஷய ஙூதா வஙெவஷீஸிது ஹ ாவல வ்ருதீ ப்ரயொஜயெசு ॥

லோகாக்ஷி:)

தீயெஃ வபரஸ்ராம் வடிகாஷூ யாஷூஃ
ந்ரு ஙிநாஷூயா வாஹ்யிகாஷூ தாவஸாம் ।
சயங் விபொஜ்யம் வ தயா ப்ரயொஜ்யம்
ஹ ாவெல வ வ்ருஸள ப்ரயஃ ஷிநெ வ்ஹாக ॥

என்கிற வசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

இதர்க்கு அர்த்தம்—ப்றதமை திதியானது வ்ருத்தியையோ-அல்லது குறைவையோ அடைந்துவருமானால், அந்த அதிகமானதாயும் குறைந்ததாயுமிருக்கும் ப்ரதமையினுடைய நாழிகைகளில் பாதிநாழிகையை பர்வ காலத்துடன் சேர்த்து ஸந்தி காலதத்தை தீர்மானிக்க வேண்டும் என்பதே. இந்த ச்லோகங்களில் உபாகர்மா என்றாவது அல்லது இஷ்டி என்றாவது ஒரு கர்மாவைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் ப்றதமை நாழியின் கூடுதல் குறைச்சலை அனுஸரித்து பர்வ கால ஸந்தியை தீர்மானிக்கவேண்டுமென்று இவ்வளவே சொல்லப்பட்டிருப்பதால், இந்த வசனங்கள் பர்வ ப்றதிபத் ஸந்தியை உபஜீவித்து கால நிர்ணயத்தை அடையக் கூடிய எல்லா கர்மாக்களிலும் ப்ரவர்த்திக்கலாம்.

ஆகையினால் பர்வப்ரதிபத் ஸந்தியை உபஜீவித்திருக்கிற இஷ்டி கர்மாவில் இந்த வசனங்கள் ப்றவர்த்தித்திருப்பது போல பர்வப்றதிபத் ஸந்தியை உபஜீவித்திருக்கிற உபாகர்ம விஷயத்திலும் இவ்வசனங்கள் ப்றவர்த்திக்க வேண்டியதவசியம். ஆகையால் இந்த வருஷத்தில் உபாகர்மாவும் காயத்ரீ ஜபமும் வெவ்வேருதினங்களில் அனுஷ்டிக்க வேண்டியதாகவே ஸம்பவிக்கிறதென்று. இந்த விஷயம் ப்ருமாணிகமல்லவென்பதர்க்கு காறணங்களைக் காட்டுவதர்க்கு முன்னம் ஓர் விஷயத்தை இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது.

ஆர்ய தர்ம பத்ரிகையில் எழுதி இருக்கிறபடி இந்த வசனங்கள் உபாகர்ம விஷயத்திலும் ப்றவர்த்திக்கவேண்டியது நியாயமாக இருக்கு



மானால் உபாகர்ம காயத்ரீஜப கால நிர்ணயங்களைச் செய்யக்கூடிய வச
னங்களை எல்லாம் எழுதி விஸ்தாரமாக விசாரித்து உபாகர்ம காயத்ரீ ஜப
காலத்தை தீர்மானித்திருக்கிற தச நிர்ணயம் வர்ஷாச்றமகாண்டம் நிர்ணய
ஸிந்து தர்ம ஸிந்து காலமாதவீயம் ஆண்டபிள்ளை காலப்றகாசிகை
ப்றபன்ன தர்ம ஸாரஸமுச்சயம் போன்ற மற்றும் அனேக நிபந்தன க்றந்
தங்களில் ஒன்றிலாவது இந்த ஸ்வாமி சொல்லுகிற விஷயம் விசாரிக்கப்பட்
டிருக்கலாம். அப்படி ஒரு க்ரந்தத்திலும் இவ்விஷயத்தின் ப்ரஸக்தியே
சொல்லப்படாததினால் இவ்வசனங்கள் உபாகர்ம விஷயத்தில் ப்ரவர்த்
திக்க யோக்யதை இல்லாதவைகள் என்பதே க்றந்தக்காரர்களின் அபிப்
பிறாயம். அல்லது எல்லா க்றந்தங்களிலும் இஷ்டிப்றகறணத்தில் எழுதப்
பட்டிருக்கும் இவ்வசனங்களை உபாகர்ம விஷயம் எழுதும்போது அவர்
கள் எல்லோரும் மறந்துவிட்டார்கள் என்று சொல்வது உசிதமாகுமா?

இந்த விஷயத்தில் இஷ்டியும் உபாகர்மாவும் அனுஷ்டேய காலத்
தைப் பற்றிய வரையில் நெருங்கிய ஸம்பந்தமுள்ளவை. ஸந்திஸ்ஸங்க
வத: பச்சாத்போன்ற வசனங்கள் உபாகர்மாவுக்கும் இஷ்டிக்கும் துல்ய
மாகவே இருக்கிறன. தவிர ஆவர்த்தன மத்யான்ஹ்நி பதங்களும் அவை
களின் அர்த்தமும் இறண்டிற்கும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆகையினால்
இஷ்டிகால நிர்ணயம் செய்தால் அது உபாகர்மாவுக்கும் ஏற்றது என்பது
நிபந்தனகாறர்களின் எண்ணம் என்று ஜூலை 28-ஆர்யதர்ம பத்ரிகை
யில் இதர்க்கு ஸமாதானம் எழுதப்பட்டிருக்கிறது.

அப்படி இஷ்டியினுடைய காலத்தை நிர்ணயித்ததினாலேயே உபா
கர்மாவினுடைய காலமும் நிர்ணயிக்கப்படுமானால்—நிபந்தன க்றந்தங்
ங்களில் எதிலாவது இஷ்டி கால நிர்ணயதின் கடைசியில் இதனால்
உபாகர்மாவினுடைய காலமும் நிர்ணயிக்கப்பட்டதாகிறது என்று எழுதி
இருக்கவேண்டியது உசிதமாகும். அல்லது—உபாகர்ம காலத்தையாவது
விசாறிக்காமலிருக்கவேண்டியது லாகவாத் உசிதமாகலாம். இதிருக்க
அனுஷ்டேய காலத்தைப் பற்றியவறையில் இஷ்டியும், உபா கர்மாவும்
நெருங்கிய ஸம்பந்தமுள்ளவை என்பதை விசாரிப்போம். உபாகர்மாவா
னது, வருஷத்தில் ஒரு தடவை அனுஷ்டிக்கப்பட வேண்டியது. இஷ்
டியோ வருஷத்துக்கு 24 தடவை அனுஷ்டிக்கப்படவேண்டியது. உபா
கர்மாவுக்கு கௌண காலம் அடுத்த பூர்ணிமை மட்டும். இஷ்டிக்கோ
ஸவெஙாஃவாரவக்ஷஃ வஙிணஙோவஸஹ்ய என்கிறபடியே 2 பக்ஷம் முழுவ
தும் காலமாகிறது.

ஸம்யியஙஷ்யவாராஹெஸ்யாகு யாமம் ப்ராதஃ வஹெZஹநி ।
கூவஙாணஃ ப்ரதிவஹூாமெ வதஙெஙZவிந ஜூஷ்யதி ॥

என்கிறபடி ப்றதமையின் 4—வது பாகத்திலும் இஷ்டி செய்யலாம். உபாகர்மாவை அப்பொழுது செய்வதில்லை. அனுஷ்டிக்கிற கால விஷயத்தில் இப்படி எவ்வளவோ வித்தியாஸமிருக்க இரண்டும் நெருங்கிய ஸம்பந்தமுள்ளவை என்று எப்படிச் சொல்லமுடியும். இனிமேல் பூர்வ பக்ஷிகளுடைய வாதத்தை விசாரிக்கிறோம்.

ஆர்யதர்மத்தில் கீழே காட்டிய காத்யாயந லோகாக்ஷ்யாதிவசனங்களை எழுதி, இந்த வசனங்கள் நிபந்தனக்றந்தகார்களினுல் இஷ்டிப்பிறகறணத்தில் எழுதப்பட்டிருந்தாலும் இவ்வசனங்களில் இவை இஷ்டிவிஷயங்கள் என்று சொல்வதற்கு ஸாதகங்களான சப்தங்களில்லாததினுல் இந்த வசனங்கள் பர்வ ப்ரதிபத்ஸந்தி விஷயங்களான எல்லாவிடங்களிலும் ப்ரவர்திக்கலாம் என்று எழுதப்பட்டிருக்கிறது.

காத்யாயநலோகாக்ஷி மகர்ஷிகளுடைய வசனங்களிரண்டிலும் இஷ்டியைக்குறிப்பிட கூடிய சப்தமில்லாததினுல் இந்த வசனங்கள் இஷ்டிவிஷயங்களல்லவென்று இந்த ஸ்வாமி சொல்வது போல இவ்விரண்டு வசனங்களிலும் பர்வப்ரதிபத்ஸந்தியைக் குறிப்பிடக்கூடிய சப்தங்களில்லாததினுல் இவைகளை, பர்வப்ரதிபத்ஸந்தி விஷயங்களென்றும் இந்தஸ்வாமியினுல் சொல்ல முடியாதாகையினுல் இந்தவசனங்கள் எல்லாவிஷயத்திலும் மேல் திதியினுடைய நாழிகையின் ஹ்றாஸவிருத்தியை பூர்வதிதியில் சேர்த்துக்கொள்ளும் படி விதிப்பதாகவே முடியும். அப்படியானுல் திதி வ்ரதங்களிலும் கண்ட திதி வ்ரதங்களிலும் இந்த ஹ்ராஸவ்ருத்திகள் ஸம்பவித்து அதினுல் ஷை விஷயகமான சிஷ்டாசாறங்களுக்கு விரோதம் ஏற்படும். வ்ரத திதிகளிலும் ச்ருத்த திதிகளிலும் ப்ரதமையினுடைய ஹ்றுஸவ்ருத்தியை பூர்வ திதியில்ச் சேர்த்துக் கொள்ளும்படி ஒருக்ரந்தத்திலுமில்லாததினுல் இது ஸர்வநிபந்தனக்றந்தங்களுக்கு விருத்தமாகும். ஆகையினுல் பூர்வபக்ஷி ச்ரார்த்த திதிவிஷயத்தில் ஷை ஹ்றாஸ விருத்தியை ஒப்புக்கொண்டு, இஷ்டாபத்தி என்று எழுதி இருப்பது உசிதமாகாது. இங்கு பூர்வபக்ஷிகள் ச்ருத்தமானது பர்வ ப்ரதிபத் ஸந்தியை உபஜீவித்து வந்ததல்லவாகையினுல் இந்த வசனங்கள் ச்ருத்த விஷயத்தில் ப்ரவர்த்திக்காதென்று எழுதி இருப்பதும் உசிதமல்ல. காத்யாயந லோகாக்ஷி வசனங்களைப் பர்வ ப்ரதிபத்ஸந்தி விஷயங்களை உபஜீவித்திருக்கிறதாகச் சொல்வதற்கே ப்றமாணமில்லை என்று நாம் சொல்லி இருப்பதால் இந்த ஹேது அஸித்தமல்லவா. தவிறவும் இப்படி கல்பிப்பதற்கு இந்த ஸ்வாமி திருவுள்ளம் தவிற வேறு ப்றமாணமில்லாததினுல் இது ப்ரமாணமாகாது.



ஆனுலும்—

வவ-ணி கூயமெ வூஜள வாவஸ்ாஜ்ஞ: கூயோயகி ।
கயஂ-ீ கூூ்ா யமா நா்யம்கிநெ வஂஙிவஂ- தாயொஜமெகு ॥

என்கிற காலாதர்சவசனத்தில் பர்வசப்தமும் பரதின சப்தமுமிருப்பதால் இந்த வசனமானது பர்வ ப்ரதிபத்ஸந்தி விஷயங்களான எல்லா விதிகளிலும் ப்ரவர்த்திக்கக் கூடுமாதலால் உபாகர்ம விஷயத்திலும் ப்றதமையினுடைய அதிக நாழிகையை பூர்ணிமையில் சேர்க்கலாமோ என்று இந்த ஸ்வாமி சங்கிக்ககூடும்.

இந்த வசனத்தில் ஸந்தி சப்தமில்லை. அது எப்படியானுலும் இந்த வசனம் மகர்ஷி வசனத்தைப் ப்றமாணமாகக் கொண்டு அதை அனுஸரித்து எழுதும் ஸ்வபாவமுள்ள மனிதனுடைய வாக்யம். ஆகையினுல் இந்த காலாதர்ச க்றந்தகாரர் எதை ப்ரமாணமாகக் கொண்டு பர்வ சப்தத்தைச் சேர்த்து எழுதி இருக்கிறுர் என்று ஆலோசித்தால் இவ்விஷயத்தில் ஷை காத்யாயந லோகாக்ஷி வசனங்களைத் தவிற வேறொரு வாக்யங்களைக் காணுததினுல் ஷை வசனங்கள் இஷ்டி ப்ரகறணத்தி லிருப்பதைக் கொண்டு இஷ்டிகாலமான பர்வ ப்ரதிபத்ஸந்தியைச் சேர்த்து வசனத்தை எழுதி இருப்பதாகச் சொல்வது உசிதமாகுமாகையினுல் இந்த காலாதர்ச வசனம் பூர்வபக்ஷஸாதகமாகாது. இதனுல் காலமாதவீயகாரிகையும் பூர்வபக்ஷ ஸாதகமாகாதென்று சொல்லப்பட்டதாகிறது. ஆகையினுல் பர்வப்ரதி பத்ஸந்தி வ்யவஸ்தையை விதிக்கிற வசனங்கள் உபாகர்ம விஷயத்தில் பரவர்த்திக்க பரஸக்தியே இல்லை. இது நிற்க, ஒரு ப்றகறணத்தில் விதிக்கப்பட்ட விஷயத்தைத் மற்றொரு ப்றகறணத்திலும் அன்வயிக்க வேண்டுமானுல் அதற்கு ஸாதகமான காறணம் அங்கு காட்டப்பட வேண்டுமாகையினுல் இஷ்டி ப்றகறணத்தில் சொல்லப்பட்ட இவ் வசனங்களை உபாகர்ம விஷயத்தில் அன்வயிப்பதற்கு தகுந்த காறணமில்லாததினுல் அங்கு இந்த வசனங்கள் ப்றவர்த்திக்கமாட்டா என்று எழுதி இருந்தோம். அதற்கு பூர்வ பக்ஷி ஸ்வாமீ அப்படியானுல்—இவ் வசனங்கள் ஸ்தாலீபாக விஷயத்தில் ப்ரவர்திக்காமல் போகட்டுமென்று ப்ரதிபந்தி கேட்டு இருக்கிறுர். இதை இந்த ஸ்வாமி புநருக்தி தோஷத்தையும் கவனிக்காமல் பலவிடத்தில் எழுதி இருப்பதால் இதை விஸ்தாரமாக நிரூபிக்கிறோம்.

## இஷ்டி சப்தார்த்தம்

யசுர்வேதம் காடகம் 3-வது ப்ரஶ்நத்தில் ஷெவெஹ்ா வெஷ்வெ-ா ஔாகஷிொா஽ஹவக இத்யாதி வாக்யங்கள் காணப்படுகின்றன. இதின்

அர்த்தமாவது ஒரு காலத்தில் தேவதைகள் விஷயத்தில் ஸ்வர்க்க லோகமானது மறைந்துபோய் விட்டதாகவும் தேவதைகள் ப்ரஜாபதியிடம் சென்று ஸ்வர்க்க லோகத்தைத் தேடிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், ப்ரஜாபதியானவர் ஸ்வர்க்கலோக த்தையக்ஞக்ரதுக்களினால்தேடிப்பார்த்து அது அகப்படாததினால் இஷ்டி என்கிற கர்மாக்களினால் தேடினதாகவும் அப்பொழுது ஸ்வர்க்க லோகம் அகப்பட்டதாகவும் ஸ்வர்க்க லோகத்தினுடைய அந்வேஷணத்திர்க்கு ஸாதநமானதினாலே ஏஷ்டிகள் என்று ப்ரஸித்தங்களான ஷெடி யாகங்களை தேவர்கள் இஷ்டிகள் என்று மறைத்துச் சொல்லிவிட்டதாகவும் ஷெடி யாகங்களுக்கு இஷ்டிகள் என்று பெயர் உண்டானதர்க்கு ஸ்வர்க்கலோகத்தைக் கண்டு பிடிக்க ஸாதனமானது தான் காறணமென்று சொல்லி அடுத்த மேல் அநுவாகங்களினால் சில இஷ்டி கர்மங்களையும் உதாஹரித்திருக்கிறது. அந்த கர்மங்களில் யூப ஸம்பந்தம் சொல்லப்படவில்லை.

இதர்க்கு பாஷ்யம் பண்ணின வித்யாரண்யர் ஈஜெஷண ஸாயஜ்ஞவா ஷிஷி நாஶஸம்வஞம் தேடப்பட்ட ஸ்வர்க்கம் கிடைத்ததர்க்கு இந்த கர்மங்கள் ஸாதநமானதால் இஷ்டி என்று பெயருண்டாயிற்று என்று எழுதி யூப ஸம்பந்தமுள்ள யாகங்கள் யக்ஞ க்ரதுக்கள் யூப ஸம்பந்தமில்லாதவைகள் இஷடிகள் என்றும் எழுதி இருக்கிறார். இதனால் இஷ்டி சப்தமானது யூப ஸம்பந்தமில்லாத யாகங்களில் யோக ரூடமென்று அவருடைய அபிப்பிராயமாக தோன்றுகிறது. ஆனால் இஷ்டி சப்தமானது யூப ஸம்பந்தமுடைய யாகங்களில் எங்கேயாவது ப்றயோகிக்கப்பட்டிருந்தாலும் அதை கௌண ப்ரயோகமென்ருவது அல்லது தேவ பூஜாவாசியான யஜதாதுவினால் நிஷ்பன்னமாகவாவது ஸமர்த்தித்து விடலாமென்றும் அவரபிப்பிருயமிருக்கலாம். இந்த இஷ்டிகள் ச்ரௌதங்களென்றும் ஸமார்த்தங்களென்றும் இறண்டு விதங்களாக இருக்கின்றன.

ஆகையினாலன்றோ

உவஜாமெஜயிஶாவெஷா வாயதி வ௱யஃ வவ–ணி ।
நாஹனெக ஷ்யஶாதிஷிம் ஜௌஜெ஻ வஜாஜா ஜாக௱யொஃ ॥

என்று ஸ்மார்தமான ஸ்தாலீபாக விஷயத்தில் இஷ்டி சப்தம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. ச்ரௌத விஷயத்திலும் இது ப்ரஸித்தம். இந்த வசனத்தை வைதிக ஸார்வ பௌமர் முதலிய எல்லா க்றந்த கர்த்தாக்களும் ஸ்தாலீபாக விஷயத்தில் எழுதி இருப்பதை வ்யக்தமாகப் பார்க்கிறோம்.

தவிற எல்லா நிபந்தன க்ரந்தங்களிலும் இஷ்டி கால நிர்ணயம் செய்யுமிடங்களில் ச்றௌத ஸ்மார்த்த பேதத்தைக் குறிப்பிடாமல் பொது



வாகவே இஷ்டி காலாதிகளை சொல்லி இருப்பதால் ஊஷஷிவாய கெ ஷா ஶாநெ஻ ஷ்ஶாணாநாம் வகூவாதஃ என்கிற ந்யாயத்தின்படி இரண்டு விதங்களான இஷ்டிகளிலு மிவ்வசனங்கள் ப்றவர்திப்பதை பாதிக்க முடியாது.

தவிறவும் இவ்வசனங்களை ச்ரௌதங்களான இஷ்டி மாத்ர விஷயத்தில் ஒதுக்கிவிட்டால் ஸ்மார்த்தங்களான இஷ்டிகளுக்கு வேறு கால விதாயக வசனமில்லாததினால் ச்ரௌதங்களான இஷ்டிகளை ஆரம்பிப்பதற்கு முன்னமேயே ஸ்மார்த்தங்களான ஸ்தலீபாகாதி இஷ்டிகளைப் பண்ணும்படி விதித்திருப்பதால் அவைகளுக்கு காலாகாங்க்ஷை இருப்பதால் இஷ்டி காலாதிகளை விதிக்கிற வசனங்களுக்கு ஸாமர்த்தங்களான இஷ்டிகளே முக்கிய விஷயங்களாகும். ஆகையினால் இஷ்டிகால விதாயக வசனங்கள் ஸ்மார்த்த இஷ்டியான ஸ்தாலீ பாகத்தில் ப்ரவர்த்திக்காமல் போகட்டுமென்று ஆபாதனம் பண்ணினது சரியல்ல. இவை எல்லாத்தையும் நினைத்து வைதிக ஸார்வ பௌமர்—ஊது ஸஂயிவிஜ்ஞாநெ நாவாயஶாஹ என்று இஷ்டி விஷய வசனங்களை ஸ்தாலீபாக விஷயத்தில் உபயோகப் படுத்திருக்கிறார்.

இதனால் இஷ்டிகால்ாதி விதாயக வசனங்களை ச்ரௌதங்களான இஷ்டி மாத்ரவிஷயங்களாக நினைத்து ஸ்மார்த்த இஷ்டியான ஸ்தாலீபாகத்தில் அதிதேசம் செய்திருப்பதாகவும் தோழப்ப்ரும் ஸ்தாலீபாகப்றகறணத்தில் இந்த அதிதேசத்தை அங்கீகறிப்பதிலிருந்து என்றும், ஆர்யதர்மம் ஜூலை 28-5ம் பக்கத்தில் எழுதி இருப்பது சரியானதல்ல என்று சொல்லப்பட்ட தாகிறது. தோழப்பரும் மற்றவர்களும் ஷெடி அதிதே சத்தை எழுத பிறஸக்தியு மில்லை அப்படி எழுதவுமில்லை என்பது ஷெடி க்றந்தங்களை கவனித்தால் வ்யக்தமாகும்.

இங்கு தோழப்பவர் ஸ்தாலீபாகநிர்ணயத்தில் ஊது ஸஂயிவரிஜ்ஞா நெநாவாய ஶாஹ—என்று எழுதிஇருக்றவாக்கியத்தில் ஊது சப்தத்திற்கு அந்த ஸந்தர்ப்பத்துக்கு பொருத்தமாக இஷ்டிப்றகறணத்தில் என்று எழுதி விட்டு ஸ்ரீ கோபால தேசிகாசாரியார்ஸ்வாமி தாம் ஊது சப்தத்திற்கு ஸந்நிவிசாறப்றகறணத்தில் என்று அர்த்தம் எழுதிஇருக்கிறார். இதின் ஔசித்யத்தை பண்டிதர்கள் கனிக்கவேண்டும். ஊது—என்பது ஸனதச் சப்த மாகையினால் ஸநீவதரவதி-ட வெதஷொாஷவ மென்கிற படியே மிகவும் சமீபத்தில் சொல்லப்பட்ட விஷயத்தைச் சொல்வது அதுக்குஸ்வபாவம் என்பது ப்றஸித்தம். இந்தவாக்கியத்திர்க்கு கீழே, இஷ்டியை அனுஷ்டிக்கவேண்டியகால மேதான் விசாரிக்கப்பட்டிருக்கிறது

ஸந்திவிசாறம் மேலே ஆறம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் தசநிர்ண யக்றந்தத்தைப்பார்த்தால் நன்கு விளங்கும். விஸ்தாரபயத்தினால் இவ் அவைகளை நாம் விரிவாக எழுதவில்லை. ஊர்த்வ என்கிற சப்தத்தினால் ஊ விசாறிக்கப்பட்ட இஷ்டியை சொல்வது பொருந்தா தென்றும் ஊ சொல்லப்படாமல் இனிமேல் ச்சொல்லப் போகிற ஸந்திவிசாரத்தை ஊர்த்வ சப்தத்தினால்ச் சொல்வதுதான் பொருந்தும் என்றும் எழுதிஇருப்பது சப்தஸ்வாரஸ்ய விருத்தமே.

ஸித்தாந்தம்

ஆக இந்த விசாறத்தினால், ஸ்ரீ. உ. வே. கோபால தேசிகாசாரிய ஸ்வாமி எழுதி இருக்கிறபடி ப்ரதமா திதியினுடைய வ்ருத்தி நாழிகைகளி பாதியை பூர்ணிமை திதி நாழிகையோடு சேர்த்து பர்வம் ப்ரதமைகளுட ஸந்தியை தீர்மானிக்கவேண்டுமென்று சொல்லுகிற வசனங்கள் எல்லா இஷ்டி கால நிர்ணய ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் ப்ரகரண பலத்தினால் இவ்வசனங்கள் வேருவிஷயமான உபாகர்மாவில் அந்வயிக்க கூடியவைகள். ஆகையினால் இந்த வருஷத்தில் உபாகர்மாவினுடைய ப்ர தமை திதியினுடைய வ்ருத்தியினால் ஏற்பட்ட சுமார் $15\frac{3}{4}$ நாழிகையை பூர் ணிமை நாழிகையுடன் சேர்க்க கூடாதாகையினால், பர்வ ப்ரதமைகளுட ஸந்தியாந்து மத்யான்னமென்று சொல்லப்படும் பகல் நடு நிமிஷத்திற்கு முந்தியே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே

ஸங்கவஸ்பர்ஶவதஃ ஶஸ்தாஶவஷா ஊர்த்வ்ருஜி நாஷ்ருஜி ।
தஸ்மிந்காலே க்ருதம் கர்ம ஸர்வஸ்ய ஶ்ருதிஃ ॥

என்கிற வசனத்தின் படி ஆடி மீ 27-ம் வ் வியாழக்கிழமை தினத்திலேயே உபாகர்மாவையும் காயத்ரீஜபத்தையும் செய்யவேண்டுமென்று ஏற்கனவே ஸ்ரீ அகோபிலமடத்தில் வித்வான்களால் செய்யப்பட்ட நிர்ணயத்திற்கு ஒருவிதமான பாதகப் ரஸக்தி இல்லாத்தினாலும் அதுவே சாஸ்திற ஸம்மத மாக இருப்பதாலும் பண்டிதர்களாலும் பெரியோர்களாலும் ஆதரிக்கப் பட்டு அநுஷ்டிக்கப்பட்டது.

---

ஸ்ரீ:

# ஸ்ரீ பராசரபட்டரின்

## (5)

## திருமஞ்சனக் கவிகள்

[ஸ்ரீ. ஸ்ரீ]

हरिः ओं ॥

सर्वस्मात्पर ! सांपरायसवने शक्तिस्तवेच्छात्मिका
पत्नी पात्रगणाश्च हेतिपतयः प्राप्तर्त्विजो बाहव
पौलस्त्याः पशवो दशाननमुखा रक्षा फलं ज्ञानिनां
श्रीमन् ! मज्जन कैतवादवभृथस्नातेव रङ्गेश्वर ! ॥ *

நாயிகேதே—

ஸர்வஸ்மாத் பர—ஸர்வசிரேஷ்டனே !
ஸ்ரீமந்—ஶ்ரிய: பதியே !
ரங்கேச்வர—ஸ்ரீரங்கநாத !
ஸாம்பராயஸவநே—யுத்தமென்னும் யஜ்ஞத்தில்
இச்சாத்மிகா—ஸங்கல்பரூபமான
தவ—உன்னுடைய
ஶக்தி:—ஶக்தியே
பத்நீ—பத்நியாகிறாள் ;
ஹேதிபதய:—ஆயுதச் சிரேஷ்டங்கள்
பாத்ரகணா:—(யாகத்திற்கு வேண்டிய) பல்வகைப் பாத்திரங்கள் ;
பாஹவ:—உம்திருக்கைகளே
ப்ராப்தர்த்விஜ:—ரித்விக்குக்கள்
பௌலஸ்த்யா:—புலஸ்த்யரின் வம்சத்தில் வந்தவர்களான
தஶாநநமுகா:—ராவணன் முதலானவர்கள்
பஶவ:—(யாகத்தில் கொல்லப்படும்) பசுக்கள் ;
ஜ்ஞாநிநாம்—உன்னிடத்தில் பக்தி செய்யும் ஞானிகளுடைய
ரக்ஷா—ரக்ஷணமே
பலம்—(இந்த யாகத்திற்குப்) பலம்
மஜ்ஜந—திருமஞ்சனம் செய்து கொள்ளுகிறது என்னும்
கைதவாத்—வ்யாஜத்தினால்
அவப்ருத ஸ்நாத இவ—யாகத்தை முடித்து) கடைசியில் மங்களமான புண்ய ஸ்நாநம் செய்து நிற்பவர் போல் இருக்கிறீர்.

* சென்ற தீபிகையில் திருமஞ்சனக் கவிகள் (4) வியாக்யானம் 191ம் பக்கத்தில் 'अनुकूल' என்பதை 'मनुकूल' என்று திருத்த வேணும். 192ம் பக்கத்தில் நாட்டில் காணும் ஆறேற' என்பது 'நாட்டில் ஆனேறு' என்று இருக்கலாம்.

"[1]यः सर्वज्ञः सर्ववित्" என்றும், "[2]परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च" என்றும் "[3]मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞராய் ஸர்வஶக்தியாய் அவாப்த-ஸமஸ்த-காமரான தேவரீர் லீலாவிபூதியான இந்த லோகத்திலே "रावणो नाम दुर्वृत्तः राक्षसो राक्षसेश्वरः" என்கிறபடியே தேவரீருடைய திருநாபீகமலத்திலே உத்பவனான ப்ரஹ்மாவினுடைய மாநஸ-புத்ரனான விஶ்ரவஸ் என்கிற மஹர்ஷிக்கு ராவணன் என்கிற பெயரையுடைய ராக்ஷஸ ராஜன் புத்ரனாக, "[4]नैनं सूर्यः प्रतपति पार्श्वे वाति न मारुतः। चलोर्मिमाली तं दृष्ट्वा समुद्रोऽपि न कंपते" என்கிறபடியே 'அவனுடைய ஆஜ்ஞைக்குப் பயப்பட்டு ஸூர்யனும் தன் கிரணங்களை விளங்கவிடான்; வாயு ஸ்பர்ஶிக்கவும் பயப்படும்; ம்ருத்யுதான் பயஹேதுவாயிருக்க, பயம் தன்னதாய்க் கொண்டு அவனுடைய நியமனத்திலே வர்த்தியா நிற்கும்; ஸமுத்ரமும் அவனுடைய முத்ரா-தாரணம் பண்ணினாற்போலே ஸ்தம்பியா நிற்கும்;'[5] ஸ்தாணுவை கைலாஸத்தோடே சலிப்பித்தும், வைஶ்ரவணனை ஶ்ரவண-ரஹிதனைப் போலே புஷ்பகத்தைத் தன்னதாக்கியும், யஜ்ஞங்களை அழித்தும், ரிஷிகளை நலிந்தும், இப்படிக்கொத்த துர்வ்ருத்தனாகையாலே ப்ரஹ்மாதி ஸகல தேவதைகளும் தப்தராய் [6]"छायावृक्ष इव अध्वगाः" என்று சொல்லுகிறபடியே தேவரீரை சரணம் புகுந்தவளவிலே [7]"ततः पद्मपलाशाक्षः कृत्वाऽऽत्मानं चतुर्विधम् पितरं रोचयामास तदा दशरथं नृपं" என்று தேவரீர் தஶரதாத்மஜராக அவதீர்ணராய் [8]அவந-ப்ரவ்ருத்தர் ஆக வந-ப்ரவ்ருத்தரான காலத்திலே, தஶமுகன் [9]ஹிரண்யாபஹாரம் செய்தவர்களைப் போலே ஹிரண்யவர்ணையான பிராட்டியை சௌர்யத்தாலே கொண்டுபோக; தேவரும் மஹாராஜருடனே புறப்பட்டருளி ஸமுத்ரத்தை பந்தித்து அதாக்ஷிண்ய-பாராவாகையாலே யுத்தத்திலே தீக்ஷித்தருளி எழுந்தருளி நிற்கும் நிலை இங்ஙனே இராநின்றது. அது எங்ஙனே யென்னில்:

ஸர்வஸ்மாத் பர! ஸாம்பராய-ஸவநே ஶக்தி: தவ இச்சாத்மிகா பத்நீ—"इच्छाशक्तिरियं लक्ष्मीः" என்கிறபடியே இச்சா-ஶக்தி பத்நியாகவும்;

பாத்ர-கணஶ்ச ஹேதிபதய:—"दश यज्ञायुधान्यस्य चक्रादीन्यायुधानि च" என்கிறபடியே திவ்யாயுதங்களே யஜ்ஞ-பாத்திரங்களாகவும்;

ப்ராப்தர்த்விஜோ பாஹவ:—"चत्वार ऋत्विजः समुत्तिष्ठन्ति", "ऋत्विजः षोडश भुजाः" என்று சொல்லுகிறபடியே திருத்தோள்கள் ரித்விக்குக்களாகவும்;

பௌலஸ்த்யா: பஶவ: தஶாநந-முகா:—"स्वभक्त [10]प्रत्यनीका ये पशवोऽत्र प्रकीर्तिताः" என்று சொல்லுகிற படியே ராவண-கும்பகர்ணாதிகள் பசுக்களாகவும், கும்ப-நிகும்பாதிகள் ஸமித்துக்களாகவும், நின் தன் சோதி வெள்ளம் அக்னியாகவும்;

ரக்ஷா பலம் ஞாநிநாம்—ஸத்துக்கள் விஷயமான தேவரீருடைய நிர்ஹேதுக-க்ருபை தக்ஷிணையாகவும்;

ஸ்ரீமந் மஜ்ஜந-கைதவாத் அவப்ருத-ஸ்நாதா இவ ரங்கேஶ்வர! ஆக இப்படி ஸங்க்ராம-யஜ்ஞத்தை முடித்து அவப்ருத-ஸ்நாநம் பண்ணி எழுந்தருளி நிற்கிற நிலைபோலே இரா நின்றது.

हरिः ओं ॥

---

1. எவன் பெரிய விஷயங்களையும் நுட்பமான விஷயங்களையும் அறிகிறானோ.

2. இவனுக்கு உத்க்ருஷ்டமானதும் ஸ்வாபாவிகமானதுமான சக்தி இருக்கிறது என்று கூறப்படுகிறது; ஞானம் பலம் நியமனம் இவையும் அவனுக்கு ஸஹஜமாகவே இருக்கின்றன.

3. அர்ஜுந! என்னிலும் சிரியது வேறொன்று மில்லை.

4. இவனை ஸூர்யன் தஹிப்பதில்லை; இவன் பக்கத்திலும் காற்று அடிப்பதில்லை; அசையும் ஸ்வபாவமுள்ள அலைகளையுடைய ஸமுத்ரமும் இவனைக் கண்டதும் அசைவற்று நிற்கிறது.

5. स्थाणु—பரமசிவனை.

6. வழிப்போக்கர்கள் நிழலுள்ள மரத்தை (அணுகுவது போல.

7. (தேவதைகள் பிரார்த்திக்க ஆரம்பித்தால்) மலர்ந்த தாமரைப்போன்ற கண்களையுடைய பகவான் தன்னை நாலாக வகுத்து, தான் பிறப்பதற்கு ஏற்றவன் தசரதனே என்று நிச்சயித்தான்.

8. अवनप्रवृत्त-ரக்ஷிக்கும் பொருட்டு; वनप्रवृत्त-காட்டுக்குச் செல்பவாக.

9. பொன்னைத் திருடுவோரைப் போல பொன்னியான பிராட்டியை அபஹரிக்க.

10. தன்னுடைய பக்தர்களுக்கு விரோதிகளே இங்கு 'பசுக்கள்' எனப்படுகிறார்கள்.

# மையல் செய்த மணவாளர்

[ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜதாஸன்.]

(200-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஒதுங்கி நிற்க முயல்வோரையும், வலிந்து திருத்தி ஆட்கொண்டருளும் அருட்பெருவள்ளலன்றோ நீ? கால சக்கரமும், நீ இட்ட வழக்கன்றோ? உனது வீரத் திருவாழியை, எத்தகைய தடையினாலேனும் தடுத்து நிறுத்த முடியுமோ? முனிவர்கள் அமரர்கள் முதலிய அன்பர்களின் முறையீட்டைக் கேட்டருள்வதற்காக, வெண்மையான பாற்கடல் மீது ஒரு நீலக்கடல் போலும் கிடந்தருளிய பெருமானே! அன்பர்களிடம் கொண்டருளிய கருணைப் பெருக்கினால், அரவணையையும் விட்டு ஆயர்பாடியில் தோன்றி வளர்ந்து ஆயர்களுடன் கலந்து விளையாடிய கண்ணபிரானே! அவ்விருநிலைகளிலும் உன்னைக் காணப்பெறாதொழிந்தவர்களின் குறைகள் தீருமாறு, நீலச் சேல்கள் பாய்ந்து விளையாடும் நீர்வளமுடைய திருவரங்கப் பெருநகரிலே திருக்கோயில் கொண்டு கிடந்தருளும் பெருமானே! எனது உடலும் உயிரும் ஒருங்கே குளிரும்படி நான் படிந்து குடைந்தாடக் கிடக்கும் புனிதத் துறையே!"— என்று உன்னை ஓலமிட்டழைத்துக் கலங்கிக் கிடந்தாள் இவள். அழகு பொருந்தி நீண்டு குளிர்ந்த கண்கள், நீர் சொரிய இருந்து வருந்தினாள் இவள். உன்னைத் தழுவிப் படர்ந்து வளர்ந்து மலர்ந்து அழகு மிகுந்து விளங்கத் தகுந்த மெல்லிய மல்லிகைக்கொடி போன்ற இவளை, இவ்வாறு தளர்ந்து உலர்ந்து தரையில் கிடந்து தவிக்கும்படி விட்டுவிடுவதும் முறைதானோ?

"பரத்வத்தின் தனிப் பெருஞ் சிறப்பு தோன்ற, வைகுந்தமா நகரிலே நித்ய ஸூரிகளான வேர்களுக்கு நீலக் கொழுந்து போல எழுந்தருளியிருக்கும் தனிப் பெருந் தலைவனே! உனது ஸௌலப்ய விசேஷத்தை உணர்த்தியருள, ஆயர் பாடியில் பிறந்து வளர்ந்து, குன்று குடையாக எடுத்து நின்று, பசுக்களைக் காத்தருளிய பரம கருணாநிதியே!"— என்று உனது பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் சிந்தித்து வியந்து கிடந்தாள் இவள். அத்தகைய ரக்ஷணம் தன்னளவில் பயன் படாதொழிந்ததை எண்ணி எண்ணி, அகம் கரைந்து உருகி, ஒரு இளங் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதாள்; வேறு புகல் எதுவும் இல்லாதாரைப் போலவும், வேதாந்த ஞானம் மிகுந்த ப்ரபந்நர்களைப் போலவும் இரு கைகளையும் கூப்பித் தொழுதாள். அப்போதும் நீ இவள் முன் வாராதொழிந்ததால், உயிர் முழுதும் வெம்பி எரியும்படி அனல் வீச நெடுமூச்செறிந்



தாள். "எனது நெஞ்சில் ஓங்கி எரியும் காதல் தீயிலே கருணை நீரைச் சொரிந்து அணைத்துத் தணித்தருள அஞ்சன மேனியுடன் வந்து தோன்றாயோ?"— என்று உன்னை நோக்கி ஓலமிட்டு ஏங்கிக் கிடந்தாள் இவள். உனது வடிவழகை நினைத்தவுடனே நெஞ்சில் எழுந்ததொரு புதிய உற்சாகத்தினால் எழுந்து நின்ற இவள், ஆர்த்த த்வநி கேட்டபின்பேனும் நீ வருவாயோ என்ற ஆவற் பெருக்கினாலே, இமையாத கண்களுடன் நீல வானத்தை உற்று நோக்கி நின்றாள். அப்பொழுதும் நீ வாராதொழிந்ததால் பெரிதும் அயர்ந்து அமர்ந்த இவள், 'உன்னைக் காணும் உபாயந்தான் என்ன?'— என்று ஏங்கலானாள். குளிர் சோலை சூழ் பெரிய கோயில் குடிகொண்ட செங்கோல் அரங் கேசப் பெருமானே! எனது செல்வத் திருமகளாகிய இவள், உன்னையும் பெரிய பிராட்டியையும் சேர்த்தியில் கண்டு களிக்க விரும்பி நிற்கும் ஏற்றமுடையவளல்லவோ? மேன்மேலும் பெருகிக் கொண்டேயிருக்கிற இவளது ஆவலை அடக்கி அளவுபடுத்துவது, என்னால் முடியக் கூடியதோ?

"எனக்கு ஸ்வாமிநியாகவும், ஸர்வலோக மஹேச்வரியாகவும், ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததியாகவும், புருஷகார பூதையாகவும் இருக்கும் பெரிய பிராட்டியார், பெருமகிழ்வுடன் சேர்ந்திருக்கும் திரு மார்பை உடைய பெருமானே! உனது திருமார்பை விட்டு அவள் ஒரு கணமேனும் பிரிந்திருந்தாலன்றோ, எனக்குப் பேறு தாழ்க்கவேண்டுவது? பெரியபிராட்டியாரும் நீயுமான அச் சேர்த்தியழகைப் பற்றிய சிந்தனை ஒன்றினாலேயே, என்னை இன்னும் இவ்வுடலில் தரித்து நிற்கச் செய்து நிற்கும் இன்னுயிராகி நிற்கும் எனது தனிப்பெருந் தலைவனே! 'நீல வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்ததொப்ப' கோல வராகமாகி ப்ரளயத்திலே முழுகி உனது வெண் பிறைப் பல்லினால் நீ இடந்தெடுத்து அணைத்துக் கொண்டவளும், 'உன்னுடைய குணங்களாலே தாஸ்யமுபாகதை' யானவளும், உன்முகத்தைச் சேதநர் பக்கலில் நோக்கச் செய்வித்து அந்த அடியவர்களின் பிழைகளைப் பொறுத்துத் திருத்திப் பணி கொண்டருளுமாறு உன்னைத் தூண்டி தனது புன்னகையால் உனது அகத்தையும் முகத்தையும் ஒருங்கே குளிர்விப்பவளுமான பூமிப்பிராட்டியாரின் வீர நாயகனே! அன்று, இடிபோன்ற கடுங்குரலையுடைய ஏழு விடைகளையும் தழுவி யடக்கி வெற்றி மாலை சூடி நின்ற உன்னால் கைப்பற்றப் பெற்றவளும், 'தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யலாவண்ய யௌவநாதி அஸங்க்யேய கல்யாண குணங்களாலே பரம போக்ய பூதையானவ'ளும், தனது இணையற்ற வடிவழகினால் உன்னை மயக்கி நிற்பவளுமான நப்பின்னைப் பிராட்டியின் அன்பு வலையில் சிக்கிக்கொண்டு கிடக்கும் பரம ரஸிக சிகாமணியே! அவ்வாறு அப் பிராட்டிமார் மூவர்க்கும் உதவிய நீ, அவர்களது அடியவளாய்—

அவர்களது பெருங் கருணைக்கு உரியவளாயிருக்கும் என் பக்கலில் இனியும் திருவுள்ளம் இரங்காமல் பராமுகமாயிருப்பாயாயின், என் பொருட்டு அவர்கள் உன்னிடம் கொள்ளக்கூடிய சினத்தை, நீ எவ்விதத்தில் தணிக்க முடியும்?"— என்று உனது பிராட்டிமார் மூவரையும் முன்னிட்டு உன்னைக் கூவியழைத்தும், நீ இவள் முன் வந்து தோன்றியபாடில்லை. தென் திருவரங்கத்தில் நீ நித்ய வாஸம் செய்து கொண்டிருப்பது, என்றென்றும் உனது மெய்யன்பர்களுக்கு அருள் செய்வதற்காகவன்றோ? நீ பெரிய கோயிலிலே திருவனந்தாழ்வான் மேல் கிடந்தருள்வது, 'மா ஶுச:' ('வருந்தாதே!'—) என்று பார்த்தனுக்குப் பணித்ததை, மெய்யன்பர்கள் எல்லோர் பக்கலிலும் பணித்து, அன்பர்களின் அல்லலகற்றி அருள் செய்வதற்காகவல்லவா? இந்நிலையிலே, உன் எதிரிலே நிற்கும் இவள் விஷயத்தில், 'ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:' ('ஐயம் நீங்கி உறுதியடைந்தேன்')—என்ற பார்த்தனைப் போல், நான் கொண்ட கவலை நீங்கி ஆறுதல் பெற்று மனம் தெளிந்து களித்து நிற்கும்படி, இவளது துயரை இனியேனும் நீக்கியருள்வதாக வாக்களித்தருள்வது உனது கடமையல்லவா?

"அடியேன் அநுபவிக்கும் கொடுந்துயருக்கு, என்றுதான் முடிவு உண்டாகுமோ அறியேன். மூவுலகங்களுக்கும் தலைவனான இந்திரனுக்கு அந்தர்யாமியாயிருந்து, அவனது அதிகாரத்தை நடத்தும் பெருமானே! நறுமணம் கமழும் கொன்றை மலர்களை அணிந்த சடைமுடியனான சங்கரனுக்கு அந்தர்யாமியாக நின்று, அவன் பதவியை நிர்வகிப்பவனே! அவ களுக்கும் மற்ற உயிர்களுக்கும் நிர்வாஹகனாயிருக்கிற நான்முகனுக்கும் அந்தர்யாமியாக நின்று அவனது தொழிலை நடத்தும் தெய்வ நாயகனே இடையறாத பகவதநுபவத்தால் உடல் பூரித்து உள்ளம் மகிழ்ந்து நிற்கும் நித்யஸூரிகளின் தனிப்பெருந் தலைவனே! நித்ய ஸூரிகளே அநுபவித் துக்கொண்டிருந்த உனது வடிவழகை, நித்ய ஸம்ஸாரிகளும் அநுபவித்து உய்யவேண்டுமென்ற கருணைப் பெருக்கினாலன்றோ, நீ திருவரங்கப்பெரு நகரை அடைந்து அரவணைமேல் கண் வளர்ந்தருளுகிறது? அவ்வடிவழகை இதுவரை நான் அனுபவித்த துயரங்களெல்லாம் தணியும்படி, அமைதி யான நெஞ்சுடன் கண் குளிரக் கண்டு ஆனந்திக்க நேரும் நாள் எ காளோ?"—என்று பெரிதும் ஏங்கி நின்றாள் இவள். இனி, இவளின எதிர்கால வாழ்வு, உனது திருவுள்ளத்தையே பொறுத்திருக்கிறது."—என்று முறையிட்டு நின்றாள் தாயார்.

அவ்வேளையிலே, குனிந்த தலை நிமிராமல் திருமணத்தூணை அணைந் நின்ற அவ்விள மங்கையின் நெஞ்சக் கோயிலிலே, அவளை மையல் செய்து மனம் களர்ந்து கொண்டருளிய 'அழகுக்கு ஆரும் ஒவ்வாத அழகிய மணவாளப் பெருமாள்', அருட்காட்சி அளித்து நின்றார். அவ்வருட்காட்சியைக் கண்டு அவளது உள்ளம் ஆனந்தித்த அதே வேளையிலே அம் மகிழ்ச்சிப் பெருக்கினால் அவளது முகம் நிமிர்ந்துவிடவும், அவளது கருங்கண்கள் அரவணையில் கிடக்கும் முகில்வண்ணனாகிய பெரிய பெருமாளது திருவடித் தாமரைகளில் சென்று பதிந்தன. எந்தத் திருவடிகளை அடைந்து களிக்க அவளது நெஞ்சம் நெடுங்காலமாக ஏங்கிக் கிடந்ததோ, அந்தத் திருவடிகள் இவளது நெஞ்சினின்றும் துயரப் பேயைத் துரத்திவிட்டன. தமது திருவடிகளைக் கிட்டி நின்று குறை தீர்ந்து மகிழ்ந்து நின்ற அவளை இன்னும் சிறிதுகாலம் இவ்வுலகிலிருக்கும்படி நியமித்தருளத் திருவுள்ளம் கொண்டருளிய பெரிய பெருமாள், அவளது முகமலரைத் தமது செந்தாமரைக் கண்களால் குளிர நோக்கியருளினார். அந்த ஒரு அருள் நோக்கத்தைக் கண்டு, அவளும் அவளது தாயாரும அநுபவித்த ஆனந்தத்தை யாரால் வர்ணிக்க முடியும்?

இவ்வளவு காட்சிகளையும் இப்பொழுதும் மெய்யன்பர்களின் மனக்கண்முன் தோற்றுவிப்பது, திருவரங்கச் செல்வனிடம் கொண்ட காதற் பெருக்கினால் தாமான தன்மை இழந்து ஒரு பிராட்டி தசையை அடைந்த ஸ்ரீ சடகோப ஆழ்வார், தமது தசையைத் தாம் அறிந்து பேசவும் முடியாமல் ஒரு திருத்தாயாரின் முறையீடாகத் திருவாய் மலர்ந்தருளியதும், ஸாமவேத ஸாரார்த்தமான திருவாய் மொழியில்—ஏழாம் பத்தில்—இரண்டாவதாக அமைந்திருப்பதுமான "கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்" என்று தொடங்கும் திருவாய்மொழி. திருவாய்மொழியின் பத்து பத்துகளாலும் உணர்த்தப்படும் பரத்வம்—காரணத்வம்—வ்யாபகத்வம் நியந்த்ருத்வம் — காருணிகத்வம் — சரண்யத்வம் — சக்திமத்வம் — ஸத்யகாமத்வம்—ஆபத்ஸகத்வம்—ஆர்த்தி ஹரத்வம் முதலிய எம்பெருமானது கல்யாண குணங்கள் பத்தையும்—இனிது உணர்த்தும் வாக்கியங்கள் இத் திருவாய்மொழியில் அமைந்திருக்கின்றன என்பது, பூர்வாசார்யர்களின் திருவுள்ளமாகும்.

ஸ்ரீ:

# தத்வடீகை—ஸ்ரீபாஷ்யஜயத்வஜ பட்டிகை

[ஓர் தேசிக தர்சந துரந்தரன்]

ஸ்ரீ பகவத் ராமாநுஜரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீபாஷ்யத்திற்கு வ்யாக்யாநமாக ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தத்வடீகை என்று ஒரு க்ரந்தம் அநுக்ரஹித்திருக்கிறார். இதை சென்னை ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ப்ரசார ஸபையார் பெரு முயற்சி செய்து அழகிய காகிதங்களில் மிகப் பெரிய நாகராக்ஷரங்களில் ஸ்ரீபாஷ்யத்துடன் சேர்த்து வெகு பரிஷ்காரம் செய்து அச்சியற்றி பெருமாள் கோயிலில் ஸமீபத்தில் நடந்த ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ர மஹோத்ஸவத்தில் வித்வத் ஸபையில் முதன் முதலாக வெளியிட்டார்கள்.

## தத்வடீகையின் ஸ்வரூபம்.

"𑌪𑍁𑌰𑌾𑌣𑌨𑍍𑌯𑌾𑌯𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 ॥"

என்று தர்ம வித்யாஸ்தாநங்களாக ப்ரஸித்தங்களான பதினான்கில் ஒன்று மீமாம்ஸா சாஸ்த்ரம். அது வாக்யார்த்த நிர்ணயோப யோகி யான ந்யாயங்களை சிக்ஷணம் செய்து கொடுத்து அதன் முகமாக வேதார்த்த நிர்ணயோப யோகியாகின்றது. இந்த மீமாம்ஸா சாஸ்த்ரம் வேதம் போலவே இரண்டு காண்டங்களாக பிரிக்கப்பட்டு முறையே "தர்ம மீமாம்ஸை" என்றும் 'ப்ரஹ்ம மீமாம்ஸை' என்றும் வழங்கப்படுகிறது. இந்த இரண்டாவது பாகமான ப்ரஹ்ம மீமாம்ஸைக்கே 'உத்தர மீமாம்ஸை' என்றும் 'வேதாந்த மீமாம்ஸை' என்றும் 'சாரீரக மீமாம்ஸை' என்றும் பெயர்கள் உண்டு. இவ்விரு பாகங்களை செய்த ருளியவர்கள் முறையே 'ஜைமினி மஹர்ஷியும் அவருடைய குருவான 'த்வைபாயன' ரென்கிற வ்யாஸருமாவார்கள். இப்படி வ்யாஸ மஹர்ஷி யால் செய்யப்பட்ட ப்ரஹ்ம மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கு போதாயந மஹர்ஷி ஒரு விஸ்தாரமான 'வ்ருத்தி' க்ரந்தத்தைச் செய்தருளினார். ரிஷிக்கல்லவோ தெறியும் ரிஷியின் கருத்து. உபவர்ஷ ரென்றும் வ்ருத்தி காரரென்றும் அந்தந்த க்ரந்த காரர்களால் உதாஹரிக்கப்படுமவரும் இந்த போதாயனரே. 'வ்ருத்திகாரரான போதாயனருக்கே உபவர்ஷரென்றும் பெயர்' என்று ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய மதம். இந்த 'வ்ருத்தி' க்ரந்தம் மிக விஸ்தாரமாய் இருப்பதை உத்தேசித்து 'த்ரமிடாசார்யர்' முதலியோர் அதன் அர்த்தங்களை 'த்ரமிட பாஷ்யம்' முதலிய க்ரந்தங்களில் மிகவும் சுருக்கமாக ஸங்க்ரஹித்தார்கள். பின் இவ்விருவகையான க்ரந்தங்களும் ஒன்று மிக விஸ்தாரமாகவும் மற்றொன்று மிகச் சுருக்கமாகவும் இருப்பதைக்கொண்டு நம்போன்ற மந்தமதிகளுக்கு இவ்விருநூற்களும் பயன் படாமையைக்கண்டு இரக்கங்கொண்ட ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளத்தைப் பின்பற்றி 'நம் உடையவர்' என்று ப்ரஸித்தரான ஸ்ரீ ராமாநுஜ முனி போதாயனருடைய வ்ருத்தி க்ரந்தத்தை யநுஸரித்து ஸ்ரீ பாஷ்யம் என்னும் அரும் பெரும் நூலை அருளிச் செய்துள்ளார். இது பாஷ்ய லக்ஷணத்துக்கு முக்ய லக்ஷ்யமாய் அமைந்துள்ளது என்பதற்கு இதற்கேற்பட்ட 'ஸ்ரீ பாஷ்யம்' என்ற பெயரொன்றே போதுமான ப்ரமாணம். மற்ற பாஷ்யங்களுக்கெல்லாம் விஷயங்களின் பெயருடனோ கர்தாவின் பெயருடனோ சேர்த்தல்லவோ பெயர் அமைந்திருக்கிறது—சபரபாஷ்யம், சங்கர பாஷ்யம், ந்யாய ஸூத்ரபாஷ்யம் என்றிவ்வாறு. அப்படிக்கில்லாமல் நிருபாதிகமான ஸ்ரீபாஷ்யம என்று வ்யவஹரிக்கப்படுவது நம்முடைய ஸ்ரீ ராமாநுஜ பாஷ்ய மொன்றே. இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீ பாஷ்யத்திற்கு பல வ்யாக்யாநங்களிருந்தும் அவைகளில் சில அதிவிஸ்தாரமாயும் சில அதிஸங்க்ரஹமாயும் சில மிக கடினமாயும் இருந்துவந்ததை யநுஸரித்து ச்ருதப்ரகாசிகை மிக கம்பீர வ்யாக்யாநமாயிருந்த போதிலும் அதிலும் அநேக விடங்களில் பிறர்களுடைய சோத்யங்களுக்கு தகுந்த ஸமாதாநங்கள் பர்யாப்தமா யில்லாமையையும் திருவுள்ளம் பற்றியே இந்த 'தத்வடீகை' என்ற வ்யாக்யாநத்தை நம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தது.

## தத்வடீகையின் பெருமை

இது லோகத்திலுள்ள மற்ற பாஷ்ய வ்யாக்யாநங்கள் போலில்லாமல் ஸர்வோத்க்ருஷ்டமாயிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே செய்யப்பட்ட தென்பதை ஸ்ரீ தேசிகனே.

"𑌅𑌭𑌾𑌵𑌾𑌦𑌤𑌿𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌦𑌤𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌸𑌾𑌰𑌵𑍇𑌦𑌿𑌭𑌿𑌃"
(பக்கம்—2.)

என்றும் '[illegible]' என்றும் '[illegible]' என்றும் முதலில் ஸாதித்து மேல் வ்யாக்யாந காலத்தில் '[illegible]' (பக்கம். 2) என்றும்

"[illegible] |
தத்ரைவ [illegible]"
(பக்கம்—11.)

என்று இது முதலிய வாக்யங்களால் சபரபாஷ்ய வ்யாக்யாநமான குமாரில வார்திகத்தில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டிக் கொண்டு தம்முடைய தத்வடீகை அவ்வித குறைகளுக்கு இடமில்லாமலிருக்கும்படி ஸ்ரீ பாஷ்யம் அமைந்துள்ளது என்றதை ஸ்பஷ்டமாக்கி யிருக்கிறார். இவ்விஷயம் தத்வடீகா பூமிகையில் 12-ம் பக்கத்தில் " [illegible] " என்று பெயரிட்டு நேருக்கு நேராக பதக்கம் போட்டு எடுத்துக்காட்டி நிரூபித்திருப்பதை விருந்து கண்டு கொள்ளலாம்.

## தத்வடீகையென்ற திருநாமத்தின் அமைப்பு

இதன் பெருமையை நாம் அதிகம் எடுத்து விஸ்தரிப்பிக்க வேண்டிய தவச்யமில்லை. ஸ்ரீ தேசிகனே மற்ற வ்யாக்யாநங்களைக் காட்டிலும் இந்த தத்வடீகையிலிருக்கும் விசேஷப் பெருமையைத் திருவுள்ளம் பற்றி ஆரம்பத்திலேயே '[illegible]' என்று 'ஸர்வோபநிஷத்துகளையும் பரஸ்பரம் ஐககண்ட்ய மில்லாமையால் தலைவிரி கோலமாகி நிற்கவிடாமல் பரஸ்பராநு ரக்தங்களாக்கி பரிஷ்கரிக்கின்றதாகும் இந்த டீகை' என்றும் '[illegible]' என்று 'இது ஸ்ரீ பாஷ்யத்துக்கு ஜயத்வ ஜபட்டிகை' யாகுமென்றும் தாமே கொண்டாடியிருக்கிறார். இது நிற்க எப்படி ஸ்ரீ பாஷ்யம் ஸூத்ராக்ஷரவ்யாக்யானமென ப்ரதிஜ்ஞாதமாய் அமையப் பெற்றதோ அப்படியே இதுவும் '[illegible]' (2-பக்கம்) என்று 'உபநிஷத்துக்கள் தத்விஷயமான ப்ரஹ்ம ஸூத்ரங்கள் அதன் வ்யாக்யாணமான ஸ்ரீபாஷ்யம் இவைகளின் தத்வார்த்தத்தை வெளியிடுவதில் முதன்மை வஹிக்கின்றது இந்த தத்வடீகை' என்றும் ஸாதித்திருக்கிறார். இவ்வர்த்தத்தை 'தத்வடீகை' என்கிற திருநாமமே வெளியிடுகின்றதாகும். 'பரமத நிரஸநத்திற்கெனவே ஏற்பட்ட [illegible] முதலிய க்ரந்தங்கள் போலில்லாமல் இது முக்கியமாக சாரீர சாஸ்த்ரத்தின் உண்மையைத் தெரிவிப்பதற்கெனவே ஏற்பட்ட'தென்று தாமே—'[illegible]' என்று ஸாதிக்கிறார். 'சாரீரகதத்வங்கள் இவ்வளவு விசதமாக வேறெந்த க்ரந்தங்களிலும் சொல்லப்படவில்லை' யென்றும் தத்வடீகையை ஸேவித்த பிறகு ஸூத்ரார்த்தத்திலோ பாஷ்யார்த்தத்திலோ விசதமாகாத விஷயமொன்று மிராது' என்றும் இதன் கருத்து.

## மதாந்ரஸ்தர்களுக்கும் இது உபஜீவ்யம்

இந்த க்ரந்தத்தில் ஸ்ரீ தெசிகன் அந்தந்த ஸ்ரீ பாஷ்ய பங்க்திகளுக்கு அவதாரிகை வைக்கும் இடங்களையும் ஆக்ஷேபங்களை யநுவதித்து ஸமாதாநம் சொல்லுமிடங்களையும் பார்க்கும்போது ஸ்ரீ பாஷ்யகாரருக்கு



சாஸ்த்ராந்தரங்களிலும் மதாந்தரங்களிலுமுள்ள ஸ்வாதந்த்ரயமும் அம்மதங்களை தக்க யுக்திகளைக்கொண்டு ஸ்தாபிப்பதில் அம்மதஸ்தர்களைவிட அவருக்கு இருக்கும் ஆதரமும் பின் அவைகளைக் கண்டிப்பதில் அவர் கையாண்டிருக்கும் ஸளித கம்பீரமான ரீதியையும் அவைகளை உபபாதநம் செய்யும்போது ஸ்ரீ தேசிகன் உதாஹரித்திருக்கும் மதாந்தர க்ரந்தங்களையும் அத்வைத ஸம்ப்ரதாய ரஹஸ்யங்களையும் கவனித்துப் பார்த்தால் 'அவ்வோ மதஸ்தர்களும் அந்தந்த க்ரந்த காரர்களும் கூட தங்கள் மதங்களை இவ்வளவு அழகாகவும் இவ்வளவு ஸளிதமாகவும் நிரூபக்கவில்லை' யென்று நன்கு விளங்கும். பல விடங்களில் இதர மதஸ்தர்களுக்கு தங்கள் மதக்ரந்தங்களிலில்லாமல் இந்த தத்வடீகையிலிருந்து உபஜீவிக்கத்தக்க விஷயங்கள் காணப்படுகின்றன. (பக்கம் 164 '[illegible]' என்று தொடங்கிய பங்க்திகளை காண்க). ஸ்ரீ தேசிகன் இங்கு உதாஹரித்த மதாந்தரக்ரந்தங்கள் அபரிமிதமானவை. அவைகளில் சில அந்தந்த மதஸ்தர்களுக்குங்கூட இதுவரையில் கோசரமாகாதவை. வெகு நாளைக்கு முன்னமேயே லுப்தமாய்விட்டதென ப்ரஸித்தமான '[illegible]'னுடைய '[illegible]' என்கிற க்ரந்தம் 'குமாரிலருடைய' '[illegible]' மற்றும் பல பண்டிதர்களின் க்ரந்தங்களையும் ஸ்ரீ தேசிகன் நன்கு உபயோகத்தில் வைத்திருந்தார் என்று வெளியாகின்றது.

## சரித்ரஸம்பந்தமான சில அபூர்வவிஷயங்கள்

இது வரையில் உலகத்தாருக்குத் தெரியாத சிற்சில அபூர்வவிஷயங்கள் இந்த தத்வடீகையின் மூலம் வெளியாகின்றன, (1) சங்கரபாஷ்யாதிகளில் உதாஹரிக்கப்பட்ட வ்ருத்திகாரர் 'உபவர்ஷர்' என்றும், ஸ்ரீபாஷ்யாதிகளில் உதாஹரிக்கப்பட்ட வ்ருத்திகாரர் 'போதாயநர்' என்றும், இவ்விருவரும் வேவ்வெறானவர்கள் என்றும் இது வரையில் உலகத்தாரின் நினைப்பு. இப்போது தத்வடீகையால் போதாயனரே உப்வர்ஷரென்றும் அதனால் தான் (ஸ்ரீபாஷ்யாதிகளுக்கு மூலபூதமானதால்) 'அந்தவ்ருத்தி க்ரந்தத்தை அதற்கு விருத்தர்களான சங்கராதிகள் கண்டிருக்கிறார்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (பக்கம் 343. காண்க.) (2) இதுவரையில் ப்ரஹ்நந்தி யென்றும் த்ரவிடா சார்யர் என்றும் நம ஸம்ப்ரதாயஸ்தாபகர்களான ப்ராசீநர்கள் உண்டென்று கேட்டிருக்கிறோமேயல்லது அவர்களின் க்ரந்தங்களோ அவைகளின் ஸ்வரூபமோ நமக்குத்தெரியாது. இப்போது தத்வடீகையின் மூலம் 'ப்ரஹ்மநந்தியென் பவர் 'சாந்தோக்யோ பநிஷத்வாக்யம்' என்று ஒரு க்ரந்தத்தை செய்தாரென்றும் அந்தக்கிரந்தத்திற்கு வ்யாக்யாநம் செய்தவர் 'த்ரமிடா சாரியர்' என்றும் இந்தத்ரமிடா சார்யரே ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஒரு பாஷ்யம் செய்தவரென்றும், அவர் தான் ஸ்ரீ பாஷ்யத்தில் '[illegible]' என்று அநுவதிக்கப்பட்ட பாஷ்யகாரரென்றும் வெளியாகின்றது. (ப. 188.)

## க்ரந்தத்தின் பெருமைக்கு ஒரு உதாஹரணம்

ஸ்ரீ பாஷ்யத்தில் '[illegible]' என்று ஆரம்பிக்கின்ற முதல் மங்கள ச்லோகம் மேல் ப்ரதிபாத்யமான ஸர்வார்த்தங்களையும் ஸங்க்ரஹ

மாகக் காட்டுகின்றது என்ற அம்சத்தை நிர்வகிக்கத்துடங்கி ‘ஏஷாமேதா நவீ நேதுஹே’ என்ற பத்து அர்த்தகளில் முதலிரண்டு அர்த்தங்களை நிரூபித்த பின் ‘ தத்ராதிமௌ த்வர்த்தௌ ப்ரகாஶ்ய ஶேஷாநஷ்டாவபி ந்யாயதஶ்ச ’ என்று மேல் எட்டு அர்த்தங்களைக் காண்பித்து அவைகளை க்ரமேண முதல் பத்தியத்தில் விவக்ஷிதங்களாகக் காட்டி அவைகளில் எட்டாவதான ‘பரபக்ஷநிராஸம்’ என்னு மர்த்தத்தை,

> “ பரபக்ஷநிராஸஸ்து க்ருத: ஶாஸ்த்ரைகதேஶத: ।
> வ்யஜ்யதே தத்ஸிந்து ஶேஷை: ஶேஷை: ஶேஷை: பதை: ஶாஸ்த்ராரம்பஸமர்த்தநே
> வ்யாக்யாதவிஶேஷணைஸ்த்ருதீயைர்விஶேஷதஸ்ததா ” ॥
>
> (பக்கம். 25. ஶ்லோ. 75, 76.)

> “ உததாவிஶேஷணைரேந ஸாங்க்யமதஸ்து நிரஸ்தம்
> ஸர்வஜ்ஞஸ்யேஶ்வரஸ்ய நித்யத்வேநோக்தமேவ ஶாஸ்த்ரத: ”
>
> (பக்கம். 26. ஶ்லோ. 85.)

> “ விநதாதிபதேர்த்ருத்யா ஜீவாநாமிதரேதரம் ॥
> ஸம்ஶ்ரித்ய ச பூர்வேஷாம் தத்த்வாநாம் பராஸ்தே ॥ ”
>
> (பக்கம். 28. ஶ்லோ. 109.)

> “ கூடஸ்தஸ்யைவ வ்யக்தஸ்ய ப்ராக்தம் கார்யஸித்திபி: ।
> நிரஸ்தவிஶேஷநிஶ்சேஷேந நிவர்திதம் ”
>
> (பக்கம் 30. ஶ்லோ. 124.)

என்று,

> “ விஷயேணாஶ்ரயேணாபி ஸ்வரூபேணாபி ஸேவதாம் ।
> விஶிம்ஷந்த்ஸ்ஸந்நிராகரோதிநிராகரோதி ஶுத்தஹ ”
>
> (பககம். 33. ஶ்லோ. 144.)

என்றிறுதியாயுள்ள 74 முதல் 144 ச்லோகங்களால் (பக்கம்-25 முதல் 32) ‘நூற்றுக்கணக்கான பரபக்ஷங்கள் இந்த முதல் ச்லோகத்திலுள்ள பதங்களால் நிரஸ்தங்களாகின்றன’ என்று ஸாதிக்கும் ப்ரக்ரியை அத்யாச்சர்யமாயும் ஸ்ரீ தேசிகனுடைய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரதைக்கும் வேதாந்தாசார்யத்வத்துக்கும் அநுகுணமாக இருப்பதுடன் இப்படி உபபாதநம் பண்ணிக் காட்டும் ஸ்ரீ தேசிகனுடைய பாண்டித்யம் கொண்டாடத்தக்கதா அல்லது இவ்வளவு அர்த்தங்களும் விவக்ஷிதங்கள் தான் என்றும் சொல்லும்படியான ஒரு பத்யத்தை நிர்மித்த ஸ்ரீ பாஷ்ரகாரரின் பெருமை கொண்டாடத்தக்கதாவென்று வியக்கத்தக்க ரீதியில் இருக்கும் க்ரந்தத்தின் ப்ரக்ரியை மிக ஆச்சர்யமானது. ‘பக்ஷீணாம் வாஹநாக்யாநாம் ஸாதுஶப்தோ ஹ்யநாஹவதி’ என்கிற ரீதியில் ‘ஸ்ரீராமாநுஜமுநி’ என்று அக்வர்த்த நாமம்



பொருந்திய ஸ்ரீ உடையவருடைய க்ரந்தத்தின் பெருமைக்கும் அளவுண்டோ. அவ்வாறே ஸ்ரீ தத்வடீகையின் பெருமைக்கும் அளவில்லை.

## தத்வடீகா பூமிகை

இப் பெருமைகளுக்கும் ‘இந்த க்ரந்தம் அச்சிட்டிருக்கும் அழகான ரீதிக்கும் ஏற்றவாறு உலகத்தாருடைய பாக்ய விசேஷத்தால் இதற்கு பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகஸ்வாமி தக்கதொரு பூமிகை எழுதி ஸ்ரீதேசிகனுடைய பெருமைகளையும் ஸ்ரீ தத்வடீகையின் பெருமைகளையும் எத்தனை விதங்களால் தொகுத்துக் காட்டமுடியுமோ அத்தனை விதங்களாலும் நன்கு தொகுத்துக் காட்டி ஸமீசீன யுக்திகளால் ப்ரதிஷ்டாபனம் செய்து ‘இந்த தத்வடீகை சபரபாஷ்ய வார்திகங்களைவிட விலக்ஷணமானதென்றும் மற்ற எவ்வித ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யாநங்களாலும் இதில் அடங்கிய விஷயங்கள் சரிதார்த்தமாகவில்லையென்றும் ச்ருத ப்ரகாசிகையைவிட அதிசயித்த உபகாரம் இந்த க்ரந்தத்தால் ஸ்ரீ பாஷ்யத்திற்கு ஏற்பட்டிருக்கிறதென்றும் நன்கு ஸ்தாபித்திருக்கும் ரீதி மிக ஆச்சர்யாவஹமாயிருக்கிறது. இத்துடன் அம் மஹாதேசிகன் இந்த க்ரந்தத்தை அநேக தாள பத்ர ஸ்ரீ கோசங்களை வைத்துக்கொண்டு சோதித்து ஸமீசீந பாடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கங்கு சில விடங்களில் டிப்பணிகளும் ப்ரஸாதித்து உபாதேய அநுபாதேய பாடங்களைக் காண்பிக்கும் ‘வ்யாதஶிநீ’ ஒன்று எழுதிக் கொடுத்தும் ‘டிப்பணீ ஸங்க்ரஹ’மென்று ஒரு பத்ரிகையும் அநுக்ரஹித்து க்ரந்தத்தை ஸர்வவிதத்தாலும் ப்ரகாசிக்கும்படி செய்தருளியிருக்கிறார்.

இத்தகைய பெருமை வாயந்த இந்த தத்வடீகை (1—445 பக்கங்கள் அடங்கியிருந்தாலும்) நம்முடைய துர் பாக்யம் நிமித்தமாக முதல் அத்யாயம் முதல் பாதம் முதல ஸூத்ரம் (ஜிஜ்ஞாஸாதிகரணம்) மஹாஸித்தாந்த ப்ரகரணம் பாதி வரையிலேயே ஏட்டு ப்ரதிகளிலுங்கூட கிடைக்கின்றது. மேல் பாகம் எப்பொழுது எங்கு கிடைக்குமோ ஸ்ரீ தேசிகனுடைய கருணையை எதிர் பார்த்து நிற்க வேண்டியிருக்கிறது. ஸ்ரீ தேசிகன் காலத்தில் இந்த க்ரந்தம் பூர்ணமாகவே யிருந்தது என்று பெரியோர்களின் ப்ரஸித்தி.

## அநுபந்தங்கள்.

ஸ்ரீ வைஷ்ண ஸித்தாந்த ப்ரசார ஸபையார் இந்த க்ரந்தத்தை வெகு அழகாக அச்சிட்டதுடன் அர்த்த ச்ரமத்தை கவனியாமல் தக்க பண்டிதர்களைக் கொண்டு தத்வடீகையில் உதாஹரிக்கப்பட்ட ஸமஸ்த ப்ரமாண வாக்யங்களுக்குக்கும் ஆகரங்களைக் கண்டுபிடித்து அவைகளை அகாராதி க்ரமத்தில் தயாரித்து எளிதில் எல்லோரும் அறிந்து கொள்ளத்தக்க ரீதியில் வெளியிட்டிருக்கிறார்கள். அத்துடன் நிற்காமல் தத்வடீகை கிடைத்த வரையில் ஸ்ரீ பாஷ்ய பாகத்திலுள்ள ப்ரமாணங்களுக்கு ஆகர ஸூசிகையை

யும் தயாரித்து தத்வடீகைக்கு அடுத்தபடியாய் அதை அமைத்துள்ளார்கள். இதற்கடுத்தாப்போல் தத்வடீகையில் காணப்படும் ஸ்ரீதேசிகனுடைய சுமார் 540 ஸ்வந்த காரிகைகளுக்கு ஒரு அகாராதி ஸூசிகை கோர்க்கப்பட்டிருக்கிறது. அதன் பின் தத்வடீகையில் உதாஹ்ருத ப்ரமாணங்களை உபயோகிக்கின்றவர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து இருவிதங்களாகப் பிரித்து உதாஹ்ருத ச்லோகங்களுக்கு தனியாகவும் வாக்யங்களுக்கு தனியாகவும் அகாராதி க்ரமத்தில் ஆகர ஸூசிகை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின் ‘தத்வடீகோதாஹ்ருத ச்லோக ஸூசிகை’ யென்றும் ‘தத்வடீகோதாஹ்ருத வாக்ய ஸூசிகை’ யென்றும் இரண்டு பட்டிகைகள் அகாராதி க்ரமத்தில் ‘தத்வடீகையில் எத்தனை க்ரந்தங்கள் உதாஹரிக்கப் பட்டிருக்கின்றதென்றும்’ எத்தனை க்ரந்தகாரர்களின் நாமநிர்தேசம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் அவை எந்தெந்த பக்கங்களில் காணப்படுகின்றனவென்றும் எளிதில் எல்லோரும் அறிந்து கொள்ளுமாறு அந்தந்த பக்கங்களின் கணக்குகளையும் நேர் நேராக நிர்தேசித்து கோர்க்கப்பட்டிருக்கின்றன. இவை முழுவதும் க்ரந்தத்தை அடிக்கடி உபயோகிக்கின்றவர்களுக்கும் ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கும் மிக உபயோகமானவை. அதன் பின் ‘சுத்தா சுத்த பாட போதாதி ப்ரதர்சினீ’ என்று ஒரு சுத்தா சுத்த பத்ரிகையைத் தயாரித்து அத்துடனேயே உபாதேயாநுபாதேய பாடங்களைக் காட்டும் குறிப்புகளும் இணைக்க பட்டிருக்கின்றன. கடைசி பக்கத்திலிக்கும் ‘ப்ரமாணாகர ஸூசீபரிசிஷ்டம்’ என்ற ஒரு பட்டிகை ப்ரமாணாகர ஸூசிகையை தயாரித்து அச்சடிக்கும் காலத்தில் கிடைக்காத ப்ரமாணங்களுக்கும் பின்னிட்டு கிடைத்த வரையில் ஸம்பாதித்து சேர்த்திருப்பதை காட்டுகிறதுடன் ப்ரமாணாகரங்கள் ஸம்பாதிப்பதில் ஏற்பட்ட பரிச்ரமத்தையும் நன்கு விளக்குகின்றது. க்ரந்தாரம்பத்தில் தத்வடீகா பூமிகைக்கு முன் விஷயாநுக்ரமமும் அதன்பின் ஸூசிகையில் உபயுக்தங்களான ஸங்கேதாக்ஷரங்களுக்கு ஒரு விவரணமும் இணைக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் அழகாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது. இதன் விலை ரூபாய் ஐந்து.

இப்படிப்பட்ட ஸபையின் பரிச்ரமம் ஸபலமாகும்படி சாஸ்த்ர ஜ்ஞர்களும் அபிமானிகளும் மற்றுமுள்ள ஸ்ரீ தேசிக தர்சநத்தைக் சேர்ந்தவர்களும் இந்த க்ரந்தத்தை வாங்கி உபயோகித்து தாங்களும் க்ருதார்த்தர்களாவது உசிதம். இது சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தப்ரசார ஸபை கார்யாலயத்தில் பெறத் தக்கது. இதன் விலை ரூ. 5—0—0.

---



उत्तरत्र दहराकाशस्य सर्वाधारतया अतिमहत्त्वमभिधाय, एतत्सत्यं ब्रह्माख्यं पुरमिति निर्दिश्य, तस्मिन् ब्रह्माख्ये दहराकाशे कामाः समाहिताः इत्युक्ते कोयं दहराकाशः। केच कामाः। इत्यपेक्षायाम्, “एष आत्मा अपहतपाप्मा” इत्यारभ्य “सत्यकामः सत्यसंकल्पः” इत्यन्तेन दहराकाश आत्मा, कामाश्च अपहतपाप्मत्वादयः तद्विशेषणभूतगुणा इति हि ज्ञापयति ॥

மேல் வாக்கியத்தில் தஹராகாசமானது எல்லாப் பொருட்களுக்கும் ஆதாரமாக நிற்பதால் மிகப் பெரிது என்று சொல்லி இது ஸத்யம், ப்ரஹ்மம் என்ற பெயர் பூண்ட தோர்புரம் என்று குறிப்பிட்டு அந்த பிரஹ்மம் என்ற தஹராகாசத்தில் எல்லா கல்யாண குணங்களும் குடிகொண்டிருக்கின்றன என்று சொல்லுமிடத்து இந்த தஹராகாசம் யாது? காமங்கள் எவை? என்ற கேள்வி வர, இது ஆத்மா பாப ஸம்பந்தமற்றது, ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன், இதுவே தஹராகாசம் என்றும், காமங்கள் என்பது, அந்த பரமாத்மாவிற்கு விசேஷணமாக நிற்கும் குணங்கள் என்றும் சூசிப்பிக்கப்பட்டிருக்கிறது.

दहरोस्मिन्नन्तर आकाशः तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यम्। इत्यत्र दहराकाशस्तदन्तर्वर्ति च यत् तदुभयमन्वेष्टव्यम् इत्युक्तमिति विज्ञायते। अथ यइहात्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान् इति हि व्यज्यते।

இங்கே தஹராகாசமும், அதன் உள்இருக்கும் பொருள் இவ்விரண்டையும் தேடிக்கண்டு பிடிக்கவேணும் என்று சொல்லப்படுகிறது. மேலும் எவர் ஆத்மாவையும், அதன் கல்யாணகுணங்களையும் உபாஸனை செய்து பெறுகிறார்களோ! அவர் முக்தர் என்று சொல்லியிருக்கிறபடியாலும் தஹராகாசம் ப்ரஹ்மமே :

सू—गतिशब्दाभ्यां तथाहि दृष्टं लिङ्गञ्च ॥ १. ३. १४ ॥

“एवमेवेमाः सर्वाः प्रजाः अहरहर्गच्छन्त्य एतं ब्रह्मलोकं न विन्दन्ति” इत्यहरहः सर्वासां प्रजानाम् अजानतीनाम् दहराकाशो-

ारि गतिः—वर्तनम् । दहराकाशसमानाधिकरणो ब्रह्मलोक शब्दश्च दहराकाशः परं ब्रह्मेति ज्ञापयति ।

ஒவ்வொருதினமும்,எப்போதும் இந்த பரமாத்மாவோடு கூடவே வஸித்தாலும் ப்ரஜைகள் தத்வஞ்ஞானம் இல்லாதது கொண்டு அந்த பரமாத்மாவை பெறுவதில்லை என்று சொல்லுமிடத்தில், தஹராகாசத்தின்மீது வர்த்திப்பது என்னும், தகராகாசம் ப்ரஹ்மலோகம் இவ்விரண்டு சொற்களையும் ஒரே வேற்றுமையாய் சொல்லி இருப்பது கொண்டும் மேற்சொன்ன தஹராகாசம் பரமாத்மாவே, என்று நிச்சயிக்கப்படுகிறது.

तथाह्यन्यत्र सर्वासां परमात्मोपरि वर्तमानत्वं दृष्टम् । "तस्मिन् लोकाः श्रितास्सर्वे" "तदक्षरे परमे प्रजाः" इत्यादौ । ब्रह्मलोक-शब्दश्च "एष ब्रह्मलोक" इत्यादौ ।

வேறு வேறு ஸந்தர்ப்பங்களிலும் ஜநங்கள் எல்லாம் பரமாத்மாவின் மீது வசிக்கின்றன வென்பதையும், தஹராகாசமும் ப்ரஹ்மலோகமும் ஒரே பொருள் என்பதையும் காணலாம்.

अन्यत्र दर्शनाभावेपि इदमेव पर्याप्तमस्य परमात्मत्वे लिङ्गम् । यत् दहराकाशोपरि सर्वस्य वर्तमानत्वम् । ब्रह्मलोकशब्दश्च ।

மற்றவிடங்களில் இவ்விஷயநிரூபணம் இல்லாவிட்டாலும், இங்கு உலகமனைத்தும் தஹராகாசத்தின்மீது வசிப்பதும், அதை ப்ரஹ்மலோக சப்தத்தால் சொல்லி இருப்பதுமே போதுமான அத்தாக்ஷியாகும்.

सू—धृतेश्च महिम्नोस्यास्मिन्नुपलब्धेः ॥ १. ३. १५. ॥

"अथ य आत्मा स सेतुर्विधृतिः । "इति जगद्धृतेः परमात्मने महिम्नः अस्मिन् दहराकाशे उपलब्धेश्चायं परः । साहि परमात्म महिमा । "एष सेतुर्विधरण" इत्यादि श्रुतेः ।

ப்ருஹதாரண்யகத்தில் இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் தரிப்பது என்னும் பரமாத்மாவுக்கு இன்றியமையாத சக்தியை இந்த தஹராகாசத்திற்குச் சொல்லி இருப்பதாலும் இது பரமாத்மாவே.



सू—प्रसिद्धेश्च ॥ १. ३. १६ ॥

आकाशशब्दस्य "यदेष आकाश आनन्दः" इति परमात्मन्यपि प्रसिद्धेश्चायं परः । सत्यसंकल्पत्वादि गुणबृन्दोपबृंहिता प्रसिद्धिः भूताकाशप्रसिद्धेः बलीयसीत्यर्थः ।

ஆகாசம் என்னும் சொல்லுக்கு பரமாத்மாவிலும் ப்ரசித்தி உண்டு. பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய ஆகாசத்திலும் ப்ரசித்தி உண்டென்றாலும் ஸத்யஸங்கல்பத்வம் முதலான குணங்களோடு சேர்ந்த வகையில் பரமாத்மாவினிடத்திலேயே ப்ரசித்தி அதிகம் உண்டு.

सू—इतरपरामर्शात्स इति चेन्नासम्भवात् ॥ १. ३. १७ ॥

"अथ य एष संप्रसादः "इति इतरस्य जीवस्य परामर्शात् प्रकृताकाशस्स इति चेत्—नैतत् । उक्तगुणानां तत्रासम्भवात् ।

இந்த ஆகாசத்தையே மேல் வாக்கியத்தில் ஸம்ப்ரஸாத : என்று சொல்லியிருப்பதால், ஸம்ப்ரஸாத என்னும் சொல்லுக்கு ஜீவனே பொருளாகையால் இந்த ஆகாசபதம் ஜீவனைச்சொல்லுமெனில், இந்த ஆகாசத்துக்குச் சொன்ன குணங்கள் ஜீவனிடத்தில் இல்லையாதலால் இந்த ஆகாசபதம் ஜீவனைச்சொல்ல இயலாது.

सू—उत्तराच्चेदाविर्भूतस्वरूपस्तु ॥ १. ३. १८ ॥

उत्तरत्र "य आत्मापहतपाप्मा" इति जीवस्य अपहत-पाप्मत्वादि श्रवणाच्चासंभवः । जागरितस्वप्नसुषुप्त्याद्यवस्थासु वर्तमानत्वात् सहि जीवः इति चेत्—नैतत् । आविर्भूतस्वरूपस्तु—कर्मारब्धशरीरसंबन्धित्वेन तिरोहितापहतपाप्मत्वादिकः पश्चात् परंज्योतिरुपसंपद्याविर्भूतस्वरूपः तत्र अपहतपाप्मत्वादि गुणको जीवः प्रतिपादितः । दहराकाशस्तु अतिरोहितकल्याणगुणसागरः इति नायं जीवः ॥

மேலே ப்ராஜாபதி வாக்யத்தில் ஜீவனுக்கே அபஹதபாப்மத்வம் முதலான குணங்கள் உண்டு என்று கூறியிருக்கிறபடியால், அப்படிப்பட்டவன் ஜாகரிதம், ஸ்வப்நம், ஸுஷுப்தி, என்கிற அவஸ்தைகளைக் கொண்டவனுதலால் அவன் ஜீவனேயாகிறான். என்று சொல்லுவது தவறு. ஜீவன் கர்மமடியாக வந்த சரீரத்தில் புகுந்து ஆத்ம குணங்கள் அனைத்தும் மறைந்து, பின்பு பரமாத்மாவை உபாஸித்து தன்னுடைய ஸ்வரூபமும் குணங்களும் தோன்றப் பெற்றவனாகிறான், என்று நிரூபிக்கப்பட்டது. தஹராகாசமோவென்றால் என்றைக்கும் திரோஹிதமல்லாத கல்யாண குணங்கள் உடையது. ஆகையால் அது ஜீவனல்ல.

सू—अन्यार्थश्च परामर्शः ॥ १. ३. १९ ॥

"अस्माच्छरीरात् समुत्थाय परंज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते" इति जीवात्मनो दहराकाशोपसंपत्या स्वरूपाविर्भावापादनरूप माहात्म्यप्रतिपादनार्थोत्र जीव परामर्शः ।

அப்படியானால் தஹரவாக்யத்தில் ஜீவனைச்சொல்லுவானேன்? என்னில்—இந்த ஜீவன் தஹராகாசம் என்னும் பரமாத்மாவை அடைந்து நிஜமான ஸ்வரூபம் தோன்றப் பெறுகிறான் என்ற மகிமையை நிரூபணம் செய்யவேண்டி ஜீவனை அங்கு எடுத்தது.

सू—अल्पश्रुतेरितिचेत्तदुक्तम् ॥ १. ३. २० ॥

अल्पस्थानत्वस्वरूपाल्पत्वश्रुतेः नायं परमात्मा इति चेत्—तत्रोत्तरमुक्तम् । "निचाय्यत्वादेवं व्योमवच्च ।" इति ।

தஹராகாசம் என்பது ஓர் சிறிய ஸ்தானமாதலால் அதை ஸ்வரூபமாகக் கொண்டவன் பரமாத்மாவாக இருக்கக்கூடாது என்றால் இதற்கு ஸமாதானம், முன்னமே 1-2-7வது ஸூத்திரத்தில் கூறப்பட்டது. அதாவது உண்மையில் பெரிதாயினும், சிறிதாக த்யானித்தல் கூடும். மிகப்பெரிதான ஆகாயத்தை சிறியதொரு வஸ்துவில் அடக்கி சிறிதாகக் காண்பது போல். என்று.

सू—अनुकृतेस्तस्य च ॥ १. ३. २१ ॥

तस्य दहराकाशस्य परज्योतिषः अनुकरणश्रवणाच्च जीवस्य, न जीवो दहराकाशः....सतत्र पर्येति जक्षत् क्रीडन् रममाणः इत्यादिस्तदुपसंपत्या स्वच्छन्दवृत्तिरूपः तदनुकारः श्रूयते ।



இந்த ஜீவன் பரமாத்மாவோடு சேர்ந்து, பரமாத்மாவைப் போலவே லீலைகளைச் செய்கிறான் என்று சொல்லி இருப்பதால், இந்த தஹராகாசம் ஜீவனல்லவென்பது நிச்சயம்.

सू—अपि स्मर्यते ॥ १. ३. २२ ॥

"इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ॥ सर्गेपि नोपजायन्ते प्रळये नव्यथन्ति च" इति ।

பகவத் கீதை பதினான்காவது அத்தியாயம் இரண்டாவது ச்லோகத்தில் ப்ரஹ்மஞ்ஞானத்தைப் பெற்றவன் - பரமாத்ம ஸாம்யம் பெற்று, ஸ்ருஷ்டியில் பிறக்காமலும் ப்ரளயத்தில் அழியாமலும் வாழ்கிறான் என்று கூறப்பட்டது.

தஹராதிகரணம் முடிந்தது.

---

॥ प्रमिताधिकरणम् ॥

सू—शब्दादेव प्रमितः ॥ १. ३. २३ ॥

"अङ्गुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति ॥ ईशानो भूतभव्यस्य" इत्यादौ अङ्गुष्ठप्रमितः परमात्मा । ईशानो भूतभव्यस्येति सर्वेश्वरत्ववाचिशब्दादेव ।

கடோப நிஷத்தில் அங்குஷ்ட ப்ரமாணமாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மா. அதே வாக்யத்தில் அவனை ஸர்வேச்வரனாகச்சொல்லியிருப்பதால்,

सू—हृद्यपेक्षया तु मनुष्याधिकारत्वात् ॥ १. ३. २४ ॥

अनवच्छिन्नस्यापि उपासकहृदि वर्तमानत्वापेक्षमङ्गुष्ठप्रमि-

त्वम् । मनुष्याणामेव उपासनसंभावनया तद्विषयत्वाच्च शास्त्रस्य
नुष्य हृदयापेक्षयेदमुक्तम् । स्थितं तावदुत्तरत्र समापयिष्यते ।

அளத்தற்கரியனான பரமாத்மாவை உபாஸகனுடைய ஹ்ருதயத்தில் இருப்பவனாக வைத்து அங்குஷ்டப்ரமாணமாகக் கூறியது. மநுஷ்யர்களையே உபாஸகர்களாகக் கருதி, அவர்களுக்காகவே சாஸ்திரமாதலால் மநுஷ்யரின் ஹ்ருதய பரிமாணத்தைக்கருதி இவ்விதம் கூறியது. இங்கு சொல்லவேண்டிய விஷயம் மேலே சொல்லப்படப்போகிறது.

ப்ரமிதாதிகரணம் முற்றிற்று.

---

## ॥ देवताधिकरणम् ॥

सू—तदुपर्यपि बादरायणस्संभवात् ॥ १. ३. २५ ॥

तत्-ब्रह्मोपासनम् । उपरि देवादिष्वप्यस्ति अर्थित्वसामर्थ्य
सम्भवादिति भगवान् बादरायणः मेने । संभवश्च पूर्वोपार्जितज्ञा
अविस्मरणात् मन्त्रार्थवादेषु विग्रहादिमत्तया स्तुतिदर्शनात्, तदु-
पत्तये तत्संभवे तेषामेव प्रामाण्येन विग्रहादिमत्वाच्च ।

இந்த ப்ரஹ்மோபாஸநம் மநுஷ்யர்களுக்கு மேற்பட்ட தேவாதிகளுக்கும் உண்டு. அவருக்கு அபேக்ஷை உண்டாகக் கூடும், உபாஸனை செய்ய சக்தியும் கூடும், என்று பாதராயண பகவான் அபிப்ராயப்படுகிறார். முன் ஜன்மத்தின் அறிவு அவருக்கு மறைவதில்லை. மந்திரமென்னும் அர்த்தவாதமென்னும் இருவகைப்பட்ட வேதபாகங்கள் அவர்களை துதிக்குமிடத்து சரீரம் முதலியவற்றோடு கூடியவராக கூறுகின்றன. அந்த வேதபாகங்களுக்குத் தக்கபடி பொருள் கொள்ளவேண்டியது அவச்யம். அவருக்கு சரீரம் முதலியவை உண்டு என்பதில் அந்த வேத பாகங்களே ப்ராமாணம்.

सू—विरोधः कर्मणीति चेन्नानेक प्रतिपत्तेर्दर्शनात्
॥ १. ३. २६ ॥

विग्रहादिमत्वे एकस्यानेकत्र युगपत्सान्निध्यायोगात् कर्म-
णि विरोधः—इतिचेन्न । शक्तिमत्सु सौभरिप्रभृतिषु युगपदनेकशरीर-
प्रतिपत्ति दर्शनात् ।

தேவர்களுக்கு தேஹம் உண்டு என்னில், ஒரே தேவதை, ஒரே காலத்தில் அநேகவிடங்களில் நடைபெறும் யஜ்ஞாதிகர்மங்களில் ஸந்நிஹிதராக வேண்டியிருக்க, அது கூடாமையால் ஒரே காலத்தில் பலவிடங்களில் பலர் யஜ்ஞாதிகர்மங்களைச்செய்வது அஸங்கதமாய்த்தீரும். என்று ஆக்ஷேபனை கூறுவதும் சரியல்ல. ஸௌபரிமுநி முதலான சக்திமான்கள் ஒரே காலத்தில் அநேக சரீரங்களைக்கொண்டு பலவிடங்களில் இருந்ததாகக்கண்டிருக்கிறோம். அது போல் இங்கும் விரோதமில்லை.

सू—शब्द इति चेन्नातः प्रभवात् प्रत्यक्षानुमानाभ्याम्
॥ १. ३. २७ ॥

वैदिके तु शब्दे विरोधप्रसक्तिः—देहस्य सावयवत्वेन
उत्पत्तिमत्वात् इन्द्रादि देवोत्पत्तेः प्राक् विनाशादूर्ध्वञ्च वैदिकेन्द्रा-
दिशब्दानाम् अर्थशून्यत्वम् अनित्यत्वं वा स्यादितिचेन्न—अतः—
वैदिकादेवेन्द्रादिशब्दात् इन्द्राद्यर्थसृष्टेः ।

முன் கூறியபடி கர்மங்களில் விரோதமில்லை என்றாலும் வைதிகமான சப்தத்தில் விரோதமுண்டு. எப்படி என்றால், தேஹம் அவயவங்களோடு கூடியதால் அதற்குப் பிறவி உண்டு. வேத சப்தங்கள் நித்யமானவை. இந்த்ராதி தேவர்களின் தேஹம் அநித்யம். அவர்களின் உத்பத்திக்கு முன்னும், அவர் அழிந்த தற்குப் பின்னும் வைதிகமான இந்த்ராதி சப்தங்களுக்குப் பொருள் இல்லை, என்றாவது, பொருள் இல்லாதபோது சொல் இல்லை என்றாவது ஒப்புக் கொள்வது அவச்யமாகும், என்று.—இதற்கு உத்தரம்—வைதிகமான இந்த்ராதி சப்தங்களை ப்ரமாணமாகக் கொண்டு அப்போதைக்கப் போது இந்த்ராதிகள் ஸ்ருஷ்டிக்கப்படுகிறார்கள். ஆதலால் விரோதமில்லை.

नहीन्द्रादि शब्दाः व्यक्तिवाचकाः । अपि तु गवादिशब्दवत्

158717



आकृतिधारिणः पूर्वस्मिन् इन्द्रादौ विनष्टे वैदिकेन्द्रादिशब्दादेव ब्रह्मा पूर्वेन्द्राद्याकृतिविशेषं स्मृत्वा तदाकारमपरम् इन्द्रादिकम् कुलालादिरिव घटादिकं सृजतीति न कश्चिद्विरोधः ।

இந்த்ராதி சப்தங்கள் குறிப்பிட்டு ஒரு வ்யக்தியைக் காட்டுவதில்லை. பின்னையோவெனில், கோ முதலிய சொற்களைப்போல் ஒரு வகுப்பைக் காட்டும். முன் இருந்த இந்த்ரன் அழிந்தபோது ப்ரம்மா வைதிகமான இந்த்ராதி சப்தங்களை ப்ரமாணமாகக் கொண்டு முன் இந்த்ரனுடைய ஆக்ருதியை மனதில் வைத்துக்கொண்டு அவனைப் போன்ற மற்றொரு இந்த்ரனை ஸ்ருஷ்டிக்கிறார். குயவன் முன் இருந்ததை நினைத்துக்கொண்டு மற்றுமொரு குடத்தை ஸ்ருஷ்டிப்பது போல். ஆகையால் ஒரு விரோதமும் இல்லை.

कुत इदमवगम्यते ? श्रुति स्मृतिभ्याम्—श्रुतिः—"वेदेन रूपे व्याकरोत् सता सतो प्रजापतिः" "सभूरिति व्याहरत् । सभूमिमसृजत" इत्यादिः । "स्मृतिरपि—सर्वेषां तु स नामानि कर्माणि च पृथक् पृथक् । वेदशब्देभ्य एवादौ पृथक् संस्थाश्च निर्ममे" इत्यादिः ।

இப்படிச் சொன்னதுக்கு ப்ரமாணம் என்னவென்றால், வேதமும் ஸ்மிருதியுமே ப்ரமாணமாகும். வேதத்தைக் கொண்டே ப்ரஹ்மா ரூபங்களை ஸ்ருஷ்டித்தார் என்றும், வேதத்தில் பூ: என்ற சொல்லைக் கண்டு ப்ரஹ்மா பூமியை ஸ்ருஷ்டித்தார் என்றும வேதவாக்யங்கள் விளங்கக் கூறுகின்றன. மநு ஸ்மிருதியிலும், அந்த ப்ரஹ்மா வேத சப்தங்களைக் கொண்டே எல்லாப் பொருட்களுக்கும் நாமங்களையும் கர்மங்களையும் உருவங்களையும் தனித்தனியே ஸ்ருஷ்டித்தார் என்று கூறப்பட்டது.

सू—अत एव च नित्यत्वम् ॥ १. ३. २८ ॥

यतो ब्रह्मा वैदिकाच्छब्दात् अर्थान् स्मृत्वा सृजति । अतएव 'मन्त्रकृतो वृणीते" "विश्वामित्रस्य सूक्तं भवति" इति विश्वामित्रादीनां मन्त्रादिकृत्वेपि मन्त्रादिमयवेदस्य नित्यत्वं तिष्ठति ।


# FOR SALE

1. **RAMAYANA RATNA MALIKA**
   (Sanskrit Text with Tamil Commentary) Re. 0 8 0
2. **RAMAYANA MUKTAVALI**
   (In Devanagari—Familiar quotations from Valmiki) Re. 0 6 0
3. **Do ENGLISH TRANSLATION**
   (In the Press) Re. 0 6 0

Apply to :—

**T. SRINIVASA RAGHAVACHARYA**

*Branch Manager,*

The United India Life Assurance Company,

CHITTOOR.

Registered No. M. 37[illegible]3.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्र प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகும் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை, எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.